

# எங்கே என் கண்ணன்

இந்திரா சௌந்தர்ராஜன்

முதற் பதிப்பு மே 2006
இரண்டாம் பதிப்பு ஏப்ரல் 2007
மூன்றாம் பதிப்பு டிசம்பர் 2009
© ஆசிரியருக்கு

TITLE : ENGEA ENN KANNAN
BY : INDRA SOUNDAR RAJAN
THIRD EDITION : DECEMBER 2009
PAPER : 11.6 BOOK PRINT
TOTAL PAGES : 216

விலை ரூ. 75.00

**திருமகள் நிலையம்**
புதிய எண். 16, பழைய எண். 55,
வெங்கட்நாராயணா ரோடு,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 2434 2899, 24327696
தொலைநகல் : 91-44-24341559

Typesetting : AMARAVATHI, Chennai - 83.
Cell : 9444169725
Printed by : Manju Offset, Chennai - 5.

# என்னுரை!

**நா**ன் கல்கியில் எழுதிய இந்த தொடர்கதை எனக்கு மிகுந்த ஆத்ம நிறைவை அளித்த தொடர்களில் ஒன்று. இன்றைய உலகின் மில்லியன் டாலர் கேள்விகளில் முதல் கேள்வி எது என்றால் 'கடவுள் இருக்கிறாரா? இல்லையா?' என்பதுதான்...

இதற்கான சாதுர்யமான பதில்களில் ஒன்று 'கண்டவர் விண்டிலர் - விண்டவர் கண்டிலர்' என்பதுதான். அதாவது கடவுளைக் கண்டவர்களால் அவரைப் பற்றி பேச முடியாது... பேசுகின்றவர்களோ அவரை காணாதவர்கள் என்பதே இதன் உட்பொருள்.

அதே சமயம் நமது பாரத பூமியில் கடவுள்கள் ராமனாய், கிருஷ்ணனாய் அவதாரம் எடுத்து மனிதர்களுடன் கலந்து எப்படி வாழவேண்டும் என்பதற்கு உதாரணங்களாகவே திகழ்ந்ததாக நமது இதிகாச புராணங்கள் கூறுகின்றன.

அந்த பரமனும் மாமதுரையில் நேராகவே வந்து பல திருவிளையாடல்கள் புரிந்து சென்றதை திருவிளையாடல் புராணம் கூறுகிறது. இப்படி கடவுள் பற்றிய கேள்விக்கான விடைகள் பல தினுசாக இருக்க இத்தொடரில் நான் வேறு வடிவில் அதற்கு விடை தேடி புறப்பட்டேன். இக்கதையின் நாயகன் கடவுளை ஒரு அழகிய கற்பனையாக மட்டுமே கருதுபவன். இறுதிவரை அவன் அப்படியேதான் இருக்கிறான்.

பக்தி என்றால் என்ன? எதற்காக வழிபாடுகள்... கர்ம வினை என்பது என்ன? அது நல்வினை தீ வினை என இரு

வகைப்படுமா? போன்ற பலதரப்பட்ட கேள்விகளுக்கு இத்தொடரில் மறைமுகமாக பதில்கள் உள்ளன.

இத்தொடரை கல்கி வார இதழ் செம்மையாக வெளியிட்டு ஆதரித்தது. இதன் ஆசிரியர் திருமதி சீதாரவியை இத்தொடர் எழுதும் காலங்களில் நான் நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

அமரர் கல்கியின் பேத்தியான அவரிடம் கல்கியின் வீரியம் அப்படியே இருப்பதையும் இன்றைய ஹைடெக் யுகத்திலும் அவர் சில மானுட நெறிகளை மிகப்பிரதானமாக கருதுவதையும் நன்கு உணர்ந்தேன். வாசக உலகமும் ஏகோபித்த ஆதரவு அளித்தது.

ஒருவகையில் இத்தொடர் உருவாக தமிழன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் திரு சிவா அவர்களும் ஒரு காரணம். அவருக்கு என் நன்றி.

திருமகள் நிலையம் புத்தகமாக அளித்துள்ளது. அதற்கும் என் நன்றி. ஏதோ ஒரு வகையில் இந்த கண்ணன் வாசக உலகில் காலகாலத்துக்கும் வாழ்வான் என்பது என் நம்பிக்கை.

பணிவன்புடன்
இந்திரா சௌந்தராஜன்

20.5.06
மதுரை.3

*

# எங்கே என் கண்ணன்?

## 1

*'தங்களிடமே*
*என்னை*
*ஒளித்து வைத்துக் கொண்டு*
*வெளியே தேடுவதே*
*இந்த மனிதர்களுக்கு*
*வாடிக்கையாகிவிட்டது!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

வெகு நாட்களுக்குப் பிறகு காவிரியில் ஜலத் தாரைகள்! திபுதிபுவென்றும், திமுதிமுவென்றும்.......... ஒரு விதப் பரவசத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார் சீனிவாசன். அறுபது வயதைத் தாண்டப் போகிறார். பன்னிரு திருமண் காப்போடும், குண்டஞ்சிக் கட்டோடும் மனிதர் குணசீலம் தெருவில் நடந்தால், வேதப் புத்தகம் ஒன்று கால் முளைத்து நடந்து போகிற மாதிரி இருக்கும்.

ஜலத்தாரைகள் திமிலோகமாக ஓடிவந்தபடி இருக்க, முழங்கால் அளவு நீரில்கூட நிற்க முடியவில்லை. நிற்கும்போதே

தெரியும், காலடி மணல் குறுகுறுப்போடு சரிபடும். குட்டி மீன்கள் வேறு செல்லக் கடிகடித்து விளையாடும். அதை வைத்தே ஆற்றின் வேகத்தை அனுமானித்து விடுவார் சீனு.

பிறந்ததே காவிரியின் கரையில்தானே? அவர் பிறந்த பத்தாம் நாள் புண்ணியா வசனத்தின்போதே ஆற்றங்கரையில் அவரைத் தன் காலில் போட்டுக் கொண்டு காவிரி நீரை விட்டவளாம் அவரது தாய்!

அதன்பிறகு காவிரி அவரது உடம்பில் ஓர் அங்கம் போலவே ஒட்டிக்கொண்டு விட்டது. காலையில் ஒருமுறை, மாலையில் ஒருமுறை காவிரி ஸ்நானம். அப்படியே சூரியனைப் பார்த்தபடியே சந்தியா வந்தனம். பிறகு அகத்துக்குள் நுழைந்தால் காத்துக் கொண்டிருப்பான் கண்ணன்! இந்த கண்ணன், ஒரு சாண் உயரம்கூட இல்லாத ஒரு மரப்பாச்சி. கருந்தேக்கில் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும் நல்ல வேலைப்பாடு. கட்டை விரல் அளவுக்குத்தான் முகம். அதில் துளி குறுஞ்சிரிப்பு தொற்றிக் கொண்டிருந்தது.

அந்த கண்ணனுக்கு குட்டிப் பட்டுத் துணி சுற்றி, சின்ன நெற்றியில் சந்தனப் பொட்டும் வைத்து, கொஞ்சம் பூக்களைக் கிள்ளிப் போட்டு வளையல் சப்திக்க வணங்கி நிற்பாள் ராஜம். காவிரியில் இருந்து உள் நுழையும் சீனுவும், தன் திருவாரா தனத்தைத் தொடங்கி விடுவார். அதன்பின் அரைமணியோ முக்கால் மணியோ... இதுதான் அவரது நித்யப்படி!

இந்தத் திருவாராதனத்துக்கு காவிரி ஒரு பெரும் துணையாக இருந்தது. நடுவில் அது வறண்டதில், வீட்டுக் கொல்லையிலேயே குளித்துவிட்டு, கண்ணனையும் அந்தக் கிணற்று ஜலத்தில் நீராட்டவேண்டிய ஒரு நிலை.

நல்லவேளை... வருணபகவான் கருணையால் காவிரிக்குத் திரும்பவும் ஜீவன் வந்துவிட்டது. பார்க்கப் பார்க்க சீனுவுக்கு ஒரே பரவசம்.



அவரை விடவும் அவரது ஒரே பிள்ளை சம்பத், காவிரியில் தண்ணீர் பாய்கிறது என்றால் எகிறிக் குதிப்பவன். சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் ஜெனரல் மேனேஜராக இருக்கிறான். நேற்றுகூட அவனோடு போனில் பேசும்போது, சீனுவிடம் ஒரே மாதிரி பிரதாபம். கூடவே கண்ணன் பற்றிய கவலை...

''சம்பா... இப்பத்தாண்டா காவிரி காவிரியா இருக்கு. நன்னா ஜலம் பாயறது. தண்ணி பாய ஆரம்பிச்சு நாலு நாள் கூட ஆகலை... அதுக்குள்ள எதிர்க்கரைல முதலை வந்துடுத்து... கிளம்பி ரெண்டு பேரும் வாங்க...''

''நான் என்னப்பா பண்ண... என் உத்யோகம் அப்படி...''

''என்னடா பெரிய உத்யோகம். வேண்டாம்னு நீ எழுதிக் கொடுத்துட்டு வந்துட்டா கூட எனக்குத் தேவலைதான். வரிசையா ஏழு தலைமுறை முடிஞ்சு, எட்டாவதா நான் இப்ப நம்ம ஆத்து கண்ணனுக்கு திருவாராதனம் பண்ணிண்டு வரனே... அடுத்த பொறுப்பு உன்னதுதான். நீ இப்பவே வந்துட்டேன்னா, நானும் ராஜமும் அப்படியே வடக்க பத்ரி, கேதார்னு போய்ட்டு வருவோம். கங்கைல ஸ்நானம் பண்ணணும்ங்கற அந்த ஆசையும் கூடிண்டே போறது. இங்க ஆத்து கண்ணனை ஒருத்தர் பார்த்துண்டாதானே நாங்க நகர முடியும்?''

''அது சரி... கண்ணனுக்கு திருவாராதனம் பண்றதுக்காக என் ஜி.எம். போஸ்டிங்கை விடச் சொல்றியா நீ? வருஷம் பத்து லட்சம் சொச்சம் இப்ப வரது. இதை விட்டுட்டு அந்த மரப்பாச்சிக் கண்ணனுக்கு மணியாட்டிண்டு இருந்தா, ஊர்ல இருக்கறவா இல்லை, என் பொண்டாட்டி சாருவே என்னைப் பார்த்து சிரிப்பா. அதாவது உன் மாட்டுப் பொண்!''

இப்படி சம்பத் பதிலுக்குச் சொன்னதும், அதற்கு பதில் சொல்லத் தெரியாமல் சீனு விழித்ததும் நேற்றைய சம்பவம். இன்று சம்பத் வரப் போகிறான். நிச்சயம் காவிரியைப் பார்த்து குதூகலிப்பான். கூடவே ஒரு சஸ்பென்ஸ் என்று வேறு சொல்லியிருந்தான்.

வாசலையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார் சீனு. திபுதிபுவென்று ஒரு கூட்டம் கோணல்மாணலாய் ஓடிக் கொண்டே போனது.

பாவம்... அவ்வளவு பேருமே மனநலமில்லாதவர்கள். எவ்வளவோ வைத்ய முறைகள் வந்து விட்டாலும், குணசீலம் பெருமாளைப் பெரிய டாக்டராகக் கருதும் பலரும் இன்னமும் இருந்து கொண்டிருப்பதால், கோயிலில் பைத்தியங்களுக்கும் பஞ்சமில்லை. சமயங்களில் இந்தப் பைத்தியங்களில் சிலதுகள் அக்கம் பக்கத்து வீடுகளுக்குள் நுழைந்துவிடும். அதன்பின் ஒரே அட்டகாசம்தான். இதனால் பெரும்பாலும் வீட்டுக் கதவைத் தாழிட்டே வைத்திருப்பார்கள்.

அடுக்களையிலிருந்து வெளிப்பட்ட ராஜம், ''என்ன யோசனை?'' என்றாள் சீனுவைப் பார்த்து.

''சம்பா வருவானான்னு பாத்துண்டிருக்கேன்...''

''அவன் என்ன சின்னக் குழந்தையா... கல்யாணமாகியே அஞ்சு வருஷம் ஆச்சு! ஞாபமிருக்கட்டும்.''

- பேச்சுப் போக்கில் ராஜம் சொன்னதில் ஓர் ஊசி இருந்து, அது நறுக்கென்று சீனுவின் மனசிலும் குத்திவிட்டது.

''அவனும் சின்னக் குழந்தை இல்ல... அவனுக்கும் ஒரு குழந்தை இல்ல...''

''ஆரம்பிச்சுட்டேளா. இந்த பேரப்பிள்ளை கவலை உங்களை விடாது போல இருக்கே...''

''ஏன் ராஜம்... உனக்கு இந்தக் கவலை இல்லையா. நிஜமா நீ சந்தோஷமாத்தான் இருக்கியா?''

ராஜத்துக்கும் என்னமோ மாதிரி ஆகிவிட்டது. உள்ளே சுவாமி அறை நோக்கிச் சென்றாள்.



சன்னதிக்குள் சின்னதாக ஒரு கொலு மண்டபம். மண்டபத்தில் ஒரு குட்டி ஊஞ்சல். ஊஞ்சலில் அந்த கண்ணன் விக்ரஹம் பஞ்சணையில் படுத்திருப்பது போலப் படுத் திருந்தது. திருவாராதனை முடிந்து நிவேதனமும் ஆனபின், சீனு இப்படித்தான் படுக்கப் போட்டு விடுவார். அப்படியே ஒரு நாலுவரித் தாலாட்டுப் பாட்டு ஒன்றும் அந்த ஆத்தில் ஃபேமஸ்...''

*'ஆழிமழைக் கண்ணா தாலேலோ...*
*ஆநிரைகளின் மன்னா தாலேலோ...*
*கோகுலத்து கோபாலா தாலேலோ...*
*கோவிந்த கிருஷ்ணா தாலேலோ...'*

- அந்தத் தாலாட்டுப் பாட்டு இன்று நேற்றல்ல, எட்டு தலை முறைகளாக மாறாமல் ஒலித்தபடி உள்ளது.

பூஜை அறைக்கு வந்த ராஜத்தின் மனதுக்குள் எல்லாமே திரண்டு வந்து முட்டியது. கண்களிலும் கண்ணீர் கொட்டியது. அதே சமயம் வாசல் பக்கத்தில் பாம் பாம் என்னும் ஹாரன் சப்தம். சீனு எழுந்து ஓடினார்.

வாசலில் பளபளவென்று வெளிர்ப்பச்சையில் பியுஜியட் கார். கதவைத் திறந்து கொண்டு சம்பத்தும் அவன் மனைவி சாருவும் இறங்கிக் கொண்டிருந்தனர்.

''சம்பா... வா... வா...'' சீனு உற்சாகமானார்.

''அப்பா...'' - என்றபடியே அவனும் ஓடி வந்தான். அவனிடம் மாறாத அதே பாசம். ஆனால் உருவத்தில் ஏராளமான மாற்றம். மூக்குக்கு கீழே புதிதாக அடர்த்தியாக மீசை! கிருதாவும் நீண்டிருந்தது. சாருவும் கையில்லாத ரவிக்கையும், பாப் தலையுமாய் அவருக்குச் சற்று அதிர்ச்சியளித்தாள். கண்ணைத் துடைத்துக் கொண்டு ராஜமும் வாசற்புறம் ஓடி வந்தாள்.

''அப்பா... அம்மா... எப்படி இருக்கேள்...?''

''எங்களுக்கென்னடா... ஆமா, இது என்னடா கோலம்?''

''எதுப்பா... மீசையைச் சொல்றேளா? - சீனு ஆமோதிக்க,

''சாருதான் 'உங்களுக்கு மீசை வெச்சா முகத்துல ஒரு புதுக் களை வந்துடும்'னு சொன்னா... வெச்சுப் பார்த்தேன். ஆபீஸ்லயும் கொஞ்சம் வாலாட்டினவால்லாம் அப்படியே வாலைச் சுருட்ட ஆரம்பிச்சா. மொத்தத்துல நல்ல ரிசல்ட்'' என்றான்.

ராஜம் மாட்டுப் பெண்ணுடன் சேர்ந்து கொண்டாள். சம்பத் ஹாலில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சல் பலகையில் போய் அமர்ந்தான்.

சாரு ஹேண்ட் பேக்கைத் திறந்து மாமியார், மாமனாருக் கென சென்னையிலிருந்து தான் சுமந்துகொண்டு வந்திருப்பதை அடுக்க ஆரம்பித்தாள். ராஜத்துக்கு ஒரு அக்குபஞ்சர் செப்பல், அப்படியே குளிருக்கு அடக்கமாக ஷால்... சீனுவிற்கு வாக்மேனும், பாரதியார் கோட்டு போல ஒரு ஸ்வெட்டரும்...

சீனுவோ 'சம்பா!' என்று ஆசையாக அவர் விளிக்கும் சம்பத்குமாரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''என்னப்பா... என்னமோ என்னை இப்பத்தான் புதுசா பாக்கற மாதிரி பாக்கறேள்?''

''ஒண்ணுமில்ல... கார்ல வந்திருக்கியேன்னுதான் பார்த்தேன்.''

''ஆபீஸ்ல கொடுத்துருக்கா. ஸ்ரீரங்கம், உறையூர், கும்பகோணம்னு ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வரலாமில்லையா... அதான் எடுத்துட்டு வந்தேன். உங்களுக்கும் அங்கல்லாம் கார்ல போய் இறங்கினா, அந்த குஷியே தனிதானே?''



''அது போகட்டும்... ஏதோ சஸ்பென்சுன்னியே என்ன அது?''

''என்னடா இன்னும் கேக்கலியேன்னு நினைச்சேன்...''

''சட்டுன்னு சொல்லு, ராத்திரி குடுகுடுப்பைக்காரன் வேற 'ஒரு முக்கியப்பட்ட சேதி வரப்போகுது... அதனால எல்லாம் மாறப் போகுது'ன்னு வயித்தக் கலக்கிட்டுப் போயிருக்கான்...''

- சீனு அப்படிச் சொன்னதுதான் தாமதம், சம்பத்குமார் சாருவை படுவேகமாகப் பார்த்தான்.

அவள் முகத்தில் ஒருவித மிரட்சி!

## 2

*'ஊன்றி எழ*
*கைக்கு ஒரு தரை!*
*மனதுக்கோ நான்...'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

**சா**ரு முகத்தில் பரவிய அதிர்ச்சி சீனுவை என்னவோ செய்தது. விபரீதமாய் ஏதோ ஒரு விஷயத்தைத் தான் சம்பத் சொல்லப் போகிறான் என்று தீர்மானித்தவர்,

''சம்பத்... சட்டுன்னு சொல்லுடா என்ன விஷயம்?'' என்று படபடத்தார்.

''அஃப்கோர்ஸ்... என் நண்பர் ஒருத்தர் சொன்னார்னு நானும் போய் நாடி ஜோசியம் பார்த்தேன்...''

''மண்ணாங்கட்டி... நீங்க வேறம்மா... அவ்வளவும் அளப்பு...''

சாரு படுவேகமாக நடுவில் புகுந்து எரிச்சல் காட்டினாள்.

''அது வந்துப்பா... எங்களுக்குக் கட்டாயம் குழந்தை இருக்காம். ஆனா சில பரிகாரங்கள் பண்ணனுமாம். ஹ்ரித்வார், கில்லன்னா, காசி, கயான்னு போய் கங்கைல குளிக்கணுமாம். அப்புறமா இருபத்தியொரு சன்னியாசிகளுக்கு என் கையால வெத்தல பாக்குல தட்சிணை வெச்சுக் கொடுக்கணுமாம். அவ்வளவுதான். எங்களுக்குக் குழந்தை உருவாயிடும்னு சொன்னான்...''

''அப்புறம் ஒரு வேடிக்கையான விஷயம் மாமா'' - என்று சாருவே இடைமறித்தாள். நாடி ஜோசியத்தை அவள் கால் காசுக்குக்கூட மதிக்கவில்லை என்பது அவளது தொனியில் நன்றாகவே தெரிந்தது. கூடவே பயப்படுவதும் விளங்கியது.

''நம்மாத்துல... அதாவது இங்க அந்த கண்ணன் குடியிருக்கானாம். நான் சொல்றது மகாபாரதத்துக் கண்ணனை! அந்தக் கண்ணனைக் கொண்டாடினாலே போதும். ஆனா நாங்க, அதாவது என்னையும் இவரையும் சொல்றேன்... நாங்க இரண்டு பேரும் அந்தக் கண்ணனைச் சட்டையே பண்ணாததால, கண்ணனுக்கு எங்க பேர்ல கோபமாம். அதான் எங்களுக்குக் குழந்தை பொறக்கலையாம்...''

- சீனுவுக்கும் ராஜத்துக்கும் சுருக்கென்றது. சற்றே பதைப்புடன் சம்பத்தைப் பார்த்தனர். அவன் முகத்தில் ஒருவித கோணல்.

''சம்பா... சாரு சொல்றதெல்லாம் நிஜமா?''

'' ஆமாம்ப்பா...''

''இன்னொரு ஆச்சரியமும் இருக்கு... அது களவு போகப் பார்க்குமாம்...''

''என்னது?'' - சீனு விருட்டென்று எழுந்தார்.



''நீங்க உக்காருங்கோ மாமா... அதுவோ மரப்பாச்சி பொம்மை. அத யார் திருடப் போறா? ஜோசியம்கற பேர்ல இப்பல்லாம் எதை வேணா சொல்லலாம்னு ஆயிடுத்து...''

சாரு மெல்லிதாக அலுத்துக் கொண்டாள்.

அதே சமயம் பின் கொல்லையில் ஒரு கோயில் பைத்தியம் சுவர் ஏறிக் குதித்து பரபரவென்று ஓடி வந்து பூஜை அறைக்குள் புகுந்து கொண்டது. சத்தம் கேட்டுச் சென்று பார்க்கவும், ஊஞ்சலில் கிடந்த கண்ணன் விக்கிரகத்தை எடுத்து கையில் வைத்துக் கொண்டு ஒரு கோணல் பார்வையும் பார்த்தது.

''ஏய்ய்...'' - நெஞ்சுக் கூடு நொறுங்க சீனு ஒரு கத்துக் கத்தினார். ஊஹூம்! பிடித்து ஒரே தள்ளு தள்ளி விட்டு, மரப்பாச்சிக் கண்ணனை மார்போடு அணைத்துக் கொண்டு ஒரே ஓட்டம்...

அந்தப் பைத்தியத்தின் ஓட்டம் சீனுவைத் திக்குமுக்காட வைத்துவிட்டது. அலறிக் கொண்டே அவரும் பின்னால் ஓடினார். அப்பா ஓடும்போது சம்பத்தால் மட்டும் சும்மா இருக்க முடியுமா?

அவனும் அவர் பின்னாலேயே ஓடினான்.

ராஜத்துக்கு நாடி ஜோசியம் பலிக்கத் தொடங்கிவிட்டது போல ஒரு நினைப்பு. கிட்டத்தட்ட சாருவும் அப்படித்தான் நினைக்க ஆரம்பித்திருந்தாள்.

அந்தப் பைத்தியக்காரனோ புழுதி பறக்க வீதியில் ஓடிக் கொண்டிருந்தான். பஞ்ச கச்சம் இடறி விழ, பின்னால் ஓடிய சீனுவை வீதியிலுள்ளோரும் பார்த்தனர்.

அந்தப் பைத்தியம் தொடர்ந்து திருச்சி சேலம் மெயின்ரோட்டைக் கடந்து காவிரியை நோக்கி ஓடவும், சீனுவுக்கு ஓடிக் கொண்டிருக்கும்போதே பதைத்தது.

ஒரு கட்டத்தில் கச்ச வேட்டி இடறி அப்படியே சுருண்டு கீழே விழுந்தார். தரதரவென்று முன் மார்பு தேய, புழுதி பறக்க அவர் விழுந்த விதம், பின்னாலேயே வந்த சம்பத்தை அவரைத் தாண்டி ஓட விடவில்லை.

''அப்பா!'' - என்று அவரை நெருங்கி அப்படியே அவரைத் தொட்டுத் தூக்கத் தொடங்கினான். அதற்குள் மற்றவர்களும் ஓடிவர, பைத்தியக்காரர்களை மேற்பார்வையிட்டு அவர்களை மேய்க்கும் சாரங்கனும் சீனுவை நோக்கி ஓடி வந்தான்.

சீனுவின் மார்பில் ரத்த வரிகள்!

அதைத் தூசு தட்டுவது போல் தட்டியபடியே அவர் சாரங்கனைப் பார்த்துக் கத்த ஆரம்பித்தார்.

''சாரா... என்னத்தடா நீ பைத்தியங்களைக் கவனிச்சுக்கறே... ஒருத்தன் என் ஆத்துக்குள்ள பூந்து பெருமாள் விக்ரகத்தையே கொண்டு போயிட்டாண்டா... அதுவும் காவிரிப் பக்கமா... போடா... போய் அவனைப் பிடி...'' - என்கிற அவரின் கத்தல் சாரங்கனை அங்கே நிற்க விடவில்லை. அங்கிருந்தே காவிரியைப் பார்த்தபடி ஓடத் தொடங்கினான்.

**வீ**ட்டுக்குள் ராஜம் பெரிய அளவு புழுக்கத்தில் இருந்தாள். வாசலில் நின்றுகொண்டிருந்தவளின் பார்வை வீதியின் மேலேயே இருந்தது. சாருவுக்கு அவர்கள் அனைவருமே கொஞ்சம் அலட்டிக் கொள்கிற மாதிரி கூடத் தோன்றியது.

''அத்தே... நீங்க உள்ள வாங்கோ... அவா எங்கே போயிடப் போறா?'' - என்று செல்ஃபோனில் யாருடனோ பேச விழைந்தபடியே கூப்பிட்டாள்.

சரியாக லைன் கிடைக்காததால் செல்போனை ஒரு உதறு உதறியவளாக முகத்தில் கோபத்தைக் காட்டினாள். அதற்குள்



சீனு, சம்பத் இருவரும் வீதியில் சற்று தயக்கத்தோடு வந்து கொண்டிருந்தனர்.

கிட்டே நெருங்கவும், சீனுவின் மார்புச் சிராய்ப்புகளைப் பார்த்து ராஜம் பதறத் தொடங்கினாள்.

''ஐயோ, என்னன்னா இது...?''

''ஸ்சு... எதுக்குக் கத்தறே... கீழே விழுந்தா சிராய்க்காம இருக்குமா என்ன?''

''விக்ரகம் எங்கன்னா?'' - அவள் கேட்க, அவர் மகனைப் பார்த்தவராக,

''சம்பா... சித்த போய் பாத்துட்டு வாயேன். அந்த நாடி ஜோசியன் களவு போகும்னு சொன்னான்னியே. கண் எதுக்க போயிடுத்து பார்த்தியா... போப்பா... போய் எப்படியாவது அந்தப் பைத்தியத்தைப் பிடிச்சு விக்ரகத்தோட வா... போ...'' என்றார்.

சம்பத்தும் ''அம்மா, அப்பாவை உள்ள கூட்டிண்டு போய் முதல்ல ஏதாவது ஆயின்ட்மெண்ட் இருந்தா போடு. நான் வந்துடறேன்'' - என்று திரும்பினான்.

வீட்டுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக, இப்படியெல்லாம் தொடர்ச்சியாக நடப்பதில் சாரு பெரிதாகவே வருத்தப்படத் தொடங்கியிருந்தாள்.

சம்பத் அவளை குணசீலத்துக்குக் கூப்பிட்ட போதே அவளுக்குப் பிடிக்கவில்லை.

''இப்ப எதுக்கு... உங்காத்துல கேபிள் டி.வியும் கிடையாது. ஒரேயடியா போர் அடிக்கும்...'' என்று சிணுங்கியிருந்தாள். அவன்தான் ''காவிரியில தண்ணி பிச்சிண்டு போறதாம்... இந்த மாதிரி தண்ணி ஓடி அதைப் பார்த்து பல வருஷமாச்சு...'' என்று அவளைச் சமாதானப்படுத்தி அழைத்து வந்திருந்தான். வந்த

இடத்தில் நாலு வார்த்தை முழுசாகப் பேசி முடிக்கவில்லை... அதற்குள் ஏகப்பட்ட களேபரங்கள்!

பக்கத்து வீட்டில் இருந்து பத்மநாப அய்யங்காரும் ''சீனு, என்னப்பா பிரச்னை?'' - என்று கேட்டபடி வந்து கொண் டிருந்தார்.

ராஜம் சீனுவின் மார்பில் ஈர வஸ்திரத்தை ஜில்லென்று ஒத்தி எடுத்து விளக்கெண்ணெய் தடவிக் கொண்டிருந்தாள்.

சீனுவிடம் ஒரு மெல்லிதான பெருமூச்சும் முணு முணுப்பும்...

''ஏண்டா சீனு... உனக்கு என்ன வயசு? இப்படியா அந்தப் பைத்தியத்தைத் துரத்திண்டு ஓடுவே... ஆமா... அப்படி என்னத்தத் தூக்கிண்டு அந்தப் பைத்தியம் ஓடித்து...?

- என்று பத்மநாப அய்யங்கார் சீனு அருகில் உள்ள பிரம்பு நாற்காலியை இழுத்து விட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

சீனு அவருக்குப் பதில் கூறாமல் வாசல் பக்கமாகவே பார்த்தார்.

''யாரைப் பாக்கறே...?''

''சம்பத் போயிருக்கான்... ஆத்துப் பெருமாளைன்னா தூக்கிண்டு போயிருக்கான் அந்த பைத்தியக்காரக் கடங்காரன்...''

''அடடே... ஆத்துப் பெருமாளாச்சே. திருவாராதனம் பண்ணாம பச்சைத் தண்ணிகூட குடிக்கமாட்டியே... இது என்ன சோதனை?''

ஒருவருக்கொருவர் அலமலந்து போக, சற்று நேரத்தில் சம்பத்தும் வியர்த்து வழிய வந்து சேர்ந்தான்.

நெற்றி வியர்வையைச் சுண்டியபடியே ''அப்பா... அந்தப் பைத்தியக்காரன் காவிரிக்குள்ள இறங்கிட்டான். விக்ரகத்தையும்



தலைக்கு மேல தூக்கிப் பிடிச்சுண்டு ஹரே கிருஷ்ணா, பாண்டு ரங்கான்னு ஒரே ரகளை... நல்லவேளை சாரங்கன் ஒரு பக்கம் நான் ஒரு பக்கம் வளைச்சுப் பிடிச்சு விக்ரகத்தைப் பிடுங்கிண்டு வந்தேன்...'' - என்றபடியே கண்ணன் விக்ரகத்தை அவர் எதிரில் காட்டினான்.

சீனு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார். அப்படியே விக்ரகத்தை வாங்கி மார்புக்கு முன் தூக்கிப் பிடித்தவராக கண்கள் கலங்கப் பார்த்தார். ராஜத்திடமும் பரவசம்.

''கண்ணா... திரும்ப வந்துட்டியா? எங்க உன்னைத் தொலைச்சிடுவேனோன்னு பயந்துட்டேன். நல்லவேளை... நீ திரும்பக் கிடைச்சிட்டே...'' என்று பக்தி மிகுதியோடு பரவசப்படவும் செய்தார்.

சாருவுக்கு அதெல்லாமே ரொம்ப டூ மச் சாகத் தோன்றியது.

''இந்த மரப்பாச்சி பொம்மைக்கா ஆளுக்கு ஆள் இந்த ஓட்டம் ஓடினேள்...?'' என்று அதன் எதிரொலியாக அவள் கேட்ட விதமே ஒரு மாதிரி இருந்தது.

பத்மநாப அய்யங்கார் பதிலுக்கு அவளை அதிர்ச்சியோடு பார்த்தார்.

''என்ன மாமா பாக்கறேள்...?''

''பாக்காம என்ன பண்ண... ஆத்துப் பெருமாளை ரொம்ப சாதாரணமா நீ நினைக்கற மாதிரி தெரியறதே...?''

''இந்த பொம்மையும் சாதாரணமாத்தானே இருக்கு...? மெட்ராஸ்ல கொலு சமயத்துல ரங்கநாதன் தெரு பக்கம் போனா பிளாட்ஃபாரத்துல குவிச்சு வெச்சிருப்பான்...''

- சாருவின் அடுத்த கட்ட பதில் சீனுவை முதல் தடவையாகக் கோபப்பட வைத்தது. ஆவேசமாகத் திரும்பினார்.

# 3

*'என்னைக் காணும்*
*பல வழியில்*
*தன்னையறிதலும்*
*ஒன்றாகும்!'*

*- கிருஷ்ணன்*

**சீ**னுவின் அந்தக் கோபப் பார்வை சாரு வரையில் மிகப் புதிது. இப்படி எல்லாம் அவர் கோபப் பார்வை பார்க்கவும் இதுநாள் வரையில் அவளுக்குச் சந்தர்ப்பமே இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது ஒரு மரப்பாச்சி பொம்மை நிமித்தம் அவர் கனலாவது, அவள் வரையில் ஒரு அதிசயமாகக் கூடத் தோன்றியது.

ராஜத்தைச் சமீபத்தவர், ''ராஜம்... இந்தா முதல்ல சன்னதில கொண்டு வை. நான் போய் காவிரில குளிச்சிட்டு வரேன். வந்து முதல்ல திருவாராதனை. அப்புறம்தான் மற்ற எல்லாம்...'' என்றவர், கொடியில் இருந்த துண்டை எடுத்து விரித்து மார்பை மூடிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

பார்த்துக்கொண்டிருந்த பத்மநாப அய்யங்காருக்கு, சீனுவின் அந்தக் கோபம் ஒன்றும் புதிதில்லை. மெல்ல சாருவைச் சமீபித்தவர், ''அம்மாடி பட்டணத்துப் பொண்ணே. சீனு எதை வேணா தாங்கிப்பான். ஆனால் பெருமாள் விஷயத்துல ஒரு குற்றம் குறைன்னாலோ, அலட்சியம் ஆத்திரம்னாலோ தாங்கிக்கவே மாட்டான்'' என்றார்.

சாருவுக்கு பத்மநாப அய்யங்கார் ஓவராகச் சுருதி சேர்ப்பது போலத் தோன்றியது.



''ஆமா எப்ப ஊர்ல இருந்து வந்தாலும் முதல் காரியமா காவிரியப் பாக்கத்தானே ஓடுவே சம்பா... இன்னிக்கு என்ன நின்னு பேசிண்டிருக்கே...''

''இதோ கிளம்பிண்டே இருக்கேன் மாமா'' என்றவன், சற்றுத் தயங்கியவனாய் சாருவைப் பார்த்தான். பிறகு ''என்ன பெரிய காவிரி... நாளைக்குப் போயிண்டா போச்சு. முதல்ல அம்மா கையால காபி...'' என்றபடியே ராஜத்தைப் பார்க்க, உள் பக்கம் போக இருந்தவனை சாரு பார்வையாலேயே தடுக்க, பத்மநாப அய்யங்கார் இனி தமக்கு அங்கே வேலையில்லை என்பது போலக் கிளம்பிவிட்டார்.

''என்ன சாரு?''

''அவர் கேட்ட அதே கேள்விதான். காவிரிக்குக் கிளம்பலையா?''

''இல்ல சாரு... வேண்டாம். அந்தப் பைத்தியத்தைத் துரத்திண்டு ஓடினதுல டயர்டா வேற இருக்கு...''

''எவ்வளவு களைப்பா இருந்தாலும் காவிரில விழுந்தா பறந்துடும்னு சொல்ற நீங்களா இப்படிப் பேசறேள்...?'' சாரு விடாமல் மடக்கவும், அவளைச் சற்று ஊன்றிப் பார்த்தவன் ''சாரு... நான் எதனால போக மாட்டேங்கறேங்கறது உனக்கு இன்னுமா புரியலை...?'' என்றான்.

''புரியறதாலதான் கேக்கறேன். அந்த நாடி ஜோசியன் சொன்ன மாதிரி முதல் விஷயம் நடந்துடுத்து, அடுத்ததும் நடந்துடும்ங்கற பயமா?''

- அவள் தன் பேச்சில் முக்கியமான அந்த பாயிண்டைத் தொட்டாள்.

''சாரு...''

''உஸ்ஸ்... என் கேள்விக்குப் பதில்.''

''வேண்டாம் சாரு. இப்பத்தான் வந்துருக்கோம். மத்த விஷயத்தை ஆற அமரப் பேசுவோம்.''

''இல்ல... நீங்க இப்பவே காவிரிக்குக் கிளம்பறேள். நானும் கூட வரேன்.''

''சாரு...''

''இந்த மரப்பாச்சி கண்ணனை ஒரு பைத்தியம் தூக்கிண்டு ஓடினது, ஒரு தற்செயலான விஷயம். நான் அப்படித்தான் நினைக்கறேன். மற்றபடி அந்த ஜோசியத்தை நீங்க நம்பறது மடத்தனம்...''

''சரி, எல்லாத்தையும் அப்பறமா பேசலாம். அம்மா காதுல விழுந்துடப் போறது...''

''அம்மா மனசைப் பாக்கறா மாதிரியே என் மனசையும் பாருங்கோ, உங்கப்பா என்னை ஒரு குற்றவாளி மாதிரி பார்த்துட்டுப் போயிருக்கார். அவர் வந்த பின்னால எப்படியும் அந்த நாடி ஜோசியன் பத்தி, அவன் எழுதிக் கொடுத்தது பத்தி பேசத்தான் போறேள். நீங்க இங்க வந்துருக்கறதே அதுக்குதான். அப்படிப் பேசும்போது அதெல்லாம் பொய்னு சொல்ல எனக்கு ஒரு சந்தர்ப்பம் வேணுமா, வேண்டாமா?''

- சாரு அழுத்தமாகக் கேட்டாள். இடையில் காபியின் வாசம் முன்னால் வர, ராஜம் காபி தம்ளருடன் வரவும், ஒரு தாற்காலிக அமைதி.

ராஜம் மௌனமாக காபித் தம்ளரை நீட்டினாள். பதவிசாக வாங்கிக் கொண்டான்.

அப்படியே ''அம்மா... நானும் சாருவும் காவிரிக்குப் போய் குளிச்சுட்டு வந்துடறோம். சூடா சமையல் பண்ணி வை. வந்து ஒருபிடி பிடிக்கறேன்'' என்று சற்று செயற்கையாக அவளிடம் வழிந்தான்.



''பார்த்துப் போயிட்டு வாடா. சாரு... நீ கரைல நின்னே குளி. இவன் பாட்டுக்கு நீஞ்சறேன்னு மறுகரைக்குப் போகப் பார்ப்பான்... விடாதே...'' என்று சகஜமாகப் பேசினாள்.

சாரு ஒரு சிரிப்புடன் கேட்டுக் கொண்டாள். அப்படியே தான் கொண்டு வந்த சூட்கேஸை நோக்கி நடந்தாள். அதனுள்தான் அவளது புடைவை, நைட்டி என்று எல்லா உடைகளும் அடங்கியிருந்தன.

சற்றே ஆசுவாசத்தோடு அதைத் திறந்தவள், சூட்கேஸின் உட்பக்க ஃபோல்டரில் அந்த நாற்பது பக்க நோட்டைப் பார்த்தாள்.

அந்த நாடி ஜோசியன் எழுதித் தந்த நோட்டு. மெல்ல எடுத்து விரித்தாள். கச்சிதமாய் ஒரு நாலு வரிக்குப் பக்கத்தில் போய் நின்றாள்.

*'ஓடும் நீருக்குள்ளே ஒரு தலையாய் நீ மூழ்க*
*கூடும் உன் உடம்பும் வட்டச் சூழல தனில் சேரு'ம்;*
*அதனாலே*
*நீர்ச்சாடும் கரைவெளியும் கவனத்தால் தப்பிடவே*
*பாடும் இத்தலை மகனின் பாட்டி லுண்டே பரிகாரம்!'*

- பாடலைப் படித்து முடித்தவள், விரல்களால் அதை வருடிவிட்டு, நோட்டை மூடி திரும்பவும் சூட்கேஸ் உள்ளே ஃபோல்டரில் செருகினாள்.

மனதுக்குள் அந்த நாடி ஜோசியனிடம் நிகழ்த்திய தர்க்கம்.

''இந்தப் பரிகாரம் அது இது எல்லாம் நீங்க பணம் புடுங்கச் செய்யற தந்திரம். எங்களுக்குக் குழந்தை இருக்குன்னு சொல்லிட்டீங்க. அப்புறம் எதுக்குப் பரிகாரம், படிகாரம் எல்லாம்?''

''இன்னிக்கு மெடிகல் சைன்ஸ் எவ்வளவோ வளர்ந்துடிச்சு. எங்க உடம்புலயும் ஒரு குறையும் கிடையாது.

ஆகையால, இன்னிக்கு இல்ல நாளைக்கு, நிச்சயம் ஒரு குழந்தை எனக்குப் பிறக்கும். எப்படிப் பெத்துக்கனும்னும் எனக்குத் தெரியும். நீங்க கிளம்புங்கோ'' என்று அவனிடம் பேசியதும், சம்பத்குமார் விழித்ததும் ஒரு ஓட்டம் ஓடியது.

''அம்மா... இது நாங்க எழுதின பாட்டு இல்லை. முனிவருங்க எழுதினது. காவிரி ஆத்துல உங்களுக்குக் கண்டம் இருக்குன்னு வந்துருக்கிற எச்சரிக்கையை மதிச்சு நடந்துக்கறதுதான் உங்களுக்கு நல்லது'' என்று அவனும் கூறியிருந்தான். எல்லலாவற்றையும் அசைபோட்டபடி புறப்பட்டாள். சம்பத்தும் தயாராக இருந்தான்.

பின் இருவருமாக வீதியில் இறங்கினர்.

எதிரில் சீனு ஆற்றில் குளித்துவிட்டு விறுவிறுவென்று வந்தபடி இருந்தார். சம்பத்தும் கவனித்தான்.

அவரோ புருஷ சூக்தம் சொன்னபடியே அவர்களைக் கடந்து போனார். அவரது அந்த வேகம், பாராமுகம் எல்லாமே சம்பத்தைச் சற்றுக் கீறியது.

''ச்சே... வந்ததும் வராததுமா ஏதேதோ நடந்துடுத்து...'' என்றான்.

''எதுவும் நடக்கலை. பேசாம நடங்கோ...'' என்றாள் சாரு. அதுவும் அழுத்தமான குரலோடும், ஒரே மாதிரி அபிநயத் தோடும்.

''சாரு... சில சமயம் நீ நடந்துக்கறது எனக்கே பிடிக்க மாட்டேங்கறது...'' என்றான் நடந்தபடியே...

''ஒரு ஜெனரல் மேனேஜர் மாதிரி சிந்திச்சுப் பேசுங்கோ. இப்ப நீங்க பேசறதெல்லாம் அம்மாஞ்சித்தனமா இருக்கு...''

''இருக்கும்... இருக்கும்... ஆனாலும் உனக்கு தைரியம். ஆனா எனக்கோ பக்கு பக்குன்னு இருக்கு.''



''அடுத்து என்ன நடக்கும்னு யாராலயும் சொல்ல முடியாது. ஒரு செயலுக்கு அதுக்கு முந்தின செயல்தான் அடிப்படை. அதை முதல்ல புரிஞ்சுக்கோங்கோ.''

அவளது செரிவான பேச்சும் தன்னம்பிக்கையும் அவனைக் கொஞ்சம் கவரவும் செய்தன.

அதே சமயம் எதிரில் ஆறும் தெரிந்தது.

தண்ணீர் ஒன்றும் அவ்வளவாக இல்லை. மார்பளவு இருந்தால் அதிகம். படித்துறையின் முதற்படி வரை தண்ணீர் ஓடும். இறங்கினால் ஒரு மரம் மூழ்கும். அப்படி ஓர் ஓட்டமாக இப்போது இல்லை.

கிழவி ஒருத்தி படித்துறைக் கல்லில் சன்லைட் சோப் போட்டு நுரை பெருக்கியபடி இருந்தாள். அவளிடம் பேசினான்.

சம்பத்தைப் பார்த்தவள் ''யாரு அய்யர் மவனா... எப்படி இருக்கே ராசா?'' என்று சௌஜன்யமானாள்.

''நல்லாருக்கேன் பாட்டி. நீ எப்படி இருக்கே?''

''எனக்கென்ன... இந்த காவிரி கணக்கா வருஷத்துல பெரும்பாதி நாள் காச்சப்பாடு. அப்பப்ப ஓட்டம்...''

''என்ன, தண்ணி ஒண்ணும் ரொம்ப இருக்கற மாதிரி தெரியலையே...''

''மேட்டூர் டாம்ல திறந்த கதவுங்கள மூடிட்டாங்களாமே...'' என்றாள்.

''திரும்பத் திறக்க எவ்வளவு நேரமாகப் போகுது?'' என்று கேட்டவன், சற்று பயமின்றி சாருவைப் பார்த்தான்.

''சாரு... நீயும் இறங்கு நீந்திக் குளிக்கலாம்...'' என்றான் புதிய உற்சாகமுடன். அப்படியே தண்ணீரில் இறங்கினான். மீசை முளைத்த மீன் கூட்டம் ஒன்று அவன் கணுக்கால் அழுக்கை தங்களுக்கான விருந்தாக நினைத்துப் பாய்ந்து வந்து கடித்தன. அது ஒரு இன்பமான குறுகுறுப்பு!

உச்சந்தலைவரை ஒரு விறுவிறுப்பு பரவ, அப்படியே டீ-ஷர்ட்டைக்கூட அவிழ்க்காமல் தண்ணீருக்குள் பாய்ந்தான்.

சாருவும் படிகளில் இறங்கி பவ்யமாக அமர்ந்துகொண்டு குளிக்க ஆரம்பித்தாள்.

அந்த நாடி ஜோசியப் பாடல் ஒருவேளை இப்போது நடக்காமல் பிறகு நடக்கக்கூடுமோ... இல்லையென்றால் அது ஒரு புளுகாக இருக்குமோ என்று பலவித எண்ணங்கள் சம்பத்தை ஆக்ரமிக்க, நீரைக் குடித்து ஃபவுண்டன் போல உமிழ்ந்தபடியே நீராடியவன், அடி மணலைத் தேடி உள்புறமும் போனான். சாருவும் மெல்ல மெல்ல நடு ஆற்றுக்கு வந்து, காலடி மணல் அரிபட நின்றபடி இருக்க, வெகுதூரத்தில் ஒரு நீர்த்தாரை! தண்ணீரிடமும் ஒரு அதீத வேகம்...

## 4

*'உயிர்களுக்கெல்லாம்*
*நான்*
*கண்ணானவன்*
*அதனாலேயே*
*கண்ணனுமானேன்'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

**நா**டி ஜோசியக்காரன் பாட்டுப்படி சாருவை நோக்கி அந்த நீர்ச்சுழலும் வந்துவிட்டது. அதே சமயம் அவன் சொல்லாத ஒரு விஷயமும் அங்கு நடக்க ஆரம்பித்தது. ஆற்றுக்குள் ஒரு பக்கமாய் தன் பசுங்கன்றுக் குட்டியைக் குளிப்பாட்டுவதற்காகக் கொண்டு நிறுத்தியிருந்த வஜ்ரவேலு என்பவன், சுழலைப் பார்த்து விட்டான். அது சாருவை நெருங்கி விட்டதையும்



பார்த்தவன் ''அம்மா! இப்படி வந்துடுங்க...'' என்று அலறியபடியே பாய்ந்து, அவளது தலைமுடியை இறுகப்பற்றிக் கொண்டு ஒரு இழு இழுத்தான்... கரைவெளியே ஸ்தம்பித்த அந்த நொடிப் பொழுதில் சாரு தப்பி விட்டாள். ஆனால், பாவம் அவனது பசுங்கன்றுக் குட்டி...!

அது ஜலத்தாரையோடு இழுத்துச் செல்லப்பட, அப்படியே நொறுங்கிப் போய் கரையில் கல் திட்டின் மேல் அமர்ந்துவிட்டாள் சாரு. ஓடி வந்த சம்பத்துக்குள்ளும் தாறுமாறான இதயத் துடிப்பு!

''அம்மாடி, இது உனக்கு மறு ஜென்மம்!'' - என்றாள் அவ்வளவையும் பார்த்தபடி இருந்த படித்துறை கிழவி ஒருத்தி!

**ஊ**ஞ்சல் பலகை மேல் சீனு! அருகில் மேஜையை ஒட்டி மௌனமாக ராஜம். இருவர் எதிரிலும் குட்டி போட்ட பூனைபோல நடந்தபடியே சம்பத். சாரு அதிர்ச்சியில் இருந்து விடுபடாதவளாக உள்ளே அறையில் கட்டிலில் படுத்திருந்தாள்.

''ஏண்டா... இப்படியே குட்டி போட்ட பூனை மாதிரி நடந்தா ஆச்சா...? அதான் அந்த நாடி ஜோசியக்காரன் சொன்ன மாதிரி எல்லாமும் நடந்துடுத்தே. இதுக்கு மேலயும் அவன் எதானா சொன்னானா?'' - ராஜம் ஆரம்பித்தாள்.

''எங்கம்மா... சாரு அவன் சொல்ல வந்த எதையும் கேட்டுக்கவே விடலை. அந்தப் பரிகாரம், இந்தப் பரிகாரம்னு என்னென்னமோ சொன்னான். எனக்கு பளிச்சின்னு தெரிஞ்சதெல்லாம் ஒண்ணுதான். கங்கைல குளிக்கணும். குளிச்சு முடிச்சு கரை ஏறிய கையோட, இருபத்தியொரு சன்யாசிகளுக்கு என் கையால தாம்பூலம் கொடுக்கணும்னான். அதே போல நம்ம ஆத்துக் கண்ணன் பத்தியும் நிறையச் சொன்ன மாதிரி தெரியறது'' என்ற சம்பத்தை சீனு சற்றுக் கோபத்தோடு பார்த்தார்.

உச்சந்தலைவரை ஒரு விறுவிறுப்பு பரவ, அப்படியே டீ-ஷர்ட்டைக்கூட அவிழ்க்காமல் தண்ணீருக்குள் பாய்ந்தான்.

சாருவும் படிகளில் இறங்கி பவ்யமாக அமர்ந்துகொண்டு குளிக்க ஆரம்பித்தாள்.

அந்த நாடி ஜோசியப் பாடல் ஒருவேளை இப்போது நடக்காமல் பிறகு நடக்கக்கூடுமோ... இல்லையென்றால் அது ஒரு புளுகாக இருக்குமோ என்று பலவித எண்ணங்கள் சம்பத்தை ஆக்ரமிக்க, நீரைக் குடித்து ஃபவுண்டன் போல உமிழ்ந்தபடியே நீராடியவன், அடி மணலைத் தேடி உள்புறமும் போனான். சாருவும் மெல்ல மெல்ல நடு ஆற்றுக்கு வந்து, காலடி மணல் அரிபட நின்றபடி இருக்க, வெகுதூரத்தில் ஒரு நீர்த்தாரை! தண்ணீரிடமும் ஒரு அதீத வேகம்...

## 4

*'உயிர்களுக்கெல்லாம்*
*நான்*
*கண்ணானவன்*
*அதனாலேயே*
*கண்ணனுமானேன்'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

நாடி ஜோசியக்காரன் பாட்டுப்படி சாருவை நோக்கி அந்த நீர்ச்சுழலும் வந்துவிட்டது. அதே சமயம் அவன் சொல்லாத ஒரு விஷயமும் அங்கு நடக்க ஆரம்பித்தது. ஆற்றுக்குள் ஒரு பக்கமாய் தன் பசுங்கன்றுக் குட்டியைக் குளிப்பாட்டுவதற்காகக் கொண்டு நிறுத்தியிருந்த வஜ்ரவேலு என்பவன், சுழலைப் பார்த்து விட்டான். அது சாருவை நெருங்கி விட்டதையும்



பார்த்தவன் ''அம்மா! இப்படி வந்துடுங்க...'' என்று அலறியபடியே பாய்ந்து, அவளது தலைமுடியை இறுகப்பற்றிக் கொண்டு ஒரு இழு இழுத்தான்... கரைவெளியே ஸ்தம்பித்த அந்த நொடிப் பொழுதில் சாரு தப்பி விட்டாள். ஆனால், பாவம் அவனது பசுங்கன்றுக் குட்டி...!

அது ஜலத்தாரையோடு இழுத்துச் செல்லப்பட, அப்படியே நொறுங்கிப் போய் கரையில் கல் திட்டின் மேல் அமர்ந்து விட்டாள் சாரு. ஓடி வந்த சம்பத்துக்குள்ளும் தாறுமாறான இதயத் துடிப்பு!

''அம்மாடி, இது உனக்கு மறு ஜென்மம்!'' - என்றாள் அவ்வளவையும் பார்த்தபடி இருந்த படித்துறை கிழவி ஒருத்தி!

ஊஞ்சல் பலகை மேல் சீனு! அருகில் மேஜையை ஒட்டி மௌனமாக ராஜம். இருவர் எதிரிலும் குட்டி போட்ட பூனைபோல நடந்தபடியே சம்பத். சாரு அதிர்ச்சியில் இருந்து விடுபடாதவளாக உள்ளே அறையில் கட்டிலில் படுத்திருந்தாள்.

''ஏண்டா... இப்படியே குட்டி போட்ட பூனை மாதிரி நடந்தா ஆச்சா...? அதான் அந்த நாடி ஜோசியக்காரன் சொன்ன மாதிரி எல்லாமும் நடந்துடுத்தே. இதுக்கு மேலயும் அவன் எதானா சொன்னானா?'' - ராஜம் ஆரம்பித்தாள்.

''எங்கம்மா... சாரு அவன் சொல்ல வந்த எதையும் கேட்டுக்கவே விடலை. அந்தப் பரிகாரம், இந்தப் பரிகாரம்னு என்னென்னமோ சொன்னான். எனக்கு பளிச்சின்னு தெரிஞ்சதெல்லாம் ஒண்ணுதான். கங்கைல குளிக்கணும். குளிச்சு முடிச்சு கரை ஏறிய கையோட, இருபத்தியொரு சன்யாசிகளுக்கு என் கையால தாம்பூலம் கொடுக்கணும்னான். அதே போல நம்ம ஆத்துக் கண்ணன் பத்தியும் நிறையச் சொன்ன மாதிரி தெரியறது'' என்ற சம்பத்தை சீனு சற்றுக் கோபத்தோடு பார்த்தார்.

''ஒரு விஷயத்துல நம்பிக்கை இல்லேன்னா போகக் கூடாது. மீறி நம்பிட்டா அதை முழுசா செயல்படுத்தணும். இப்படியா இரண்டும் கெட்டானா இருப்பே?''

- அவரது கோபம் உள்ளே கட்டிலில் கிடந்த சாருவை உசுப்பி எழுப்பியது.

''நான் ஆரம்பத்துல இருந்தே வேண்டாம்னு தான் சொன்னேன். இன்னிக்கு பிள்ளை பெத்துக்கறது ஒண்ணும் பெரிய விஷயமே இல்லை. இரண்டு பேரும் மலடா இருந்தாக்கூட ஆர்ட்டிஃபிஷியல் மெதட்ல கன்சீவ் ஆக நிறைய வழிகள் இருக்கு. அதுல ஏதாவது ஒரு வழில போவோம்னு தான் நான் இவரண்ட சொன்னேன். இவர்தான் கேக்காம, நாடி ஜோசியம், அது இதுன்னு அந்தப் பக்கமா போனார். அவனும் நாங்க நன்னா கார்ல வந்து இறங்கறதைப் பார்த்துட்டு, பெரிய கைதான், ஒரு பிடி பிடிச்சுடலாம்னு நினைச்சுட்டான். ஆனா நான் உடனேயே சுதாரிச்சுண்டுட்டேன்.'' சாருவின் பேச்சு சீனுவைத் திகைக்க வைத்தபடியே இருந்தது.

''முதல்ல பெருவிரல் ரேகை கொடுங்கோன்னான். அப்புறமா உங்க அப்பா பேர் கிருஷ்ணா, ராமான்னு எங்க வாயாலயே போட்டு வாங்கித் தெரிஞ்சுக்கப் பார்த்தான். நான் மூச்சு விடலை. இவர்தான் அவன் கேட்டதுக்கெல்லாம் பதில் சொல்லிண்டே வந்தார். கடைசில நான் நினைச்ச மாதிரியே, காசிக்குப் போ, கங்கைல குளி, வெத்தலை பாக்கு கொடு, அப்புறம் ஒரு ஊனமுற்றவனுக்கு ஒரு மண்டலம் சாப்பாடு போடு, எனக்கும் குரு தட்சணையா ஒரு பித்தளை அண்டாவுல நவதானியங்களை வழிய வழிய வாங்கிண்டு வந்து கொடு'ன்னு அடிபோட ஆரம்பிச்சுட்டான். எனக்குப் புரிஞ்சுபோச்சு. அவன் எங்களை வெச்சே மளிகைக் கடை வைக்கப் போறான்னு...''

- சாரு சொல்லும் தொனியில் இருந்தே, அவள் அவ்வளவுக்குப் பிறகும் கூட அந்த ஜோதிடத்தைத் துளிக் கூட நம்பத்தயாராக இல்லை என்பது தெளிவாகியது.



சீனு அதற்கு மேல் அவள் பேசத் தேவையில்லை என்பது போல, ஊஞ்சலை விட்டு எழுந்து நின்றார். குண்டஞ்சி வேஷ்டி அங்கவஸ்ரத்தை மார்பில் இழுத்து பரத்திக் கொண்டார். பன்னிரண்டு திருமண் காப்போடு, ஆறடி உயரத்திற்கு ஒரு கம்பீரத்தின் விஸ்வரூபம் போல அவரது உருவம் காட்சி யளித்தது.

''இருங்கோ, இன்னும் ஒரு விஷயம் பாக்கி இருக்கு.'' அவள் அவரைத் தடுத்தாள். அவரும் இமைக்காத விழிகளோடு ஒரு சாய்வுப் பார்வை அவளைப் பார்த்தார். ''இந்த ஆத்துல இருக்கே ஒரு கிருஷ்ணன் பொம்மை, அதான் பைத்தியக்காரன் தூக்கிண்டு ஓடினானே...?'' அவள் பொம்மை என்று சொன்னது சீனுவுக்குள் ஓர் ஊசியாகக் குத்தியது.

''சாரு நீ இரு... நான் சொல்றேன். இது எனக்கு ஞாபகம் இருக்கு'' - என்றபடியே சம்பத் ஆரம்பித்தான்.

''அப்பா... நம்ம ஆத்துப் பெருமாள் ரொம்ப சக்தி யானவராம். திவ்ய தேசங்கள்ள இருக்கற பெருமாள் மாதிரியேதான்... நித்யப்படி ஆராதனையைத் தடையில்லாம தொடர்ந்தா, நிறைய அதிசயங்களை உணரலாம்னு சொன்னார் அந்த ஜோசியர்.'' - என்ற சம்பத்தின் பதிலில் நாடி ஜோதிடத்தை அவன் நம்புவது ஒளிந்திருந்தது.

''அது சரி... அது என்ன அதிசயம்னு சொல்ல வேண்டாமா? அதைக் கேட்டா, அதுக்கு தனியா காண்டம் பாக்கணும்கறான். முந்நூறு வருஷமா இந்த ஆத்துலையும்தான் பூஜை நடக்கறது. இவ்வளவு நாளா நடக்காத அதிசயம் இனிதான் நடக்கப் போறதாக்கும்?''

- சாருவின் கேள்வியில் சரியான குத்தல்! சீனு தொண்டையைச் செருமிக் கொண்டார். பெரிதாக ஒரு முடிவுக்கு வந்து விட்ட தோரணையைக் காட்டியவர், ''சரிப்பா... இப்ப நீ என்ன பண்ணப் போறே... காசிக்குப் போய் பரிகாரம் பண்ணப் போறியா? இல்ல, உன் ஆத்துக்காரி நினைக்கற மாதிரி இதெல்லாம் பித்தலாட்டம்கறது உன் முடிவா?'' என்று

சம்பத்தைப் பார்த்துக் கேட்க, அவனிடம் ஒரு குட்டித் திணறல், பதில் சொல்ல முடியாமல் சாருவைப் பார்த்தான்.

''இதோ பாருடா சம்பா... ஜோசியக்காரன் சொன்னது பொய்யோ மெய்யோ, ஒரு நடை ஹரித்துவார், இல்லேன்னா காசி வரை போய், அந்த கங்கைல முழுக்குப் போட்டுட்டு, இருபத்தியோரு பேருக்கு வெத்தலை பாக்கும் கொடுத்துட்டும்தான் வந்துடேன். இதனால எது கொறைஞ்சிடப்போறது?'' - என்று ராஜம் தன் கருத்தாகச் சொன்னதற்கு, சீனுவிடம் ஓர் அதட்டலான பார்வை.

''என்ன யோசனை...? அம்மா சொல்ற மாதிரி, ஒரு பிக்னிக் போற மாதிரி போய்ட்டு வரணும்னாலும் குறைஞ்சது நாலு நாளாவது தேவை. உங்க ஆபீஸ்ல லீவு தருவாளா? இப்ப பார்த்து உங்க சேர்மேன் உங்களைக் கூப்பிட்டு அந்த ஜெர்மன் பிராஜக்டையும் சேர்த்து பார்த்துக்கச் சொல்லிட்டார். நீங்க உத்யோகத்தப் பார்ப்பேளா... இல்ல இருபத்தியொரு பிச்சைக்காராளத் தேடிண்டு போவேளா?''

- சாரு சம்பத்தை ஒரு சங்கிலியால் கட்டி இழுப்பது போல இழுத்தாள். சீனுவால் அதற்கு மேல் பொறுமையாயிருக்க முடியவில்லை.

''அம்மாடி... இவ்வளவு நடந்ததைப் பார்த்த பிறகும் உனக்கு நம்பிக்கை வரலையா?'' - என்று அவளிடமே நேராக ஆரம்பித்து விட்டார்.

''என்ன பெருசா நடந்துடுத்து?''

''அதான் ஆத்துப் பெருமாள் விக்ரகம் காணாமப் போச்சு, உன்னையும் சுழல் கொண்டு போகப் பார்த்தது...''

''இதை நான் ஜஸ்ட் கோ இன்சிடென்ஸா தான் நினைக்கறேன்... இப்படி ஒருத்தர் லைஃப்ல நடக்கறதையெல்லாம் முன் கூட்டியே சொல்ல முடியும்னா, குறிப்பா சுழல் வரும், திருட்டுப் போகும்னு எழுதியே சொல்ல முடியும்னா,



சுனாமி பத்தி அவன் சொல்லி பல உயிர்களைக் காப்பாத்தலாமே... பின்லேடன் ஒளிஞ்சிண்டிருக்கற இடத்தைச் சொன்னா, எங்கையும் குண்டு வெடிக்காதே?''

- சாரு பெரிதாக மடக்கிவிட்டதாகக் கருதி சீனுவை வெறிக்க, அவரோ ஒரு கேலிச் சிரிப்பு சிரித்தார்.

''என்ன மாமா சிரிக்கறேள்...?''

''இல்ல... இந்த புத்திய நினைச்சேன்... சிரிப்பு வந்துடுத்து. இதுக்கு சந்தேகப்படத் தெரிஞ்ச அளவுக்கு எதுலையும் நம்பிக்கை வைக்கத் தெரிய மாட்டேங்கறது.''

''நம்பற மாதிரி இருந்தா நம்பலாம்... மூடுமந்திரமா இருந்தா என்ன பண்றது?''

''அதுக்கென்ன பண்ண முடியும்? நடக்கறது கலியுமாச்சே... மாயா ராஜ்யமாச்சே. உண்மை பொய்ய எல்லாராலயும் விளங்கிக்க முடியுமா என்ன?''

''நீங்க என்ன சொல்றேள்...? ஆபீஸ் வேலையை விட ஹரித்துவாருக்கும் காசிக்கும் போறதுதான் இப்ப உசிதம்கறேளா... ஜோசியக்காரன் சொல்றதை நம்பச் சொல்றேளா...?''

''நீ நம்பாதேம்மா... நீ இப்படியே இரு. இதே மாதிரியே யோசி. ஆனா நான் நம்பறேன். இப்ப என்ன...? உங்களால போக முடியலேன்னா, நாங்க போய்ட்டுப் போறோம். சம்பத், நானும் உங்கம்மாவும் நாளைக்கே ஹரித்வார் கிளம்பறோம். அப்படியே வழியில காசிக்கும் வந்து எல்லா பிரார்த்தனைகளையும் பண்ணிண்டு வரோம். நீ உன் உத்யோகத்தைப் பாரு'' - என்று முடிவுக்கு வந்தவர், கோயில் மணிச் சத்தம் கேட்டு தரிசனத்துக்காகக் காலெடுத்தார். வாசற்படி தாண்டும்போது சட்டென்று கண்ணன் ஞாபகம் வந்தது.

'அடடா...இவனுக்காக நித்யப்படி பூஜைகளை யார் செய்வது?'

- பிரதானமான அந்தக் கேள்வி. ஒரு நங்கூரம் போல அவர் மனதில் விழுந்தது.

# 5

*'என் பெயரே ஒரு மந்திரம்*
*நான் புரிந்ததெல்லாம்*
*தந்திரம்*
*இரண்டும்*
*சேர்ந்திடில்*
*யந்திரம்!?'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

நங்கூரம் போல் விழுந்த அந்தக் கேள்வியோடு திரும்பியவர், சில வினாடிகள் நின்ற சம்பத்தையும், சாருவையும் பார்த்தார்.

''என்னப்பா?''

''ஒண்ணும் இல்ல...''

''அப்படின்னா?''

''வந்து சொல்றேன். முதல்ல பெருமாள சேவிச்சுட்டு வந்துடறேன்'' என்று திரும்பி நடக்க ஆரம்பித்தார். ஆனால் ராஜம் அவர் தேங்கி நின்றதற்கான காரணத்தை நொடியில் உணர்ந்து கொண்டது போலப் பேசினாள்.

''சம்பா... நீ பெருமாள சேவிக்கப் போகலையா?''

''ஓ... அதுவா... இதோ நானும் போய் சேவிச்சுட்டு வந்துடறேம்மா.''

''நம்ம பெருமாளைச் சேவிக்க நான் உன்னைத் தூண்டிவிட வேண்டியிருக்கேடா. மெட்ராஸ் உன்னை ரொம்பத்தான் மாத்திடுத்து...''



''இல்லம்மா... ராத்திரி ஏகாந்த சேவையை சாருவோட நிதானமா போய் சேவிச்சுக்கலாம்னு நினைச்சேன்.''

''இப்ப என்ன... அப்பவே போய் சேவிச்சுட்டா போச்சு. பெருமாள் என்ன ஓடியா போயிடப் போறார்...?'' என்று குறுக்கிட்ட சாருவின் குரல் ராஜத்தைக் கொஞ்சம்போல் கீறியது. மாட்டுப் பெண்ணை ஒரு பார்வை பார்த்தாள். அவளும் அப்படியே அடங்கி விட்டாள்.

''அதுவும் சரிதான்... ஏகாந்த சேவையே சேவிச்சுக்கறேன்'' என்று சம்பத் ஊஞ்சலில் அமர்ந்தான். அந்த நொடி அவன் ஒரு சர்க்கஸ் சிங்கம் போலவும், சாரு ஒரு ரிங் மாஸ்டர் போலவும்தான் ராஜம் வரையில் தெரிந்தனர்.

அவனது தொடக்கம் ஒன்றும் இப்படி இல்லை. சாருவும் கல்யாணமான புதிதில் ரொம்பப் பதவிசாகத்தான் இருந்தாள். குப்பை அள்ளக் கூட ராஜத்தை விடமாட்டாள்.

''நான் பாத்துக்கறேன். நீங்க போங்கோம்மா'' என்று முந்திக் கொண்டு, குப்பையை முறத்தில் அள்ளிக் கொண்டு வெளியே போய் கொட்டிவிட்டு வருவாள். சீனு எதிரில் உட்காரவே மனது வராது. அவ்வளவு மரியாதை.

சென்னை வாழ்க்கை எப்படி இப்படி மாற்றியது என்றுதான் தெரியவில்லை!

வாரணாசி ரயில் நிலையம்! 'ஜேஜே' என்றிருந்தது. பெட்டியை விட்டு இறங்கின நொடி போர்ட்டர், ஆட்டோ டிரைவர்கள் என்று ஒரு பெரும் கூட்டம் இறங்குகிறவர்களை எல்லாம் சூழ்ந்து கொண்டது. அந்தக் கூட்டத்தில் கணேஷும் இருந்தான். சினிமாக்கார மாதவன் சாயல் - ஆனால் துளையிடுவது போல ஊடுருவும் பார்வை. சுமாரான பேண்ட் சட்டை, கையில் சூட்கேஸ். ஆட்டோக்காரன் ஒருவன் அவனைத் துரத்திக் கொண்டே போனான்.

கணேஷ் ஒரு வினாடி நின்று அவனை ஊடுருவி.

''நான் ஒரு ஆடிட்டர். எனக்கு கார் வரும். அதுல ஏறி போய்க்க எனக்குத் தெரியும். நீ இடத்தைக் காலி பண்றியா?'' என்றான் இந்தியில்.

அந்த ஆட்டோக்காரன் அதற்கெல்லாம் அசரவில்லை. கூடவே போனான். தமிழ்நாட்டில் இருந்து ஒரு வயதான பிராமண ஜோடி வந்திருந்தது. அவர்களையும் ஒரு ஆட்டோக்காரன் உருட்டிக் கொண்டிருந்தான். அவர்கள் விழி பிதுங்கிப் போயிருந்தனர். கணேஷுக்குள் சட்டென்று ஒரு மண்வாசம்.

''என்ன சார், காசியாத்திரையா... நானும் தமிழ்நாடுதான்'' என்று அவர்களோடு போய் ஒட்டிக்கொண்டவன், ''பயப்படாம வாங்க. நான் பார்த்துக்கறேன்'' என்று அவர்களோடு நடந்தான். அவர்களுக்கும் கொஞ்சம் தெம்பு வந்தது போலத் தெரிந்தது.

''ரொம்ப சந்தோஷம் அம்பி... ஆமா நீங்களும் காசி யாத்திரைக்கு வந்தவரா...?''

''சேச்சே... நான் இங்க இருக்கற நம்ம நாட்டைச் சேர்ந்த மடங்களுக்கு ஆடிட் செய்ய வந்திருக்கேன். ஆமா, உங்களுக்கு எந்த ஊர்?''

''எங்களுக்கு மதுரைப் பக்கம் சோழ வந்தான். காசிக்கு வரணும்ங்கறது பல வருஷத்து ஆசை'' என்றார் அந்தப் பிராமணர்.

''அப்படியா... சரி, இப்ப நீங்க எங்கே போகணும்?''

''அனுமன் காட்னு ஒரு இடம் இருக்காம். அங்க நம்ம சங்கரமடம் இருக்காமே?''

''சங்கரமடம் மட்டுமா? எல்லா தமிழ்நாட்டு மடங்களும் அங்கதான் இருக்கு. நானும் அங்கதான் போறேன். நீங்க சங்கரமடத்துல தங்கப்போறீங்களா?''



''ஆமாம்...''

''சரி வாங்கோ...''

''ரொம்ப சந்தோஷம்... அந்த காசி விசுவநாதர்தான் உங்களை அனுப்பி வெச்சிருக்கார். நாங்க ரொம்பப் புண்ணியம் பண்ணியிருக்கோம்.''

அவர் இப்படிச் சொல்லவும் கணேஷ் ஒரு வினாடி நடையைத் தேக்கி நிறுத்தி, அவரை ஒரு பார்வை பார்த்தான்.

''என்ன அம்பி அப்படிப் பாக்கறீங்க. நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா?''

''இல்ல... புண்ணியம் பண்ணியிருக்கோம்னு சொல்ற நீங்க, எதுக்கு இந்தத் தள்ளாத வயசுல காசிக்கெல்லாம் வரணும்னு யோசிச்சேன். அப்புறம் காசி விசுவநாதர் என்னை அனுப்பி வெச்சதா சொன்னீங்க. ஐ ஆம் சாரி... நான் எங்க ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்திங்கறவர் அனுப்பி வந்துருக்கேன்'' என்று சிரித்தான்.

பெரியவரிடம் பதிலுக்கு சன்னமாய் ஒரு திணறல். அவன் பேச்சு எந்த ரகம் என்பது புரியாத குழப்பமும்கூட... அவன் நடக்க ஆரம்பித்தான். அப்படியே அவர் தன் பெட்டியைச் சுமக்க மாட்டாமல், தரையைத் தொட்டு இழுப்பதை வைத்து அவரது இயலாமை தெரிய வந்தது.

''அத இப்படிக் கொடுங்க... நான் எடுத்துண்டு வரேன்'' என்று வாங்கிக் கொண்டான். அதில் அவனிடம் துளி பரோபகாரம் இருப்பது வெளிச்சப்பட்டது.

குண்டாங் குதிரையாக நிறுத்தப்பட்டிருக்கும் ஆட்டோக்கள், டாக்சிகள்... அதற்கு நடுவே புகுந்து அவனுக்கான கார் நிற்கும் இடத்துக்குச் செல்வதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

''நீங்க என்கூட கார்லையே வாங்க. உங்களை இறக்கி விட்டுட்டு நான் போறேன்'' என்றவன், சூட்கேஸை டிக்கியில் வைத்துவிட்டு அவர்களைப் பார்க்க, அவர்களிடம் ஒரு சின்ன தடுமாற்றம்.

''என்ன...?''

''இல்ல, உங்கள ரொம்ப கஷ்டப்படுத்தறோம்னு நினைக்கறேன்.''

''அதெல்லாம் எதுவுமில்லை. உங்களை விட்டுட்டு எனக்கென்னன்னு போனா, எனக்குத்தான் கஷ்டமா இருக்கும்மா. அப்புறம் கார்ல இடம் வேற இருக்கு. நீங்க வர்றதால ஒரு சொட்டு பெட்ரோல் கூட ஆகப்போறதில்லை. நான் இவ்வளவு சொன்ன பிறகும் உங்களுக்கு நான் சந்தேகத்துக்கு உரியவனா தெரிஞ்சா, தாராளமா நீங்க உங்க சௌகர்யப்படியே வாங்கோ. நான் கிளம்பறேன். ஆனா ஒண்ணு... இங்க இருக்கற ஒரு கூட்டத்துக்கிட்ட இருந்து மீண்டு நீங்க வர்றதுங்கறது, உங்களுக்கு இருக்கற நம்பிக்கை அடிப்படைல சொன்னா, அது உங்க ஜாதக பலத்தைப் பொறுத்த விஷயம். என் வரைல நீங்க வரவே முடியாதுன்னுதான் நினைக்கறேன்'' என்றவனை விதிர் விதிர்ப்புடன் பார்த்த அந்தத் தம்பதி, அடுத்த நொடியே காரில் ஏறி அமர்ந்தனர். காரும் சீற ஆரம்பித்தது.

''எங்களுக்கு வடநாடே புதுசு. நான் சோழவந்தான் விட்டா திருநெல்வேலி, திருநெல்வேலி விட்டா சோழவந்தான்னே வாழ்ந்துட்டவன். அப்பப்ப பழனி, திருப்பதின்னு யாத்திரை போயிருக்கோம். அந்தத் தைரியத்துல காசிக்குக் கிளம்பி வந்துட்டோம். ஆனா இங்க வந்தா...'' அவர் ஏதோ சொல்ல வந்து, முடியாமல் முடங்கிப் போனார்.

கணேஷ் ஒன்றும் கூறவில்லை. செல்ஃபோனில் ஹிந்தியில் அவன் தொழில் தொடர்பாக யாருடனோ பேச ஆரம்பித்துவிட்டான்.



கார் சாலைகளில் திணறத் திணறித்தான் ஓடியது.

அனுமன் காட் சங்கரமடம் வாசலில் அவர்களை இறக்கி விட்டுவிட்டு, திரும்ப காரில் ஏறிக் கொண்டவனை சிலர் கவனித்துவிட்டு ஸ்நேகத்துடன் முன்வந்து பேசினர்.

''யாரு கணேஷா... எப்ப வந்தே?''

''இதோ இப்பத்தான்...''

''எப்படி இருக்குப்பா மெட்ராஸ்... மழையெல்லாம் உண்டா?''

''உங்க வருண பகவானைப் பொறுத்தவரை சென்னை ஒரு பகை நாடாகி ரொம்பக் காலமாச்சு. இன்னிக்குவரை மழை இல்லை. இனியும் வரும்ங்கற நம்பிக்கை எனக்கு இல்லை.''

''அப்படி எல்லாம் சொல்லாதே... பிச்சுண்டு கொட்டப் போறது பார்... ஆமா, இந்த தடவை எவ்வளவு நாள் இங்க தங்கறதா உத்தேசம்?''

''யாருக்குத் தெரியும்... எப்படியும் ஒரு மாசம் இருப்பேன்னு நினைக்கறேன். டயமாச்சு வரட்டுமா?''

கார் அங்கிருந்து புறப்பட்டது. அந்த வேளை பார்த்து ஒருவர், தலை தெறிக்க ஓடிவந்து மறித்தார். கணேஷும் காரை விட்டு இறங்கி அவரை எதிர் கொண்டான்.

''என்ன நடராஜன் சார்... எதுக்கு இத்தனை வேகம்?''

''உன்னைப் பார்த்ததுல கண்ணு மண்ணு தெரியல. ஆமா எப்படி இருக்கே... எப்ப வந்தே... எவ்வளவு நாள் இந்த தடவை தங்கப்போறே?''

''ஒரே சமயத்துல இப்படிப் பல கேள்விகள் கேட்டா எப்படி... நான் நல்லாத்தான் இருக்கேன். இப்பத்தான் வந்தேன். அனேகமா ஒரு மாசம் போல இருப்பேன்னு நினைக்கறேன்...''

"சந்தோஷம்... அப்புறம் உன் அப்பா பத்தி ஏதாவது தகவல் தெரிஞ்சுதா?"

அவன் முகத்தில் ஒருவித சலனபாவம்.

"போலீஸ்ல புகார் கொடுத்துருக்கே தானே?"

"உம்..."

"கவலைப்படாதே... உன் அப்பா கிடைச்சுடுவார். எனக்கு நம்பிக்கை இருக்கு. ஆமாம். உன் அக்காகூட டைவர்ஸ் வரை போய்ட்டதா கேள்விப் பட்டேனே?"

"ஆமாமாம். அத்திம்பேர், சாரி... அக்கா புருஷங்கறவன் அசுரனா இருக்கும்போது, வேற வழி ஏது...?"

"உன் தங்கைக்கு இப்ப உடம்பு பரவாயில்லியா?"

"சார்... இதெல்லாம் இப்படி ரோட்ல நின்னு பேசற விஷயங்களா?"

"சாரிப்பா... உன்னைப் பார்த்த சந்தோஷத்துல கொஞ்சம் இங்கிதம் தப்பிட்டேன். சாரி... வெரி சாரி..." என்றார் அவர்.

"சரி... நான் அப்புறமா பாக்கறேன்..." அவன் திரும்ப காரில் ஏறினான்.

காரை டிரைவர் ஸ்டார்ட் செய்யும் போது, நடராஜன் என்கிற அந்த மனிதர் தன் பக்கத்தில் இருப்பவரைப் பார்த்து "இந்த கணேஷுக்கு ஆனாலும் திடபுத்தி... இவன் இடத்துல நாம இருந்தா தலையைப் பிச்சிண்டு ஓடிப்போயிடுவோம். பாவம், அவ்வளவு பிரச்னை இவனுக்கு. எப்படி எப்படியோ சமாளிக்கறான்... நாஸ்திகனா போய்ட்டான் அதான் ஒரு வருத்தம்" என்றார்.

அது கணேஷின் காதிலும் விழுந்தது. காரும் கிளம்பியது. அவன் முகத்தில் ஒரு புதுச் சீற்றம்.

# 6

*'என்னை*
*நினைத்து*
*நெகிழ்வதே*
*எனக்கான*
*அபிஷேகம்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

சீறிக்கொண்டு புறப்பட்ட அந்தக் கார் வாரணாசியின் சந்து பொந்துகளில் ரொம்பவே சிரமப்பட்டுதான் ஓடியது. ஒரு கட்டத்தில் அப்படியே நின்றுவிட, தலையைச் சொறிந்தான் டிரைவர்.

"என்ன... வழக்கம் போல இங்க இருந்து நடக்கணுமாக்கும்?" - என்று கேட்டபடியே கணேஷும் இறங்கினான். டிக்கியில் இருந்து அவனது சூட்கேஸ் மற்றும் பேக்கை எடுத்துக்கொண்டான். நடக்க ஆரம்பித்தான்.

கணேஷின் ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி, தமது ஆடிட்டிங் அலுவலகத்தை ஹோட்டல் கிளைகள் போல, இந்தியாவில் பல ஊர்களில் ஆரம்பித்து நடத்தி வருபவர். பல கணக்குப் புலிகளை தத்தெடுத்து வளர்த்து வருபவர். எப்பொழுதும் மாநிலத்தில் முதலாக வரும் ஒரு காமர்ஸ் ஸ்டூடண்டுக்கு அவர்தான் முதல் வாழ்த்துக் கடிதம் போடுவார். அந்தக் கடிதம், சம்பந்தப்பட்ட நபரை அப்படியே நெய் லட்டு போல ஒரு பிசை பிசைந்து விடும். பதிலுக்கு நன்றிக் கடிதம் போடும்போது, கிருஷ்ண மூர்த்தி ஐயரும் அவனுக்கான வலையை வீசுவார்.

அதில் விழாத ஸ்காலர்களே இல்லை.

''உனக்குத் தேவை நல்ல சம்பளம். அப்புறமா மதிப்பு... இது இரண்டும் இந்த கே.எம். அசோசியேட்ஸ்ல ஜாய்ன் பண்ணினா அமோகமாகக் கிடைக்கும். அப்புறமா அனுபவம். ஒரு அஞ்சாறு வருஷம் இங்க வேலையைப்பாரு. அப்புறமா நானே டாடா, டி.வி.எஸ்னு கிரீடமுள்ள கம்பெனிகள்ள உன்னை அக்கவுண்ட்ஸ் மேனேஜராக்கி ஒரு வீடு, ஒரு கார்னு உக்காத்தி வைக்கிறேன்'' என்பார் கே.எம். என்று இரு ஆங்கில எழுத்துகளாகிவிட்ட கிருஷ்ணமூர்த்தி ஐயர். அப்படி ஐயரிடம் அகப்பட்டவன்தான் கணேஷ்.

சொந்த ஊர் திருச்சி. டிகிரி முடித்து ஐயரிடம் சேர்ந்து சி.ஏ.வும் எழுதி, முதல் அட்டெம்ப்டிலேயே பாஸ் செய்து விட்டவன். அதிலும் ரேங்க்கில்... எனவே அவனைத் தமது கம்பெனியின் சீஃப் ஆடிட்டராக்கி மாதச் சம்பளமாக இருபதாயிரம் தருகிறார். இதுபோக வருஷம் ஒருமுறை இன்செண்டிவ்வும் அளிக்கிறார்.

இப்படி வாரணாசி, டெல்லி, கொல்கத்தா என்று அங்குள்ள ஃபைல்களைப் பார்க்கக் கிளம்பினால், அதற்குண்டான செலவினங்கள் தனி! கணேஷூம் அப்படித்தான் இப்போது காசிக்கு வந்திருக்கிறான். நமக்கு காசி... வட இந்தியர்களுக்கு அது வாரணாசி.

பாவம் தொலைப்பதற்காக வருபவர்களால், ஒரு பெரிய பாவப் பட்டணமாக வாரணாசி மாறி, கன்னங்கரேல் என்று கறுத்துப் போய், நசிவின் எல்லையில் அந்த நகரம் நிற்பதாகத் தான் கருதுகிறான்.

அதிலும் கங்கை நதியைப் பார்க்கும்போதெல்லாம், அவனது கரங்கள் சவுக்கை எடுத்துக் கொண்டுவிடும். கங்கையை அழுக்காக்கும் அவ்வளவு பேரையும் நிற்க வைத்து விளாச வேண்டும் என்று எண்ணிக் கொள்வான்.

இதனாலேயே வாரணாசிக்குப் போய் வா என்று கே.எம். சொல்லும்போது அவன் மனது ஊமையாகிவிடும்.



''வேண்டாம் சார்... அங்கே போனா எனக்கு ஜன சமூகம் மேலேயே ஒரு வெறுப்பு வந்துடறது. நான் அங்கேயே இருக்க நேர்ந்தா எனக்குப் பைத்தியம் கூடப் பிடிக்கலாம்'' என்பான்.

கே.எம். சிரிப்பார்.

''அந்த ஊரை நினைச்சாலே முக்தின்னு சொல்வா. நீ என்னடான்னா தலைகீழா யோசிக்கிறே... போ... போய் நசுங்கு. எனக்கென்னவோ அந்தக் காசி உன்னைப் பெரிய ஞானியாக்கப் போறதா தோணறது'' என்பார்.

''சார், இதுதான் என்னோட கடைசி ட்ரிப். அடுத்த தடவைல இருந்து ராகவன், ராமச்சந்திரன்னு மத்தவாளை அனுப்பப் பாருங்கோ. நான் போக மாட்டேன். மீறி போகச் சொன்னா, வெளிய போயிடுவேன்'' என்று சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கிறான்.

கிருஷ்ணமூர்த்தி ஐயர் ஒரு சிரிப்புதான் சிரித்தார்.

அதற்கு ஒருநாள் முழுக்க அர்த்தம் சொல்லலாம்.

சென்னைக்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தாள் சாரு. காரை வளைத்து ஒடித்து, வாசலுக்கு நேராக நிறுத்தி, டிக்கியைக்கூட திறந்து வைத்திருந்தான் சம்பத்.

சாமான்கள் அதில் வரிசையாக ஏறிக்கொள்ள திரும்ப வந்தான்.

காரில் அப்பா அம்மாவைக் கூட்டிக் கொண்டு கும்ப கோணம், தஞ்சாவூர் பக்கமாய் ஒரு சுற்றுச் சுற்றி வரும் ஆசையோடுதான் வந்திருந்தான். ஆனால் வந்த நொடி முதலே ஒருவிதமான கிலேசம் ஆட்டிப் படைக்கத் தொடங்கிவிட்டது.

சாருவாலும் இயற்கையாக ஒன்ற முடியவில்லை.

நாடி ஜோதிடம் இந்தமுறை ஒரு குட்டிப்புயலை அந்த வீட்டுக்குள் வீசச் செய்துவிட்டது.

ஜோதிடப்படி ஹரித்வார், ரிஷிகேஷ் பக்கம்போய், அந்தப் பரிகாரம் செய்தால் தனக்கு பேரனோ பேத்தியோ நிச்சயம் என்பது சீனுவின் நம்பிக்கை. ஆனால் அதெல்லாம் இல்லாமலே, அடுத்து வரும்போது ஒரு பிள்ளையோடுதான் வருவேன் என்கிற மாதிரி அதற்குப் பதில் சொல்லிவிட்டாள் சாரு.

இறுதியாக சீனுவும், ராஜமும் யாத்திரை மேற்கொள்ளத் தீர்மானித்து விட்டனர். தங்களுடனேயே கண்ணனையும் கொண்டு செல்வது என்றும் முடிவு செய்துவிட்டனர்.

''அதுதான் சரியான முடிவு. இவருக்கு அபிவாதயேகூட இப்ப சொல்ல வராது'' என்று அதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள் சாரு. அப்படியே ''ஒரு பத்து நாள் பூஜை இல்லைன்னாதான் என்ன? அந்த மரப்பாச்சி பொம்மை என்ன, கண்ணக் கசக்கிண்டா வந்து நின்னு அழப் போறது?'' என்றும் ஒரு கேள்வியும் கேட்டுவிட்டாள். சீனுவுக்கு உடம்பெல்லாம் பதறிவிட்டது.

''அம்மாடி, பூஜை கண்ணனுக்கில்ல... நீ புரிஞ்சுண்டது இவ்வளவுதானா?'' என்று ஓங்கலான குரலில் கேட்டவர், ஏதனாலோ அப்படியே ஸ்ருதியைக் குறைத்துக் கொண்டார்.

''சரிடா சம்பா... நீ கிளம்பு - நாங்களும் கிளம்பறோம்'' என்று அவர் சொல்லவும், சாருவும் உடனே தயாராகிவிட்டாள்.

**கா**ரை ஸ்டார்ட் செய்து கிளம்பும் போது, கச்சிதமாக எதிரில் ஒரு பைத்தியம். அதுவும் நட்ட நடுவில்... கொஞ்சம் முரட்டுப் பைத்தியம் என்பது கைகால்களில் சங்கிலி, கட்டப்பட்டிருப்பதில் தெரிந்தது.

சாருவுக்குப் பகீர் என்றது. அந்தப் பைத்தியம் சாருவையே வெறித்துப் பார்த்தது.

''நகருடா... ஏய் கிறுக்குப் பயலே, நகருடா...'' என்று அவர்களுக்காக பத்மநாப அய்யங்கார் கத்தவும், அரை மனதாக



வழி விட்டவன், வெறித்தபடியே சாருவைப் பார்த்துச் சொன்னான்.

''இரு இரு... உனக்கும் இதே மாதிரி சங்கிலியைப் போட்டு கட்டிப் போடறேன்...''

''நீ போ சம்பா... கிளம்பு... கிளம்பு'' பத்மநாப அய்யங்கார் சொல்லவும், காரும் சீறிக் கொண்டு ஓடியது. அமைதியாகப் பார்த்தபடி இருந்த சீனுவுக்குள்ளோ, ஒரு ஆயாசப் பெருமூச்சு.

அடுத்து அய்யங்கார் அவரைத்தான் நெருங்கினார்.

''என்ன சீனு... சம்பா சீக்கிரமா கிளம்பிட்டான்?''

''ஆபீஸ்ல இருந்து போன் வரவும் கிளம்பிவிட்டான்.''

''நன்னா சமாளிக்கிறியே. சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே. உன் மாட்டுப் பொண்ணு ரொம்பவும் மாறிட்டா.''

''சரி அதுக்கு என்ன இப்போ?''

''இல்ல... சும்மா சொன்னேன்...''

''போதும் பத்து... ஆகவேண்டியதப் பேசு... இதெல்லாம் கொழாயடி பொம்மனாட்டிகள் பேச்சு...''

''சரி, அத்தவிடு... இன்னிக்கு சேவை முடிஞ்சுதா?''

''நான் என்ன நீயா... சௌகர்யத்துக்குப் போய் பெருமாள சேவிக்க...''

''நம்ம சௌகர்யத்துக்குத்தாம்பா பெருமாள். உன் பிள்ளை மாதிரி எட்டிக்கூட பார்க்காம இல்லையே நான் ஒண்ணும்.''

- பத்மநாப அய்யங்கார் ஓர் ஊசியைச் செருகியதில் நறுக்கென்ற வலி. ஒருமுறை முறைத்துவிட்டு வீட்டுக்குள் திரும்பினார். ராஜம் காய்ந்த புடைவையை மடித்துக் கொண்டிருந்தாள். சீனு வரவும் பார்த்தாள்.

''நாம எப்ப பொறப்படறோம்?'' என்று சன்னக் குரலில் கேட்டாள். சீனுவிடம் பிரக்ஞையே இல்லாத மாதிரி ஒரு தோற்றம்.

"உங்களத்தான்...''

"ஆங்...'' - ஒரு சிலிர்ப்புடன் விடுபட்டு நிமிர்ந்தார்.

"இல்ல, நாம எப்ப பொறப்படறோம்னு கேட்டேன்.''

"அது... அது... நான் இப்ப பத்து மணி பஸ்சுல திருச்சிக்குப் போய் எல்லா ஏற்பாட்டையும் பண்ணிட்டு வந்துடறேன். நாளைக்கு ஏகாதசி. திருவாராதனையை முடிச்சுண்டு கிளம்புவோம். பரண் மேல அந்த பிரம்புப்பெட்டி இருக்கு பார். அதை எடுத்து வை...''

"அது எதுக்கு?''

"சரிதான்... உன் கண்ணனை என்ன, நீ இடுப்புலையா வெச்சுண்டு வருவே...?''

"அப்படின்னா?''

"கண்ணனும் நம்மகூட வரான்...''

"..............''

"என்ன ராஜம் பேச்சக் காணோம்.''

"இல்ல... ரயில்ல ராத்திரி பகல்னு போகும்போது எங்க குளிப்பேள்? எப்படி பூஜை பண்ண முடியும்?''

"எப்படியாவது பண்ணுவோம். பண்ணணும். அதுக்குத் தகுந்த மாதிரிதான் டிக்கெட் வாங்கப் போறேன். ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி அய்யருக்கு வடக்க நல்ல செல்வாக்கு. அவரைப் பார்த்தா மிச்சத்த அவர் பார்த்துண்டுடப்போறார்.''

- என்ற சீனு, அப்படியே பீரோவைத் திறந்து தோல் பையை எடுத்து கை அக்குளில் வைத்துக்கொண்டு, துண்டையும் உடம்பின்மேல் பரத்திப் போர்த்திக் கொண்டு கிளம்ப ஆயத்தமாகி விட்டார்.

வாசல் தாண்டும்போது எதிரில் படுவேகத்தில் சம்பத்தின் கார்! திரும்பவும்...

காரின் கண்ணாடி மேலேயோ ரத்த வரிகள்!

## 7

*'மாறாத தர்மமும்*
*மாறிடும் நியாயமும்*
*கூடிப் புணர்ந்ததில்*
*கூடு கண்டதே*
*என் மேனி...!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

காரின் முன்புறம் தெரிந்த அந்த ரத்தக் கீற்று, சீனுவை ஓர் உலுக்கு உலுக்கிவிட்டது. காரிலிருந்து சம்பத்தும் சாருவும் படுவேகமாக இறங்கி அவரை நோக்கி வந்தனர்.

சம்பத் வெலவெலத்திருந்தான்! பாதிமுகம் கழுவப் பட்டது போல வியர்வை. சாருவிடம் அவனைத் தேற்றும் பாவம்.

"நீங்க அனாவசியமா டென்ஷனாகாதேள்... இப்ப எதுவும் பெருசா நடந்துடலை. குறுக்க வந்தது அந்தக் கன்னுக் குட்டியோட குத்தம். அதுக்கு விதி முடியணும்னு இருக்கு, நம்ம கார்ல வந்து விழுந்து போயிடுத்து. தட்ஸ் ஆல்...''

அவள் பேசியதில் இருந்தே சீனுவுக்கு நடந்தது விளங்கிவிட்டது.

"என்ன சம்பா... ஆக்சிடென்ட் பண்ணிட்டியா?'' என்றார் படுவேகமாக.

"அ... ஆமாப்பா... முக்கம்புகிட்ட ஆத்துல குளிச்சுட்டு ஒரு கன்னுக்குட்டி ஓடி வந்து என் கார் முன்னால விழுந்து...''

"உயிர் போயிடுத்தா...?''

"அ... ஆமாப்பா... நான் மளமளன்னு காரைத் திருப்பிண்டு வந்துட்டேன்."

சீனுவுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

மலங்க மலங்க மகனைப் பார்த்தார்.

"அப்பா... இவர் பேர்ல ஒரு தப்பும் இல்லை. திடீர்னு கன்னுக்குட்டி குறுக்க வந்து சக்கரத்துல மாட்டினா, அதுக்கு நாம என்ன பண்ண முடியும்?" என்று சாரு விறுவிறுவென்று கொல்லை வரைபோய் ஒரு பக்கெட்டில் தண்ணீரும் பழைய துணியுமாக வந்து, காரில் படிந்திருக்கும் அந்த ரத்தக் கறையைக் கழுவத் தொடங்கினாள்.

ஒரு நிமிடம் கூட ஆகவில்லை, கார் பளிச்!

திரும்பி வந்தாள்.

"சரி, புறப்படுங்கோ. இப்ப கிளம்பினாத்தான் இருட்றதுக்குள்ள போய்ச் சேர முடியும்" என்று சம்பத்தையும் தூண்டினாள்.

சாருவின் துரிதம் பதினைந்தாவது நிமிடம் அந்த வீட்டு வாசலில் கார் இல்லை. அவள் கழுவிய ரத்தத் திப்பிகள் மட்டும் சீனுவின் கண்ணைக் கரித்தன.

மௌனமாய் அருகே சென்றவர், மண்ணை அள்ளிப் போட்டு மூடிவிட்டு "ராஜம், நான் போய்ட்டு வந்துடறேன்" என்று கிளம்பினார்.

தார்ச் சாலையைத் தீண்டவும் திருச்சி போகும் பஸ் வரவும் சரியாக இருந்தது. ஏறி அமர்ந்தார். மனதில் ஒருவித கசகசப்பு... யாத்திரை கிளம்பும்போது இப்படி கன்றுக்குட்டி பலியான சம்பவம், ஏதோ ஒரு பெரிய விஷயத்துக்கு முன்னோட்டம் போல அவருக்குள் முண்டிக் கொண்டே இருந்தது.



முக்கம்பு அருகே பஸ் சற்றுத் தேங்கியது. எட்டிப் பார்த்தார். அந்த அடிபட்டு உயிரைவிட்ட கன்றுக்குட்டி சாலை ஓரமாகக் கிடக்க, சிலர் சுற்றி நின்றிருந்தனர். தேங்கிய பஸ்ஸில், அந்த இடத்தில் ஒருவர் ஏறினார். அவரிடம் முணுமுணுப்பு.

"டிரைவர் சாமி... பாத்துப் போங்க. இப்பத்தான் ஒரு மகராசன் ஓரமாய்ப் போய்க்கிட்டிருந்த கன்னுக்குட்டி மேல ஏத்தி சாவடிச்சுட்டு சிட்டாப் பறந்துட்டான். பாவம் தாய்ப்பசு... கத்து கத்துன்னு கத்திக்கிட்டே கிடக்கு..." என்றார்.

"ஆமா, மாட்டுக்காரன் எங்க...?" என்று சீனு அவன் வாயைப் பிடுங்கினார்.

"அவன் ஒரு செவிட்டுப் பய... கார்க்காரன் அடிச்சுட்டுப் போன பிறகு வர்றான். என்ன பிரயோஜனம்?"

"பாத்து மேய்க்க வேண்டாமா?"

"அட நீங்க வேற சாமி... கண்ணு மண்ணு தெரியாதபடி வேகமா ஓட்டிக்கிட்டு வந்தவனைச் சொல்லாம, பாத்து மேய்க்க வேண்டாமான்னா என்னா அர்த்தம் சாமி?"

சீனுவுக்கு அதன்பின் அவனிடம் கேள்வி கேட்க மனதில் தைரியமில்லை. அந்த விஷயம் பற்றி யோசிக்கக்கூடப் பிடிக்கவில்லை.

அந்த மடத்துக் கணக்கு வழக்குகளில் ஏகக் குளறுபடிகள். மடத்து மேனேஜர், கணேஷைத் தன் அறைக்கு அழைத்திருந்தார். அவனும் உள்ளே நுழைந்தான்.

"உக்காருங்கோ கணேஷ்... அக்கவுண்ட்ஸ்ல ஏதாவது பிரச்னையா?" எடுத்த எடுப்பிலேயே விஷயத்துக்கு வந்துவிட்டார்.

"ஆமாம் சார்... உங்க கணக்குப்பிள்ளை கொடுத்திருக்கிற வவுச்சர்ஸுக்கும், டோட்டல் அமௌண்ட்டுக்கும் ஒத்தே வர

மாட்டேங்குது. பில்லுல வேற நிறைய அடித்தல் திருத்தல்கள், பச்சையா சொல்றேன் சார், இங்க நிறைய ஊழல் இருக்குது...''

''ஆயிரம் பேர் சாப்பிற இடத்துல சில பருக்கைகள் சிதறத்தான் செய்யும். இங்க நான் எவ்வளவோ விஷயங்களை கரெக்ட் பண்ணியிருக்கேன். தொடர்ந்து பண்ணிக்கிட்டும் வரேன். அடுத்த வருஷம் நீங்க இங்க ஃபைல் பண்ண வரும்போது பாருங்க, எல்லாம் அவ்வளவு சரியா இருக்கும்?''

''இந்த வருஷத்துக்குப் பேசுவோம். கணக்குன்னா சரியா இருக்கறதுன்னு ஒரு பொருள் இருக்கு சார். நம்ம உடம்புலேயே கண், காது, வாய், மூக்குங்கற விஷயங்கள்ல ஒண்ணு குறைஞ் சாலும் நாம முழு மனுஷன் கிடையாது. ஊனமுள்ள வனாயிடறோம்.''

''நல்ல உதாரணம்தான். ஒரு பொதுவான அமைப்புல சில தப்புகளைத் தவிர்க்க முடிய மாட்டேங்குது. அதுலையும் நீங்க நம்ம ஊர்க்காரர். அட்ஜஸ்ட் பண்ணி ஹெல்ப் பண்ணுங்க. பை த பை, இந்தத் தடவை உங்களுக்கு ஏ.சி. ரூம் அலாட் பண்ணச் சொல்லியிருக்கேன்.'' - என்று கொஞ்சம் வழியவும் செய்தார்.

இடையில் மடத்து பூஜை முடிந்து கற்பூர ஆரத்தி அவரைத் தேடி வர, எழுந்து நின்று பவ்யமாகக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அப்படியே கணேஷ் பக்கமும் அந்த ஆரத்தித் தட்டு நீண்டது.

''நீ போப்பா... சார் ரிச்சுவல்ஸ்ல நம்பிக்கை இல்லாதவர்'' என்றார் மேனேஜர்.

''நேர்மையா இருக்கறதே பெரிய ரிச்சுவல் சார், என் வரைல...'' என்றபடியே எழுந்தான் கணேஷ். ''வேற நபரை வெச்சு அவர் தலைல ஒரு ஐஸ்கிரீம் ஃபேக்டரியையே வெச்சு, உங்க காரியத்த முடிச்சுக்குங்க. சரியா இருக்கற ட்ரான்சாக்ஷன்களை மட்டும் நான் பாத்து முடிச்சுக் கொடுத்துடறேன்'' என்று புறப்பட



ஆரம்பித்தான். மேனேஜர் தொடர்ந்து அசட்டுத்தனமாக ஒரு சிரிப்புச் சிரித்தார்.

கங்கைக் கரை படித்துறைகள் மனித தேகங்களால் முற்றாக மறைந்து கிடந்தன. திமுதிமுவென்று வெள்ளம். அதில் மூழ்குவதற்காகவே எங்கெங்கிருந்தோ வந்திருந்தவர்களைப் பண்டாக்கள் மொய்த்துக் கொண்டிருந்தனர்.

ஓடும் ஆற்று நீரில் மூழ்கிக் குளிப்பது என்பது விலை மதிப்பில்லாத ஒரு விஷயம். கணேஷும் வந்திருந்தான். அனுமன் காட்டில் வாரணாசியின் ஒட்டுமொத்த சாக்கடை நீரையும் கங்கைக்குள் திருப்பி விட்டிருந்தனர். அந்தக் காட்சி கணேஷ் வரையில் கண்களை உறுத்தியது.

போனால் போகிறது என்று சற்றுத் தள்ளி நின்று முழுக்கு போட்டுக் கொண்டிருந்தனர். கணேஷால் முடியவில்லை. மடத்தில் கணக்கில் பிரச்னை... வெளியே கங்கையே பிரச்னையில்... எந்த நம்பிக்கையில் ஒவ்வொருவரும் இந்த ஆற்றில் குளித்தால் பாவம் தீரும் என்று கருதுகின்றனர்?

அவனுக்குள் மனதில் நமைச்சல். அப்போது பார்த்து அவன் செல்போனிடம் சிணுங்கல். அதற்குக் காதைத் கொடுத்தான்.

''கணேஷா... நான் கிருஷ்ணமூர்த்தி பேசறேன்...'' அவனது பாஸின் குரல்!

''சொல்லுங்க சார்...''

''மேனேஜர் இப்ப போன் பண்ணினார். அதை நான் பாத்துக்கறேன். நீ, நீயா இரு. ஐ டோன்ட் மைண்ட்... அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்...''

''என்ன சார்?''

''இங்க குணசீலத்துல இருந்து ஸ்ரீனிவாசன்னு எனக்குத் தெரிஞ்சவர் தன் மனைவியோட யாத்திரையா அங்க வர்றார்.

அவர் ஒரு வைஷ்ணவர். அலஹாபாத் போய் அங்கதான் கங்கா ஸ்நானம் பண்ணப்போறார்... அவருக்கு உன் அறைல இடம் கொடு. அப்படியே அவர்கூடப்போய் எல்லா உதவிகளையும் செய். உன்னை நான் கைட் ஆக்கறதா நினைக்காதே. எனக்காக இந்த உதவியைச் செய். மிஸ்டர் ஸ்ரீனிவாசன் ஒரு மேன் ஆஃப் கேரக்டர். அவர்கூடப் பழகும்போது நீயே தெரிஞ்சுக்குவே'' என்று சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்தார்.

கணேஷ் திரும்பினான். அரைக்கிறுக்கு போல ஒரு சன்யாசி அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அவன் அருகே வந்தவர், ''தம்பி, நீ தமிழ்நாடா?'' என்று கேட்க, அவனிடம் ஆமோதிப்பு.

''இந்தப் பையைக் கொஞ்சம் வெச்சுக்கோயேன். ஒரு முழுக்குப் போட்டுட்டு வந்து வாங்கிக்கிறேன்...'' அவர் ஓர் அழுக்கு ஜோல்னாப் பையை நீட்டினார். கணேஷும் மறுபேச்சின்றி வாங்கிக்கொண்டான். அவரும் கங்கைக்குள் இறங்கினார்.

தண்ணீருக்குள் போனவர், அதன்பின் வெளியே வரவேயில்லை. கணேஷுக்கு பதைத்தது.

கங்கைக்குள் சில சன்யாசிகள், பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஜலசமாதியாகி விடுவார்கள். கணேஷே அப்படி சிலரைப் பார்த்திருக்கிறான். இவரும் அந்த ரகமா? கணேஷ் தவிப்போடு அவரது பையைப் பார்த்தான். அதனுள் வழவழப்பான சாளக் கிராமக் கற்கள்; சில கிரந்தப் புத்தகங்கள். ஒரு கல்லில் கிருஷ்ணாயுதமான சக்கரம் அப்படியே வார்க்கப்பட்டிருக்க, அதைக் கையில் எடுத்தான். அப்போது படித்துறையில் ஒருவர் ''நீர் வேணும்னா பாரும்... நிச்சயம் அந்த கிருஷ்ணன் வரத்தான் போறான். அதர்மம் ஜாஸ்தியாகும்போது நான் வருவேன்னு சொன்னபடி நடக்கத்தான் போறது...'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

# 8

*'சிறையில் பிறந்த*
*இறைவன் எனக்கு*
*கடமையைச் செய்வதே*
*பூஜைக் கணக்கு!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

கங்கைக் கரை வெளியில் யாரோ இருவர் பேசிக் கொள்வதுகூட, கணேஷ் வரையில் அவனுக்காக என்றே தோன்றியது. அந்த நிலையிலும் அந்தப் பேச்சு அவனுக்குள் ஒரு கோபத்தைக் கொண்டு வந்தது.

'அதர்மம் அதிகரிக்கும்போது கண்ணன் வருவான்' என்று பல பேர் பல இடங்களில் சொல்லிக் கேட்டிருக்கிறான். அப்போது எல்லாம், ''அது என்ன, அதிகரிக்கும்போது...? அது துளிர்விடும் போதே வந்து அதன் வாலை ஒட்ட நறுக்காமல், அதிகரிக்கிற வரை காத்திருப்பதும் ஒரு தெய்வமா?'' என்று திருப்பிக் கேட்டிருக்கிறான். அங்கேயும் கேட்கத் தோன்றியது. ஆனால் கேட்க முடியாதபடி அந்த கிறுக்கு சன்யாசியின் ஜலசமாதி மனதைப் பிசைந்தது.

'வாழ்வில் எவ்வளவோ தரிசனங்கள்...! உயிர் பிரிவதைப் பார்ப்பது என்பது மட்டும் ஏனோ மனதுக்குள் பச்சை குத்திக் கொண்டு விடுகிறது. ச்சே...' கணேஷ் தடுமாறிக் கொண்டே இருக்கும்போது ஒரு குரல்.

''என்ன அம்பி... உன்னை நான் இங்க பார்ப்பேன்னு நினைக்கவேயில்லை...'' என்ற அந்த குரலுக்குரியவர் கணேஷுக்குப் பரிச்சயமான அவன் ஊர் சாஸ்திரிகள். பெயர் பஞ்சாட்சரம், ஜோதிடரும் கூட!''

"ஓ... நீங்களா?"

"நானேதான்... நீ எங்க இங்க? பாவம் புண்யம்கறதுலையே நம்பிக்கை. இல்லாத பிள்ளையாண்டானாச்சே நீ... கங்கைக்கு வந்துருக்கியே?"

"உத்யோக நிமித்தமா காசிக்கு வந்துருக்கேன் ஸ்வாமி. கங்கைக்கு வந்திருக்கறது ஓடற தண்ணியில முங்கிக் குளிக்கறதுக்காக... உம்ம வரையல இதுல குளிச்சா பாவம் போகும். என்வரைல அழுக்குக்கூட போகாது. பாருங்க... வாரணாசியோட அவ்வளவு சாக்கடையும் இந்த பனித் தண்ணில கலந்து இதையும் ஒரு சாக்கடை ஆக்கிண்டு இருக்கறத..."

"இது என்ன?"

"ஒரு வயசான சன்யாசி இதை என் கைல கொடுத்து, பத்திரமா பாத்துக்கச் சொல்லிட்டு கங்கைல இறங்கினார். இறங்கி பத்து நிமிஷம் ஆகப் போறது. இந்த நொடி வரை வரலை. ஜல சமாதி பத்தி இங்க நிறைய கேள்விப்பட்டிருக்கேன். இன்னிக்கு அதை நான் பார்த்துட்ட மாதிரிதான் தோணறது."

"என்னது ஜலசமாதியா...? உன் எதிர்லையா? அதுவும் இந்தக் கற்களை எல்லாம் கொடுத்துட்டா?" - கேள்வியோடு பையை வாங்கி உள்ளே பார்வையை விட்டவர் அப்படியே திக்குமுக்காட ஆரம்பித்தார்.

உள்ளே கறுப்பாய், வழவழவென்று, சங்கும் சக்கரமும் பொறிக்கப்பட்ட சாளக்கிராமக் கற்கள்...! கண்டகி நதி தீரத்து ஓட்டத்தில், அதன் உருளல் புரளலில், சீற்றம் சிணுங்கலில் உருவாகும் அறிவுக்கு எட்டாத ஓர் அதிசயம் அந்தக் கற்கள்.

ஒரு கோயிலின் கருவறை விக்ரகத்தை விடவும், சக்திமயமான இல்லத்து தெய்வ ரூபம் அது...!

"ஸ்வாமி... இன்னிக்கு எனக்கு நேரம் சரியில்லை. அதான் இன்னிக்குப் பார்த்த வேலையும் பிரச்னை. வந்த இடத்துலயும் பிரச்னை. இதை நான் இப்ப என்ன பண்ணணூட்டும்?"



"புரியாமப் பேசறியே... இது ஒரு அருட் புதையல். உன் வாழ்க்கை மாற ஆரம்பிச்சாச்சு. உன் ஜாதகம் இருந்தா பார்த்து இதை நான் கன்ஃபார்ம் பண்ணிடுவேன். வந்தவரும் சாதாரண நபரா நிச்சயம் இருக்க முடியாது. உன் கைல இந்தப் பையைக் கொடுத்துட்டு, ஜலசமாதி ஆகியிருக்கார்னா சூட்சுமக் காரணம் ஏதோ இருக்கு."

- ஜோசியர் சொன்னது அவனுக்கு எரிச்சலைக் கிளப்பியது. அந்த ஜோல்னாப் பையை அப்படியே கரை ஓரமாக ஒரு கல்படி மேல் வைத்தான். விறுவிறுவென்று ஆற்றுக்குள் இறங்கினான். முங்கி முங்கி எழுந்தான். நன்றாகத் தேய்த்துக் குளித்தான். மல்லாக்க மிதந்து படுத்து, வாயில் நீர் வாங்கி ஒரு ஃபவுண்டன் போல உமிழ்ந்தான். அப்படியே நாலாபுறமும் பார்த்தான். ஜோதிடர் அவனை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடியே இருந்தார்.

சற்றுத் தள்ளி அம்பாரமாய்ப் புகை எழும்பி வானில் பரவியவடி இருந்தது. அரிச்சந்திராகாட்டில் படித்துறைக் கற்களின் மேலேயே பிணங்களைப் போட்டு எரிப்பதால் வரும் புகை. கணேஷும் பார்த்தான்.

'நான் மட்டும் மந்திரியானேன்னா, முதல்ல இதுக்குத் தடை விதிச்சு கங்கையை சவங்கள் கிட்ட இருந்து மீட்கற வழியைப் பார்ப்பேன்' - என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

அந்த சாளக் கிராமக் கற்கள் கொண்ட பை அப்படியே இருந்தது. ஜோசியரும் பார்த்துக் கொண்டே இருந்தார். துணியைப் பிழிந்து துவட்டிக் கொண்டு உலர்ந்ததும் படி ஏற ஆரம்பித்தான்.

"அம்பி... இந்தப் பையை விட்டுட்டுப் போறியே...?"

"எனக்குச் சொந்தமில்லாதது அது."

"ஆனா... உன்கிட்டதானே ஒப்படைக்கப்பட்டது?"

"சரி... நான் இப்ப உங்ககிட்ட ஒப்படைக்கிறேன். எனக்கு திடீர் புதையல் எல்லாம் வேண்டாம். நீங்களே வெச்சுக்குங்க..."

"அப்படியா சொல்றே?"

"ஆள விடுங்க சாமி... திரும்பத் திரும்ப கேட்டதையே கேட்டுக்கிட்டு..." அவன் படிகளில் வேகமாக மேலேறினான்.

"நான் இப்ப சொல்றேன்... இது திரும்ப உன்கிட்ட வரும். எப்படியாவது வரும். அப்ப தெரியும் இது எப்படிப்பட்ட துன்னு..." - அவர் கத்தியது அவன் காதிலும் விழுந்தது.

திருச்சி ஜங்ஷன்!

இரண்டு லெதர் பேக், ஒரு மூங்கில் கூடை, பவானி ஜமுக்காளம் பளிச்சென்று தெரியும் படுக்கைக் கட்டு என்று பிளாட்ஃபாரத்தில் காத்துக் கொண்டிருந்தார் சீனு. இடுப்புக்கு கீழே மச்சம். மேலே முழுக்கைக் சட்டை என்று பாண்டித்யமான தோற்றம். காலுக்கு டயர் செருப்பு.

ராஜமும் மடிசாரில் மின்னினாள். காதிலும் மூக்கிலும் வைரங்கள்... ராஜத்தை யார் பார்த்தாலும் அழுந்தப் பார்த்தார்கள்.

திருக்குறள் எக்ஸ்பிரசும் பிளாட்ஃபாரத்தில் நுழைந்து கொண்டிருந்தது.

"காலம்பற நாலு மணிக்கெல்லாம் இந்த ட்ரெய்ன் எழும்பூர் போய்டும். அஞ்சு மணிக்கெல்லாம் திருவல்லிக்கேணி நரசிம்மனாத்துக்குப் போயிடலாம். போன உடனே தீர்த்தா மாடிட்டு, பார்த்தசாரதி பெருமாள் கோயிலுக்குப் போயிடணும். திருவோண நட்சத்திரம் ஆரம்பிச்சுடுத்து. அந்தப் பெருமாள் சேவை மகா விசேஷம். அப்படியே வந்து நம்ம ஆத்துக் கண்ணனுக்கு திருவாராதனையைப் பண்ணி முடிச்சிட்டு, சாப்ட்டு கிளம்பினா அடுத்து ரயிலைப் பிடிக்க சரியா இருக்கும்..."



"அது சரி... நாளை காலம்பர நரசிம்மனாகம் இருக்கு. நாளன்னைக்கு...?"

"நீ திருவாராதானத்தைப் பத்திதானே கேக்கறே?"

"பின்ன...?"

"சொல்றேன். முதல்ல ஏறி உக்கார வழியப் பார்ப்போம். ஏஎஸ்ஒன் கோச் எங்க இருக்கு?" - சீனு லக்கேஜ்களைத் தூக்கிக்கொண்டு, ரயில் பெட்டிகளில் ஒன்றைத் தேடி அதில் ஏறி அமரவும் செய்தார். ஏ.சி. கோச்... ஜில்லென்று ராஜத்தின் முகத்தில் ஒரு கிச்சுக் கிச்சு சிரிப்பை நிரந்தரமாக்கியது. சீனுவோ, லக்கேஜ்களை சீட்டுக்குக் கீழே வைத்து விட்டு அந்த மூங்கில் பெட்டியை எங்கே வைப்பது என்று பார்த்துக் கொண்டு இருந்தார். இறுதியில் இரு பர்த்துக்கு நடுவில் உள்ள ஸ்டாண்டில் வைத்தார். கச்சிதமாக அளவெடுத்த மாதிரி, அதுவும் அமர்ந்து கொண்டது.

"ராஜம்... எப்பவும் பொட்டி மேல ஒரு கண் இருக்கட்டும் நமக்குக் கீழ் பர்த். மேல படுக்கறவாளை தலையை பொட்டி பக்கமா வெச்சு படுக்கச் சொல்லணும்... கால் படாமப் பாத்துக்கணும்" - என்று வாய்ப்பாடு ஒப்பிப்பது போலப் பேசினார்.

"நான் தூங்கவே போறதில்லை. நீங்க கவலைப்படாம இருங்கோ. நான் பாத்துக்கறேன்."

"ஆமா நான்தான் தூங்கி வழியப் போறேனாக்கும்? நீ ஒருத்திடி..." - அவரிடம் செல்லமான அலுப்பு. ரயிலும் பிளாட்ஃபாரத்தை விட்டு நீங்கத் தொடங்கியது.

"ரொம்ப நாளாச்சு ரயில்ல போய்..." - என்றபடி வெளியே பார்த்தார். ராஜம் ஒடுங்கிக் கொண்டு அமர்ந்திருந்தாள். புதிய சூழலில் பொருத்திக் கொள்ள முடியாதபடி ஒரு கூச்சம் அது.

"நன்னா ரிலாக்ஸா உக்காரு... அந்த பர்த் பூரா உனக்குத்தான்" - என்றபடியே வெளியே கூர்ந்து பார்த்தார்.

''என்னத்த அப்படிப் பாக்கறேள். திருச்சியை இதுக்கு முந்தி பாத்ததேயில்லையா?''

''பைத்தியம்... சீரங்க கோபுரம் கண்ணுலபடும். அதுக்குத்தான்...'' அவர் சொல்ல சிறிது நேரத்தில் காவேரிப் பாலத்தின் மேல் ரயில ஓட, கோபுரமும் கண்ணில் பட்டது.

''ரங்கா...'' - என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார், திரும்பினார். அவர் எதிரில் ஒரு நிறைமாத கர்ப்பிணிப் பெண். கூடவே அவளின் வயதான தந்தை... இருவரின் பார்வையும் அவர்களுக்கான பர்த் என்று அப்பர் பர்த்தைப் பார்த்து, ஊர்ஜிதம் செய்து கொள்வதில் இருந்தது.

## 9

*'என் உடல்*
*இந்த தேசம்!*
*என் மொழியோ*
*உபதேசம்!'*

**- ஸ்ரீ கிருஷ்ணன்**

பளிச்சென்று தெரிந்த அந்த கர்ப்பிணிப் பெண்ணும், கூடவே நின்றிருந்த அந்த வயதானவரும் ராஜத்தை நொடியில் ஈர்த்துவிட்டனர். சீனுவும் அந்த கர்ப்பகோலத்துக்கு ஒரு வேகமான அங்கீகாரத்தை அளிக்கத் தொடங்கினார்.

''உங்களுக்கு அப்பர் பர்த்தாக்கும்? அம்மாடி, நீ முதல்ல உக்காரு, ராஜம் இப்படி வா. அந்தப் பொண்ணு செளகர்யமா உட்காரட்டும்'' என்று அவர் சொல்லவும், அந்த நொடியே ஒரு சகஜ பாவம் உருவாகிவிட்டது.

''இதுதான் மாசமாம்மா?'' - இணக்கமாகக் கேட்டாள். ரயில் ஓட்டத்தில் ஒரு வித தாலாட்டு.



''ஆமாம் மாமி...'' அவள் பதிலோடு உட்கார்ந்து பெருமூச்சும் விட்டு முடித்தாள்.

''உன் முகத்தைப் பார்த்தா நாளைக்கே கூட உனக்குக் குழந்தை பொறந்துடலாம்னு தோணறது...'' என்று ராஜம் சொல்ல ஆரம்பித்தாள்.

''அப்படித்தான் டாக்டரம்மாவும் சொன்னாங்க. சீமந்தம் முடிஞ்ச உடனே வர வேண்டிய பொண்ணு. புருஷன் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுவார்னு சொல்லிச் சொல்லியே லேட் பண்ணிட்டா. கடைசில இன்னிக்குத்தாங்க நல்ல நாளா அமைஞ்சிச்சு. இப்பகூட தாய் வீட்டுக்கு வர இதுக்கு மனசில்ல...''

- அவள் அப்பா இடையிட்டுப் பேசியதைக் கேட்ட, ராஜம் ஆச்சரிய பாவனையைக் காட்டினாள்.

''உங்க ஊர்?''

''சென்னைதாங்க... திருச்சில கட்டிக் கொடுத்துருக்கேன். தங்கமான மாப்ளை. கல்யாணமாகி ஆறு வருஷமாயிடுச்சு. இப்பதான் எல்லாம் கூடி வந்துருக்கு...''

- அவள் சொன்னதற்குள் ஒரு உள் சோகமும் ஒளிந்திருந்தது. அடுத்தகணம் ராஜத்திடம் பார்வை மாறிப் போனது.

''ஏம்மா... கொஞ்ச நாள் கழிச்சு பெத்துக்கலாம்னு நினைச்சுட்டியா...?''

''இல்ல மாமி... நடுவில நிறைய அபார்ஷனாயிடுச்சு'' - அந்தப் பெண் தயக்கத்தோடு சொன்ன நொடி, ஒரு சுரீர் உணர்ச்சி சீனுவிடம்.

''ஒண்ணா இரண்டா... ஏழு குழந்தைங்க! வயித்துல மூணு மாசம் நாலு மாசத்துலையே போயிடுச்சுங்க. இது எட்டாவது... இதாவது தங்கணும்னு நாங்க வேண்டாத தெய்வம் இல்லை. பெங்களூர் பக்கத்துல தொட்டமளூர்னு ஒரு ஊர் இருக்குது. அங்க இருக்கற குழந்தை கிருஷ்ணனைக் கும்பிட்டுக்குங்க.

நல்லபடியா குழந்தை பிறந்துடும்னு ஜோசியர் ஒருத்தர் சொன்னார். அங்க போய் நின்னு சாமி முன்னால கதறி அழுதுச்சு. என் வயிறு என்ன, உயிர் வாங்கற கல்லறையான்னு கேட்டு புலம்பித் தீர்த்திடுச்சு. அப்புறம்தாங்க இந்தக் கரு தங்கி, இவ்வளவு தூரம் வந்துருக்கு!''

- அவர் சொன்னதில் ஒரு கண்ணன் கதையே ஒளிந் திருப்பது போலத் தோன்றியது சீனுவுக்கு. அந்தக் கண்ணனும் தேவகி வயிற்றில் எட்டாவதாகத்தானே வந்து பிறந்தான்? அதுவும் இரும்புச்சிறையில்... இந்தப் பெண்ணும் கிட்டத்தட்ட அந்த தேவகிதான் என்று நினைக்கும்போதே, டி.டி.ஆர் வந்து டிக்கெட்டுக்கு நின்றார். அந்த பெரியவர் முந்திக் கொண்டு நீட்டினார், வாங்கிப் பார்த்தவர், ''உங்க பேர்தான் தாமோதரனா, தேவகி யாரு?'' என்று கேட்க, அவர் மகளைக் காட்ட, சீனுவுக்கு சிலிர்த்து விட்டது உடம்பு.

'பெயரிலுமா இவள் தேவகி?' என்று கேட்டுக் கொண்டவர் அப்படியே இரு பார்த்துக்கு நடுவே அடங்கிக் கிடக்கும் அந்த பிரம்புக் கூடையைப் பார்த்தார். 'கண்ணா, இது என்ன கணக்கு?' என்று மனதுக்குள் கேட்க, டி.டி.ஆர் அவர் பக்கம் கையை நீட்டினார். அதில் கலைந்து போனது அவரது சிலிர்ப்பு.

''அம்மாடி கவலைப்படாதே, உனக்கு சுகப்பிரசவம் ஆயிடும். பிள்ளக் குழந்தை தான் பிறக்கும். எனக்கென்னவோ அந்தக் கிருஷ்ணனே பிள்ளையா வந்து பிறக்கப் போறாங்கற மாதிரி தோணுறது. ஏழு போனதுக்காக வருத்தப்படாதே. அது ஒரு கர்மக் கணக்கு. எட்டுல நீ பெரிய ஒரு விஷயத்தையே எட்டிப் பிடிக்கப் போறே...''

- அவர் சொல்லி முடிக்கவும் ஓடிக் கொண்டிருந்த ரயில் திடீரென்று கிறீச்சிட, அந்த கேரேஜில் ஒரு எதிர்பாராத குலுக்கல்! அதில் அந்த பிரம்புக் கூடையும் அப்படியே புரண்டு விழுந்தது.



விழும் போதே அதன் மேல் முகப்பு திறந்துகொள்ள, உள்ளே பட்டுத்துணிகளுக்குள் அடக்கமாகப் படுத்திருந்த கண்ணன், தாவிக் குதிக்கும் ஒரு குழந்தைபோல அந்தப் பெண்ணின் மடிமேல் போய் விழுந்தான்!

''பெருமாளே... நாராயணா...'' - என்று ஓங்கிக் குரலெடுத்து விட்டார் சீனு. அந்தப் பெண்ணோ அந்த விக்ரகத்தை ஆசையுடன் பார்த்தாள். சுண்டி இழுக்கும் சிரிப்பும், இடுப்பைப் பற்றத் துடிக்கும் கைகளுமாய், மடியில் விழுந்த கண்ணனால் அவளிடமும் ஒரு பரவசம்!

''அம்மாடி, அதை இப்படிக் கொடு... அது எங்க ஆத்து பெருமாள்... அதைக் கொடும்மா. கொடுத்துடு...'' - சீட்டை விட்டு எழுந்து நின்றவராக, அடக்க முடியாதபடி பதறத் தொடங்கி விட்டார் சீனு.

ராஜமும் அந்தச் சம்பவத்தால் பதைத்துப் போய்விட்டாள். கண்ணனைக் கையில் வாங்கியவர், முதல் காரியமாக இரு கரங்களிலும் தூக்கி, காலிரண்டும் நெற்றியில் படும்படி பிடித்துக் கொண்டார். கண்களிரண்டும் கலங்கிவிட்டன.

அந்தப் பெண்ணும் பெரியவரும் அதை ஓர் அதிசயக் காட்சியாகத்தான் பார்த்தார்கள். ராஜம் மள மளவென்று பிரம்புப் பெட்டியை நிமிர்த்தி, உள்ளே துணியை அழகாய்ப் பரத்தி, சிதறி விட்ட அர்ச்சனைப் பூக்களையும் பொறுக்கி எடுத்து அந்தத் துணியில் தூவியவளாக அவரைப் பார்த்தாள். அவரும் பிரக்ஞை மீண்டவராக, கண்ணனை அந்தப் பெட்டிக்குள் படுக்க வைத்தார். கண்ணனோடு கூடவே இரண்டு சாளக்கிராம கற்கள். ஒன்றில் சங்கு, இன்னொன்றில் சக்கரம்! இரண்டும் பத்திரமாக இருந்தன. பிரம்புப் பெட்டி விழுந்ததில் சிலை தான் உருண்டு ஓடியிருக்க வேண்டும். ஆனால் அவை பத்திரமாக இருந்தன. எல்லாமே ஏதோ ஒரு ரகசியச் செய்தியை அவருக்குச் சொல்வது போலத்தான் இருந்தது. அப்படியே அந்தப் பெண் கைபட்டதில்

தீட்டு பட்டிருக்குமோ என்றும் துளி லஜ்ஜை. 'சீச்சீ... இவள் தேவகி! நான் சொன்னது கண்ணன் காதில் விழுந்திருக்கிறது. அதுதான் அம்மாவிடம் தாவிவிட்டான்' என்றும் நினைத்துக் கொண்டார்.

''சாமி, நீங்க சொல்லி வாய் மூடவும், உங்க பெட்டில இருக்கற சாமி என் பொண்ணு மடியில விழவும் ஏதோ ஒரு கணக்கு இருக்குதுங்க. முதல்ல நாங்க இந்த வண்டில வர்றதாவே இல்லை. எதுலையும் டிக்கட் கிடைக்கல. இதுலதான் கிடைச்சுச்சு. இது வடக்க போற வண்டியாம்ல? காலைல நாலு மணிக்கெல்லாம் வேற எக்மோர் போயிடும்னாங்க. அந்த நேரம் போய் இறங்கி எப்படிப் போறதுன்னு நினைச்சுக்கிட்டிருந்தேன். இப்பத்தாங்க புரியுது... உங்களப் பாக்கணும். இப்படி நடக்கணும்னு இருக்கு. அப்ப அதுக்குத் தகுந்தமாதிரிதானே எல்லாரும் ஆடியாகணும்?''

- அவர் சொல்லச் சொல்ல, கண்களை இறுக்கி மூடிக்கொண்டார் சீனு.

**வா**ரணாசி! அந்த மடத்து சத்திர அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தார் ஜோசியர். வெறும் கையை வீசிக் கொண்டு போனவர், ஒரு ஜோல்னாப் பையோடு வரவும், அவரையே பார்த்தபடி இருந்த விஸ்வநாதன் என்பவர் ''என்ன ஜோசியரே... கைய வீசிண்டு போனீர், ஒரு பெரிய பையோட வர்றீரே?'' என்று வாயைப் பிடுங்க ஆரம்பித்தார்.

''ஏய்யா... நீ இந்த மடத்து சிப்பந்தியா, இல்ல. சி.ஐ.டியா... யார் எப்படிப் போறா எப்படி வரான்னு பாக்கறதுதான் உன் வேலையா?''

''அட என்ன ஜோசியரே, கோவிச்சுக்கிட்டீங்களாக்கும். எனக்குத் தெரியாம இந்த ஊர்ல எதையாவது வாங்கிடப் போறீங்களேன்னு ஒரு பயம்தான்...''



- பதிலுக்கு அதிர்ச்சியோடு பார்த்தார் ஜோதிடர்.

''என்ன பாக்கறீங்க?... சுத்தமான கங்கை தண்ணில இருந்து பாணலிங்கம், ஒரிஜினல் காசிக்கயிறு, அன்னபூரணி, விக்ரகம், ஒரிஜினல் காசிச் சொம்புன்னு இங்க பல ஐட்டம் இருக்கு. அதை எங்க வாங்கினா நல்லா இருக்கும், எது ஒரிஜினல்னு எனக்குத் தானே தெரியும்?''

''ஏய்யா, இதுல எல்லாம் கூடவா டூப்ளிகேட்டு?''

''என்ன ஜோசியரே அப்படிக் கேட்டுட்டீங்க. இங்க மனுஷாள்லயே பலர் டூப்ளிகேட், அது தெரியுமா உங்களுக்கு...?''

''போதும் விஸ்வநாதா, க்ஷேத்ரம்னா கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருக்கும்னு எனக்குத் தெரியும். நீ எதையாவது சொல்லி, என் மனசை கிலேசப்படுத்திடாதே. நீ இடத்தைக் காலி பண்ணு...'' - ஜோதிடர் அவரைத் துரத்தியவராக அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டார்.

பின் பயபக்தியோடு அந்தப் பையைப் பார்த்தபடியே உள்ளிருந்து ஒவ்வொன்றாக எடுக்க ஆரம்பித்தார். கறுப்பாய், உருண்டையாய், மொழுமொழுவென்றும், பலவித ரூபங்களிலும் சாளக் கிராமங்கள். ஒன்று இரண்டு, மூன்று என்று எண்ணினார். சரியாக எட்டு! எட்டாவதில் ஒரு கட்டை விரல் போன்ற ரூபம்... விசித்திரமாக இருந்தது! அப்புறமாய் ஏட்டுக் கட்டுகள். பிரியைப் பிரிக்கவே நெடுநேரமாயிற்று... உள்ளே சமஸ்கிருதத்தில் வரிகள். மிக பழைமையானது என்பது அதன் பழுப்பு நிறத்தில், முனைகளின் நொறுங்கலில் உணர முடிந்தது. ஜோதிடருக்கு சுமாராக சமஸ்க்ருதம் தெரியும். ஆனாலும் முழுமையாகப் படிக்க முடியவில்லை.

'க்ருஷ்ணானந்த சாகர த்ரஷ்டுமப்யா கதோரக...' - என்று தடுமாறிப் படித்தவரால் அதற்குமேல் படிக்க முடியவில்லை. யாரோ மகான் கிருஷ்ணன் மேல் ஸ்லோகமோ, பாடலோ எழுதியிருக்கிறார் என்பது போல விளங்கிக் கொண்டவர். திரும்பவும் நூலால் கட்டத் தொடங்கினார்.

அப்படியே ஜோல்னாப் பைக்குள் வேறு ஏதாவது இருக்கிறதா என்றும் பார்த்தார். ஒரு குயர் நோட்டு ஒன்று மடங்கிய நிலையில் கண்ணில் பட, எடுத்தார். பிரித்தார். உள்ளே பக்கத்துக்குப் பக்கம் 'ஓம் நமோ நாராயணாய' என்கிற அஷ்டாக்ஷர திவ்யநாமம் ஆயிரக்கணக்கில் எழுதப்பட்டிருந்தன. புரட்டிக் கொண்டே வந்தவருக்கு, ஒரு பக்கத்தில் அது முடிவடைந்துவிட மறு பக்கத்தில் யுகங்களின் கணக்கு என்று விபரங்கள்.

கிருதயுகம் = 17,28,000 வருஷங்கள்

திரேதாயுகம் = 12 96,000 வருஷங்கள்

துவாபர யுகம் = 8, 64,000 வருஷங்கள்

கலியுகம் = 4,32,000 வருஷங்கள்.

நான்கு யுகங்களும் சேர்ந்து ஒரு சதுர்யுகம்.

இப்படி 71 சதுர்யுகம் ஒரு மன்வந்தரமாகும். ஆயிரம் சதுர்யுகம் ஒரு கற்பகாலமாகும் என்று வரிசையாக விளக்கங்கள்.

படித்துக் கொண்டே போன ஜோதிடருக்கு இலேசாகத் தலையைச் சுற்றியது. இருந்தும் தொடர்ந்து படித்தார்.

'1000 சதுர்யுகத்திற்கு ஒரு முறை வருவது கல்பகால மாகும். இதுவரை 12 கல்ப காலங்கள் சென்றுவிட்டன. இறுதியாக முடிந்தது விநாயக கல்பம்... அடுத்து வரும் கல்ப முடிவில் பிரளயம் ஏற்பட்டு பூமி அழியும். கல்கியவதாரம் நிகழப் போகிறது...'

– என்ற குறிப்புகளை எல்லாம் வாசித்து முடித்தவர் 'இந்தக் குறிப்புகள் புண்ணியன் ஒருவன் கை சென்று, பின் ஜோதிடன் ஒருவன் கரத்தை அடைந்து அவன் இதை வாசிக்கும் நாளிலிருந்து சொல்ப நாட்களில் இந்தப் புண்ய பூமிக்குக் கண்ணன் வருவான். அவனை வரவேற்க நான் முன் செல்கிறேன்!' என்கிற குறிப்பை வாசிக்கவும் அப்படியே ஆடிப் போனார்!

# 10

*'மாயை என்னில்*
*ஓர் அங்கம்*
*என் மதியும்*
*அதனில் நன்றடங்கும்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

அந்தக் குறிப்புகள் ஜோதிடரை உலுக்கி எடுத்து விட்டன. காலக் கணக்குப் போடுகின்ற கணக்கு வாத்யார்கள்தான் ஜோதிடர்கள். எல்லாமே ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவை என்பதுதான் ஜோதிடர்கள், ஜோதிடம் மூலம் உணர்ந்து வைத்திருக்கும் உண்மையுமாகும். எனவே, இந்த மாதிரி அனுபவங்கள் ஏற்படும்போது அதை சந்தேகப்படுவதோ, புரிந்து கொள்ளாமல் போவதோ அவர்கள் வரையில் நடக்க வாய்ப்பில்லை.

ஜோதிடர் பஞ்சாட்சரம்கூட அந்தக் குறிப்புகளை அசை போட்டவராக, அப்போதைய காலப்ரமாணத்தைக் கவனித்தார். அன்றைய தினம் கேதுவின் ஆதிக்கத்தில் இருந்தது. அவருக்கும் கேது தசைதான்... அதுதான் ஒருவனை கோயில், குளம் என்று தள்ளிக்கொண்டு போகும். எல்லாக் குப்பையிலும் இரும்புத் துகள்களை காந்தமானது கவர்ந்து கொள்கிற மாதிரி, கேது விஷயம் இன்னொரு கேதுவோடு எப்படியாவது கைகோத்துக் கொண்டு விடும்.

இன்றும் அப்படி நடந்து விட்டதை எண்ணி ஆச்சரியப் பட்டவர், 'கண்ணன் வருவானா?' என்று தனக்குள் சந்தேக மெல்லாம் படவில்லை. 'கண்ணன் வரப்போகிறான். கங்கைக் கரையில் கிடைத்திருக்கும் சத்யவாக்கு இது!' என்று நம்பியவர்,

அப்படியே அந்த சாளக்கிராமங்களை கண்ணில் ஒற்றிக் கொண்டார். கண்களில் கண்ணீர் திரண்டிருந்தது.

திருவல்லிக்கேணி நரசிம்மன் அகத்தில், தன் அகத்து கண்ணனுக்கான திருவாராதனையை முடித்துத் திரும்பவும் பிரம்புப் பெட்டிக்குள் தூக்கி வைத்தபோது, பார்த்துக் கொண்டேயிருந்தான் நரசிம்மன் பிள்ளை கௌசிக். ப்ளஸ்டூ படிக்கும் பிள்ளை... ஆனால் புஷ்டியான ஆகாரம் காரணமாக, ஒரு ஐந்தாறு வயது கூடுதலாகத் தெரிந்தான். பெர்முடாஸ் ட்ரவுசர், டீ ஷர்ட் என்று நகரத்தனமாய் இருந்தவனுக்கு சீனுவின் திருவாராதனை ஒரு புரியாத புதிராகவே இருந்தது.

''மாமா...''

''உம்...''

''அந்த மரப்பாச்சி பொம்மை யாரு..?''

''கண்ணன்டா... பொம்மைங்காதே, அப்படிச் சொல்லப் படாது...''

''பொம்மை மாதிரி இருந்தது, அதான் கேட்டேன். ஆமா, எங்க போனாலும் எடுத்துண்டுப் போவேளா?''

''நீ என்ன கேக்கறேன்னு புரியறது... இது எங்க ஆத்து பெருமாள். பல தலைமுறையா என் முன்னோர்கள் சேவிச்ச பெருமாள். ஒட்டப்பந்தயத்துல ரிலே ரேஸ் ஓடியிருக்கே தானே?''

''உம்... சொல்லுங்கோ...''

''அப்படி ஒருத்தர் மாத்தி ஒருத்தர் இதை விடாம பூஜை பண்ணிண்டு வர்றோம்...''

''பண்ணலேன்னா...?''

''இதுக்கு என்ன பதில் சொல்லறது... பண்ணணும்... பண்ணிண்டு வரோம்.''

''ஒருநாள் கூடத் தவறாமலா...?''

''ஆமாம்... ஒருநாள் தவறாம சாப்பிட்றோமா இல்லையா?''



''அந்த மாதிரி விடாம இதைச் செய்யணுமா?''

''ஆமாம்... அந்தக் காலத்துல பெரியவா நிறைய விஷயங்கள் வகுத்துக் கொடுத்துட்டுப் போயிருக்கா. அதன்படி நடந்துண்டா எல்லார்க்கும் நல்லது.''

''அது என்னென்ன மாமா...?''

– கௌசிக் சங்கிலிக் கண்ணிகளாய் கேள்வி கேட்டுக்கொண்டே போனான். நரசிம்மனுக்கே அது எரிச்சலை உண்டு பண்ணிவிட்டது.

''கௌசிக்... வாட் ஈஸ் திஸ் நான் சென்ஸ். கோ... கோ அண்ட் டேக் யுவர் புக்ஸ். ஹோம் ஒர்க்க முடி. இங்க என்ன தொணதொணன்னு கேள்வி கேட்டுண்டு. மாமா, மாமிக்கு ரயிலுக்கு வேற நாழியாயிண்டுருக்குப் பார்...''

''இல்ல நரசிம்மா... நம்ம வைஷ்ணவத்துல தர்க்கத்துக்கு ஒரு தனி இடம் உண்டு. அதுல கரை கண்ட பெரியவர் எவ்வளவோ பேர் நம்மதுல இருந்துருக்கா. ராமானுஜரைப் பார்த்து சமணர்கள் கேட்காததையா இவன் கேட்டுடப் போறான். கேட்கட்டும்... இவனால நானும் கொஞ்சம் யோசிப்பேனோல்லியோ?''

– சீனு திரும்பவும் அவனைத் தூண்டி விட்டார்.

''நீ கேளுடா கௌசிக்...''

உடனே கௌசிக்,

''இத்தனை வருஷ பூஜையால என்ன கிடைச்சுது?'' என்றான்.

''நல்ல கேள்வி. பூஜைங்கறது ஒண்ணை எதிர்பார்த்துச் செய்யறதில்ல. பிரதிபலன் இல்லாம பண்றதுக்குப் பேர்தான் பூஜை...''

''அப்ப வெட்டிவேலையால்ல இது ஆயிடும்...''

- கௌசிக்கின் பதில், கேள்வி கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது. நரசிம்மனுக்கே என்னவோ போலாகிவிட்டது.

"மாமா... நான் இப்பத்தானே சொன்னேன். விடுங்கோ, உங்களுக்கு ரயிலுக்கு டயமாவுது பாருங்கோ... சாப்ட்டு கிளம்ப சரியா இருக்கும். வழியில சாப்பிட சப்பாத்தி, புளிசாதம், தக்காளித் தொக்குன்னு கட்டி வெச்சிருக்கேன். நாளைக்குச் சாயந்தரம் வரை தாங்கும். நாளன்னிக்குக் கிளம்பற ட்ரெய்ன் வாரணாசி போயிடும். அங்கதான் யாரோ கணேஷ்னு ஒரு பிள்ளையாண்டான் இருக்கான். அவன் பார்த்துப் பான்னுட்டேள்."

- நரசிம்மன் இடையில் புகுந்து பேச்சை மாற்றி விறுவிறுவென்று அடுத்த கட்டத்துக்குப் போய்விட்டார்.

"எங்க ஸ்கூல்ல எங்க மாஸ்டர்ஸ்லாம் எதுவா இருந்தாலும் கடவுள்ளகிட்ட கேட்கலாம், அவர் கொடுப்பார்னு சொல்லி யிருக்கா. அதனாலதான் அப்படிக் கேட்டேன். 'தட்டுங்கள் திறக்கப்படும். கேளுங்கள் கொடுக்கப்படும்'னு ஜீசஸ்கூட சொல்லியிருக்கறதா ஜேம்ஸ்னு என் ஃப்ரெண்ட் ஒருத்தன் சொல்வான். நீங்கதான் பூஜைங்கறது ஒண்ணை எதிர்பார்த்து செய்யறதில்லைன்னு சொன்னேள். புத்தர்கூட ஆசைப்படாம இருக்க ஆசைப்பட்டார்னு ஒருத்தர் சொல்லியிருக்கார். எதையும் கேக்காம, எதிர்பார்க்காமெல்லாம் யாராலையும் இருக்க முடியாது. அப்படி இருக்கேன்னு யாராவது சொன்ன அது பொய்.

பொய்யானவா எவ்வளவு பூஜை செய்தாலும் பிரயோஜன மில்லைன்னு எங்க யோகா மாஸ்டர் சொல்லியிருக்கார்."

- கௌசிக் கொடுத்த தன்னிலை விளக்கம், சீனுவை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. அவனையே வெறித்தார்.

அவன் கேள்வி கிட்டதட்ட அவரை பொய்யானவர் என்று சொல்லிவிட்டமாதிரிதான் தோன்றியது.



'நான் பொய்யானவனா?

ஆமாம்... கடவுளிடம் என்னை நல்லபடியாக வை ஆரோக்யம் கொடு, நிம்மதி கொடுன்னு கேக்கறோமே...

அதெல்லாமும் எதிர்பார்ப்பு தானே? இது தெரிஞ்சிருந்தும் நான் பிரதிபலன் எதிர்பார்க்காம பூஜை செய்தேன்னு சொன்னது பொய் தானே?'

- அவருக்குள் கேள்வி எழும்பி விடையும் சுகப்பட்டு விட்டது. அதே சமயம் திட்டமிட்டு ஒரு பொய்யை சொன்ன மாதிரியும் அவருக்கு தெரியவில்லை. மொத்தத்தில் குழப்பமாக இருந்தது. அவர் வரையில் அந்த கௌசிக் அவ்வையின் எதிரில் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா என்று கேட்ட ஒரு முருகனாகத்தான் தோன்றினான்!

சென்ட்ரலில் ஒரு மினி இந்தியாவைக் காண முடிந்தது. எல்லோர் கைகளிலும் ஒரு தண்ணீர் பாட்டில். சீனு வரையில் அந்தக் காட்சி கண்ணைக் கரித்தது. பாலைவிட நல்ல தண்ணிக்கு கூடுதல் விலை கொடுப்பதும், அதை கங்காரு குட்டியால சுமப்பதும்தான் இப்போது இங்கே கலாசாரம்!

அப்போது "அப்பா..." என்று ஒரு குரல். திரும்பினால் ஆபீஸ் யூனிஃபார்மில் சம்பத்!

"சம்பா..." ராஜம் கதிர் பட்ட பூமொட்டு போல சத்தமின்றி வெடித்தாள். சீனு முகத்தில் ஒரு சிட்டிகை அளவுக்குச் சிரிப்பு. ஓடி வந்த சம்பத், லக்கேஜை அவர்களிடமிருந்து வாங்கிக் கொண்டான். பிரம்புக் கூடையை சீனு தராமல் தானே வைத்துக் கொண்டார்.

"என்னப்பா இது... நம்மாகம் இருக்கும்போது எதுக்கு நரசிம்மனாத்துக்குப் போனேள்?"

சீனு எதுவும் சொல்லவில்லை. ஆனால் ராஜம் அவனோடு சற்று ஒதுங்கிச் சென்று பேசினாள்.

''சம்பா... இந்தத் தடவை சாரு ரொம்ப அன்னியமா நடந்துண்டா. அவளுக்கு இந்த நாடி ஜோசியம், யாத்திரை இதுல எல்லாம் துளியும் நம்பிக்கை இல்லை. அப்படி இருக்க, எப்படிடா உன் ஆத்துல இருந்து ஆரம்பிக்க முடியும்...? எல்லாத்துக்கும் மேலா ஆத்து கண்ணனை மரப்பாச்சின்னு ஏளனமாப் பேசிட்டா. ஆகையால் பெருமாளோட உன் அகத்துக்குப் வரப் பிடிக்கலை.''

இலேசாகக் கண்களில் ஈரத்தை மட்டும் காட்டினான் சம்பத். ஏதோ சொல்ல வந்தான். ஆனால் சீனு கோச்சுக்குள் எல்லாவற்றையும் வைத்துவிட்டு அழைத்தார். அதன்பின் உள்ளே போய் அமர்ந்துகொண்டனர். சிறிது நேரம் பார்வை பரிவர்த்தனை. பாரமான மௌனத்தை சுமந்தபடி இருந்தான் சம்பத். சீனு அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதுபோல வாயை திறந்தார்.

''சரிப்பா... நீ கிளம்பு. உனக்கு ஆபீஸ்ல நிறைய வேலை இருக்கும். ஒண்ணு மட்டும் சொல்லிக்கறேன். உனக்கு நிச்சயமா ஒரு குழந்தை பிறக்கும். என் சாவுக்குப் பேரன் நிச்சயம் நெய்ப் பந்தம் பிடிப்பான். அந்த வெளிச்சத்துலதான் நான் வைகுண்டத்துக்குப் போகணும்...''

- சீனுவின் பேச்சு சம்பத்தை ஒரு கிள்ளு கிள்ளியது. காந்தவும் செய்தது. அப்பாவை மலங்க மலங்கப் பார்த்தான். பின் மணி பர்சில் இருந்த சில ஐந்நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து நீட்டினான்.

''இல்லப்பா... என்னண்ட இருக்கு. பென்ஷன் பணமெல்லாம் எதுக்கு இருக்கு? நீ கிளம்பு, டயமாச்சு பார்...'' என்று அவனை ஒரு மூன்றாம் மனிதனைப் போலக் கிளப்பி விட்டார். நல்ல வேளை சிக்னல் விழுந்து விசில் சத்தம் கேட்கவும், சம்பத்தும் வேறு வழியின்றி இறங்கினான். ரயிலும் வேகமெடுக்க ஆரம்பித்தது.

உள்ளே கண்களை மூடிக்கொண்டு கைகளைக் கூப்பியிருந்தார் சீனு. அவருக்குள் கௌசிக் விளையாட்டாய்



கேட்ட கேள்விகள். ஒரு கேள்விக்குக்கூட தான் சரியான பதிலைக் கூறவில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டவர், 'பொய்யானவா எவ்வளவு பூஜை செய்தாலும் ஒரு பிரயோஜனமும் இல்லை' என்று அவன் சொன்னதில் மையம் கொண்டிருந்தார்.

அவர் வரையில் இதுவரை வாழ்ந்த மொத்த வாழ்வும் அர்த்தமற்ற ஒன்றாக ஆகிவிட்டது போலகூட ஒரு பிரமை தட்டியது.

அதனால்தான் வம்ச விருத்தியில் ஓர் ஊனமே? மாட்டுப் பெண்ணும் எதிர்மறைச் சிந்தனைகளில் உழல்கிறாளோ?

அவர் கேள்விகளில் தத்தளித்த அந்த நொடியில் அந்த கோச்சுக்குள் ஓர் அழுக்குச் மனிதர் புகுந்திருந்தார்!

## 11

*'மாறும் ஒன்றும்*
*மாறாத ஒன்றும்*
*சேர்ந்தாலே இயக்கம்; அந்த*
*மாறும் ஒன்றும்*
*மாறாத ஒன்றும்*
*எனக்குள்தான் அடக்கம்!'*

*- ஸ்ரீகிருஷ்ணன்*

ஓடத் தொடங்கிவிட்ட அந்த ரயிலுக்குள் ஓடிவந்து ஏறிய அந்த மனிதர், ஏறி இறங்கும் அந்த கதவுக்குப் பக்கத்திலேயே நின்று கொண்டார். ரயிலும் நன்றாக வேகம் எடுக்கத் தொடங்கியது.

சிறிது நேரத்திலேயே டி.டி. அந்தப் பக்கமாய் வந்து, அவரை ஏற இறங்கப் பார்த்தார். பார்க்கப் பரதேசி போன்ற தோற்றம். ஆனால் கண்களில் ஒரு தீட்சண்யம்.

''என்ன... வித்அவுட் டிக்கட்டா?'' என்று டி.டி கேட்க, அவரோ இடுப்பு மடிப்பில் இருந்து டிக்கெட்டை எடுத்துக்காட்ட, டி.டிக்கு அவர் முகத்தில் அறைந்த மாதிரி இருந்தது. இருந்தும் விடவில்லை.

''இது ரிசர்வேஷன் கோச்... இந்த டிக்கெட்டுக்கு அன்ரிசர்வ்டு கம்ப்பார்ட் மெண்ட்லதான் வரலாம். இதுல வரக் கூடாது...'' என்றார்.

''ஓடி வந்ததுல கவனிக்கல... அடுத்த ஸ்டேஷன் வரவும் இறங்கி மாறிக்கிறேனே...'' என்றார். அந்த பதில், அதைச் சொன்னவிதம் டி.டியை மேற்கொண்டு எதுவும் பேசவிட வில்லை... ''சரி'' என்று நகர்ந்தார். பிறகு ஏதோ நினைப்பில் திரும்பி வந்தவர், ''இங்க உக்காந்துட்டு வராதீங்க... உள்ள போய் என் சீட் ஒண்ணு காலியா இருக்கு. அங்க உக்காருங்க. அடுத்த ஸ்டேஷன் வரவும் நானே சொல்றேன்...'' என்றார்.

அவர் முகத்தில் ஓர் அர்த்தமுள்ள சிரிப்பு.

அந்த டிக்கெட்டைக்கூட அவர் காசு கொடுத்து வாங்கவில்லை. ஸ்டேஷனில் டிக்கெட் வாங்க வேண்டுமே என்று நினைத்த நொடி, ஒருவர் வந்து வாங்கிக் கொடுத்து விட்டுப் போனார். இப்பொழுதுகூட உட்கார இடமில்லையே என்று அவர் உள்ளுக்குள் எண்ணியிருக்க வேண்டும்... அதுதான் டி.டி. மனதுக்குள் புகுந்து அவரை உட்காரும்படி சொல்லி விட்டது.

அவரும் உள்ளே போய் ஒரு பெரிய தகரப்பெட்டி உள்ள ஃசட் லோயர் பர்த்தில், ஓர் ஓரமாய் உட்கார்ந்துகொண்டார். எதிரியிலேயே சீனுவும் ராஜமும் அமர்ந்திருக்க, அவர்களுக்கும் நடுவில் மேலே உள்ள அந்த இரும்பு ஸ்டாண்டில் அந்த மூங்கில் பிரம்புப் பெட்டி. அதை ஒரு பார்வை பார்த்தவர், வானத்தில் பறக்கும் கருடனைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக்கொள்வது



போல கன்னத்தில் போட்டுக்கொண்டார். அதைத் தற்செயலாக ராஜமும் கவனித்தாள். அவர் அவளையும் பார்த்து மிருதுவாகச் சிரித்தார். கோரைப் புதர் போல தாடி, மீசை. சடை கட்டிக் கொண்ட தலைமுடி... பார்த்துச் சிரித்தால் எப்படி இருக்கும்? ராஜத்தை அந்தச் சிரிப்பு நெருடியது.

சீனு மனசுக்குள்ளோ ஒரே அலைபாய்ச்சல்... அவர் மனது நரசிம்மன் பிள்ளை கௌசிக்கோடு பேசியதிலேயே புரண்டுகொண்டிருந்தது. பார்வை மட்டும் கண்ணாடி ஜன்னலுக்கு அப்பால் நழுவியபடி இருக்கும் புறக்காட்சிகள் மேல் இருந்தது. ராஜம் அந்த மனிதர் பக்கம் பார்வையை விடாமல், அவளும் ஜன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டு வர ஆரம்பித்தாள். ஒரு ஐந்து நிமிடம்கூட ஆகியிருக்காது. மனசு என்பது யானை மாதிரி... அசைந்தபடியே இருப்பதுதானே அதன் குணம்? அதிலும் வலுக்கட்டாயமாக நாம் அதைத் திருப்பியிருக்கும் போது, அதுவும் அதே கட்டாயத்தில் திரும்பும். ராஜத்திடமும் திரும்பியது. இந்த முறை அவள் பார்த்தபோது, அந்த மனிதர் பர்த் சீட்டில் சம்மணமிட்டவராக கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் மூழ்கி விட்டிருந்தார். ராஜத்தின் முகத்தில். ஆச்சரியம். சீனுவும் திரும்பினார். அவரும் கவனித்தார். அவரையும் ஆச்சரியம் தொற்றிக் கொண்டது.

''ராஜம் யார் இது?'' சன்னமான குரலில் அவர் கேட்க, ''தெரியல... பார்க்க பரதேசி மாதிரி இருக்கார். ஆனா ஏ.சி கோச்சுல டி.டி பர்த்ல உக்காந்துண்டு வரார். டி.டி வந்தாத் தெரியும்'' என்றவள், ''நம்ம பெரம்புப் பெட்டியை பார்த்துக் கன்னத்துல போட்டுண்டார்னா... எனக்கு ஒரே ஆச்சரியமா போயிடுத்து...'' என்றாள். அந்த வார்த்தைகள் சீனுவை சொரேல் என்று நிமிர்த்திற்று. உடனே அவரைக் கூர்ந்து பார்க்கத் தொடங்கினார்.

''என்னன்னா பாக்கறேள்...''

''உருவத்தைப் பார்த்து யாரையும் சாதாரணமா எடை போட்டுடக்கூடாது ராஜம். இப்பக்கூட இவர் நிஷ்டைல இருக்கறதைப் பார்த்தா எனக்கு இவர் மகான் மாதிரிதான் தெரியறது. என்வரைல இந்தப் பயணம் சாதாரணமானதா தெரியலை. ஒவ்வொரு சம்பவமுமே ஒரு அசாதாரணத்துக்குத் தள்றதா இருக்கு...'' என்றவர், அவரையே பார்த்தார். அவரிடமோ அப்படி ஒரு ஆழ்ந்த தியானம்.

**வா**ரணாசி கடை வீதி. நெருக்கடிக்கே நெருக்கடி உண்டாக்கும் லட்சணத்தில் இருந்தது.

கணேஷ் ஒரு எஸ்.டி.டி. பூத்துக்குச் சென்று அனுமதி பெற்று ரிஸீவரை எடுத்து எண்களைச் சுழற்ற,

மறுமுனையில் அவன் அம்மா!

''கணேசா... எப்படிடா இருக்கே... கங்கைல தண்ணி எவ்வளவு தூரம் இருக்கு... குளிச்சியா...'' என்று அதிலேயே முதல் நிமிடம் போய்விட்டது.

''அம்மா விஷயத்துக்கு வா... அக்கா சரண்யா விஷயத்துல வக்கீல் ஏதாவது சொன்னாரா?''

''எங்கடா... 'கொஞ்சம் அனுசரிச்சுப் போங்க. டைவர்ஸ் வாங்கிடலாம். ஆனா அப்புறம் உங்க பொண்ணுக்குத்தான் கஷ்டம். உங்க மாப்ளைக்கு இன்னொரு பொண்ணு கிடைச்சுடுவா. ஆனா உங்க பொண்ணுக்கு...'ன்னு அதே பல்லவியைப் பாடுறாருடா...''

''பேசாம வக்கீலை சமாதானத் தூதர் வேலைக்குப் போகச் சொல். யார்கூட வாழ முடியும்னு இருக்கு. முட்டாள்கூட வாழ்ந்துடலாம். முடவன்கூட வாழ்ந்துடலாம், ஆனா மூச்சுக்கு முந்நூறு பொய் பேசற சுயநலவாதியோடு வாழ முடியாது. இது தெரியாதா அந்த ஆளுக்கு...''



''சரிடா... இதை எல்லாம் நீ வந்து பேசிக்கோ... அப்புறம் உனக்கு ஒரு முக்கியமான விஷயம்.''

''என்னம்மா?''

''உனக்கு மும்பை மாமா மகேஸ்வரனைத் தெரியும்தானே?''

''அவருக்கு என்ன?''

''அவர் உன் அப்பாவை மும்பை கடைத்தெருவுல பார்த்தாராம்.''

''என்னம்மா சொல்றே...?''

''ஆமாம்ப்பா... அவருக்கு உன் அப்பா காணாமப் போன விஷயம் தெரியாது. மும்பை பக்கம் ஏதோ வேலையா வந்துருக்கறதா நினைச்சாராம். இங்க நம்ம வீட்டுக்கு வந்து என்கூட பேசும்போது தான் அவருக்கு விஷயம் தெரிஞ்சிருக்கு. 'நான் மும்பைல சாரைப் பார்த்தேனே'ன்னு சொன்னப்போ, எனக்கு சிலீர்னு இருந்தது... மும்பை போய் தேடினா உன் அப்பா கிடைச்சிடுவார்னு தெரியுது.''

அவன் அம்மா குரல் உடைந்து போய்ப் பேசியது கணேஷைக் கசக்கியது.

''நீ விடும்மா... நான் பாத்துக்கறேன். இந்த அப்பா அங்க என்ன பண்றார்... நம்ப ஞாபகமே இல்லையாமா?''

''நானும் கேட்டேண்டா... தாடியும் மீசையுமா அவருக்கு அவர் ஞாபகமே இல்லேங்கற மாதிரி சொன்னார்டா....''

''சரிம்மா, நான் பாத்துக்கறேன். நீ கவலைப்படாதே. சுஜாதா ஒழுங்கா மருந்து சாப்பிடறாளா...?''

''சாப்பிடறாப்பா...''

''இந்த வாரம் அவளுக்கு அட்டாக் எதுவும் வரலியே...''

''இந்த நிமிஷம் இல்லை... இனி எப்படியோ?''

''நீ கவலைப்படாதேன்னு சொல்றேன்ல...''

"வார்த்தைல சொன்ன ஆச்சாடா... புருஷன் ஒரு பக்கம், வாழ முடியாத பொண்ணு ஒரு பக்கம், வியாதியோட இன்னொரு பொண்ணு... நீயோ எப்பவும் ஊர் ஊரா சுத்தற உத்யோகத்துல தவணை முறைல எங்ககூட தங்கறே... இப்படி வாழறதும் ஒரு வாழ்க்கையாடா?"

"அம்மா... பரம சுகமா வாழறதாம்மா வாழ்க்கை... இப்படி பலவித சவால்களுக்கு நடுவுல, அதுக்கு பலியாகிடாம போராடறதுதாம்மா எனக்குத் தெரிஞ்ச வாழ்க்கை..."

"என்னமோப்பா... உன் தைரியம்தான் எங்களுக்கு இருக்குற ஒரே பலம். அந்த ஆண்டவன் ஏன்தான் இப்படி சோதிக்கறானோ?"

"அம்மா... ஆண்டவனை ஏம்மா இழுக்கறே... அவருக்கு உன்னையும் என்னையும் சோதிச்சு என்னம்மா ஆகப் போகுது? நம்ம வாழ்க்கைக்கும் அவருக்கும் என்னம்மா சம்பந்தம்? நம்ம வாழ்க்கைங்கறது நம்ம கைல இருக்குற விஷயம்..."

"சரிடா... நான் தெரியாம உன்கிட்ட கடவுள் பத்திப் பேசிட்டேன். நீ வேளைக்குச் சாப்பிடு."

"சரிம்மா, நான் வெச்சுடறேன். அப்புறமா பேசறேன்..." என்று கணேஷ், ரிசீவரை வைத்துவிட்டு டிஜிட்டல் எழுத்துக் களைப் பார்த்தான். எண்பது ரூபாய் சில்லறை வந்திருந்தது. பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தான். அந்தச் சந்தடியில் ஒரு மாடு, பைக்காரன் ஒருவனால் காயம்பட்டு தொடைப் பரப்பில் ரத்தம் ஒழுக நின்றிருந்தது. எல்லோரும் எனக்கென்ன என்று போய் வந்தபடி இருந்தனர். கணேஷ் வரையில் அவன் மனத்தில் ரத்தம் வடிகிற மாதிரி இருந்தது. பக்கத்திலேயே ஒரு லஸ்ஸி கடை. அவரிடம் கேட்டான். பைக்காரன் இடித்துத் தள்ளிவிட்டுப் போனதைச் சொன்னவர், காயத்துக்கு மஞ்சளைக் குழைத்து பத்துப் போட்டால் சரியாகி விடும் என்று ஒரு உபதகவலையும் சேர்த்தே சொன்னார்.



"போடறதுக்கென்ன?"

"ஆமாம்... தெருவில சுத்தற மாடுக்கெல்லாம் மருந்து போடறதுதான் என் வேலை பார்."

அடுத்து அவனே தயாராகிவிட்டான். ஒரு நூறு கிராம் மஞ்சள் தூள் வாங்கி, அப்படியே தண்ணீரில் கரைத்து, அந்த மாட்டைத் தட்டிக் கொடுத்து, அதன் காயம்பட்ட தொடைமேல் மஞ்சள் குழைவைப் பூசியும் விட்டான். அது எரிச்சலில் இரண்டொருமுறை கத்தியது. அவனுக்கோ அப்பொழுதுதான் அவனுக்குள் அவனுக்கான ஒரு விடுதலை கிடைத்த மாதிரி இருந்தது!

## ஹௌஷங்காபாத்!

நர்மதை நதி பாயும் தீரம்... ஆதி சங்கரர் தன் குருவைச் சந்தித்த நதிக்கரை... மற்ற நதிகளில் நீராடினால்தான் புண்ணியம். நர்மதையை நினைத்தாலே புண்ணியம். மற்றதெல்லாம் நதி. இது ஒன்றுதான் நதம்... பாய்ச்சலிலும் வடக்கு நோக்கி திசைமாறிப் பாயும் ஒரே நதி!

சீனுவும் ராஜமும் அந்தக் காலை வேளையில் தங்கள் வாரணாசி பயணத்தின் நடுவில் ஹௌஷங்காபாத்தில் இறங்கி, நர்மதா நதி தீரத்துக்கு வந்து விட்டனர்.

"இன்னிக்கு கண்ணனுக்கு இந்த நதிக்கரைல திருவாராதனமா?" ராஜம் கேட்டாள்.

"ஆமாம். நர்மதை ஸ்நானமும் சாதாரணம் இல்லையே..." என்றபடி சீனு படித்துறை அருகே மூழ்கி எழத் தயாரானார்.

அங்கேயும் வந்துவிட்டார் அந்த பரதேசி மனிதர். வந்தவர், "காவிரில குளிச்ச கண்ணன் இங்க குளிக்கலையா?" என்று சீனுவைப் பார்த்துக் கேட்கவும் சீனுவுக்குக் குபீரென்றது!

# 12

*'ஐந்தாலானது (பஞ்ச) இந்த பூமி! ஆறாலதை (அறிவு) அறிந்தவன் மனிதன்*

*ஏழாலதை (சப்தம்) பேசிப் புரிந்து, எட்டுவதே என் திருநாமம்!'*

**- ஸ்ரீ கிருஷ்ணன்**

தங்களது கண்ணன் விக்ரகம் குறித்து கேள்வி கேட்ட அந்த பரதேசி மனிதரை ஒரு அதிர்வும் ஆனந்தமுமான பார்வை பார்த்தார் சீனு. ஆனால் அவர் பார்வையோ, அங்கே கரை மேல் ராஜம் பிடித்துக்கொண்டு நிற்கும் அந்த மூங்கில் பிரம்புப் பெட்டி மேலேயே இருந்தது.

ஆற்றில் இறங்கி ஒரு முழுக்குப் போடலாம் என்று எண்ணி படிகளில் இறங்கத் தொடங்கியிருந்த சீனு, திரும்ப மேலேறி அவரருகே சென்றார். அவரிடம் ஒருவித இசை லயமான சிரிப்பு.

"பெரியவா யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

- சீனுவிடம் பணிவான ஆரம்பம்.

"நானா... பார்த்தா தெரியலை? நான் ஒரு பரதேசி."

"அப்படிச் சொல்லப்படாது... எங்காத்து கண்ணன் குணசீலத்துக் காவிரில குளிச்சதை எப்ப உங்களால சொல்ல முடிஞ்சதோ, அப்பவே உங்க ஞானதிருஷ்டி பத்தி எனக்குத் தெரிஞ்சு போச்சு."

"ஏதோ மனசுல பட்டதைச் சொன்னேன்... அதுக்கு நீங்க ஞானதிருஷ்டின்னுல்லாம் பேர் வைக்க வேண்டாம். அப்படி ஒரு



திருஷ்டி எனக்கிருந்தா, நான் ஏன் ஊர் ஊரா சன்னதி, சன்னதியா அலையணும்? எனக்கு எங்க போனா முக்தி கிடைக்குமோ அங்க நேரா போய்ட்டு போறேன்."

- அவர் தம்மைத் தாழ்த்திக் கொண்டு பேசியது, சீனுவை மிகவும் கவர்ந்துவிட்டது. சட்டென்று குனிந்து அவரது பாதத்தைத் தொட்டு வணங்கினார். அவரும் ஆசீர்வதித்தார். அப்படியே அவரிடம் "உங்கக் கண்ணனை நானும் கொஞ்சம் சேவிச்சுக்கிறேனே..." என்றார். சீனுவுக்குப் புரிந்துவிட்டது. ராஜத்தை அருகில் அழைத்து, பிரம்புப் பெட்டியைத் திறந்து பட்டுத் துணிக்குள் படுத்துக்கிடந்த கண்ணனை ஏந்திப் பிடித்தார்.

அந்த பரதேசி மனிதரும் பார்த்தவராக "ஆஹா... என்ன ஒரு அழகு! இவன் கற்பகத் தருவோட உடைஞ்சு விழுந்த கிளைக் கட்டையால ஆனவன்..." - என்றார்.

"என்னது... கற்பகத் தருவோட உருவமா இது?"

"எனக்கு அப்படிதான் தோணுது. இந்தக் கண்ணன், இனி ஊர் சுத்தப் போறான். மாயைக்குப் பேர் போனவன் இவன். இவனுக்குக் கண்ணும் உதடும் போதும். இவன் உதட்டோட ஒவ்வொரு விதமான சுழிப்புக்கும் ஒரு அர்த்தமிருக்கு. அதேபோல இவன் பார்க்கறவிதம் இருக்கே..."

"ஸ்வாமி என்னென்னவோ சொல்றேளே..."

"தோணறது சொல்றேன். பத்ரம்... இந்த கண்ணனைப் பத்ரமா வெச்சுக்கோ. இல்லை, இப்பவே இங்கேயே எகிறிக் குதிச்சுக்கூட ஓடிப் போயிடுவான். கண்ணனா இவன்... கள்ளன்! கள்ளன்!"

"நான் என் உயிரைக்கூட விடுவேன்... ஆன இவனை விடமாட்டேன். இது எங்காத்து சொத்து. நான் சாப்பிடத் தவறியிருக்கேன். ஆனா இவனுக்கு திருவாராதனை பண்ணத் தவறினதில்லை.

"எதுக்கு இத்தனை நான்...? மூடிய பாத்திரம் எவ்வளவு ஆழமான சமுத்திரத்துக்குள்ள விழுந்தாலும் அதுக்குள்ள ஒரு சொட்டுத் தண்ணி இறங்காது. இந்த நான் 'கோஷ்டி எவ்வளவு பூஜை பண்ணாலும் ஆசாரமா இருந்தாலும் பிரயோஜனமில்லை. எல்லாத்தையும் இந்தக் கண்ணன் உனக்குப் புரிய வைப்பான் பார்..."

- அவர் சட்டென்று ஒருமைக்கு மாறியவராக தத்துவமாகப் பேசியவர், "சரி, நான் கிளம்பறேன்... நான் நான் என்கிற நீ இன்றைய உன்னோட திருவாராதனத்தை ஆரம்பி" என்று கூறிக் கொண்டே அங்கிருந்து விலக ஆரம்பித்தார்.

**ரா**ஜம் கொஞ்சம் குழம்பி விட்டிருந்தாள்.

"என்னா... அவர் என்ன சொல்லிட்டுப் போறார்? நீங்க விடாம பூஜை பண்றேன்னு சொன்னது ஒரு தப்பு மாதிரில்ல சொல்லிட்டுப் போறார்..."

"அப்படித்தான் ராஜம் எனக்குத் தோண்றது. என்னன்னு தெரியலை... சென்னலை அந்த கௌசிக். ஆனாலும் பொடிப் பையன்... அவ்வைப் பாட்டியைப் பார்த்து மாட்டுக்கார பையனா அந்த முருகன் கேட்ட மாதிரி என்னைப் பார்த்துக்கேட்டான். இப்ப இங்க இந்தப் பெரியவர்..."

"மூடிய பாத்திரம்... சமுத்திரம்னு ஏதேதோ சொல்லிட்டுப் போறாரே... உங்களுக்குப் புரிஞ்சுதா?"

- ராஜம் கேட்க, சீனு பதில் சொல்லாமல் நர்மதைக்குள் இறங்கத் தயாரானார்.

ஆற்றில் இறங்கும் முன் அதை வணங்க வேண்டும். அதிலும் ஜீவ நதிகளில் இறங்குமுன் அதன் நீரை எடுத்துத் தலையில் புரோக்ஷித்துக் கொள்ள வேண்டும். பிறகு மனம் முழுக்க தெய்வ நினைப்போடு இறங்க வேண்டும். ஆறு ஒன்றில்தான் ஒரு மனிதன் ஒருமுறை குளித்த நீரில் மறுமுறை



குளிப்பதில்லை. குளத்து நீர் அருட்கதிர்களை வாங்கி வைத்திருப்பவை. ஆற்று நீரோ தமது பாவங்களை அடித்துச் செல்பவை... அடித்துச் செல்வதில் இறங்கும்போது, 'நான் தூயோனாக வேண்டும்' என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

ஆற்றை ஒரு தண்ணீர்க் காடாக மட்டும் கருதி குளிப்பது அறியாமை. சீனுவும் பயபக்தியோடு அந்த ஆற்றில் இறங்கினார். ராஜம் பார்த்துக் கொண்டே நின்றாள். இவர் குளித்து முடித்துவிட்டு வரவும், மூங்கில் பிரம்புப் பெட்டியையும், மற்ற லக்கேஜையும் ஒப்படைத்துவிட்டு அவள் இறங்கிக் குளிக்க வேண்டும். அதற்காக காத்திருக்கத் தொடங்கினாள். சீனு மூன்று முழுக்குப் போட்டு முடித்தவர், பிரம்புப் பெட்டியோடு ராஜத்தை அருகில் வரச் சொல்லி கண்ணனை வெளியே எடுத்து மார்போடு அணைத்தபடி திரும்ப நீரில் மூழ்கினார். அப்படியே கண்களில் ஒற்றிக் கொண்டு கரை ஏறினார். அவரைத் தொடர்ந்து ராஜமும் ஆற்றில் மூழ்கி எழுந்தாள்.

நீரோட்டம் மிக வேகமானதாக இருந்தது.

"காவிரியைவிட இழுவை அதிகமா இருக்கே?"

"அவளுக்கு இவ அக்கா இல்லையோ..."

- சீனு பதிலோடு எதிரே தெரிந்த சத்திரத்து அறைக்குள் அப்படியே ஈரம் சொட்டச் சொட்ட நுழைந்தவர், அன்றைய திருவாராதனத்தை அங்கேயே அப்போதே தொடங்கிவிட்டார்.

**ஆ**பீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் சம்பத்! நைட்டியோடு வாயில் கொட்டாவி பிரிய எழுந்து வந்த சாரு, "இன்னிக்கு ஈவினிங் சீக்கிரம் வந்துடுவேளா?" என்று சற்று சுரத்தில்லாத குரலில் கேட்டாள்.

"தெரியல... இன்னிக்கு ஜெர்மன்காரன் வரான். அவனோட மகாபலிபுரத்துக்குப் போய்ட்டு வா, கோல்டன்

பீச்சுக்குப் போய்ட்டு வான்னு பிரசிடென்ட் சொன்னா போக வேண்டியிருக்கும்.''

''நீங்க என்ன அவாளுக்குக் கைடா... இல்ல ஜெனரல் மேனேஜரா...?''

''சரி. நான் கிளம்பறேன். டயமாச்சு பார்.''

''எனக்கு ஒரு பதிலைச் சொல்லுங்கோ. சாயந்தரம் சீக்கிரம் வந்தா தேவலை. தேவகி நாராயணன் டாக்டர்கிட்ட அப்பாய்ண்மெண்ட் வாங்கி வைச்சுருக்கேன்.''

- அவள் டாக்டர் பேரைச் சொன்ன மறுநொடி, சம்பத் அவளை ஒரு எரிச்சல் பார்வை பார்த்தான்.

''அப்படிப் பாக்காதேள்... ஆர்ட்டி ஃபிஷியல் மெதட்ல ட்ரை பண்ணலாம்னு சொல்லியிருக்கார். எனக்கு இன்னிக்கு கருமுட்டை உடையற நாள். உங்க செமனை எடுத்து எப்படி உள்ள வைக்கணுமோ அப்படி வெச்சுடுவா. படாதபாடுபட்டு அப்பாய்ண்மெண்ட் வாங்கியிருக்கேன்.''

''சரி... ட்ரை பண்றேன்.''

''நான் வேணும்னா உங்க பிரசிடென்ட்கிட்ட பேசவா? அவருக்கு ஒண்ணுக்கு மூணு பசங்க இருக்கற திமிர்ல ஏதாவது பேசினா எப்படி பதில் சொல்லணும்னு எனக்குத் தெரியும்.''

''நோ சாரு... நீ எதுக்கு இவ்வளவு அவசரப்படறே... நமக்கு நேச்சுரல் கோர்ஸ்லயே எல்லாம் நடக்கும். அப்பாவும் அம்மாவும் நமக்காகத்தான் பத்ரி, கோதார்னு புறப்பட்டுப் போயிருக்கா. அவா பிரார்த்தனை வீண்போகாது. நீ போய் வேற வேலையைப் பார்...''

- சம்பத் போகிற போக்கில் சொல்லிக்கொண்டே காரில் ஏறினான். பதிலுக்கு சாரு முகத்தில் ஒரே எரிச்சல். கடுவன் பூனை போல முகத்தை வைத்துக்கொண்டவள், சோபாவில் போய் அமர்ந்துகொண்டாள்.



**வா**ரணாசி ஸ்டேஷன்!

மூட்டை முடிச்சோடு இறங்கிய சீனுவையும் ராஜத்தையும் சரியாக அடையாளம் கண்டுகொண்டு, ''ஆர் யூ மிஸ்டர் ஸ்ரீனிவாசன்?'' என்று கேட்டபடியே வந்து நின்றான் கணேஷ்.

''யெஸ்... நீங்கதான் கணேஷா?''

''எக்ஸாக்ட்லி... வாங்கோ... வெல்கம்''

''ரொம்பச் சின்ன வயசா தெரியறேளே... நான் நம்ம ஆடிட்டர் வயசான பிராமணன் ஒருத்தரைத்தான் அனுப்பப் போறார்னு நினைச்சுண்டிருந்தேன். அம்பி, பிராமின்தானே?''

- அவர் கேள்வியே அவர் எப்படிப்பட்டவர், என்பதைக் காட்டி விட்டது. ஒரு மாதிரி கூர்ந்து பார்த்த கணேஷ், ''நான் ஒரு மனுஷன்...'' என்றான் சற்று தினவாக. சொன்னபடியே அந்தப் பிரம்புப் பெட்டியை ஒரு கையில் எடுக்கப் போனான்.

''அம்பி அம்பி... அதைத் தொடாதே...'' என்று பதறிவிட்டார் சீனு.

## 13

*'கடமையைச் சொன்ன*
*கடவுள் நானே...!*
*உடைமை என்று ஒன்றுமில்லை*
*எல்லாம் வீணே...'*

*- ஸ்ரீகிருஷ்ணன்*

**'நீ** பிராமணனா?' என்று சீனு கேட்ட ஒற்றைக் கேள்வி, அவரை மனதளவில் வெகு தூரம் தள்ளி நிறுத்திவிட்டது. மௌனமாய் அவர் சாமான்களுடன் வாரணாசி ஸ்டேஷனுக்குள் நடந்தான் கணேஷ். ராஜம் சட்டென்று புரிந்துகொண்டாள்.

''என்னன்னா நீங்க... நீங்க கேட்டது இந்த பிள்ளை யாண்டானுக்குப் பிடிக்கல போல இருக்கு பாருங்க. மூஞ்சி எப்படி மாறிடுத்து...''

''நீ பேசாம வா ராஜம். நான் ஆசார பங்கம் வந்துடக் கூடாதேன்னு கேட்டேன். இதுல தப்பென்ன இருக்கு?'' என்று சீனுவும் சளைக்கவில்லை.

காரில் போகும்போது ராஜம் அவ்வப்போது கணேஷின் முகத்தைக் கவனிக்கத் தவறவில்லை. அவனிடம் ஒரு அசாத்யமான மௌனம். சிறிது தூரம் பயணம் அமைதியாகக் கழிய, சட்டென்று கார் டிராஃபிக்கில் திணறியது.

''பெரிய சிட்டி போல இருக்கு... டிராஃபிக்கைக் கவனிச்சியோ'' என்றார் ராஜத்திடம் சீனு.

''உக்கும்...'' என்றாள்.

''என்ன பண்றது... இங்க வந்தா எல்லா பாவமும் போயிடும்னு சொல்லித் தொலைச்சுட்டாங்க. அதனால இந்த ஊரோட நீள அகலம் பற்றித் துளியும் கவலையே இல்லாம எல்லாப் பாவிகளும் இங்க வந்து, தங்களைச் சுத்தப்படுத்திக்கறாங்களோ இல்லையோ... இந்த ஊரை எவ்வளவு அழுக்காக்கணுமோ அவ்வளவு அழுக்காக் கிட்டாங்க...'' என்றான் கணேஷ் சுருக்கென்று.

''அம்பிக்கு பாவ புண்ணியத்துல நம்பிக்கை இல்லை போல இருக்கு?'' என்று சீனுவும் வாயைத் திறந்தார்.

''நான் என்னைப் போலவே எல்லாரையும் நினைக் கறவன். நான் எதை எல்லாம் எதிர்பார்க்கிறேனோ, அதைக் கொடுக்கத் தயங்காதவன். என் வரைல உண்மைதான் கடவுள். மற்ற எல்லாமே கால காலமா வாழ்ந்த மனுஷங்களோட டிசைன் டிசைனான கற்பனைதான். இந்த பாவ புண்ணியத்தையும் சேர்த்துத்தான் சொல்றேன்...'' என்றபடியே, அவன் இருக்கும்



இடத்தின் முன் காரை நிறுத்தினான். இறங்கினார்கள். உள்ளே நடந்தனர்.

''பக்கத்துல ஒரு ரூம் காலியாதான் இருக்கு. உங்களுக்குத் தோதுபடும்னு நினைக்கறேன்...'' என்ற கணேஷ், அப்படியே போய் சாவி வாங்கி வந்து அறையைத் திறந்து காட்ட, சீனுவுக்கும் பிடித்துவிட்டது.

''இங்க குளிக்க கிணறு இருக்கா?'' அடுத்து அவர் கேட்ட கேள்வி கணேஷுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''ஏன் நீங்க கங்கைல குளிக்கலையா?''

''இல்ல... நான் கயாவுல ஓடற கங்கைலயே குளிச்சுக்க றேன். எங்க சம்பிரதாயப்படி அங்கதான் நாங்க குளிக்கணும்...''

''அங்க ஓடற அதே ஆறுதானே இங்கேயும்...''

''தெரியும் அம்பி. நான் எங்க பெரியவா சொன்னதை அப்படியே பிடிச்சுண்டு நடக்கறவன். இந்த காசி, சைவ சம்பிரதாயத்துக்குன்னு உள்ளது. நான் வீரவைஷ்ணவன்...!''

''அதனால?''

''கயாவுல நான் பண்ண வேண்டியத பண்ணிக்கறேன். இப்படி நான் சொல்றதால இந்த காசி மேல எனக்கு துவேஷம் இருக்கறதா நினைச்சுக்காதே. ஒரு காலேஜ்ல ஒவ்வொருத் தருக்கு ஒரு விருப்பப்பாடம் இருக்கும். அதுலதான் அவாளுக்குப் பரீட்சையும் வைப்பா. பாஸும் பண்ணியாகணும். இந்த ஜென்மாவுல என் விருப்பப் பாடம் வைஷ்ணவம். நான் அந்தப் பாடத்துலயே இன்னும் நிறையத் தெளிய வேண்டியிருக்கு. நடுவுல பாதைமாறிப் போய் எதுலயும் ஒரு முழுமையில்லாம போய்ட விரும்பலை.''

– அவர் சொன்னது கணேஷுக்கும் பிடித்திருந்தது.

''அப்போது இங்க இருக்கற காசி விசுவநாதர் கோயில், பைரவர் கோயில், அன்னபூரணி, விசாலாட்சி தரிசனம்னு எதுவும் உங்களுக்குத் தேவை இல்லையா?''

''எல்லாம் எனக்கு இதோ இருக்கு பார்... இந்த பெட்டிக்குள்ள இருக்கிற கண்ணன்தான்'' என்று பெட்டியைக் காண்பித்தார் அவர்.

''ஓ... அந்தப் பெட்டிக்குள்ள விக்ரகம் இருக்கா?''

''ஆமாம். அதுக்காகத்தான் இப்படி ஒரு பயணத்திட்டம். இந்த கண்ணன் என் முன்னோர்கள் பூஜித்த தெய்வம். இவன் பேசற கடவுள்...''

''அப்ப சாமி இல்லேன்னு சொல்றவா முன்னால இவனைக் கொண்டு போய் நிறுத்தி ஒருபிடி பிடிச்சுடலாமே...'' அவன் கேள்வியில் சன்னமாய் ஒரு நக்கல்.

''ஏன் அம்பி... உனக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாதா?''

''ஆமாம்... கடவுளை மனுஷனோட ஒரு அழகான கற்பனையாத்தான் நான் நினைக்கறேன். நான் நிஜத்தைப் பெருசா மதிக்கற ஒருத்தன். கற்பனையை ரசிப்பேன். ஒத்துக்கல்லாம் மாட்டேன்.''

''அது சரி... நீ பேசலை. உன் வயசு பேசறது. உன்னைப் போல பேசின எவ்வளவு பேரை இந்தப் பூமி பாத்திருக்கு தெரியுமா?''

''அதனால...?''

''நீயும் ஒருநாள் மாறுவேன்னு சொல்றேன்...''

''இல்ல... ஒருவேளை உங்க கடவுள் நிஜமா இருந்தா, அவர் நான் மாறுறதை விரும்பமாட்டார். ஏன்னா எனக்குத் தெரிஞ்சு பக்தியால, பக்தர்களால அவர் ரொம்பத்தான் கஷ்டப்படறதா நான் நினைக்கறேன். இந்த ஊரையே எடுத்துக்குங்களேன். பக்தியாலயும் பக்தர்களாலயும் இது எவ்வளவு பாழ்பட்டுப் போயிருக்குத் தெரியுமா?''

''நீ எல்லாம் சரியா இருக்கணும்ங்கற ஆசைல பேசறே... ஆனா ஒண்ணை இழக்காம ஒண்ணை உ,டைய முடியாது. இந்த



மாதிரி ஸ்தலங்கள் தங்களை அழுக்காக்கிண்டு பல லட்சம் மனுஷாளை மனசளவுல லேசானவளா ஆக்கி அனுப்பறது... இந்த மாதிரி ஸ்தலங்கள்லாம் மட்டும் இல்லேன்னா, நம்ம பாரத தேசம் ரொம்பவே கஷ்டப்படும். ஒரு மொழி, ஒரு ஜாதின்னு இருக்கற நாடுகளே குண்டுவெடிப்பு, தீவிரவாதம்னு சீரழிஞ்சிண்டு இருக்கு. இங்க கிட்டத்தட்ட நூத்துப் பத்து பாஷை. போதாக்குறைக்கு ஆயிரத்தெட்டு ஜாதி. அதுல அவாள வாளுக்குன்னு பழக்கவழக்கங்கள் வேற... இதுக்கு நடுவுல நாம பரஸ்பரம் ஒத்துமையோட பாவ புண்ணியங்களுக்குப் பயந்துண்டு வாழ்ந்துண்டுருக்கோம்னா, அதுக்கு நம்ம மண்ணோட ஆன்மிக நெறிதான் காரணம். கடவுள்னு ஒருத்தர் கிடையாது... பாவபுண்ணியமெல்லாம் நீ சொல்ற மாதிரி கற்பனைன்னா இந்த பூமி இப்படியா இருக்கும்?''

- சீனு சொன்னதிலும் பொருள் இருப்பது போலத்தான் தோன்றிற்று. வேற்றுமையில் நாம் ஒற்றுமையாகத்தான் இருக்கிறோம். ஆனாலும் இங்கேயும் குண்டுகள் வெடிக்கத் தானே செய்கின்றன? அது பற்றிக் கேட்க நினைத்தவன், பிறகு பெரிய உபன்யாசத்துக்கு அது அடி போட்டுவிடும் என்று எண்ணியவனாக, ''சரி... நீங்க உங்க பூஜை புனஸ்காரங்களை முடிச்சிட்டு கூப்பிடுங்கோ... கயாவுக்குக் காலையே போய்ட்டு வந்துடலாம். எல்லா ஏற்பாடும் பண்ணி வெச்சிருக்கேன்...'' என்றான்.

அப்படியே அவர்களை விட்டுவிட்டு அறையை விட்டு வெளியே வந்தவன் கண்களில், சிலர் விற்றுக் கொண்டிருந்த பிரம்புக் கூடைகள் கண்ணில் பட்டன. சற்று முன்பு தான் சீனுவிடம் இருந்த மூங்கில் பிரம்புக் கூடை, கலையழகுடன் அவன் கண்ணைப் பறித்திருந்தது. இப்போது அச்சு அசலாக அதே போன்ற கூடை... அருகே சென்று விசாரித்து ஒரு கூடையை வாங்கிக் கொண்டு நடந்தான். எதிரில் ஜோதிடர் பஞ்சாட்சரம் வருவதைப் பார்த்தவன், அவரிடம் சிக்கினால்

ஆய்ந்துவிடுவார் என்று கருதி அப்படியே திரும்பி ஓர் ஒடுக்குச் சந்துக்குள் நுழையப் பார்த்தான். அவரோ அவனைத்தான் தேடிக்கொண்டு வந்தபடி இருந்தார். அவன் ஓடி ஒளிவதைக் கவனிக்காதபடி அவன் இருக்கும் அறையைத் தேடிச் சென்று கதவைத் தட்டினார்.

திறந்துகொண்ட கதவுக்குப் பின்னால் ராஜம். ஜோசியரிடம் ஒரு சின்ன திக்குமுக்காடல். அவருக்கு ராஜமும் சீனுவும் நல்ல பரிச்சயம்.

"அம்மாடி நீயா...?" என்றார் வியப்போடு.

"அட ஜோசியர் மாமாவா? உள்றவாங்கோ" என்று அவளும் அவரை உள்ளே அழைத்தாள். உள்ளே சீனு குளித்து முடித்து திருமண் சார்த்திக் கொண்டு திருவாராதனையில் இருந்தார். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அப்துல்கலாமே வந்தாலும் ஜாடை பாஷைதான். காத்திருக்க வேண்டியதுதான். ஜோசியருக்கும் அது தெரியும். சீனுவைப் பார்த்தவர் அப்படியே கண்ணனை, சாளக் கிராம கற்களை எல்லாம் ஒரு பார்வை பார்த்தார். தன்வசம் இதே சாளக்கிராம கற்கள் ஒரு மகாசேதியைச் சொல்லிவிட்டு துணிப்பைக்குள் முடங்கிக் கிடப்பது ஞாபகத்தில் வந்தது.

"அம்மாடி... நான் என் இருப்பிடம் வரை போய்ட்டு வந்துடறேன். அதுக்குள்ள சீனுவும் பூஜையை முடிச்சிடுவார். வந்து விவரமா பேசறேன்." என்று திரும்பி நடந்தார்.

அரைமணியில் திரும்பி வந்தவரிடம் சாளக்கிராம கற்களும், அந்த ஏட்டுக் கட்டுகளும் இருந்தன. சீனுவும் கண்ணனுக்குத் தீபதூபம் காட்டி முடித்து தீர்த்தத்தை ராஜத்துக்கும் அப்படியே ஜோதிடருக்கும் கொடுத்தார்.

ஜோதிடரும் வாங்கிக் குடித்தவராக, "சீனு உங்களை நான் இங்க பார்ப்பேன்னு கொஞ்சம்கூட நினைக்கல. அப்புறம் இந்தப்



பையப் பாருங்கோ... அவ்வளவும் சாளக்கிராமங்கள். கங்கைக் கரைல ஒரு சாது கொடுத்தது. எப்படியோ என் கைக்கு வந்து சேர்ந்தது. எனக்கு இது பவித்ரமானதுன்னு தெரியும். ஆனா இதை எப்படி ஆராதிக்கறதுன்னு தெரியாது. இந்தாரும்... இதையும் உங்க சாளக்கிராமங்களோட சேர்த்துண்டு பூஜை செய்யும்" என்று பையை நீட்டினார்.

சரியான அழுக்குப் பை. [illegible]ளுள் யாரோ கொடுத்ததாகக் கூறும் சாளக்கிராம கற்கள். சீனுவுக்குச் சட்டென்று வாங்கிக் கொள்ளத் தோன்றவில்லை. குழப்பமாக இருந்தது. அப்போது வெளியே இருந்து ஒரு குரல் கேட்டது. அதுவும் நல்ல தமிழ்க் குரல்!

"சீனிவாசா... வாங்கிக்கோப்பா... என்ன யோசனை?"

– சீனு அதிர்ந்துபோய் வெளியே எட்டிப் பார்த்தார்.

## 14

*'மழை தரும் மலையையே*
*குடையாகத் தூக்கினேன்...*
*மனமிருந்தால் மலையும்*
*குடையாகுமெனக் காட்டினேன்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

வெளியே இருந்து கேட்ட அந்த அசரீரி போன்ற குரல் சீனிவாசனை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. ஆனால் அது அசரீரி இல்லை... அவர் தங்கியிருந்த இடத்திற்கு அருகில் ஒரு தமிழர் குடியிருந்தார். அவர்தான் அங்குள்ள யாரோ ஒரு சீனிவாசனுக்கு அப்படிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஆனால் ஜோதிடர் அதைக் கப்பென்று பிடித்துக் கொண்டார்.

"என்ன யோசனை... பெருமாளே சொன்னமாதிரி இது. வாங்கிக்கும். சாளக்கிராமத்தை எந்தத் தீட்டு தீண்ட முடியும்? அது எங்க இருந்தாலும் அது அதுவாகத்தானே இருக்கும்!"

- என்று கேட்க, அதற்கு மேல் சீனுவால் மறுக்க முடியவில்லை. சாஸ்திரிகள் பையோடு அப்படியே கொடுக்க, சீனு உள்ளிருந்து ஒவ்வொரு கல்லாக எடுத்துப் பார்த்தார். கூடவே ஏட்டுக் கட்டும் அந்த அழுக்கு நோட்டும்...

"இது என்ன?"

"இதோட சேர்ந்து வந்தது..."

"இதை இதுக்கு முந்தி யார் பூஜை செய்துண்டிருந்தா? இப்படியா இதை ஒரு அழுக்குத் துணிப் பையில வெச்சுக்கறது?"

"எனக்கு ஒரு கேள்விக்கும் பதில் தெரியாது. ஆனா ஒண்ணுமட்டும் தெரியும். இதை நான் ஒரு பிராமணனா நின்னு சொல்லலை. கணக்கு போடத் தெரிஞ்ச ஒரு ஜோசியனா நின்னு சொல்றேன். இதுக்குப் பின்னால ஒரு பெரிய தபஸ் இருக்கு. யாரோ ஒரு மகான் அந்த கிருஷ்ணன். ஞாபகமாகவே வாழ்ந்துட்டுப் போயிருக்கார். அவரோட ஒரே லட்சியம் கிருஷ்ண தரிசனம்! அஞ்சையும் மூணையும் எங்க, யார், எப்ப, எப்படிக் கூட்டினாலும் எப்படி எட்டு வந்தாகணுமோ, அந்த மாதிரி அந்த தபஸ்விக்கு, அவர் தபசுக்கு கிருஷ்ண தரிசனம் கிடைச்சாகணும். அவருக்குத் தரிசனம் தர கிருஷ்ணனும் வரப்போறான். ஒரு மந்திரி வரதுக்கு முன்னால எப்படி கலெக்டர் ஆபீசுக்கு தகவல் வந்து தெருவெல்லாம் சுத்தமாகி, பாதுகாப்புக்கு போலீசெல்லாம் அங்கங்க வந்து நின்னுடறானோ, அப்படி கிருஷ்ணனோட விஜயத்தை ஒட்டியும் அங்கங்கே அதுக்கான ஏற்பாடுகளும் சமிக்ஞைகளும் வர ஆரம்பிச்சாச்சு. அந்தக் கண்ணனோட



பூலோக விஜயத்துல எனக்கும் உங்களுக்கும் கூட பங்கு இருக்கு. அதனாலதான் இந்த சாளக்கிராமங்கள் என் கைக்கு வந்தது. அப்புறமா உங்க கைக்கு வந்துருக்கு! உங்களைச் சமாதானப் படுத்தி ஒத்துக்க வைக்க வெளியே ஒரு சீனிவாசன் வர, அவரைப் பார்த்து இங்க இருக்கற உங்களை வாங்கிக்கச் சொல்லியிருக்கார்.

ஒண்ணைத் தொட்டு ஒண்ணுன்னு ஒரு வரிசையில எல்லாம் நடந்துண்டே போறது. இவ்வளவுக்குப் பிறகும் இதை வெச்சுக்கறதுல உங்களுக்கு மனசுக்குச் சங்கடமா இருந்தா தூக்கிப் போட்ருங்கோ. அடுத்து என்ன ஆறதுன்னு நானும் பாக்கறேன்..."

- ஜோசியர் ஒரு பாட்டம் பேசி முடித்துவிட்டு உத்தரவு வாங்கிக் கொண்டார்.

சீனுவுக்கோ அலையடித்து ஓய்ந்த மாதிரி இருந்தது. அப்பொழுது பார்த்து பிரம்புக் கூடையோடு வந்த கணேஷ், அந்தப் பையையும் சாளக்கிராமங்களையும் அவரிடம் பார்த்து விட்டு விக்கித்துப் போனான். அவரும் அவனது கைக் கூடையைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

"இந்தப் பை எப்படி உங்ககிட்ட?"

"அது இருக்கட்டும்... இது என்ன என்கிட்ட இருக்கற கூடை மாதிரியே...?"

"கடைத் தெருவுல வித்துண்டுருந்தான். கலை அழகோட இருக்கறதால வாங்கிண்டு வந்தேன். ஆமா இந்தப் பை...?

"இது ஒரு கூத்து... ஜோசியர் ஒருத்தர் என்னை இங்க எதிர்பாராம பார்த்துட்டார், அவர் ஒரு சைவார்த்தி. சாளக் கிராமத்தை வைஷ்ணவனான என்கிட்ட தள்ளிட்டுப் போயிட் டார். இது யாரோடது, என்ன ஏதுன்னு ஒண்ணும் தெரியல. கேட்டா அவர் ஒரு கதையே சொல்லிட்டுப் போறார்."

"கதையா... என்ன கதை சொன்னார்...?"

"என்னத்த சொல்ல... கண்ணன் வரப் போறானாம். ஒரு மந்திரி வரப்போற மாதிரி அதுக்கான முன்னேற்பாடுகள் நடந்துண்டுருக்காம். எல்லாம் ஒரு கணக்குன்னு அவர் பாட்டும் ஏதேதோ சொல்லிவிட்டுப் போயிட்டார்..."

- கணேஷ் உடனே ஒரு தெற்றுச் சிரிப்பு சிரித்தான்.

"அந்த ஜோசியர்கிட்ட இந்தப் பையைத் தந்தவனே நான்தான்! இது இப்ப உங்ககிட்ட வந்துருக்கு..." என்றான்.

"என்னப்பா சொல்றே நீ... அப்ப இது யாருதுன்னு உனக்குத் தெரியுமா?"

"ஒரு அழுக்கு சன்யாசின்னு அவரைச் சொல்லலாம். அவர்தான் என் கைல கொடுத்துட்டு கங்கைல இறங்கினார். இறங்கினவர் திரும்ப கரை ஏறலை. கங்கைல மூழ்கி செத்தா மோட்சம்னு சொல்லியிருக்கறத நம்பி அப்படியே போய்ட்டதா நினைக்கறேன். நான் இதை ஜோசியர் கையில கொடுத்துட்டு வந்துட்டேன். ஆனா இது அப்ப அவர் சொன்ன மாதிரியே, நான் இருக்கற இடத்துக்கே திரும்பி வந்துருக்கு..."

- என்று முடித்தான் கணேஷ். அப்போது, "என்ன இன்னும் பூஜையை ஆரம்பிக்கலையா?" - என்று திரும்பவும் ஒரு வெளிக்குரல், எட்டிப் பார்த்த சீனுவுக்கு, அது யாரோ யாரிடமோ கேட்ட கேள்வியாக இருந்தாலும், அவரைத் தூண்டிவிட்ட ஒரு கேள்வியாகவும் தோன்றியது.

"என்ன செய்யப் போறீங்க... தூக்கித் தூரப் போட்டுட்டு அடுத்த வேலையைப் பாருங்க" என்ற கணேஷ், "உங்க பூஜை முடிஞ்சுதா?" என்று கேட்டான்.

சீனு தலையை ஆட்டினார்.

"நான் கொஞ்சம் மடம் வரை போய்ட்டு சில பேப்பர்ஸை டிக்டேட் பண்ணிட்டு வந்துடறேன். நீங்க தயாரா இருங்க. இங்க இருந்து ஒரு கார்ல நாம கயாவுக்குக் கிளம்பறோம். ஒரு மூணு மணி நேர பயணம்தான். அங்க நீங்க உங்க காரியங்களை முடிச்சிண்ட பிறகு ராத்திரியே திரும்பிடறோம்..." என்றபடியே கிளம்பினான். ராஜம்மௌனமாக அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தவள், அருகில் வந்தாள். சீனுவைப் பார்த்தாள்.



"ராஜம் நீ என்ன சொல்றே?"

"இதுல நான் சொல்ல என்ன இருக்கு?"

"இல்ல முன்னூறு வருஷமா நம்ம ஆத்துல இருக்கற பெருமாளோட இதை..."

"இதைன்னு நீங்க சொல்லும்போதே ஒரு கல்லாதான் இந்த சாளக்கிராமங்களை நீங்க நினைக்கறது தெரியறது. ஒரு தடவைக்கு இரண்டு தடவை அசரீரி வாக்கு வந்தும் உங்களால இதைப் புரிஞ்சுக்க முடியலைன்னா, எனக்கு ஆச்சரியமாவும் இருக்கு. அவன் எல்லா இடத்துலயும் இருக்கான். இருந்தாலும் இந்த சாளக்கிராமம் வழியா வெளிப்படறான்கறதால் தான் இதுக்கு மகத்துவம். ஆனா நம்ம ஆத்து சாளக்கிராமத்துல மட்டும் அவன் இருக்கறதா நினைக்கறதால தான் மத்ததெல்லாம் வெறும் கல்லா தெரியறது. லோகம் நம்பளை இப்படி எல்லாம் தான் யோசிக்கும்படி சொல்லிக் கொடுத்துருக்கு. ஒரு கட்டத்துக்கு மேல உடைச்சிண்டு சுயமா சிந்திக்க ரொம்ப பேரால முடியறதேயில்லை..."

- என்று ராஜம் பேசிய பேச்சில் ஆழமான அர்த்தச் செறிவு. அதற்கு மேல் சீனு யோசிக்கவில்லை. அந்த சாளக்கிராம கற்கள் அவரது பிரம்பு மூங்கில் கூடையிலுள்ள கற்களோடு போய் சேர்ந்து கொள்ள, 'சபாஷ்' என்கிற மாதிரி புறத்தில் இருந்து ஒரு மணிச் சப்தம்.

ராஜம் ஜோசியர் சொன்னதைத்தான் நினைத்துப் பார்த்தாள்.

'எல்லாமே கண்ணன் வருவதற்கான அறிகுறிகள்... முஸ்தீபுகள்!'

மடத்து வேலையை முடித்து விட்டு வெளியே வந்த கணேஷ், எதிரில் இருந்த எஸ்.டி.டி. பூத்துக்குச் சென்று ஆடிட்டருக்குப் போன் செய்தான்.

"சார்... நீங்க சொன்ன அந்த சீனுங்கறவர் அவர் மனைவியோட வந்துட்டார். இன்னும் கொஞ்ச நேரத்துல கயாவுக்கு அவரோட நானே கார்ல போறேன். அவராட அனுப்ப சரியான நபர் கிடைக்கல. அதான்..." என்றான்.

"சந்தோஷம் கணேசா. நீயே அவர் கூட போவேன்னு நான் கொஞ்சமும் எதிர் பார்க்கல. அப்புறம் ஒரு விஷயம்... அவர் ரொம்ப ஆசாரமானவர். அவர்கிட்டே விவாதமெல்லாம் பண்ணாதே!"

"என்னை உரசாத வரை நான் எதையும் செய்ய மாட்டேன். அப்புறம் சார். இவா இங்கிருந்து கிளம்பின பிறகு, நான் கொஞ்சம் மும்பை வரைபோக வேண்டியிருக்கு."

"எதுக்கு?"

"என் அப்பா இப்ப மும்பைல திரிஞ்சிண்டிருக்கறதா தகவல்."

"அப்படியா சங்கதி... கவலைப்படாதே. அங்கேயும் நம்ம பார்ட்டிகள் பல பேர் இருக்கா. நீ கிளம்பும்போது சொல். நான் ஏற்பாடு பண்றேன்."

"தேங்க்யூ சார்."

- போனை வைத்துவிட்டுத் திரும்பினவன் எதிரில் அஜந்தா சிற்பமாய் ஓர் இளம் பெண். சுடிதாரில், நெற்றி மேல் அமர்ந்திருக்கும் தூக்கிவிட்ட கூலிங்கிளாஸ் சகிதம், கேமரா



ஃப்ளாஷ் போல பார்த்த மாத்திரத்தில் ஒரு வெட்டு வெட்டினவள்,

"எக்ஸ்யூஸ் மீ... நீங்க தமிழ் நாடா?" என்றாள்.

"யெஸ்..."

"என் பேர் அனுராதா... சென்னைல இருந்து வரேன். நான் ஒரு ஜர்னலிஸ்ட்..."

"சந்தோஷம். நான் இப்ப என்ன செய்யணும்?"

"இங்க பாதுகாப்பா தங்க ஒரு நல்ல இடம்..."

"தனியாவா வந்திருக்கீங்க?"

"ஆமாம்... வாரணாசி பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டியிருக்கு, தீபாவளி மலருக்காக..."

"உங்க பத்திரிகைல எந்த ஏற்பாடும் செய்யலையா?"

"இல்ல... ஒருவர் காசிக்குப் போய் இறங்கி, அங்க பார்க்க வேண்டிய எல்லா இடங்களையும் பார்த்து முடிச்சிட்டுக் கிளம்பி வர்றதுல இருக்கற சௌகர்ய அசௌகர்யங்களை, ஒரு லைவ் ரிலே மாதிரி சொல்றதுதான் என் கட்டுரையோட நோக்கம். ஆகையால இங்க வந்து பார்த்துக்கலாம்னு கிளம்பி வந்துட்டேன்."

"பரவால்லியே... ரொம்ப துணிச்சலான பெண்ணா இருக்கீங்களே. இவ்வளவு தூரம் நீங்க வந்துருக்கறதே என் வரைல பெருசுதான்! ஜங்ஷன்ல இருந்து நீங்க ஆட்டோ, டாக்ஸிகாரங்ககிட்ட இருந்து தப்பி வந்ததே, பாகிஸ்தான் பார்டர்ல எறிகுண்டுகள் நடுவுல பல்டி அடிச்சு வந்தா மாதிரி இருக்குமே...?"

- அவன் கேள்விக்கு அவள் சிரிக்க, இருவரும் அப்படியே நடந்தனர்.

அறையில் சீனு அந்த அழுக்கு நாற்பது பக்க நோட்டைத் திறந்திருந்தார். நாராயண நாமம் அவருக்குள் தேனைப் பூசிற்று. அப்படியே ஏட்டுக்கட்டைத் திறந்து பார்த்தார். சமஸ்க்ருத எழுத்துக்களில் ஸ்லோக வரிகள். கண்களை இடுக்கிக் கொண்டு படித்துக் கொண்டே போனார். நடுநடுவே அதன் பொருள் புரிந்து 'ஆஹா'வென்று சிலாகிப்புகள். ஒரே ஒரு ஏட்டில் தமிழ் எழுத்துகள். ஆச்சரியம் அவரை அள்ளியது. பக்கத்திலேயே கணேசன் வைத்து விட்டுப் போயிருந்த அக்கவுண்ட்ஸ் ஃபைல். அதன் முகப்பில் அவன் பெயர் எழுதி முகவரியும் எழுதி யிருந்தான். யதார்த்தமாகப் பார்த்த சீனு, ஏட்டிலும் பைலிலும் ஒரே மாதிரி கையெழுத்தைக் கவனித்தார்.

## 15

*'போருக்குள் ஓடிய*
*தேருக்கும் நானே சாரதி...*
*பாருக்குள் எனைத்தேடிடும்*
*யாருக்கும் நானே சாரதி!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

அந்தக் கையெழுத்து ஒற்றுமை சீனுவைக் கொஞ்சம் ஸ்தம்பிக்க வைத்தது. அதை அப்படியே அவர் முகத்தில் எதிரொலித்தார்.

''என்னன்னா... ஏட்டையும் நோட்டையும் மாறிமாறிப் பாக்கறேள்...'' - ராஜம் கவனித்துவிட்டுக் கேட்டாள்.

''ஆமாம் ராஜம்... இது பலநூறு வருஷத்து ஏடு. இதுவோ இப்ப இந்த கணேஷங்கற அம்பியோட ஃபைல். இரண்டுலேயும் கையெழுத்து ஒண்ணு மாதிரி இருக்கே. எப்படி ஆச்சரியப்படாம இருக்க முடியும்?''



''தற்செயலா எவ்வளவோ லோகத்துல நடக்கறது. அந்த மாதிரி இருக்கலாம் இல்லையா?''

''இப்போதைக்கு அப்படித்தான் எடுத்துக்க முடியும்...''

''சரி, அந்த ஏடும் நோட்புக்கும் என்ன தான் சொல்றது?''

''யாரோ ஒரு ஹரிபக்தர் அஷ்டபதி மாதிரி கண்ணன் மேலே ஸ்லோகங்கள் சொல்லியிருக்கார். தான் ஜென்மா எடுத்ததே கண்ணன் பேரைச் சொல்ல மட்டும்தாங்கறார். அதுக்கு இடைஞ்சலா சாப்பாடு, தூக்கமெல்லாம் வந்து தொலைக்கறதே... பசியும் உறக்கமும் இல்லாத, அது இரண்டையும் ஜெயிச்ச ஒரு உடம்பை கண்ணா நீ எனக்குத் தரமாட்டியான்னு கண்ணன்கிட்டேயே கேட்கறார்.

நீ எட்டாவதா பொறந்தே... அந்த எட்டுக்கு ஒரு காரணம் இருக்கு. உனக்கு முந்திப் பொறந்த ஏழை, காலம் பலி வாங்கிடுத்து. எட்டாவதா பிறந்த நீதான் லோக ரட்சகன் ஆனே... ஆறறிவுள்ள மனுஷன் ஏழான சப்தத்தாலே உன்னை எட்டணும்னு சொல்லாம சொல்லத்தான் நீ எட்டாவதா பிறந்தியோன்னு சொல்லிண்டு போறார்...'' ஓம் நமோ நாராயணாங்கற அவன் பேரும் எட்டெழுத்து மந்திரம் தானே...?

''பிரமாதம்... என்ன ஒரு கற்பனை...'' ராஜம் சிலிர்ப்புடன் ஸ்லாகித்தாள்.

அப்போது ''கற்பனைதான்... மனுஷனுக்கு முழுச் சுதந்திரம் அதுல தானே இருக்கு. அதான் அந்தக் காலத்துல இப்படி மனசுல பட்டதையெல்லாம் எழுதி வெச்சுருக்காப் போல இருக்கு...'' என்கிற பதிலோடு அவர்கள் எதிரில் வந்து நின்றான் கணேஷ். கூடவே அனுராதா என்கிற அந்த லேடி ஜர்னலிஸ்ட்!

''என்ன அம்பி, நாம கிளம்பலாமா?'' என்றார் சீனு.

''தாராளமா... வாசல்ல கார் ரெடியா இருக்கு. நீங்க கிளம்புங்கோ...'' என்றவன். அனுராதா பக்கம் திரும்பி ''மிஸ்

அனுராதா... இதுதான் இப்போதைக்கு எனக்குன்னு உள்ள அறை... நாங்களும் இப்ப கயாவுக்குப் புறப்பட்டுக் கிட்டிருக்கோம். தற்காலிகமா நீங்க இங்க தங்கறதுன்னா தங்கிக்கலாம்'' என்றான். அவளும் அறையை ஒரு பார்வை பார்த்தாள். ''நல்லா இருக்கு... நான் இங்கேயே தங்கிக்கறேன்...'' என்றாள்.

ராஜமும் சீனுவும் அவள் யார் என்கிற மாதிரி கணேஷைப் பார்க்க,

''சார்... இவங்க பேர் அனுராதா! சென்னைல இருந்து வந்திருக்கற ஜர்னலிஸ்ட். தீபாவளி மலர்ல இந்த காசி பற்றி ஒரு கட்டுரை எழுதணுமாம். அதுக்காக வந்திருக்காங்க. வழியில பார்த்தேன். ஹோட்டல்ல தங்கத் தயங்கினாங்க. அதான் இங்க கூட்டிக்கிட்டு வந்தேன். நாம கிளம்பின பிறகு இந்த அறை சும்மாத்தானே இருக்கும். இவங்களுக்குப் பயன்படட்டுமே.'' என்று கணேஷ் மூச்சுவிடாமல் சொல்லி முடித்தான்.

''தனியாவா வந்துருக்கா?'' ராஜம் அகண்டு விட்ட கண்களுடன் கேட்டாள். அனுராதா என்கிற பெண்ணும் ஆமோதிக்கிற ரகமாக அவளைப் பார்த்து தலையை மட்டும் அசைத்தாள்.

''அம்மாடி... அந்தத் துணியெல்லாம் மடித்துணி. அது மேல பட்டுடாதே'' என்றாள் ராஜம். அதன்பின் மூவரும் புறப்பட்டனர்.

சென்னை... உம்மென்றிருந்தாள் சாரு! வழக்கம் போலவே பரபரப்பாக ப்ரீஃப்கேசுடன் வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் சம்பத்.

''சாரு... நான் ஆபீஸ் புறப்படறேன்'' என்றான். பதிலுக்கு அவள் பார்த்த பார்வையில், ஒரு இனம் புரியாத குழப்பம். அவனோ அவள் பார்வைக்கான குழப்பத்தை வேறுவிதமாக எடுத்துக் கொண்டு பதில் தர ஆரம்பித்தான்.



''இதோ பார் சாரு... நீ கூப்பிடும் போதெல்லாம் நான் டாக்டர்கிட்ட வர மாட்டேங்கறன்னு உனக்குக் கோபம். எனக்கு நன்னா தெரியறது. நீ குழந்தைக்காக ஆனாலும் அவசரப்படறே. என் அப்பாவும் அம்மாவும் அனேகமா கங்கைக் கரைல அந்த நாடி ஜோசியன் சொன்ன பரிகாரங்களைச் செய்து முடிச்சிருப்பா. நாம சந்தோஷமா நார்மலா இருந்தா போதும். நிச்சயம் நமக்குக் குழந்தை பொறக்கும். ஆகையால் இந்த டாக்டர், அப்புறம் இந்த குறுக்கு வழியெல்லாம் வேண்டாம். நான் கிளம்பறேன்...'' என்று ஒரு குறுமழை கொட்டியது போல கொட்டியவன், விறு விறுவென்று நடந்து காரில் ஏறிக் கொண்டு போயேவிட்டான். பக்கத்தில் மேஜைக்குள்தான் கிடந்தது அவர்களது மெடிக்கல் ரிப்போர்ட். மிகமிக மெல்ல அதன் அருகே சென்று நடுங்கும் கைகளோடு அதை எடுத்தாள்.

குறிப்பாக அவளுக்கான ரிப்போர்ட்டும் அதைக் கையில் ஆட்டிக் கொண்டு டாக்டர் அவளுக்கு செய்த அட்வைசும் அவள் மனக் கண்ணில் ஓர் ஓட்டம் ஓட ஆரம்பித்தது.

''சாரி சாரு... எந்த மெதட்லயும் உங்களுக்குக் குழந்தை பிறக்க வாய்ப்பு இல்ல. ஏன்னா உங்க கணவர்கிட்ட குறையிருந்தாகூட செமன் பாங்கில் இருந்து எடுத்துக்கலாம். ஆனா உங்ககிட்டதான் பிராப்ளமே... உங்க கர்ப்பப்பை போதிய வளர்ச்சியடையல. லட்சத்துல ஒரு கேஸ் இப்படி இருக்கிறது சகஜம். இந்த மாதிரி கேஸ் விஷயத்துல கொஞ்ச நாள் நம்பிக்கையா பேசுவோம். அதுக்குப் பிறகு தம்பதிகளோட மைண்ட் எப்படி இருக்குன்னு பார்த்துட்டு உண்மையைச் சொல்லிடுவோம். உங்களுக்கு இருக்கற ஒரே வாய்ப்பு, அனாதைக் குழந்தையைத் தத்தெடுத்துக்கறதுதான்... பிறந்து ஒரு வாரம், பத்து நாள் ஆன குழந்தைகளுக்கு ரிசர்வேஷன் இருக்கு. நீங்க இப்பவே போய் பதிவு பண்ணிட்டுக் காத்திருந்தா, அதிகபட்சம் மூணு வருஷத்துக்குள்ள உங்களுக்கு ஒரு பேபி கிடைக்க வாய்ப்பு உண்டு. சட்டப்படி உங்களுக்குப் பிறக்கற குழந்தைக்கு உள்ள அவ்வளவு ரைட்ஸும் அந்தக் குழந்தைக்கும்

உண்டு. தத்தெடுத்தாலும் அதை மறந்துட்டு உங்க குழந்தையா பாவிக்கத் தொடங்கிட்டா, காலப்போக்குல எல்லாம் நார்மலாயிடும்.

இன்ஃபாக்ட் பெத்த குழந்தைமேல காட்டற பாசம் பரிவைவிட ஒரு அனாதைக்குக் காட்டற பாசமும் பரிவும் பல மடங்கு மேலானதும் கூட...''

- டாக்டர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஆனால், அதை எப்படி சம்பத்திடம் சொல்வது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

அவளுக்குள் கன்னாபின்னாவென்று பயம் வேறு. இந்த உண்மை தெரிந்து சம்பத்துக்கு இரண்டாம் தாரமாக யாரையாவது சீனு கல்யாணம் செய்து வைத்து விடுவாரோ என்றும் ஒரு கற்பனை... எதை வைத்துக்கொண்டு பரிகாரங்கள் செய்தால் குழந்தை பிறக்கும் என்று நாடி ஜோசியன் சொன்னான்...? - கேள்வியும் பயமுமாக குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டே இருந்தாள். அப்போதுதான் தொலைபேசியும் கூப்பிட்டது. கனத்த மனதோடு போய் காதைக் கொடுத்தாள்.

''யாரு... சாருவா?'' - மறுபக்கம் ராஜம்.

''ஆங்...அ...அம்மாவா?'' - அவளது குரலில் உயிரே இல்லை.

''ஆமாம் அம்மாதான் பேசறேன். எல்லாப் பரிகாரத்தையும் பண்ணியாச்சு. அதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன். கயாவுல கங்கைல குளிச்சுட்டு கரை ஏறினோம். சொல்லி வெச்ச மாதிரி எதிரே இருபத்தியோரு சன்யாசிகள்... அவ்வளவு பேருக்கும் வெத்தல பாக்குல தட்சணை வெச்சுக் கொடுத்துட்டு அவரும் நானும் அவா பாதங்கள்ல விழுந்து சேவிச்சோம். இருபத்தியோரு பேர்... தலைக்கு நாலு நமஸ்காரம்! கணக்குப் போட்டுக்கோ... எனக்கு இப்பக்கூட மூச்சு வாங்கறது... மொத்தமா எண்பத்தி நாலு நமஸ்காரம். அதைப் பார்த்துட்டு ஒருத்தர் சொன்னார் - கங்கைல மூழ்கினப்பவே உங்க மனசு எல்லா பாவமும் போயிடிச்சுன்னு நினைச்சிருக்கும். ஒரு



இறுக்கம் தளர்ந்து நீங்க சுவாசிக்கிற விதத்துலயும் நீங்க உணர முடியாத ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கும். அமைதி கிடைச்சிருக்கும். அந்த சுவாசத்துலதான் எல்லாம் இருக்குன்னார்.

அப்படியே நீங்க எதுக்கு இந்தக் கங்கைக் கரைக்கு வந்தீங்களோ அது ஈடேறியே தீரும்னார். இவரும் அதைக் கேட்டு அப்படியே ஆனந்தக் கண்ணீர் விட்டார். இதை எல்லாம் உடனே பகிர்ந்துக்கத்தான் போன் பண்ணேன்.

நீ வேணா பாரு... எண்ணி பத்தே மாசம் நீ அம்மாவாகப் போறே. ஆமா... எங்க சம்பா... ஆபீஸ் போய்ட்டானா?'' ராஜம் வர்ஷித்து தள்ளி விட்டாள்.

''ஆமா... அம்மா...'' - அவள் ஆமோதிக்க.

அதே சமயம் ஆபீஸ் கனெக்ஷனுள்ளே போனிடம் அலறல். அப்படியே இந்த ரிசீவரை விடாமல் அதையும் எடுத்துக் காதில் வைத்தாள்.

''சாரு... நான்தான்! சாரி டியர்... நான் பாட்டுக்கு விறுவிறுன்னு கிளம்பி வந்துட்டேன். திடீர்னு என் மனசு லேசாயி காத்துல மிதக்கற மாதிரி ஒரு ஃபீலிங். அப்படியே ஜாலியா எங்கேயாவது போய்ட்டு வரலாமான்னுல்லாம் தோணறது. இங்கேயும் இன்னிக்குப் பெருசா வேலை இல்லை. லீவு போட்டுட்டு வரேன். வெளிய போவோமா?''

- ராஜம் சொன்னதற்கான சாட்சி போல பேசினான் சம்பத். கொஞ்சம் இன்ப அதிர்வாகக் கூட இருந்தது.

''கிளம்பி வாங்கோ... எனக்கும் உங்க கிட்ட நிறைய பேசணும்'' என்றவள், ராஜத்திடம் திரும்பியவளாக ''அம்மா ரொம்ப சந்தோஷம்மா... இனி என்கிட்டே எதுவும் இல்ல... உங்க கைலதாம்மா எல்லாம் இருக்கு...'' என்றபோது அப்படியே உடைந்து விட்டாள். ராஜமும் சாருவின் பதிலைக் கொண்டே அவளா இப்படிச் சொன்னது என்று ஒரு இன்ப அதிர்ச்சிக்கு உள்ளானாள்.

## 16

*'தன்னை நம்புவது*
*தன்னம்பிக்கை!*
*என்னை நம்புவதோ*
*நன்னம்பிக்கை!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

**சா**ருவிடம் பளிச்சென்று ஒரு மாற்றம். அது அவள் ராஜத்திடம் சொன்ன விதத்தில் நன்றாகவே எதிரொலித்தது. தூர இருந்து பேசினாலும் குரலின் தொனி ஏராளமான அர்த்தங்களை உணர்த்திவிடும். ராஜமும் புரிந்துகொண்டு வேகமாகப் பதிலளித்தாள்.

"சாரு... நீ ரொம்ப நொந்து போயிருக்கேன்னு நன்னா தெரியறது. கல்யாணமாகி வந்தபோது இருந்த சாருவா, சமீபத்துல உன்னை நாங்க பார்த்தபோது நீ இல்லை. பட்டணம் உன்னை மாத்திட்டதாத்தான் நினைச்சேன். இப்பதான் புரியறது... அதுக்குக் காரணம், ஒரு குழந்தை இல்லையேங்கற ஏக்கம்னு... ஒரு ஆம்பளையா, என்பிள்ளை இல்லாம போய்ட்டானோன்னு கூட நீ பயந்திருக்கலாம். அது தான் வெறுப்பா, ஆங்காரமா உன்கிட்ட வெளிப்பட்டிருக்கு... ஆனா, இனி எல்லாம் சரியாயிடும். கவலைப்படாதே. நாடி ஜோசியன் சொன்ன பரிகாரத்தைத்தான் அவ்வளவு நேர்த்தியா பண்ணிட்டோமே..." - என்று மிகவும் நம்பிக்கையளித்தாள். சாருவுக்கு டாக்டர் சொன்னதைச் சொல்லிவிடலாமா என்று கூடத் தோன்றியது. ஆனால் அதற்குள் லைன் கட்டாகிவிட்டது. சிறிது நேரத்திலேயே.

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்கவும் அப்படியே எட்டிப்பார்த்தாள். சம்பத் இறங்கி வந்து கொண்டிருந்தான்.



அவனிடம் ஒருவித துள்ளல் தெரிந்தது. ப்ரீஃப்கேஸை டேபிள் மேல் வைத்தவன் கழுத்து டையைத் தளர்த்தியபடியே "என்ன சாரு... நான் உன்னை ரெடியாகுன்னு சொன்னேனே. அப்படியே இருந்தா என்ன அர்த்தம்?" - என்றபடியே சட்டைப் பையில் இருந்த நேம்பேட்ஜ், குவாலிடி பாலிசி பேட்ஜ் என்று சகலத்தையும் எடுத்து மேஜை டிராயரில் போடுவதற்காகத் திறந்தான்.

உள்ளே சாரு அடுக்கியிருந்த மெடிகல் ரிப்போர்ட் ஒரு ஃபைலாகக் கண்ணில் பட்டது. கண்களை இடுக்கிக் கொண்டு கையில் எடுத்தான். அதைப் பார்த்த சாரு வெலவெலத்துப் போய்விட்டாள். பாய்ச்சலாக வந்தவள் அதைப் பிடுங்கினாள்.

"ஏய்... என்ன இது... இது மெடிக்கல் ரிப்போர்ட்தானே?"

"அ... ஆமா... பழசு..."

"ஒரு தடவைதான் உன் கூட நான் வந்தேன். நம்மை செக் பண்ணிட்டு நார்மல்னு சொல்லிட்டா. அப்புறமா நீ கூப்பிட்டு நான் வரலை. நீ மட்டும்தான் போனே... இது அந்த ரிப்போர்ட்டா... ஏகப்பட்ட பேங் பார்ஸ் இருக்கே?"

"இ... இல்ல... இது பழசு.. இதைப் போய் பார்த்துண்டு..." என்றவள் பரபரவென்று அதில் உள்ள காகிதங்களை வெளியில் எடுத்து சுக்குநூறாகக் கிழித்தாள். அதனாலேயே சம்பத் முகமும் தூசுபட்டது போல மாறிவிட்டது. நெற்றியில் மடிப்புகள் விழத் தீவிரமாக அவளைப் பார்த்தான். "இது என்ன பார்வை... நான் இப்ப ஒரு பத்து நிமிஷத்துல ரெடியாயிடுவேன். வெளியே கிளம்புவோம். இப்பதான் அம்மா கயாவுல இருந்து போன் பண்ணினா. பரிகாரமெல்லாம் பண்ணி முடிச்சுட்டாளாம். நிறைய பேசினா... கார்ல போகும்போது சொல்றேன்..." - என்றபடியே உள்ளே ஓடினாள். சம்பத்திடம் மட்டும் 'சம்திங்ராங்' என்கிற முணு முணுப்பு . அவள் கிழித்த பிளாங் செக் கூடையில் உள்ள ரிப்போர்ட்டை பார்த்தபடியே நின்றான்!

கேமராவும் கையுமாகச் சுழன்று கொண்டிருந்தாள் அனுராதா. ஒரு பிராட்கேஜ் ரயில்பாதை அகலத்துக்குதான் தெருக்கள். அதில் அசால்ட்டாக புகுந்து பறக்கும் ஸ்கூட்டர்கள். தடுக்கி விழுந்தால் லஸ்ஸி கடைகள். இல்லாவிட்டால் பான்மசாலா கடைகள். பத்துக்கு எட்டு பேர் வாயில் புகையிலைக் குதப்பல். அனுராதா அனைத்தையும் மனதில் குறித்துக் கொண்டாள். விஸ்வநாதர் ஆலயத்துக்குள் நுழைய முயன்றபோது ஏராளமான போலீஸ்காரர்கள். சிலரிடம் தான் விறைப்புத் தெரிந்தது. பலர் தாயக்கட்டம் ஆடுவதுபோல அமர்ந்திருந்தார்கள். பக்தர்கள் கூட்டத்தை விட அவர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. தாண்டிக் கொண்டு உள்ளே சென்றாள். கேமராவை ஒரு இடத்தில் தடை செய்தார்கள். 'பிரஸ்' என்று சொல்லி ஹிந்தியிலேயே பேசினாள். அதனால் ஒரு பிரயோஜனமும் ஏற்படவில்லை. கேமரா பையை போலீசிடம் வைத்துவிட்டு புறப்பட இருந்தவளிடம் கைட் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் வந்து ஒட்டிக் கொண்டான். அவனிடம் கொஞ்சம் மலிவான ஆங்கிலம்.

''மேடம், நீங்க பிரஸ் ரிப்போர்ட்டரா?''

''இல்ல... நான்... நீங்க யார்?''

''நான் ஒரு கைட். இந்த வாரணாசியையே கரைச்சுக் குடிச்சு வைச்சிருக்கறவன். என்கிட்ட நீங்க எதைவேணா கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்...''

''உங்க சார்ஜ்?''

''உங்க விருப்பம்போல போட்டுத்தாங்க. ஆனா நான் மினிமம் இருநூறு வாங்கறேன்...''

''ஐ.சீ... ஒரு நாளைக்கு எவ்வளவுபேர் உங்ககிட்ட மாட்டுவாங்க...''

''என்ன... ஒரு நாலஞ்சுபேர்...''



''வாவ்... ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா சம்பாத்தியம். காசியில ஒரு கைட் வருமானமே இவ்வளவுன்னா, இது லண்டன், பாரீஸ் மாதிரின்னு சொல்லுங்க...''

''அட நீங்க ஒண்ணு... அவ்வளவெல்லாம் வந்தா நான் ஏன் இப்படி அழுக்கு ஜிப்பாவோட அலையறேன்?''

''நீங்கதானே சொன்னீங்க... மினிமம் இருநூறு ரூபா வாங்கறேன்னு...''

''போதும் மேடம்... போட்டு வாங்காதீங்க... நீங்க பத்திரிகைக்காரங்கங்கறத நல்லாவே காட்டிட்டீங்க... கொடுக்கறத கொடுங்க. வயித்துப்பாடு மேடம்... ப்ளீஸ்...''

- அப்படியே பேச்சு புரண்டு, புரண்டு எங்கெங்கோ போனது. இறுதியில் அந்த கைட் நிஜமும் கற்பனையும் கலந்த நம்பிக்கை சார்ந்த பல விஷயங்களைக் கூறி முடித்தான். அவளும் குறித்துக் கொண்டாள். விஸ்வநாதர் தரிசனத்தையும் முடித்தாள்.

சின்ன சன்னதி. கூட்டம் நசுக்கித் தள்ளியது. சமாளித்து வெளியே வந்தபின் அந்த கைடிடம் ஒரு நூறு ரூபாயைத் தந்தாள்.

அவன் அடுத்த நொடியே, அதில் பத்து ரூபாய்க்கு பான்மசால் வாங்கி போட்டுக் கொண்டு குதப்ப ஆரம்பித்து விட்டான். அப்படியே கங்கைக் கரை வரை சென்றவள், கற்படிகள் மேல் நின்று நீரோட்டத்தைப் பார்த்தாள். பலமான நீரோட்டம் படகுகளின் சவாரி வேறு... படிகளின் மேல் பிதுர்காரியங்கள் நடந்து கொண்டிருந்தன. அதை அப்படியே புகைப்படமாக எடுத்துக்கொண்டாள்.

அறைக்குத் திரும்பியபோது சீனுவும் ராஜமும் கயாவில் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பியிருந்தனர்.

பனை ஓலை விசிறியால் விசிறிக் கொண்டு படுத்திருந்தார் சீனு. அனுராதா வரவும் சங்கோஜத்தோடு எழுந்து அமர்ந்தார். ராஜமும் புன்சிரிப்போடு பார்த்தாள்.

''அவர்...''

''யாரு கணேஷா?''

''ஆங்... சார் எங்க...?''

''எங்களுக்காக டிக்கெட் புக் பண்ண ஜங்ஷன் போயிருக்கிறார்... ஆமா, உன் பேர் என்னம்மா?

''அனுராதாம்மா...''

''இப்படித் தனியா வந்துருக்கியே... உனக்குப் பயமா இல்லையா?''

''பயந்தா பத்திரிகைத் துறைல இருக்க முடியுமா...''

''நல்ல பொண்ணுதான்... கல்யாணமாயிடுத்தா?''

''இல்ல...''

''சீக்கிரம் கல்யாணமாகட்டும். ஏன்னா... கன்யா பொண்ணா கண்ல பட்டிருக்கா. அந்த ரவிக்கைத் துணியை இவளுக்கு வெச்சு கொடுத்துட்றேனே...''

''இதென்ன கேள்வி... அதெல்லாம் உன்பாடு.''

''ரவிக்கைத் துணியா... என்னம்மா அது...?''

''இன்னிக்கு வெள்ளிக்கிழமை. குணசீலமா இருந்தா யாராவது ஒரு சுமங்கலிக்கோ இல்ல கன்யா பொண்ணுக்கோ வெத்தல பாக்குல ரவிக்கைத்துணி வெச்சு கொடுக்கறது என் வழக்கம்...''

''ஏன் அப்படி?''

''அதுக்குப் பல அர்த்தம் இருக்கு. சுமங்கலியையும் கன்னியையும் லட்சுமி சொரூபமா பார்த்துச் செய்யற ஒரு மரியாதை அது. கலியுகத்துல பெருமாளும் தாயாரும் நேர்லேயா வருவா... உன்னை மாதிரி யார் மூலமாவது தானே வருவா...?''

- ராஜம் பேசிக் கொண்டே ரவிக்கைத் துணியை வெற்றிலைப் பாக்கோடு வைத்துத் தந்தாள். குங்குமத்தை எடுத்து இட்டுக் கொண்டே அனுராதா பெற்றுக் கொண்டாள்.



அப்போது கணேஷும் உள்ளே நுழைந்தான்.

''மாமி... டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டேன். இன்னும் மூணு மணி நேரத்துல ட்ரெய்ன். அதுக்குள்ள தயாராகிடுங்க. இங்க இருந்து நேரா டெல்லி போய் அங்க இருந்து ரயில்ல நீங்க மாறணும். பிறகு டெல்லி வந்து தான் சென்னை திரும்பறீங்க'' - என்று டிக்கெட்டை நீட்டினான்.

''ரொம்ப சந்தோஷம்பா... எவ்வளவோ நல்ல காரியங்கள் நாங்கள் செய்யத் துணையா இருந்துருக்கே... உனக்கு ரொம்ப நன்றி...''

''நன்றியெல்லாம் இருக்கட்டும்... இந்த வாரணாசியில ஏதாவது வாங்க ஆசைப்பட்டா போய் வாங்கிட்டு வந்துடுங்க. அனுமன்காட்ல செட்டியார் கடைன்னு ஒண்ணு உண்டு. அங்க எல்லாமே கிடைக்கும். அப்படியே இந்த ஊர் பனாரஸ் பட்டும் கடைல கிடைக்கும்'' - எடுத்துக் கொடுத்தான்.

''அதுக்கெல்லாம் டயமிருக்கா?''

''ஏன் இல்லாம... நீங்க இரண்டு பேரும் புறப்படுங்க. நான் ஒரு இரண்டுமணி நேரம் கழிச்சு உங்க லக்கேஜோட ஸ்டேஷனுக்கு வந்துடறேன். நீங்களும் ஆட்டோவுல ஸ்டேஷனுக்கு வந்துடுங்க...''

''ஐயோ வேண்டாம்ப்பா... உனக்கு எதுக்குச் சிரமம்?''

''ஒரு சிரமமும் இல்லை. நீங்க புறப்படுங்க'' - என்றான்.

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா நானும் வரேன். என் கவரேஜ்ல செட்டியார் கடையும் இருக்கு'' - என்று அனுராதாவும் தொற்றிக் கொண்டாள்.

சீனு அரை மனதாக தன் லக்கேஜ் அவ்வளவையும் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே கிளம்பினார். எல்லாம் கட்டித் தயாராக இருந்தது. முக்கியமாக கிருஷ்ணன் தூங்கும் அந்தப் பிரம்புக் கூடை!

## 17

*'கோபியர் எல்லாம்*
*ஜீவாத்மா - அவர்கள்*
*கொஞ்சி மகிழ்ந்த*
*நானே பரமாத்மா!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

**சீ**னு பெட்டியைப் பார்த்தபடியே செல்வதன் பொருள் கணேஷுக்குப் புரிந்தது. வெளியே சாலை வரை சென்றவர், என்ன நினைத்தாரோ திரும்ப வந்தார். கணேஷும் பார்த்தான்.

''என் மத்த லக்கேஜெல்லாம் கூட ஆட்டோவுலயோ, இல்ல, டாக்சியிலயோ வரட்டும். என் கண்ணனை நான் கையோட எடுத்துக்கறேன்...'' என்றவர், மூங்கில் பிரம்புப் பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டார்.

**வா**ரணாசி ஜங்ஷன்! சீனு மூங்கில் பிரம்புப் பெட்டியைக் கீழேயே வைக்காமல் இடுப்பில் சுமந்தபடியே நின்று கொண்டிருந்தார். கூடவே ராஜம். அனுராதா பார்வை பிளாட்பாரம் அசுத்தமாய் இருப்பதிலும் பிச்சைக்காரர்கள் வளைய வருவதிலும்தான் இருந்தது.

கணேஷ் அவர்களது அத்தனை லக்கேஜுடனும் பிளாட்பாரத்தில் நுழைந்திருந்தான். டெல்லி செல்லும் ரயிலும் ஒரு இரும்பு மரவட்டை போல பின்வழியாக மெல்ல நுழைய ஆரம்பித்திருந்தது.



''ரயில் வரவும் கணேஷ் வரவும் சரியா இருக்கு...'' என்று ஸ்லாகித்துக் கொண்டாள். ராஜம். ரயில் நிற்கவும், கம்பார்ட்மெண்டைத் தேடிப் பிடித்து அதில் லக்கேஜை ஏற்றி அவர்களையும் உட்கார்த்தி வைத்தான். அனுவும் உதவி செய்தாள். சீனு அந்த கம்பார்ட்மெண்ட்டிலும் அந்த மூங்கில் பிரம்புப் பெட்டியை அப்பர் பர்த்துக்கு நடுவில் உள்ள ஸ்டாண்டில் பாதுகாப்பாக வைத்துவிட்டு கன்னத்தில் போட்டுக் கொண்டார். அனுராதா சகலத்தையும் கவனித்துக் கொண்டேயிருந்தாள்.

''சார்... நீங்க கவனமாக ஹரித்வார் பத்ரிநாத்லாம் போய்ட்டு திருச்சி போய் சேருங்க. இங்க உங்களுக்கு என்னால ஆன எல்லா உதவிகளையும் செய்துட்டேன். அதுல ஏதாவது குறைகள் இருந்தா மன்னிக்கணும்'' என்று கைகளைக் கூப்பினான் கணேஷ்.

''சேச்சே.. என்னப்பா நீ! எனக்கு எதிர்க்கருத்து கொண்டிருந்தாலும் அதுக்காக எனக்கு நீ ஒரு சிறு குந்தகம் கூடப் பண்ணலை. ஒரு ஆடிட்டரான நீ லோக்கல் கைட் மாதிரி கூட வந்து எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கே! எங்களால எப்பவும் அதை மறக்க முடியாது. நீ குணசீலத்துக்கு என் அகத்துக்கு ஒருமுறை வரணும். பதிலுக்கு உனக்கு நாங்க ஏதாவது செய்யும் போது தான் நன்றிக்கடன் தீரும்'' என்று சீனுவும் எழுந்து நின்று கைகளைக் கூப்பினார்.

கம்பார்ட்மெண்ட்டுக்குள் கூட்டம் வேறு அடைய ஆரம்பித்து விட்டது.

''அப்ப நாங்க உத்தரவு வாங்கிக்கறோம்'' என்று கணேஷும் பதிலுக்குக் கை கூப்பினான்.

''கணேஷ் உன் செல் நம்பரைக் கொடு. சந்தர்ப்பம் கிடைக்கும் போது பேசறேன்.'' என்றவரிடம் தன் விசிட்டிங் கார்டை நீட்டினான். வாங்கி வைத்துக்கொண்டார். பின்

அனுராதாவும் அவனும் கீழே இறங்கினர். அனு பிளாட்பாரத்தில் நடந்தபடியே கேட்டாள்.

"நீங்க ஒரு ஆடிட்டரா?"

"ம்!"

"வாவ்..."

"ஏன்... என்னைப் பார்த்தா அப்படித் தெரியலையா?"

"ஆமா... புரொபஷனல் டச்சஸ் எதுவும் உங்ககிட்ட இல்ல."

"ஆடிட்டரோட புரொபஷனல் டச் எது?"

"நிறைய கணக்குப் போட்டதால, கண் விழிச்சதால சூடேறி தலைல சொட்டை விழுந்திருக்கும். குறைஞ்சபட்சம் ஸ்பெக்ஸ் போட்டிருக்கணும். அப்புறம் சட்டை பாக்கெட்டுல ஒரு ரெண்டு மூணு பேனா... எப்பவும் பேண்ட் பாக்கெட்ல ஒரு கால்குலேட்டர், இல்லேன்னா கைல ஒரு ப்ரீஃப்கேஸ், சின்ன வயசா இருந்தா ஃபுல்ஹேண்ட் ஷர்ட் டக் செய்த பேண்ட், வயசானவங்களா இருந்தா சின்ன ஒரு குபேர தொந்தியும், நெற்றியில் சந்தனப் பொட்டோ, குங்குமமோ..."

– கணேஷ் அதைக் கேட்டு ரசித்துச் சிரித்தான். அப்போது எதிரே நீண்ட ஒரு பிச்சைக்கார கரத்தைப் பார்த்து உடனே முகம் மாறினான்.

"ஒரே பசிப்பா... ஏதாவது பிச்சை போடேன்..." என்று அந்தப் பிச்சைக்காரன் கேட்ட விதத்தில் பசி எவ்வளவு கொடியது என்கிற உருக்கம். உடனே பக்கத்துத் தள்ளுவண்டியில் விற்றுக் கொண்டிருந்த ஒரு சப்பாத்திப் பொட்டலத்தை வாங்கி, அதைப் பிரித்துக் கொடுத்து "உம் சாப்பிடு..." என்றான். அவனும் அள்ளியள்ளி விழுங்கினான்.

"ச்சே... என்ன தேசம் இது அனுராதா... உலகத்துலயே பெரிய சக்தி மனித சக்திதான். அந்த சக்தியில நாமதான் முதல் இடத்துல இருக்கோம். இந்த பூமியில் இல்லாத இடமா? இந்த நிமிஷம் ஒரு மனிதனோட காலடித் தடமே படாத புறம்போக்கு மானாவாரி இடம் மட்டும் எத்தனை கோடி ஏக்கர் இந்த பூமியில இருக்கு தெரியுமா?

அங்கல்லாம் இந்த மனுஷ சக்தி செயல்பட்டா இந்த நாட்டுல ஒரு மனுஷன்... ஒரே ஒரு மனுஷன் பட்டினி கிடப்பானா?"

– கணேஷ் ஒரு பொதுவான விசாரத்துக்குள் விழுந்து விட்டான். அனு அதை ரசித்தாள்.

அப்போது அவன் செல்போன், அவன் லோட் செய்திருந்த பாடல் ஒன்றைப் பாடியபடியே அழைக்க, அதன் திரையைப் பார்த்தான்.

திரையில் அவன் அம்மா!

"அம்மா..."

"கணேஷ்... எப்படிடா இருக்கே?"

"நான் நல்லா இருக்கேன். நீ விஷயத்துக்கு வா. எதுக்குப் கூப்ட்டே?"

"சுஜாதாவுக்கு திடீர்ன ஃபிட்ஸ் ஜாஸ்தியாயிடுச்சுப்பா... இப்ப ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணியிருக்கேன்."

"ஐயோ... சுஜாதாவுக்கு சீரியஸா ஒண்ணுமில்லையே?"

"இப்ப பரவால்ல... அப்புறம் உன் அப்பா விஷயமா என்ன பண்ணே?"

"நான் இன்னிக்கு ராத்திரி மும்பை கிளம்பறேன்மா."

"சீக்கிரமா போடா... அவர் அடிபட்டு ரோட்ல கிடக்கற மாதிரி ஒரு கனவு வேற கண்டேன். அதுவும் காலங்கார்த்தால..."

"எப்பப்பார் அப்பா ஞாபகமாவே இருக்கறதால அந்த எண்ணம். தூக்கத்துல கனவா கசிஞ்சிருக்கு. உடனே சொப்பன பலன், அது இதுன்னு பழம்பெட்டித்தனமா யோசிக்காதே... நான் மும்பை போய்ட்டு அப்படியே ஊருக்கு வந்துடுவேன். இங்க

பாக்க வேண்டிய பேப்பர்களை வேகமாகப் பார்த்துட்டேன். ஒரே பொய்க்கணக்கு.''

''எங்கடா இல்ல பொய்க்கணக்கு?''

''அதுசரி... எல்லாரும் பொய்க் கணக்கு எழுதறதால, அது சரி ஆயிடாதும்மா. சரி, நீ தைரியமா இரு. நான் உனக்கு அப்புறமா போன் பண்றேன்'' என்றவன் ஒரு பெருமூச்சோடு செல்லை அணைத்தான்.

''யார் அது சுஜாதா?'' அனுராதா முகத்தைப் பார்த்தபடியே கேட்டாள்.

''தங்கைங்க...''

''பேசினது யார்... அம்மாவா?''

''ஆமாம்... ஊர்ல தங்கைக்கு ஃபிட்ஸ் வந்து ஆஸ்பத்திரியில அட்மிட் பண்ணியிருக்காங்க.

''ஓ காட்! நீங்க போகலையா?''

''போகணும். அதுக்கு முந்தி மும்பையில் ஒரு வேலை. விடுங்க... என் விஷயம் பேசினா தேவையில்லாத வருத்தம் தான் மிஞ்சும்...'' என்ற கணேஷ், சட்டென்று ஸ்டேஷனுக்கு வெளியே வந்துவிட்ட நிலையில் பிளாட்ஃபார கடையில் ஒரு சிகரெட் பாக்கெட்டை வாங்கிப் பற்ற வைத்தான்.

''மிஸ்டர் கணேஷ்... நீங்க தம் அடிப்பீங்களா?''

''சம் டைம்ஸ்...'' என்றபடியே காரைத் தேடிச்சென்று ஏறினான். அவனிடம் ஒருவித கவலையும் பரபரப்பும் தெரிந்தது. அனுராதா அருகில் ஏறி அமர்ந்து கொண்டாள். காரும் புறப்பட்டது. அது அவனது இருப்பிடத்தை அடைவதற்குள் மூன்று சிகரெட்டுகளை ஊதித் தள்ளிவிட்டான். அனுராதா தர்மசங்கடத்தோடு நெளிந்தாள். ஒரு டென்ஷன், ரிலீஃப்பாக சிகரெட் பிடிக்கிறான் என்பது புரிந்ததால் அட்வைஸ் என்று ஆரம்பிக்கவும் தயக்கமாக இருந்து.



காரைவிட்டு இறங்கி உள்ளே நுழையும்போது அவளிடம் கேட்டான்.

''மிஸ் அனுராதா... நீங்க இன்னும் எவ்வளவு நாள் இங்க இருக்கறதா உத்தேசம்...?''

''கிளம்ப வேண்டியதுதான் மிஸ்டர் கணேஷ். டிக்கெட் கிடைக்கறத பொறுத்து புறப்பட வேண்டியதுதான்...''

''இப்ப ஸ்டேஷன்ல இருந்துதானே வந்தோம். அங்க ரிசர்வ் பண்ணியிருக்கலாமே...''

''நான் உள்ள நழையும்போதே எட்டிப் பார்த்தேன். சரியான கூட்டம். சரி ஏதாவது ட்ராவல் ஏஜென்சி மூலமா பாத்துக்கலாம்னு விட்டுட்டேன்...''

''வேண்டாத வேலை. அவங்களுக்கும் வெட்டியா கமிஷன் தரணும். எனிவே... நீங்க தரப்போறதில்ல... உங்க பத்திரிகை தானே தரப் போகுது...'' என்றவன், சட்டையைக் கழற்றி ஆணிக் காதில் மாட்டினான். அப்படியே கொடியில் தொங்கிக் கொண்டிருந்த தன் காய்ந்த துணிகளை எடுத்து மடிக்க ஆரம்பித்தான். அதற்கு நடுவிலும் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

''இப்படி தம் அடிச்சா உடம்பு என்னாகறது?'' அனு வாயைத் திறந்து கேட்டே விட்டாள். அப்படியே அவனை நேருக்கு நேர் பார்க்கத் தவிர்த்து அந்த அறையைச் சுற்றி நோட்டம் விட்டவள் கண்ணில் அந்த மூங்கில் பிரம்புக் கூடை பட்டது.

''இது அந்தப் பெரியவர்கிட்ட இருந்த கூடை மாதிரியே இருக்குல்ல...?'' என்றபடியே அருகே சென்று அதன் மேல் மூடியைத் திறந்து யதார்த்தமாகப் பார்த்தாள்.

உள்ளே பட்டு வஸ்திரத்தில் சாளக்கிராமங்களுக்கு நடுவில் கண்ணன்!

அப்படியானால் சீனு கொண்டு சென்ற பெட்டி?

# 18

*'பெருங்கடன் தீர்த்தது குசேலன்*
*கைப்பிடி அவல்!*
*பிறவிப் பெருங்கடல் மீட்கும் என்*
*திருவடி நிழல்.'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

அனுராதாவின் முகத்தில் பரவிய ஆச்சரிய அதிர்வை கணேஷும் கவனித்தான். அருகில் வந்து அந்த மூங்கில் பெட்டியை அவனும் பார்த்தான். கொஞ்சம் பகீரென்றது.

''ஐயோ, இது அந்த ஸ்ரீனிவாசன் சார் பெட்டியாச்சே?'' என்றான் சட்டென்று...

'அப்ப அவர்கிட்ட இருக்கற பெட்டி...?''

''பெட்டி மாறிடுச்சு... எப்படி இப்படி ஆச்சு...? என் பெட்டில எதுவும் கிடையாதே... தூக்கும்போது வெயிட்டை வெச்சுக் கூட அவர் இது நம்ம பெட்டி இல்லைன்னு தெரிஞ்சுக்கிட்டு இருக்கலாமே...?'' இல்லயில்ல... அதுல கடைத்தெருவுல நான் வாங்கின மாம்பழங்கள் இருக்கு. அதான் அவரை ஏமாத்தியிருக்கணும்.

- முணுமுணுத்தபடி குறுக்கும் நெடுக்கும் நடந்தான்.

''அது எப்படி அச்சு அசலா அவர் பெட்டி மாதிரியே ஒரு பெட்டி உங்களுக்கு இந்தக் காசியில கிடைச்சது?'' அனுராதாவும் அப்படி ஒரு கேள்விக்கு மாறினாள்.

இருவர் முகத்திலும் சலன ரேகைகளின் ஓட்டம்... அனுராதாவோ குனிந்து அந்தக் கண்ணன் விக்ரகத்தைத் தொடப் போனாள். திடீரென கரண்ட் கட் ஆகி இருண்ட சூழல் தோன்ற, அவள் கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு நிமிர்ந்தாள்.



''போச்சுடா... இந்த ஊர்ல கரண்ட் போனா வரதுக்குப் பல நாள் கூட ஆகும்...'' - என்ற படியே மெழுகுவத்தியைத் தேடினான் கணேஷ்... ''அந்த மனுஷன் நாளைக்குக் காலைல பூஜைக்காக டெல்லியில பெட்டியைத் திறக்கும்போது அவருக்கு ஹார்ட் அட்டாக்கே வந்தாலும் வந்தடும்னு நினைக்கறேன்...'' என்றபடியே தீக்குச்சியை உரச ஒரு தீபச் சுடர்தோன்றி மஞ்சள் பூசிய வெளிச்சம் அந்த அறைச் சதுரத்துக்குள் பரவியது. ''க்ஷேத்ராடனம்தானே போறாங்க... வழியில ஒரு நாள் பூஜை செய்யலைன்னா தான் என்ன?''

''ஒரு நாள் இல்ல... எப்பவுமே எதுக்கு பூஜைங்கறது என்னோட கேள்வி?''

''ஓ... உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இல்லைல்ல?''

''உங்களுக்கு?''

''எனக்கு இருக்கு... ஆனா அதுக்காக இப்படித் தினசரி பூஜை ஆசாரம் அப்படி இப்படின்னு அலட்டிக்கற அளவு எனக்கு பக்தி வெறி கிடையாது...''

- அதைக் கேட்டு கணேஷ் ஒரு மாதிரிச் சிரித்தான்.

''ஒரு விதத்துல அந்த ஜோசியர் சொன்னபடியே நடந்தாச்சு... ஒரு வேளை அந்த ஆள்தான் பெட்டியை மாத்திவெச்சு ஏதாவது கோல்மால் பண்ணிட்டாரோ?'' என்று உதட்டை சுழித்தவனை, 'யார் அந்த ஜோசியர்?' என்கிற கேள்வியோடு பார்த்தாள் அனுராதா.

''ஜோசியர் என் ஊர்க்காரர். எதிர்பாராதவிதமா அவரைச் சந்திச்சேன் என்று எல்லா விவரங்களையும் கூறி முடித்தான். ''எனக்குத் தெரிஞ்சு ஜோசியர் யாரும் வந்த மாதிரித் தெரியல...'' என்ற அனுராதாவிடம் குபீரென்று ஒரு மாற்றம். பெட்டியை ஒரு புதிய பரவசத்தோடு பார்த்தாள். மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் உள்ளிருக்கும் கண்ணனும் சாளக்கிராம கற்களும் சன்னமாக மின்னிக் கொண்டிருந்தன.

''என்ன மிஸ் அனுராதா... நான் சொன்ன இந்த விஷயங்கள் எல்லாமும் கூட உங்க தீபாவளி மலர் கட்டுரைல வருமா...? நீங்க யோசிக்கறத பார்த்தா, இதுல எல்லாம் ஏதோ இருக்கற மாதிரி நீங்க நினைக்கறீங்கன்னு நினைக்கறேன்...''

''ஆமாம் மிஸ்டர் கணேஷ்... உங்களை மாதிரி இதை ஜஸ்ட் ஒரு கோஇன்சிடென்ட்டா என்னால நினைக்க முடியல. கோஇன்சிடென்டுன்னா ஒரு விஷயம் நடக்கலாம், இல்ல இரண்டு... ஆனா இங்க வரிசையா பல விஷயங்கள். ஆமா, அந்த ஏட்டுக்கட்டு, நோட்புக் இதை எடுத்துப் படிச்சுப் பார்த்தீங்களா?''

''சாரி... அதுக்கு எனக்கு நேரமும் இல்ல... அதுல எனக்கு விருப்பமும் இல்லை...''

''ப்ளீஸ் நான் அதை எடுத்துப் படிச்சுப் பாக்கட்டுமா?''

''தாராளமா... ஆனா ஒண்ணு இதை எடுத்துப் படிச்சுட்டு ஆஹா ஒஹோன்னு அந்த ஸ்ரீனிவாசன் பேசின மாதிரி மட்டும் பேசாதீங்க... பைதபை, நான் மும்பை புறப்படணும். உங்க பயணத்திட்டம்?''

''என் பயணத் திட்டம்... ம்... ம்...'' - அவள் இழுத்தாள்.

''டிக்கெட் கிடைச்சா கிளம்பிடுவீங்க இல்லையா?''

- அனுராதா பதில் கூறாமல் அவனையே வெறித்தாள்.

''என்ன மேடம்... உங்களைத்தான்.''

''நானும் கிளம்பணும்தான். ஆனா எனக்கென்னமோ இங்க சில நாட்கள் இருக்கலாம்னு தோணுது.''

''சரி நீங்க இருங்க, நான் கிளம்பறேன்...''

''ஆமா இந்தப் பெட்டியை என்ன செய்யப் போறீங்க?''

''மிஸ்டர் ஸ்ரீனிவாசன் எப்படியும் போன் பண்ணுவார். திரும்பும்போது காசி வந்து பெட்டியை எடுத்துக்கிட்டு போங்கன்னு சொல்ல வேண்டியதுதான்...''



''இதுக்காக திரும்பி வருவாரா?''

''என்னைக் கேட்டா இந்த பெட்டிக்காக அவர் உயிரையே கூட விடுவார். இங்க வர்றதுதானா விஷயம்? முன்னூறு வருஷத்துல ஒரு நாள் கூட தவறாம பூஜை பண்ணின விக்ரகம்னு அவர் சொன்னது ஞாபகத்துக்கு வருது... பாவம்... நாளைக்கு பூஜை பண்ண முடியலையேன்னு ஒப்பாரி வைக்கப் போறார்...''

''கேட்கவே சங்கடமா இருக்கு... அவருக்கு அப்படி ஒரு நிலை வரக் கூடாது...''

''சுனாமி கூடத்தான் வரக்கூடாது... ஆனா வந்ததே...! அதோட ஒப்பிட்டா, இது சுண்டைக்காய் பெறாத விஷயம். அசட்டுத்தனமான செயல்களுக்கும் ஒரு நாள் முடிவு வரும். இப்ப வந்திருக்கறதா நான் நினைக்கறேன்...''

''மிஸ்டர் கணேஷ்... இதை ஒரு பக்திக்குரிய விஷயமாவே நீங்க நினைக்காதீங்க. நான் ஸ்டாப்பா நடக்கற ஒரு விஷயம் இது. நீளமா முடி வளர்க்கறது, பின்னாலேயே பல மைல்கள் நடக்கறதுங்கற ஒரு கின்னஸ் சாதனை மாதிரி இதை நினைக்கலாம் இல்லையா?''

''சரி... என் இடத்துல இருந்தா நீங்க என்ன செய்வீங்க... கமான்... அவரை மாதிரி என்னைப் பூஜை செய்யச் சொல்வீங்களா...?

- பேச்சின் போக்கில் கணேஷ் கேட்டதைக் கப்பென்று பிடித்துக் கொண்டாள் அனுராதா.

''ஏன் செய்யக் கூடாது?''

''வாட் நான்சென்ஸ் யு ஆர் டாக்கிங்... நான் பூஜை பண்ணினா பார்க்கச் சகிக்குமா? கசாப்புக் கடைக்காரன் அஹிம்சை பத்திப் பேசற மாதிரி இருக்கும்...''

''அதுவும் சரிதான்... அடுத்து எப்படி பூஜிக்கறதுங்கறதும் முக்கியமில்லையா?''

''வேண்டாம்... இந்தப் பேச்சை இதோட விட்டுருங்க...'' என்று அவன் ஒரு முற்றுப் புள்ளி வைத்த போது, அவனை செல் போனில் ஆடிட்டர் அழைத்தார்.

''கணேஷா... மும்பை போகப் போறதா மடத்து மேனேஜர் சொன்னார்... உன் அப்பாவைத் தேடித்தானே?''

''ஆமாம் சார்... இங்க பாக்க வேண்டிய ஃபைல்ஸை எல்லாம் பாத்துட்டேன் சார். அவசியப்பட்டா அடுத்த மாசம் ஒரு நாலு நாள் வந்துட்டுப் போனா போதும்னு நினைக்கறேன்.''

''அதான் இல்ல... அங்கேயே தீரஜ் குமார்னு ஒருத்தர் ஒரு ஆட்டோ மொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் பிசினஸ் பண்ணிக்கிட்டிருக்கார். அவரோட அக்கவுண்ட்ஸை அண்டர்டேக் பண்ணச் சொல்லி போன் பண்ணினார். லோக்கல்ல இருந்த அவரோட ஆடிட்டர் ஹார்ட் அட்டாக்ல போய்ட்டாராம். எனக்கு அவர் நல்ல பழக்கம்... அந்த ஆடிட்டர் நிறைய குளறுபடியெல்லாம் வேற பண்ணி வெச்சுருக்காராம். என்ன சொல்றே?''

''சாரி சார்... அப்பா பத்தி தகவல் கிடைச்சிருக்கற நிலையில நான் இவ்வளவு நேரமா இங்க இருக்கறதே தப்பு. நீங்க அங்க இருந்து கதிரேசன் இல்ல மாணிக்கவேலை அனுப்பிக்கொடுங்க சார்.''

''இப்படிச் சொல்வேன்னு எனக்குத் தெரியும். இதுல கதிரேசனுக்கு ஜான்டிஸ். மாணிக்கவேல் ஜலந்தர் போயிருக்கான்...''

''சார்ர்ர்!''

''உன் அப்பாவை மும்பைல தேட வேண்டியது என் பொறுப்பு. அங்க ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ஏஜெண்டை எனக்குத் தெரியும். உன் வீட்டுக்குப் போய் உன் அப்பா போட்டோவை வாங்கி நாளைக்குக் காலைல வாங்கிக்க ஏற்பாடு பண்றேன்.



நீ அங்க தீரஜ் அக்கவுண்ட்ஸைப் பார்... கோடிக்கணக்குல டர்ன் ஓவர் பண்றவன். தன்னோட டர்ன் ஓவர் டீடெய்ல்ஸ் லோக்கல் ஆட்களுக்குத் தெரிய வேண்டாம்னும் நினைக்கறான்...''

''சார்ர்ர்...''

''உன் அப்பா விஷயம் இந்த நொடி என்னோட அசைன்மெண்ட்... சொன்னா கேள்...''

- ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி சரியான கடக மனிதர். பிடித்து அமுக்க நினைத்தால் தப்பிக்க முடியாது. கணேஷும் மடங்கிப் போனான்.

அருகே இருந்த அனுராதா, ''என்ன மிஸ்டர் கணேஷ் உங்க பயணத்திட்டமும் கேன்சலா?'' - என்று கேட்க, அவன் தலை அசைத்து ஆமோதித்தான், அவளிடம் ஒரு புத்துணர்வு, அவன் முகத்திலோ சொல்ல முடியாத அளவு சோர்வு.

சட்டென்று கரண்ட் வரவும் பளிச்சென்று அவனது ஏமாற்றத்தைப் பார்த்தவள், திரும்பப் பெட்டியைப் பார்த்து அதிலுள்ள ஏட்டுக் கட்டுகளையும் நோட்டையும் எடுக்கக் கையைக் கொண்டு சென்றாள்.

திரும்பவும் தடுப்பதுபோல் மணிக்கட்டு மேல் ஒரு பல்லி விழுந்து அவளை அலற விட்டது.

அவளுக்குப் புரிந்துவிட்டது.

''கணேஷ்... அந்த ஏடுகளையும் நோட்டையும் கொஞ்சம் எடுத்துத் தரீங்களா... நான் கையை நீட்டும் போதெல்லாம் ஒரு தடை வர்றதை பார்த்தா...'' - என்றவளை இலேசாக முறைத்துக் கொண்டே பெட்டிக்குள் கையை விட்டு அவற்றை வெளியே எடுக்க ஆரம்பித்தான்.

அந்த நொடியில் எங்கிருந்தோ ஒரு மணிச் சப்தம்!

# 19

*'மூங்கிலுக்குள் காற்றை*
*முத்தத்தால் இசைத்திட்ட*
*மூல முதல்வன் நான்!*
*மூங்கிலாம் மனிதனுக்குள்*
*உயிராம் காற்றை விதைத்திட்ட*
*இறைவன் நான்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

அந்த மணிச் சத்தத்தை அனுராதா ஒரு சகுனச் செய்தியாகத்தான் பார்த்தாள்.

''நீங்க முதன் முதலா இந்தப் பெட்டியைத் தொடும்போது மணி அடிக்குது... இட் ஈஸ் எ குட் டைம்...'' என்றாள். கணேஷோ அந்த ஏட்டுக்கட்டு, அழுக்கு நோட்டு இவற்றை நீட்டியபடியே ஒரு கேலிச் சிரிப்பு சிரித்தான். அப்படியே ''கொஞ்சம் முற்போக்கான ஜர்னலிஸ்ட்டுன்னு நினைச்சேன். உங்களுக் குள்ளும் முட்டாள்தனமான பல நம்பிக்கைகள் இருக்கே...'' என்றான்.

அவள் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. சொல்லத் தெரியவில்லை. இப்படிப் பல சமயங்களில் பதில் சொல்லத் தெரியாத ஒரு சங்கடத்தை அவள் அனுபவித்திருக்கிறாள். அவ்வளவும் நம்பிக்கை சார்ந்த விஷயங்களில்தான் என்பதும் முக்கியமான ஒன்று. அப்படியே ஒரு ஓரமாக அமர்ந்து அவற்றை அக்கறையாகப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். அப்படி அவள் படிக்கும் இடத்துக்குப் பக்கத்திலேயே கணேஷின் ஆடிட் செய்யப்பட்ட சில அக்கவுண்ட்ஸ் ஃபைல்கள். அதில் சில



எண்களை ஓவல் போன்ற ஒரு வட்டத்துக்குள் அல்லது அந்த எண்ணைச் சுற்றி ஓவல் போன்ற ஒரு வட்டத்தைப் போட்டிருந்தான். சங்கிலிக்கண்ணி போல எல்லா அட்சரங்களும் பிரியாமல் சேர்ந்தே வேறு இருந்தன.

''மிஸ் அனுராதா... நீங்க இந்தக் குப்பைகளைக் கிளறிக்கிட்டிருங்க. நான் புது க்ளையண்ட் ஒருத்தரைப் போய் பார்த்துட்டு வந்துடறேன். என் சொல்போனை வெச்சிட்டுப் போறேன். எனிடைம் மிஸ்டர் சீனு போன் பண்ணலாம். அப்படிப் பண்ணா மூங்கில் பெட்டி, அப்புறம் அந்தக் கல்லு, பொம்மை எல்லாம் பத்திரமா இருக்கு, திரும்பி வரும்போது ஒரு நடை இந்தப் பக்கம் வந்து எடுத்துக்கிட்டுப் போங்கன்னு சொல்லிடுங்க. இல்லன்னா என்ன பண்றதுன்னு அவர் கிட்டேயே கேளுங்க. நான் வந்துடறேன்'' என்று வேகமாக வெளியே கிளம்பினான். நிமிர்ந்துகூடப் பார்க்காமல் தலையை அசைத்தவளின் கவனமெல்லாம் ஏட்டுக் கட்டின் மேலேயே இருந்தது. சமஸ்கிருத எழுத்துக்கள் அவளுக்குப் புரியவில்லை. ஆனால் இந்தத் தலைமுறை என்பதால் ஹிந்தி படித்திருந்தாள். அது பல இடங்களில் உதவி செய்தது. அப்படியே நோட்புக்குக்குள் நுழைந்தாள். ஒரு குறிப்பிட்ட பக்கத்தில் சிட்டை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அவளுக்கு முன் சீனு அதுவரை படித்திருந்ததன் அடையாளம் அது. அதில் காலப்பிரமாணக் குறிப்புகள்தான் இருந்தன. அடுத்த பக்கத்தைப் புரட்டினாள். ஏற்கெனவே ஜோதிடரும் வாசித்து முடித்து அதிர்வுக்குள்ளான அந்தக் குறிப்பு அவள் கண்களிலும் பட்டது.

'இந்தக் குறிப்புகள் புண்ணியன் ஒருவன் கை சென்று, பின் ஜோதிடன் ஒருவன் கரத்தை அடைந்து, அவன் இதை வாசிக்கும் நாளில் இருந்து சொற்ப நாட்களில் இந்த புண்ணிய பூமிக்கு கண்ணன் வருவான். அவனை வரவேற்க நான் முன்செல்கிறேன். அதன் நிமித்தம் கங்கையில் ஜீவ

சமாதியடைந்து என் பூத உடலை கங்கை மீன்களின் பசிக்கு இரையாக்குவதில் ஒரு வம்சத் தொடர்புக்கே முற்றுப்புள்ளி வைக்கப்படும். உயிரில்லாத என் பிண்டம் மீன் உடம்பில் ஐக்கியமாகி அதன் உடம்பில் அடங்கிடும். மீனும் பரம் பொருளும் கிட்டத்தட்ட ஒன்று. அதை உணர்த்தவே அந்த பரந்தாமன் தன் அவதாரத்தை மச்சத்தில் தொடங்கினான்.

மனிதன் உயிர்வாழ ஐந்து அம்சங்களின் தயை வேண்டும். மீனுக்குத் தண்ணீர் ஒன்று போதும். இறைவனைப் போலவே அதுவும் என்றும் விழித்திருக்கும் ஒரு ஜீவன். இப்படி உடம்பை உதிர்த்து நான் முன்செல்வது கண்ணனை வரவேற்க மாத்திரமல்ல... கண்ணனின் வருகையை உத்தேசித்து நான் இந்தப் பூ உலகில் செய்து வைத்திருக்கும் ஏற்பாடுகளைக் கூறவும் தான்.

இந்தக் குறிப்புகளுடன் காணப்படும் ஏடு கிருஷ்ண தரிசனத்துக்காகவே வாழ்ந்த ஒரு மகா ஞானியின் கைகளால் எழுதப்பட்டது. சொப்பனத்தில் அவருக்கு கிருஷ்ண தரிசன மும் கிட்டியது. அப்போது 'எல்லாமாய் நீ இருக்கிறாய்... பக்திக்கு வசப்படும் நீ, அதற்கு எதிரானவற்றுக்கும் வசப்பட்டாலன்றோ உன் கூற்று மெய்யாகும்' என்று அவர் கேட்க. 'பக்திக்கு மட்டுமின்றி அகங்கார மற்ற நேர்மைக்கு வசப்படுபவன் நான்' என்று கிருஷ்ணனும் கூறினானாம்.

'இதை நீயே அடுத்து எடுக்கும் பிறப்பில் உணர்வாய் என்றும் கிருஷ்ணன் கூறினானாம். 'ஐயோ, இன்னொரு பிறப்பா' என்று அவர் கேட்க, 'என்ன செய்ய, உன் கணக்கு அப்போது தானே தீர்கிறது' என்று கிருஷ்ணன் கூறிச் சிரித்தானாம்.

அந்த மகான் தனது முக்தியின் போது கூறியபடி, நான் ஜீவித்திருக்கும் இந்தக் காலகட்டம் கிருஷ்ணனாகிய கண்ணன் வரப்போகிற ஒரு காலகட்டம். அந்த மகானும் மறு பிறப் பெடுத்திருக்கும் கால கட்டம்.



இதை எதிர்பார்த்துக் கிடந்த என் எண்ணங்களும் அலை அலையாகப் பரவி அங்கங்கே எவருக்குள் எல்லாம் புக வேண்டுமோ அவர்களுக்குள் எல்லாம் புகுந்து, அவர்கள் அனைவரும் கண்ணன் தோன்றி எழப்போகும் கங்கைக் கரையில் அணி திரளுவார்கள். அவர்களில் கன்னி ஒருத்தி நடப்பவற்றைக் காணப் போகும் சாட்சியாவாள். கண்ணனின் பால் காதல் கொண்ட சக்தி அம்சமான ராதையின் நாமம்கொண்ட அவளும் ஒரு மாலைப் பொழுதில் இந்த ஏட்டினை வாசித்து உள்ளுக்குள் உயிர்த்து எழுவாள்.

பசுவின் உடல் முழுக்க அதன் பால் பரவிக் கிடந்தாலும் மடியின் வழியாக அது வெளிப்படுதல் போலவே கண்ணனும் ஒரு சின்ன கூடைக்குள் உள்ள மரச் சிற்பம் ஒன்றைத் தொட்டு வரப்போகிறான். அவனோடு பேசுகிறவர் புண்ணியர்... அவனால் பார்க்கப்படுபவர்களும் புண்ணியர்... பெரும் புண்ணியர்...'

- அந்தப் பக்கம் வளர்ந்து கொண்டே போனது. அடுத்த பக்கத்தைப் புரட்டினால் அது நீர் பட்டது போல அழிந்திருந்தது.

அனுராதாவுக்குச் சுருக்கென்றது. அதுவரை படித்ததை ஒருவரின் டயரிக் குறிப்பு என்பதா, இல்லை கற்பனையான எழுத்துப் போக்கா...? அதில் உள்ள செய்திப்படி பார்த்தால் கிருஷ்ண தரிசனத்துக்காக உருகியவரும் கணேஷும் ஒன்று போலத் தெரிகிறது. அந்த ஏட்டிலுள்ள கையெழுத்தும், குறிப்பாக எண்களைக் குறிப்பிட்டு அவரும் ஓவல் போல வட்டம் போட்டிருந்தார்... சங்கிலி எழுத்துக்கள் ஒவ்வொரு வரி முடியும் போது சொல்லிவைத்த மாதிரி எட்டுப் புள்ளிகள்... அதிலும் சரி, கணேஷின் ஃபைலிலும் சரி... இரண்டிலும் பாஷை தான் வேறு... அந்தக் குறிப்பில் ராதை என்று தன் பெயரும் இருப்பதையும் உணர்ந்தவள், அப்போது கழிந்தபடி இருப்பதும் ஒரு மாலைப் பொழுது தான் என்று உணரவும் ஒரு அமானுஷ்ய பரவசத்திற்குள் அப்படியே புதைந்து போகத் தொடங்கினாள்.

இதெல்லாம் என்ன? கணேஷ் சற்று முன் கூறிச் சென்றதுபோல தன்னிச்சையான சம்பவங்களைப் புத்திதான் இப்படிப் பார்த்துப் பார்த்துப் பரவசப்படுகிறதா?

இல்லையே... வாசித்த விஷயத்திற்கும் நடந்த, நடக்கின்ற சம்பவங்களுக்கும் ஒரு அசாதாரண தொடர்பு இருக்கிறதே... இது எப்படித் தன்னிச்சையாகும்?

அப்போது அவனது செல்போன் அவள் கவனத்தைத் திருப்பியது. போய் காதைக் கொடுத்தாள். அந்தப் பக்கமாய் ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி அய்யர்.

''கணேஷ்...''

''அவர் இல்ல... நீங்க?''

''நான் அவரோட ஆடிட்டர் பேசறேன். நீங்க யார்?''

''நான் ஒரு ஜர்னலிஸ்ட். அவருடைய உதவியால அவரோட அறைல தங்கியிருக்கறவ. என் பேர் அனுராதா சார்... எனிதிங் இம்பார்ட்டன்ட் சார்.''

''ஆமாம்மா... அவர் வந்தவுடன் எனக்கு கால் பண்ணச் சொல்லுங்க...''

''ஷ்யூர் சார்...'' அனுராதா செல்லை முடக்கினாள். திரும்பவும் வாசற்புறம் சப்தம்.

குண்டுக்கட்டாக கணேஷைச் சுமந்து கொண்டு ஒருவன்...! அவன் நடந்து வரும் விதமே அப்படி ஒரு அழகு... முகத்தில்கூட அப்படி ஒரு ஈர்ப்பு. கோபிசந்தனத்தை ஒரு மஞ்சள் தீபச்சுடர் போல நெற்றியில் தரித்தபடி, சாதாரண வேட்டி சட்டையில் தென்பட்டவன் அனுராதாவுக்குள் ஒரு மின்னலை வெட்டினான்.

அவனோ கணேஷை அறைக்குள் இறக்கி ஒரு ஓரமாய் அமர்த்திவிட்டு, ''இந்தச் சுளுக்கு குணமாக எப்படியும் ஒரு வாரம் ஆகும் சார்... பேசாம ரெஸ்ட் எடுங்க'' என்றான்.



அவன் சொன்னதிலேயே கணேஷை அவன் சுமந்து வந்ததன் காரணம் புரிந்து விட்டது.

''அப்ப நான் போய்ட்டு வரேன் சார்...'' - இதுவும் அவன்தான்.

''ரொம்ப ரொம்ப தேங்க்ஸ். அந்தப் பள்ளத்தைத் தாண்டிட முடியும்னு நம்பினது தப்பா போச்சு. நல்லவேளை விழுந்து எழுந்த என்னைத் தாங்கிப் பிடிச்சு, இங்க வரை கொண்டு விட்டுட்டும் போய்ட்டீங்க. எகெய்ன் ரொம்ப தேங்க்ஸ்.''

''தேங்க்ஸெல்லாம் இருக்கட்டும். நல்லா ரெஸ்ட் எடுங்க. ஏன்னா, இந்தச் சுளுக்கு பத்தி எனக்குத் தான் தெரியும்.''

''நான் பாத்துக்கறேன்... ஆமா உங்க பேர்...''

''சுதாமன்...''

- சொல்லிவிட்டு சில அடி சென்றவன், திரும்பி அந்த மூங்கில் பிரம்புப் பெட்டியைப் பார்த்தான். சட்டென்று கன்னத்தில் போட்டுக்கொண்டான். அதன் பின் விறுவிறு வென்று போய் விட்டான். அனுராதாவோ 'சுதாமன்' என்று அவன் சொன்ன பெயரிலேயே மையம் கொண்டிருந்தாள்.

## 20

*'காளிங்க நர்த்தனம்*
*என் சாகஸம்!*
*காலங்களின் நர்த்தனம்*
*என் மானஸம்!'*

**- ஸ்ரீ கிருஷ்ணன்**

சுதாமன் என்று சொல்லிச் சென்ற அந்த நபரின் பேச்சும் சரி, செய்கைகளும் சரி அனுராதா வரையில் ஒரு மாறுபட்ட ஒன்றாகவே இருந்தன. அந்த உணர்வு மாறாமல் கணேஷ் பக்கம்

திரும்பினாள். அவன் முகத்தில் வலி, வேதனை... அதற்கு நடுவிலும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கும் முயற்சி.

"நல்லாருக்கு... இந்த நிலைல சிகரெட்டா? ஆமா எப்படி இப்படி?" - என்றபடியே அவள் அவனை முறைக்க, அவனும் சிகரெட்டை உதட்டில் இருந்து பிரித்து கையில் பிடித்துக் கொண்டான். அப்படியே ஒரு மாதிரி கலக்கத்துடன் பார்த்தான்.

"அதை முதல்ல கீழ போடுங்க... உங்களுக்கு இப்ப கொஞ்சம் கூட டைமே சரி இல்லைன்னு தான் நான் நினைக்கறேன். மும்பை போக ஆசைப்பட்டீங்க, முடியல. வெளியில போய்ட்டு அடிபட்டு வந்து நிக்கறீங்க... மிஸ்டர் கணேஷ் எப்படி ஆச்சு இப்படி?"

- அவள் டைம் சரி இல்லை என்று சொன்னது அவனைக் கீறியது.

"என்ன அனுராதா... டைம் எப்படி சரி இல்லாம போகும். ஒரு நாள் ஒரே ஒரு நாள் சூரியன் உதிக்காம இருந்திருக்கா? மதியப் பொழுது, மாலைப் பொழுதுன்னு பொழுதுகள் வராம போயிருக்கா... இல்ல அந்தப் பொழுதுகள்தான் லேட்டாவோ இல்ல ஃபாஸ்டாவோ வந்திருக்கா... டைம் எப்பவுமே சரியாத் தானே இருக்கு?

- அந்த நிலையிலும் அவளிடம் அவன் அவளை மடக்குவது போல கேட்டதில் நிறையவே உட்பொருள்.

"நான் காலப் பொழுதைச் சொல்லலை... உங்களுக்கான பொழுதைச் சொன்னேன்." என்றாள்.

"எனக்கு இன்னிக்குக் கொஞ்சம் ஏமாற்றமான நாள்தான். இப்படி அடிபடும்னும் நினைக்கல... அதுக்காக டைம் சரியில்லைன்னுல்லாம் நான் நினைக்கமாட்டேன். இதெல்லாம் பார்ட் ஆஃப் லைப். மனசு ரொம்ப கனத்து ஒரு மாதிரி சோர்வு தட்டும்போது ஒரு சிகரெட் பிடிச்சா கொஞ்சம் அது லேசான



மாதிரி ஒரு ஃபீலிங். தட்ஸ் ஆல்... நான் எப்பவும் சிகரெட் பிடிக்கற ஸ்மோக்கர் இல்லை..."

- அவன் பேச்சு ஒரு மாதிரியான சமாளிப்பாகத்தான் இருந்தது.

"ம்... அப்புறமா ஒரு விஷயம்... நீங்க வெளிய போயிருந்தப்போ உங்க ஆடிட்டர் போன் பண்ணினார். நான் பேசினது அவருக்கு ஆச்சரியமா இருந்திருக்கும்... என்ன விஷயம்னு தெரியல... அப்புறமா போன் பண்றேன்னார்..." என்றவள் தொடர்ந்து,

"மிஸ்டர் கணேஷ்... ஒரு விஷயம்... இந்த மூங்கில் பெட்டியிலுள்ள ஏடுகள்ள உள்ள கையெழுத்துக்கும் உங்க கையெழுத்துக்கும் நிச்சயம் ஒரு தொடர்பு இருக்கு. ஜஸ்ட் இது ஒரு கோ இன்சிடென்டுனு என்னால நினைக்க முடியல. இந்த பாக்ஸ், இதோட டிராவல் இது இங்க இப்படி தங்கிடறதுக் கெல்லாம் சரியான ஒரு காரணம் இருக்கற மாதிரி தான் என் உள்ளுணர்வு நினைக்குது. நீங்க இப்படி கால்ல அடிபட்டு இங்க உட்காரக்கூட ஒரு சரியான காரணம் இருக்கு... இந்தச் சூழல்ல உங்களோட நான் வந்து சேர்ந்திருக்கறதும் கூட ஒரு தற்செயலான ஒரு விஷயமா தெரியல..."

- அவள் சொன்ன விதம் கணேஷை ஒரு முறை முறைக்கச் செய்தது.

"முறைக்காதீங்க... இது ஜனநாயக நாடு. நான் கருத்துச் சுதந்திரம் உள்ள ஒரு பத்திரிகையாளர். அந்த அடிப்படைல சொன்னேன்..."

"எது கருத்து... உங்களோட தனிப்பட்ட நம்பிக்கை உணர்வுகளெல்லாமா?"

"ஏன் இருக்கக் கூடாதா?"

"சாரி, மிஸ் அனுராதா... ஏன்தான் ஆன்மிகம்னு வந்தாலே எல்லோரும் இப்படிக் குழப்பிக்கறீங்களோ தெரியல... நீங்க பேசின அவ்வளவு விஷயங்களும் கிட்டத்தட்ட கடவுள்

விஷயங்கள்தான். வெளிப்படுத்தின அவ்வளவும் உங்க நம்பிக்கைகளை... ஆனா அதைக் கருத்துன்னு சொல்றீங்க... கருத்து எது? நம்பிக்கை எது?னு முதல்ல பிரிச்சு தெரிஞ்சுகிட்டுப் பேசுங்க...''

- அவனிடம் கோபம் தொனித்தது. அவளுக்கும் உடனேயே புரிந்து விட்டது.

''யூ ஆர் ரைட்... நான்தான் கொஞ்சம் தெளிவில்லாம பேசிட்டேன். ஐ ஆம் சாரி... உங்களை ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்க விரும்பறேன். இல்ல இவ்வளவு சம்பவம் நடந்துருக்கே... இதெல்லாம் ஜஸ்ட் கோ இன்டசிடென்ஸுன்னா நினைக்கறீங்க?...''

''பின்ன... இதுக்குப் பின்னால வேற என்ன இருக்க முடியும்?''

''அது... அது...''

''எது?''

''இல்ல... அந்த ஏட்டுல கண்ணன் வரப்போறான்னு ஒரு குறிப்பு இருந்தது...''

''அவர் வரப் போறதா அந்த ஏடு சொல்லுதா?''

''ஆமாம்... படிச்சுப்பாருங்க...''

''நான் கூட கேள்விப்பட்டிருக்கேன். அதர்மம் அதிகரிக்கும்போது கல்கி அவதாரம் எடுத்து நான் வருவேன்னு சொன்னதா...? அப்ப இப்ப கண்ணன் வரப் போறார்னு சொல்லுங்க...''

''என்ன கணேஷ்... நீங்க கேக்கற தொனியே சரியில்லையே...''

''என்ன... பயபக்தியோட இப்பவே கையைக்கட்டிக்கிட்டு பேசணும்கறீங்களா?''

''அப்படி இல்லை... நாடி ஏடுகளைச் சாதாரணமா என்னால நினைக்க முடியல. இன்ஃபாக்ட் நம்ம முன்னாள் பிரதமர் ராஜீவ்



காந்தியோட மரணத்தை அவர் உயிரோட இருக்கும்போதே நாடி ஜோசியத்துல துல்லியமா சொல்லிட்டாங்க. ஆனா அதை யாருமே கவனிக்காம விட்டுட்டோம்...''

''ஸோ... நீங்க கண்ணன் வரப் போறதை நம்பறீங்க... அப்படித்தானே?''

''நான் ஒரு ஜர்னலிஸ்ட். இந்த மாதிரி விஷயங்களை அப்படியும் இப்படியுமா நான் அலசத்தான் செய்வேன்...''

''நல்ல அலசுங்க... ஜோரா அலசுங்க... ஆனா பாவம் நீங்க. கண்ணன் எதுக்குங்க இப்ப போய் வரணும். அதுவும் இங்க? வேடிக்கையா இருக்குங்க உங்க நம்பிக்கை... உலகத்துல எவ்வளவோ அநீதிகள்... அக்ரமங்கள்... அழிவுகள்... அப்ப வராத கண்ணனுக்கு இப்ப என்ன வேலை?

- அவன் கேட்டதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்தது... அவள் உடனே மௌனமானாள்.

''நாம கடவுளைப் பத்தியே பேசிகிட்டிருக்கோம். எனிவே, எனக்குக் கொஞ்சம் பொழுது போச்சு... என் மனசு இப்ப இருக்கற இருப்புக்கு இப்படிப்பட்ட பேச்சும் ஒரு விதத்துல தேவைதான்...''

- என்றபடி திரும்பவும் சிகரெட்டை எடுத்து உதட்டில் செருகினான். அவள் பதிலுக்கு முறைத்துப் பார்த்தாள்.

''ஓ.கே. நான் வெளியபோய் பிடிக்கறேன்...''

- என்ற எழுந்து நடக்க முயன்று வலியால் வாயைப் பிளந்து அப்படியே அமர்ந்தான். அப்படியே உணர்ச்சி வசப்பட்டுக் கையைக் குத்திப் பிசைந்து கொண்டான்.

''கணேஷ்... டாக்டர்கிட்ட போகலாமா... ரொம்ப பெய்னா இருக்கா?''

''ஆமாம்... வலி உயிர் போகுது... ப்ளீஸ் ஒரு ஆட்டோ பிடிச்சுக்கிட்டு வர்றீங்களா?''

''ஷ்யூர்!'' - அவள் உடனே வெளியேறினாள்.

அடுத்து நொடி செல்போன் அலற, காது வழியே ஆடிட்டர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் நுழைந்தார்.

''கணேஷ்... எங்க போயிருந்தே... யார் அந்தப் பொண்ணு?'' - அவரின் ஆரம்பமே படபடப்போடு இருந்தது.

''ஜர்னலிஸ்ட் சார்... தமிழச்சி வேற! உதவி செய்தேன். அதுக்கு மேலே எதுவும் இல்லை. நீங்க போன் பண்ணினதாவும் சொன்னாங்க அவங்க. என்ன சார் விஷயம்?''

''அது சரி... உன் குரல்ல ஏன் இவ்வளவு முக்கல் முனகல்...?''

''வலி சார்... நீங்க சொன்ன புது கம்பெனி ஓனரைப் பார்க்கப் போனேன்... வழியில ஒரு பள்ளம். தாண்டிடலாம்னு நினைச்சது தப்பா போச்சு...''

''ஐய்யய்யோ... பலமான அடியா?''

''எனக்கென்னவோ ஃப்ராக்சர் மாதிரி தெரியுது. உங்க மேலதான் இப்ப என் கோபமெல்லாம். நான் பாட்டுக்கு மும்பைக்குப் போய் என் அப்பாவைத் தேட ஆரம்பிச்சிருப்பேன். என் தங்கைக்கும் உடம்பு சரியில்ல. நான் இப்ப ஊருக்கு வந்தா எவ்வளவு சௌகர்யமா இருக்கும் தெரியுமா என் குடும்பத்துக்கு...?''

''டோன்ட் ஒர்ரி... உன் உதவிக்கு நான் இம்மீடியட்டா ஒருத்தனை அனுப்பி வைக்கறேன். என்னோட லெட்டரோட உன்னை வந்து பார்ப்பான். நீ சிரமப்படாதே. முதல்ல டாக்டரைப் பார்... உன் தங்கை விஷயத்தைப் பத்தியும் கவலைப்படாதே, அந்த நபரை இன்னிக்கே ஃப்ளைட்ல அனுப்பி வைக்கறேன், இங்க என்கிட்ட பிராக்டீஸ் பண்ற ஸ்டூடண்ட்ஸ் யாரையாவது தான் அனுப்புவேன்...''

''சரி சார்... வேறு ஏதாவது முக்கிய விஷயமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை... போன முறை போன் பண்ணப்போ மிஸ்டர் ஸ்ரீனிவாசன் பத்தி எதுவுமே கேட்காம விட்டுட்டேன். அவர் நல்லபடியா புறப்பட்டுப் போயிட்டாரா?''



''இந்த நிமிஷம் அவர் டெல்லியை நெருங்கியிருப்பார். போற அவசரத்துல அவர் பூஜை செய்யற மூங்கில் பெட்டியை சாமியோட இங்க விட்டுட்டுப் போயிட்டார். இப்ப அதுதான் சிக்கல்...''

''அப்படியா... அந்தப் பெட்டிக்காகவும் தினசரி பூஜைக் காகவும் தானே அவர் என் உதவி, உன் உதவின்னு எல்லார் உதவியையுமே கேட்டார். இப்ப அதை எப்படி மறந்துட்டுப் போனார்...?

''மறக்கலை சார்... பெட்டி மாறிப் போச்சு...''

''எப்படிப்பா... அவர் உயிரையே விட்ருவாரே.''

''அதுக்கு நான் என்ன சார் பண்ண முடியும்?''

''இல்ல கணேஷ், அது சாதாரண பெட்டி இல்ல... அவரோட ஆத்மா அது. நீ அதைப் பத்திரமா வெச்சுக்கோ. அவர் கேட்டா பத்திரமா இருக்கறதா சொல்.''

''சொல்றேன் சார்...''

- மறுமுனையில் ஆடிட்டர் தொடர்பைத் துண்டித்துக் கொண்டுவிட, அவன் காதுக்குள்ளும் அமைதி ஏற்பட்டது.

ஆனால் கணேஷ் மனத்துக்குள் பூச்சி பறக்க ஆரம்பித்தது. அந்த சமயம் ஆட்டோவும் வாசலில் வந்து வாசலில் நின்றது. கணேஷ், அனு ராதாவுடன் டாக்டரைப் பார்க்க புறப்பட்டான்.

நல்ல மாலை நேரம்!

சூரியன் மேற்கில் புதைந்து கொண்டிருந்தான். ஹரித்வாரத்து கங்கைக் கரையில் நின்று பார்க்க மிகப் பரவசமாக இருந்தது. தொட்டுத் தொட்டு கணவனும் மனைவியும் பத்ரி வரை எப்படியோ வந்து விட்டனர்... கிருஷ்ணமூர்த்தி ஐயர் அங்கும் ஒரு ஆஸ்ரமத்தில் தங்கிட கடிதம் கொடுத்திருந்தார்.

அதன் உதவியோடு ஆஸ்ரம அறையில் மூட்டை முடிச்சுக்களை வைத்தவர்கள் அடுத்த நொடியே கங்கை நீராடலுக்காக ஆற்றங்கரைக்கு வந்து விட்டனர்.

திபுதிபுவென்று நீலத்தாரை நீர்!

சீனு கைகளைக் கூப்பிக்கொண்டார்... பரவசத்தோடு ரசித்தார்... அப்படியே தம்பதி சமோதராக ஓடும் ஆற்றுக்குள் மூழ்கி எழுந்தார்... சில நிமிட காலம் தான்.

''வா ராஜம்... சீக்கிரமா போய் இன்னிக்கு நித்யப்படி திருவாராதனத்தை முடிப்போம். காலம்பர பண்றதுதான் சிலாக்கியம். சாயந்தரம் பண்றது வழக்கமில்லை. ஆனா பயணத்துல இருக்கற நான் அதைப் பார்க்க முடியுமா? அந்தக் கண்ணனும் அதைத் தப்பா எடுத்துக்க மாட்டான்...'' - என்று பலமுறை சொன்னதையே அவளிடம் சொல்லிக்கொண்டு படுவேகமாக நடந்தார். ஆஸ்ரமத்துக்குள் நுழையும்போதும் சரியான வேகம்.

''கண்ணா நீ கொடுத்து வெச்சவன்... நேத்து காலம்பற காசில பூஜித்தேன். இன்னிக்கு ஹரித்வார்ல... குணசீலத்தைத் தாண்டாத உனக்கு எத்தனை எத்தனை ஊர்ல பூஜை...'' - என்றபடியே மூங்கில் பெட்டியை எடுத்து, பயணத்தில் அது திறந்துகொண்டு விடாதபடி கட்டிய துண்டை அவிழ்த்தார். அப்படியே மேல் மூடியைத் திறந்தவருக்கு பக்கென்றது. உள்ளே சில ஆப்பிள் பழங்கள்! கணேஷ் கூடையோடு வரும்போது வாங்கிப் போட்டவை.

''ராஜம்ம்ம்...!'' - என்று அலறியவருக்கு அப்படியே வியர்த்துக் கொட்டிட மார்பிலும் இலேசாய் வலி...

★

# 21

*'தர்மத்தையே தர்மம்*
*செய்தவன் கர்ணன்; அதனால்*
*அவன் கர்மத்தையெல்லாம்*
*சீர்செய்தவன் இந்தக் கண்ணன்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

சீனுவின் நிலையைப் பார்த்து ராஜம் அப்படியே விக்கித்துப் போய்விட்டாள். அப்படியே குனிந்து அமர்ந்து அவரை மடியில் தாங்கிக் கொண்டாள். அவரோ முகத்தைக் கோணிக் கொண்டு நெஞ்சை வலிப்பதைக் குறிப்பால் உணர்த்தினார்.

''ஐய்யோ என்னன்னா இது... இருங்கோ யாரையாவது கூட்டிண்டு வரேன்... எனக்கு ரொம்ப பயமா இருக்கு...'' என்று அவரை அப்படியே படுக்க வைத்துவிட்டு தங்கியிருந்த அந்த ஆஸ்ரம அறையை விட்டு வெளியில் வந்தாள். அவள் வந்தவிதம், கலங்கிப் போன அந்த முகம் அங்கு இருப்பவர்களுக்கு ஏதோ பிரச்னை என்பதை உணர்த்தி விட்டது.

தமிழ்நாட்டுக்காரர்கள் வந்தால் தங்குவதற்கென்றே உள்ள ஆஸ்ரமம் அது. எனவே பாஷை ஒரு பிரச்னையாக இல்லை. எல்லோருமே உதவிக்கு ஓடி வந்தனர். அப்படி வந்தவர்களில் ஜெகன்னாத் என்கிற ஒரு டாக்டரும் இருந்ததுதான் அதிசயம்.

''சிம்டம்ஸை பார்த்தா இது ஒருவித மைல்ட் அட்டாக் மாதிரி தெரியுது...'' என்றவர், சீனுவைக் காற்றாட படுக்க வைத்துவிட்டு டாக்சி ஒன்றுக்குச் சொல்ல ஓடினார். அதிகபட்சமாக ஐந்தாவது நிமிடமே சீனுவும்

ராஜமும் காரில் அடங்கிவிட, அதுவும் ஆஸ்பத்திரி நோக்கி ஓட ஆரம்பித்தது. கூடவே அந்த டாக்டர்.

காரில் சீனு பேச முயற்சித்தார்.

''ரா... ராஜம்... பெட்டி மாறிடுத்து! நர்மதைக் கரைல அந்த சதுர்யாசி சொன்ன மாதிரியே என் கண்ணன் குதிச்சு ஓடிட்டான். நிச்சயமா காசியில தான் இருக்கணும் அந்தப் பெட்டி... கணேஷுக்கு போன் போடு. கண்ணனைப் பத்தி முதல்ல விசாரி...'' என்று சீனு திக்கித் திக்கிப் பேசியதைக் கேட்ட அருகில் இருந்த டாக்டர் படுவேகமாக ஹார்ட் அட்டாக் வந்த காரணத்தைப் புரிந்து கொண்டுவிட்டார்.

''என்ன, எதையாவது மிஸ் பண்ணிட்ட அதிர்ச்சியா? டோன்ட் ஒர்ரி. நீங்க மிஸ் பண்ணினது எதுவா இருந்தாலும் திரும்பக் கிடைக்கும். இந்த நேரத்துல மனசைக் கொதிக்க விடாதீங்க. பி.பி. எகிறினா ஹார்ட்டுக்குத்தான் டரபுள்... இதோ என்கிட்ட செல்போன் இருக்கு. நம்பர் சொல்லுங்க. நான் லைன் போட்டுத் தரேன். இங்கயே இப்பவே அந்தப் பெட்டி பத்ரமா இருக்கறத நீங்க ஊர்ஜிதப்படுத்திக்கலாம்...'' என்ற அந்த டாக்டரிடம் சரியான வேகம். செல்போன் பட்டன்கள் மேல் விரலை நிறுத்திக்கொண்டு முகத்தைப் பார்த்தார். சீனு சிரமப்பட்டு வேட்டியின் இடுப்பு மடிப்பில் இருந்து பர்ஸை எடுத்து அதில் இருந்த கணேஷின் கார்டை எடுத்து நடுங்கியபடி நீட்ட, அடுத்த முப்பதாவது நொடி கணேஷ் 'ஹலோ' சொன்னான்.

''அம்பி கணேசா... பெட்டி மாறிடுத்துப்பா...'' - ராஜம்தான் பேசினாள்.

''ஆமாம் மாமி... நான் நேத்தே பார்த்துட்டேன்... கவலைப்படாதீங்க பத்ரமா வெச்சிருக்கேன்...''

''ஏன்னா... பெட்டி பத்ரமா கணேஷ்கிட்டதான் இருக்காம்...'' - ராஜம் சீனுவிடம் சொல்லிவிட்டு மீண்டும் பேசினாள்.



''சரி... கணேசா! இங்க அவருக்கு பெட்டி மாறின விஷயம் தெரிய வந்த நொடி நெஞ்சு வலி வந்துடுத்து. இப்ப ஆஸ்பத்திரிக்குப் போய்ண்டுருக்கோம். அங்க எங்களுக்கு நீ கிடைச்ச மாதிரி, இங்க ஒரு டாக்டரை அந்தப் பெருமாள் அனுப்பி வெச்சிருக்கார்... அவருக்கு எதுவும் ஆயிடக் கூடாதுன்னு துடிக்கறது என் மனசு. அந்தப் பெட்டி பத்ரம். அதை சாதாரணமா நினைச்சு தூக்கி பரண்ல கிரண்ல போட்டுடாதே...'' அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே லைன் கட்டாகி செல் அமைதியானது. அதை உதறி உதறி 'ஹலோ' சொல்லி காதில் வைத்துப் பார்த்தாள் ராஜம்.

''இல்ல... இந்த ஏரியாவுல சிக்னல் கிடைக்கல. விடுங்கோ... ஹாஸ்பிடல் போன பிறகு அங்க இருந்து பேசிக்கலாம். டோண்ட் ஒர்ரி'' என்றார் டாக்டர்.

''ராஜம்... அது பத்ரமா இருக்கறதவிட முக்கியம் பூஜை. ஆனா அந்த கணேஷ் ஒரு நாத்திகனாச்சே... இப்படி ஆயிடுத்தேடி...'' என்று கடுமையாக சீனு உணர்ச்சிவயப்பட, முகம் உடனேயே வலியோடு கோணத் தொடங்கியது.

''நோ சார்... இப்படி நீங்க உணர்ச்சி வசப்படறது ரொம்பத் தப்பு...'' என்ற டாக்டர், சற்றுக் குனிந்து வெளியே பார்த்தார். ஹாஸ்பிடல் முகப்பு தெரிந்தது. சீனு உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

செல்போனை மார்பு மேல் வைத்துக் கொண்டே கண்களை மூடியிருந்தான் கணேஷ். அவன் ராஜத்துடன் பேசியதைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தாள் அனுராதா. பாதியில் பேச்சு கட் ஆகவும் அவளிடமும் தவிப்பு.

''என்ன கணேஷ், பெட்டி விஷயமா தானே அந்த அம்மா பேசினாங்க...''

''ஆமாம். நான் கூடப் பெட்டியைத் தொலைச்சது அவருக்குத் தெரிய வந்தா ஹார்ட் அட்டாக்கே வந்துடும்னு

சும்மா பேச்சுக்குத்தான் சொன்னேன்... ஆனா அவருக்கு நிஜமாவே வந்திருச்சுபோல...''

''கணேஷ்... அவங்க பேசின நம்பருக்கு ட்ரை பண்ணிப் பாருங்களேன்...'' அனுராதா துரிதப்படுத்தினாள். கணேஷும் ட்ரை பண்ணினான். டாக்டர் அகப்பட்டுவிட்டார்.

''கணேஷ் ஃப்ரம் வாரணாசி...''

''ஓ... தட் யங்மேன்! மிஸ்டர் சீனு தானே உங்களுக்கு வேணும்?''

''யெஸ் சார்... நீங்கதான் அவருக்கு ஹெல்ப் பண்ணிக்கிட்டிருக்கற டாக்டரா?''

''எக்ஸாக்ட்லி. அவர் இப்ப இன்டென்சிவ் கேர்லதான் இருக்கார். கப்புள் ஆஃப் அவர்ஸ் ஆகும் அவரோட ரெகவரி பற்றித் தெரிய... ஜஸ்ட் இப்பத் தான் அந்த மூங்கில் பெட்டி பற்றி மிஸஸ் சீனு என்கிட்ட சொல்லிண்டிருந்தாங்க. இன்ஃபாக்ட் இன்னிக்குப் பூஜை செய்ய முடியாதபடி ஆயிடுச்சேங்கறதுதான் மிஸ்டர் சீனுவோட அட்டாக்குக்கு மேஜர் காரணம்.

நான் கூட அவர்கிட்ட சொன்னேன். 'உங்க கண்ணனுக்குக் கட்டாயம் இன்னிக்குப் பூஜை நடக்கும் கலங்காதீங்க'ன்னு, 'இல்ல... அந்தக் கணேஷ் ஒரு நாத்திகன். பூஜைன்னாலே பெட்டியைத் தூக்கி கங்கைல வீசி எறிஞ்சிடுவான்'னு ரொம்பவே டெம்ப்ட் ஆனார் மிஸ்டர் சீனு. ஆனா நான் அப்படி நினைக்கல.

'மிக அதிகபட்ச மனிதாபிமானம், கொஞ்சமும் ஏமாந்துடக் கூடாதுங்கற மிதமிஞ்சின எச்சரிக்கை... இதெல்லாம் தான் நாத்திக உணர்ச்சியா மாறுது... வாஸ்தவத்துல ஒரு நாத்திகன் தான் பெரிய பரோபகாரி. மாறுபட்ட கருத்துக்கும் சரிசமமான மதிப்பும் மரியாதையும் கொடுக்கறவன். அதனால உங்க சார்பா அந்தக் கணேஷே பூஜை செய்வார். தைரியமா இருங்கோ'ன்னு சொன்னேன்.



அவருக்கு இப்ப ட்ரீட்மெண்ட் கொடுத்துக்கிட்டு இருக்கோம். பட் இந்த மருந்து அவரை பெருசா காப்பாத்தாது. நீங்க பூஜை செய்தீங்க, கண்ணனுக்கு இன்னிக்குப் பூஜை தொடர்ந்ததுங்கற தகவல் அவர் காதுல விழறதுலதான் அவரது ரெகவரியே இருக்கு.

ஐ மீன்... ஒரு உயிரைக் காப்பாத்த நீங்க உங்க தனிப்பட்ட நம்பிக்கைகளை மூட்டை கட்டி வெச்சிட்டு பூஜை செய்வீங்கன்னு சொல்லியிருக்கேன். செய்வீங்கதானே?''

- டாக்டர் ஜெகன்னாத் வெகு அழகாய்ப் பேசியவராக கேட்ட அந்தக் கேள்வி கணேஷை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. முதல் முறையாக 'நடப்பது எதுவும் தற்செயல் சம்பவம் இல்லை. ஒரு திட்டமிட்ட செயல்தானோ என்பது போன்ற ஒரு எண்ணம்! என்ன பதில் சொல்வது என்பது தெரியாதபடி ஒருவித அமைதிக்குள் புதைந்து விட்டவனை, திரும்பவும் தனது குரலால் ஒரு உலுக்கு உலுக்கத் தொடங்கினார் அந்த டாக்டர்.

''ப்ளீஸ் மிஸ்டர் கணேஷ். ஒரு பத்து நிமிஷம் அந்தக் கண்ணனுக்கு ஏதாவது நைவேத்யம் பண்ணி ஒரு கற்பூர ஆரத்தி காமிச்சிடுங்க. முடிஞ்சா ஸ்லோகம் சொல்லுங்க...''

''சார்...''

''என்ன மிஸ்டர் கணேஷ்... இட்ஸ் ஓ.கே. நீங்க எதுக்கு டெலி கேட்டா ஃபீல் பண்ணிக்கிட்டு... நீங்க பூஜை பண்ணிட்டதா நான் ஒரு பொய்ய சொல்லி முதல்ல அவங்கள காப்பாத்தற வழியைப் பாக்கறேன்...''

''இல்ல சார்... பொய் சொல்லாதீங்க. நீங்க சொன்ன மாதிரி... எனக்காக இல்ல அவருக்காக நான் பூஜை செய்யறேன். அவர் செய்தப்போ கவனிச்சேன். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆச்சு. அதைவிட கூடுதல் காலம் எனக்கு ஆகும்னு நினைக்கறேன்.

பரவால்ல! ஒரு டாக்டரா நீங்க சொல்றதுலயும் சில நியாயங்கள் இருக்கு. நான் பூஜை பண்றேன் டாக்டர்... பூஜை பண்றேன். முடிஞ்சா நான் பண்ணும் போது போன் பண்ணுங்க. நான் மந்திரம் சொல்றது அவர் காதுல விழட்டும்...''

- கணேஷ் சொன்னதைக் கேட்டு அனுராதாவுக்கு ஒரே ஆச்சரியம்.

''கணேஷ்... நீங்க பூஜை பண்ணப் போறீங்களா வாவ்! எனக்கென்னவோ எதுக்காக இல்லாட்டாலும் நீங்க பண்ற பூஜைங்கறதுக்காகவே அதுல மயங்கி, அந்த கண்ணன் நிஜமாவே வரப் போறார் பாருங்க...'' அனுராதா பரவசப்பட்டாள்.

அதன்பின் கணேஷ் எதுவும் பேசவில்லை. கெந்திக் கெந்தி நடந்து சென்று குளித்துவிட்டு வந்தவன், ஒரு வேட்டியைக் கட்டிக் கொண்டான். அப்படியே பெட்டியைத் திறந்து வைத்து அதன்முன் அ;கல் விளக்கு இரண்டை தேடிக் கண்டு பிடித்து வந்து ஏற்றினான். பின் அனுராதாவிடம் பூக்கள் வாங்கிவரச் சொல்லி, அதில் ஒரு சரத்தை கண்ணன் மேல் சாற்றியவன், உதிரிப் பூக்களைக் கையில் வைத்துக்கொண்டு மௌனமாகத் துதிக்க ஆரம்பித்து முதல் பூவை கண்ணன்மேல் போட்டவன், ''ஓம் கிருஷ்ணாயநம...'' என்றான். பின் 'புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே... அந்த புருஷோத்தமன் புகழ் பாடுங்களேன்...' என்று கண்ணதாசனின் டி.எம்.எஸ். பாடிய பாடலைத் தான் கேட்ட விதத்தில் அதே ராகத்தில் பாடினான். நல்ல குரல் வளம்... எனவே துளியும் பிசிறு தட்டவில்லை. அனுராதா பார்த்துக்கொண்டே இருந்தாள். அறையில் வாழைப்பழம் இருந்தது. அதுதான் நிவேதனப் பொருள்! நல்லவேளை ஊதுபத்தியும் இருந்தது. தூப தீபம் காட்டியவன், செல்போனில் நம்பர் போட்டு டாக்டரைப் பிடித்தவனாக, ''டாக்டர் சார், நான் இப்ப பூஜை செய்து கொண்டிருக்கேன். மணி அடிக்கப் போறேன். அந்த சீனிவாசன் சார் கேட்கற மாதிரி செய்யுங்க...'' என்று மணியையும் அடித்து முடித்தான். அந்த அதிசயத்தைக் காண அந்த அறையின் ஜன்னல் பக்கமாக



கிளிகள் வந்து அமர்ந்திருந்ததுதான் ஆச்சரியம்... மணி சப்தம் முடிந்து கற்பூர ஆரத்தியும் காட்டி முடித்தான்.

ஜன்னல் பக்கமாக இப்போது கிளிகளுடன் வேறு பறவைகளும் தெரிந்தன. எங்கிருந்தோ ஒரு வாசம் வேறு மிதந்து வரத் தொடங்கியது. வெளியிலும் எங்கிருந்தோ பெரிதாக மணி சப்தம் கேட்கத் தொடங்கியது. அதே சமயம் வாசற்புரம் நெற்றியில் கோபிச் சந்தனத்துடன் ஒருவன்!

## 22

*'என் நாமம் மந்திரம்*
*என் பாதம் சேர்க்கும்*
*என் கிருஷ்ண தந்திரம்*
*பாதகம் தீர்க்கும்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

அந்த அறையின் வாசலில் தெரிந்த உருவமும், அதன் கம்பீரமும் முதலில் அனுராதாவைத் தான் ஒரு புரட்டு புரட்டியது. 'எது அழகு?' என்று ஒரு வாசகர் அவன் பணியாற்றும் பத்திரிகையில் கேள்வி பதில் பகுதியில் கேட்டிருந்தார். அது அவரவர்கள் ரசனையைப் பொருத்தது என்று தான் அப்போது பதில் சொல்லப்பட்டிருந்தது. அந்தப் பதில் இப்போது அனுராதாவின் மனத்தில் ஞாபகத்தில் வந்து, சற்றுமுன் வந்தவர் எதிரில் நொறுங்கிப் போனது போலத்தான் உணர்ந்தாள். கமலக்கண்ணன் என்கிற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறாள். இப்போது அதன் பொழிப்புரையாக நிற்பவன் கண்களைப் பார்க்கிறாள். ஒரு வித பிரமிப்பு. ஒரு வித ஸ்தம்பிப்பு. ஒருவித மௌனம்... இல்லையில்லை நிசப்தம். மௌனம் என்பது

மனத்துக்குள் பேசிக் கொள்வது. நிசப்தம் என்பது அதுகூட இல்லாதது...

அவனோ சிரித்தான்.

''இதுதானே கணேஷ் இருக்கற இடம்?'' என்று மென் குரலில் கேட்டான். அட, அந்தக் குரல்... அது ஒலித்தவிதம் கூடவா அதற்குமுன் கேட்டிராத ஒன்றாக இருக்க வேண்டும்? அனுராதா அதிலும் மயங்கிக் கரைந்தாள்.

''மேடம்...''

''உம்.''

''மிஸ்டர் கணேஷ்.''

''உள்ளதான் இருக்கார்.... நீங்க?''

''நான் கண்ணன்...!'' அவன் தன் பெயரைத்தான் சொன்னான். அவளுக்கோ நடு முதுகில் ஒரு மின்னல் மையமிட்டு நெளிவெடுத்த மாதிரி இருந்தது.

அவன் கைகளில் ஒரு துணிப்பை! மிக மிக நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் யாரோ தயாரித்தது போல இருந்தது. அதில் ஒரே ஒரு மயிலின் தோகை பொறிக்கப்பட்டிருந்தது. பையின் மறுபுறத்தில் ஆசீர்வதிப்பது போல ஒரு கரம். அந்தக் கரத்தின் உள் பாகத்தில் ஓம் என்கிற எழுத்துபோல ரேகை ஓட்டம்...!

அவன் சற்றுக் குனிந்து உள்ளே நுழைந்து வந்தான்.

''சரியான நேரத்துக்குத் தான் வந்திருக்கேன் போல இருக்கு...'' என்றான்.

''நீ... நீ... நீங்க?'' - ஏனோ கணேஷிடம் திணறல்.

''நான் கண்ணன்!'' - திரும்பவும் முன் சொன்ன அதே பதில்.

''எந்தக் கண்ணன்?''

''அட.... என்னை நீங்க எதிர்பார்க்கலையா?''



''உங்களை நான் எதுக்கு எதிர்பார்க்கணும்...?''

''சரிதான். நான் இப்ப உங்களுக்கு உதவி செய்ய வந்துருக்கேன். உங்களுக்கு என்ன உங்களுக்கு... உனக்கு... என்ன உனக்கு இருபத்தி ஏழு, இருபத்தி எட்டு வயசு இருக்குமா? நான் பெரியவன்...''

- அவன் பெரியவன் என்று தன்னைக் கையைக்காட்டி சொல்லும் விதமே அலாதியாக இருந்தது. ''ஓ... ஆடிட்டர் அனுப்பறேன்னு சொன்ன நபரா நீ... நீங்க...'' - கணேஷால் ஏனோ அவனை ஒருமையில் விளிக்க முடியவில்லை. அவனது கம்பீரம் கணேஷ் நாவில் மரியாதையாக மாறிவிட்டது.

''ஆடிட்டர்னா கணக்கா இருக்கறவர் தானே?'' அவன் கேள்வியில் ஒரு உட்பொறி. கணேஷ் பதிலுக்கு வெறித்தான்.

''அப்ப சரிதான்... உனக்கும் கணக்கு தானே எல்லாம்... ஐ திங் காலேஜிலேயே நீ ஒரு பேச்சுப் போட்டியில கணக்குதான் கடவுள்னு பேசியிருக்கேல்ல?'' அந்தக் கேள்வி கணேஷை நெம்பி நிமிர்த்தியது.

''அது எப்படி உங்களுக்குத் தெரியும்?''

''அதுமட்டுமா?'' பதிலுக்கு அவன் கேட்டவிதம், அப்படியே அந்த துணிப்பையை ஒரு ஓரமாக வைத்த விதம் மெல்ல கணேஷின் காலடியில் அமர்ந்து அதைப் பார்த்த விதம் என்று; எல்லாவற்றிலும் ஒரு லயம்.

''ஆமா சுளுக்கா... இல்லை முறிவா?'' - கேட்டபடியே கால்மேல் அவன் கைவைக்க கணேஷுக்குள் ஒரு புது பரவசம் தள்ளு தள்ளு என்று ஒரு கூட்டத்தை விலக்கிக் கொண்டு வேகமாக உள் புகுந்த மாதிரி இருந்தது.

''எதுவா இருந்தாலும் இனி சரியாயிடும். கணக்குத் தீர்க்க ஒரு கணக்கர் அனுப்பில்ல வந்திருக்கேன்.'' என்று அப்படியே கழுத்தை வளைத்து அனுராதாவைப் பார்த்து கண்களைச் சிமிட்டி ஒரு சிரிப்பு சிரித்தான்.

ஜன்னல் குருவிகளும் மற்ற பட்சிகளும் ஒரேயடியாக சப்த மிட்டன. அனுராதா அந்த நிலையில் அவற்றை இடைஞ்சலாகக் கருதி ''ஸ்சூ...'' என்று கையை ஓங்கிக்கொண்டு ஜன்னல் அருகே சென்றாள். உடனே சிதறிப் பறந்தன. அப்படியே திரும்பி வந்தாள். திரும்பவும் அவை படபடவென்று ஜன்னலில் அடைந்தன. திரும்பவும் அந்த கோலாகல குதூகலச் சப்தம். அந்தக் கண்ணனும் உடனே திரும்பிப் பார்த்தான். திரும்பவும் விரட்டப்போன அனுராதாவைப் பார்வையாலேயே தடுத்தவன், மெல்ல ஒரு தளிர்நடை நடந்து ஜன்னல் அருகே சென்று தன் வலக்கையை மெல்ல நீட்டினான். அப்படியே உதட்டைக் குவித்து விசிலடித்தான். அது கிட்டத்தட்ட குழலோசை போலவே இருந்தது. நீட்டிய அவன் கரத்தின் மேல் எல்லா பட்சிகளும் வந்து அமர்ந்து கொண்டன. ஒரு கிளி அவன் தலையை என்னவோ தனது கூடு போலக் கருதி அமர்ந்து கொண்டது.

மெல்லத் திரும்பியவன் கண்களைச் சுழற்றி பட்சி களைப் பார்த்தபடியே சிரித்தான். அப்படியே ''நான் என்ன மரமா... என் தலை என்ன உங்களுக்கெல்லாம் கூடா... எப்படா வருவேன்னு காத்துக்கிட்டிருந்தீங்களோ?'' - என்று நெடு நாள் பழகினவன்போல அவற்றிடம் பேசினான். அவைகள் எதனாலோ அமைதியாகிவிட்டன.

''என்ன... சத்தமெல்லாம் அடங்கிப் போச்சு? அவ்வளவு தானா? என்கிட்ட வந்த உடனே உங்களுக்கும் அமைதி ஏற்பட்டாச்சா... என்ன சுக மகரிஷி...? என்று தலைமேல் உள்ள கிளியைப் பிடித்து அப்படியே கண்முன் வைத்துக் கொண்டு பார்த்துச் சிரித்தான்.

அனுராதாவுக்கும் சரி, கணேஷுக்கும் சரி அந்தக் காட்சி, அந்தப் பேச்சு எல்லாமே புதிது. அனு சட்டென்று கேமராவை வேகமாகத் தேடி எடுத்து பட்சிகளோடு அவனைப் படம் எடுக்கத்



தயாரானாள். அவனும் சிரித்துக் கொண்டே போஸ் கொடுத்தான். தோள்மேல் இரு குருவி. சட்டைப் பாக்கெட்டில் சரிந்து விழுந்து விடுவதுபோல ஒரு குயில், மறு பக்கத் தோளில் ஒரு வாலாட்டி, அவன் கைகளில் ஒரு கிளி.

'க்ளிக்... க்ளிக்...' - என்று அவளிடம் நல்ல வேகம். கணேஷ் உடம்பை ஒரு சிலிர்ப்பு சிலிர்த்துக் கொண்டான். அவனும் ''சரி... சரி... என்மீது உட்கார்ந்தது போதும். இனி நீங்க மேல போகலாம்'' என்று ஜன்னல் அருகே சென்று ஒவ்வொன்றாக வீசி எறிய அவை படபடவென்று உச்சிவானம் நோக்கியே சென்றதுதான் விந்தை.

''போங்க... போங்க... ஆகாயம்தான் இனி உங்க உலகம்...'' என்றபடியே திரும்பியவன் முகத்தில் மீண்டும் ஒரு மாயச் சிரிப்பு.

''மிஸ்டர் கண்ணன்... உங்களை நான் என் ஆடிட்டர்கிட்ட பார்த்ததே இல்லையே...''

''அதனால?''

''இல்ல... அவர் என்ன சொல்லி அனுப்பினார்?''

''உன் வேலை எல்லாம் இனி என் வேலை. நீ ஓய்வெடுத்துக்கோ. எல்லா கணக்குகளையும் சரி பார்த்து கூட்ட வேண்டியதைக் கூட்டி, பெருக்க வேண்டியதைப் பெருக்கி, கழிக்க வேண்டியதைக் கழிச்சு, வகுக்க வேண்டியதை வகுத்துக் கொடுத்துட்டுப் போகத்தான் வந்துருக்கேன்...''

''அதுசரி, எப்படி இவ்வளவு சீக்கிரம் சென்னைல இருந்து வர முடிஞ்சுது...?''

''பறந்துதான்...''

''ஓ... ஃப்ளைட்லயா? அட ஆமாம்ல... ஆடிட்டர் எவ்வளவு வேகமா அனுப்ப முடியுமா அனுப்பறேன்னார். எனிவே தேங்க்யூ...''

''அட, எதுக்கு இந்த அவசரம். நான் என் வேலையை இன்னும் ஆரம்பிக்கவே இல்லையே...''

''ஆமா... இது என்ன துணிப்பை? இந்த பையோடயா ஃப்ளைட்ல?''

அந்தக் கேள்விக்கு அவன் பதில் கூறவில்லை. பதிலுக்கு ஒரு சிரிப்புதான். கணேஷும் அதை அதற்கு மேல் நோண்டவில்லை. அவன் உற்றுப் பார்த்த விதத்தில் மனதுக்குள் இனம் புரியாத மாற்றம்.

அப்போது கணேஷின் செல்போன் அவன் கவனத்தைத் தன் பக்கமாகத் திருப்பியது. எடுத்துப் பேசினான்.

''ஹலோ...''

''ஹரித்வார்ல இருந்து நான் டாக்டர் பேசறேன். அந்த பூஜையை முடிச்சுட்டீங்களா?''

''முடிச்சுட்டேன் டாக்டர் சார்... எனக்குத் தெரிஞ்ச விதத்துல செய்துருக்கேன். ஆனா மிஸ்டர் சீனு என்னென்னவோ மந்திரம் சொல்வார். ஸ்பூன்ல தண்ணி எடுத்துக் காட்டுவார். அப்புறம் கையை ஆட்டி ஆட்டி ஏதோ செய்வார். எனக்கு அதெல்லாம் தெரியாது. புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே பாட்டோட ராகம் எனக்கு ரொம்ப பிடிக்கும். அதைத்தான் நானும் பாடினேன்...''

''நோ பிராப்ளம்... நீங்க இவ்வளவு செய்ததே பெருசு. அந்தக் கண்ணனும் பக்தியைத்தான் பெருசா நினைக்கறவன். அதுக்கு உதாரணமா ஒரு கதையே உண்டு. பாமாவும் ருக்மணியும் கண்ணன்கிட்ட போட்டி போடுவாங்க. பாமா, தன் பக்திதான் பெருசுன்னு நினைப்பா. ஆனா ஒரே ஒரு துளசி இலையை வெச்சு ருக்மணி பாமாவை ஓவர்டேக் பண்ணிடுவா. இந்தக் கதை எனக்கு முழுசா தெரியல. நான் சொல்றது தப்பா கூட இருக்கலாம். ஆனா ஒண்ணு மட்டும் தெரியும். ஒரே ஒரு



துளசியைக் கிள்ளி 'ஓம் கிருஷ்ணாய நம'ன்னு சொல்லி போட்டா போதும், அந்த கிருஷ்ணன் அதுக்கு மகிழ்ந்து அனுக்ரகம் பண்றவன்... எனிவே, நாளைக்கும் திருவாராதனையை... ஐ மீன் பூஜையை மறந்துடாம பண்ணிடுங்க. இங்க நீங்க பேசறத ஸ்பீக்கர் போன்ல மிஸ்டர் சீனுவும் கேட்டுக்கிட்டிருக்கார். அவர் முகத்துல இப்பதான் நிம்மதி தெரியுது...'' டாக்டர் பேசியதைத் தொடர்ந்து கணேஷும் ''அப்பாடா... எப்படியோ அவருக்கு நல்லது நடந்தா சரி...'' - என்றான். அப்போது தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஒரு துளசி இலையை எடுத்தபடி இருந்தான் அங்கு வந்திருந்த அந்த கண்ணன்!

## 23

*'நான் உண்டென்றும் இல்லையென்றும்*
*சொல்லுவர்! உண்மைதான்...*
*நான் இரண்டுமானவன்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்.*

அந்தக் கண்ணன் தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து துளசியை எடுப்பதை அனுராதா கவனித்தாள். அவனும் அவளைப் பார்த்துச் சிரித்தபடியே அவள் அருகில் சென்று அந்தத் திருத்துளசி இலையை நீட்டினான்.

''இது...?''

''துளசி... இங்கே கணேஷ் துளசி பத்திபோன்ல பேசவும் என் பாக்கெட்ல கிடந்த இது ஞாபகம் வந்தது. மகாவிஷ்ணு பிரசாதம்... பிடி!''

அவன் சொல்லித் தந்த விதம் கணேஷை விருட்டென்று நிமிரச் செய்தது. போனில் அவன் ஒன்றும் துளசி பற்றிப்

பேசவில்லை. அந்தப் பக்கமாய் இருந்த டாக்டர்தான் ஒரு உதாரணத்துக்காக அதைப் பற்றிப் பேசியவர். அது எப்படி இவன் காதில் விழுந்திருக்க முடியும்?

''கணேஷ்... எவ்வளவு வேகமா நான் வரமுடியுமோ வந்துட்டேன்... இனி நான் எதுக்காக வந்தேனோ அந்த வேலைகளைப் பார்க்கணும். நீ நல்லா ஓய்வெடுத்துக்கலாம். நீ செய்ய நினைச்ச எல்லாக் காரியங்களையும் நான் செய்துடறேன். அதுதான் அந்த கிருஷ்ணமூர்த்தியோட உத்தரவாச்சே...'' - என்று அவன் சொல்லச் சொல்ல கணேஷுக்குக் கொஞ்சம் எரிச்சலாகவும் இருந்து.

''அனு... அந்த செல்போனை எடுத்துக் கொஞ்சம் ஆடிட்டர் நம்பர் போட்டுத் தாங்களேன்...''

''ஓ அவரோட பேசணுமா?''

''ஆமாம்... அவர் தன் ஸ்டூடண்டுல ஒருத்தனைத்தான் அனுப்பறேன்னார். இங்க இவரைப் பார்த்தா அவருக்கே குரு மாதிரி இருக்கு. இவரோட பேச்சும் போக்கும்...''

- கணேஷ் அந்தக் கண்ணன் காதிலும் விழும்படிதான் பேசினான்.

''ரொம்ப சரி அம்பி. நீ சொன்னது... அந்தக் கிருஷ்ணமூர்த்திக்கு இந்தக் கண்ணன் ஒரு குரு மாதிரிதான். ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது என்னைப் பார்க்கச்சே கண்ணா நீதான் எனக்கு எல்லாம்னு அந்தக் கிருஷ்ணமூர்த்தி சொல்லிடுவார். என்னைப் பார்க்கச்சேயெல்லாம் அவர் சொல்ற இன்னொரு விஷயம் என்ன தெரியுமா?''

கண்களைச் சிமிட்டிக்கொண்டு கண்ணன் கேட்டவிதமே அலாதியாக இருந்தது. அதில் மனமும் அப்படியே கரைந்து போயிற்று.

''கண்ணா... நீ சாதாரண ஆள் இல்லை.



உன் மந்திரம் அதாவது பேரே ஒரு மந்திரம். நீயோ ஒரு யந்திரம்! இருந்தாலும் உன் தந்திரங்கள்தான் எனக்குப் பிடிக்கும். மொத்தத்துல நீ ஒரு 'யந்த்ர மந்த்ர தந்த்ரன்'னு வேடிக்கையா சொல்வார்...''

''மந்திரம்கறது மனசுல திறம் இல்லாதவனுக்குன்னு உள்ள பலவீனமான ஒரு விஷயம். யந்திரம்கறது விஞ்ஞானத்துல பெரிய விஷயம். ஆனா ஆன்மிகத்துல அது ஒரு பக்கா ஃப்ராட்! அடுத்து தந்திரம்... அதுதான் இப்ப ஆன்மிக உலகம் முழுக்க நிரம்பிக் கிடக்கு. கடவுளின் பேரால எப்படி எல்லாம் ஏமாற்ற முடியுமோ அது நிறையவே நடக்குது. என்வரைல இந்த மூணுமே ஒரு மோசமான விஷயம்...''

''அப்ப என்னையும் ஒரு மோசமானவன்னு சொல்லாம சொல்றே... அப்படித் தானே...?'' - கண்ணன் அடுத்த நொடியே மடக்கி விட்டான். கணேஷ் அதற்கு மறுப்புக் கூறவில்லை. மௌனமாக அப்படித் தான் என்கிற மாதிரி பார்த்தான். அப்படிப் பார்க்கும்போதே நாம் இவன் வரையில் சற்று அவசரப் படுகிறோமோ என்று பயப்படுகிற மாதிரியும் இருந்தது. அனுராதா கணேஷின் கருத்துக்கு அந்தக் கண்ணன் என்ன மாதிரி பதில் கூறப் போகிறான் என்கிற மாதிரி பார்த்தாள்.

''என்னம்மா... சாரும் நானும் நேர் எதிர் திசைல இருக்கோமா?''

''அ... ஆமாம்...'' - அவளிடம் ஒரு சன்னமான திணறல்.

''சும்மா தைரியமா சொல். ஒரு பத்திரிகையாளப் பெண்மணி நீ, தன்னந்தனியா தமிழ்நாட்டுல இருந்து வந்துருக்கே... இங்க தங்க இடம் கிடைக்காதப்போ புத்திசாலித் தனமா இந்தக் கணேஷைத் தேடிக் கண்டு பிடிச்சு இங்கே வந்து தங்கவும் தெரிஞ்சிருக்கு... எவ்வளவு தைரியம் இருக்கணும் உனக்கு...?''

– கண்ணன் திருப்பிக் கேட்ட தொனி பாராட்டா இல்லை குட்டா என்று உணர முடியாத விதத்தில் இருந்தது.

''மிஸ்டர் கணேஷ் கேட்டதுலேயும் நிறைய மீனிங் இருக்கறதா நான் நினைக்கறேன்... அவர் நம்ம ஆன்மிகத்துல உள்ள குற்றம் குறைகளைக் குறிப்பிடறார். அதை ஒத்துக்கத்தானே வேணும்?''

''அப்ப நிறைகள் என்னன்னு இவருக்குத் தெரியுமா?''

''ஒரு நிறையும் கிடையாது. கடவுள் விஷயம் என்வரைல ஒரு கற்பனை. மனுஷனைக் கட்டிப் போட சில சுயநலமுள்ளவங்க செய்த தந்திரம். இல்லே நல்லது செய்யறதா நினைச்சு செய்யப்பட்ட ஒரு தப்பான விஷயம்.''

''ஓஹோ...''

''வேண்டாம் மிஸ்டர் கண்ணன்... இந்தக் கடவுள் சர்ச்சை வேண்டாம். அதுவும் என் கிட்ட வேண்டவே வேண்டாம். எந்தக் கடவுளும் நேர்ல வரப் போறதில்ல. அதனால நம்ம குழப்பங்களும் தீரப் போறதில்ல. இல்லாத ஒண்ணைப் பத்தி எவ்வளவு பேசினாலும் என்ன புண்ணியம்? அதனால அந்தப் பேச்சை விடுங்க. பொழப்பக் கவனிப்போம்.''

''அதுவும் சரிதான்... இவ்வளவு தீர்மானமா நீ நினைக்கும் போது கடவுள் எதிரிலேயே இருந்தாலும் அவரை நம்பவா போறே... விட்டுத் தள்ளு... நீ சொன்ன மாதிரி பொழப்பக் கவனிப்போம்.''

''நான் இப்ப என்ன செய்யணும்?''

– கண்ணனும் சட்டென்று ஒரு பெரிய விவாதத்துக்குரிய விஷயத்தை அப்படியே ஓரம்கட்டி விட்டு கணேஷிடம் அப்படிக் கேட்டது அனுராதா வரையில் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

''உங்களுக்கு இந்தக் காசி புதுசாச்சே... நான் எதைன்னு சொல்வேன்... மடத்து கணக்கு வழக்குகள் ஒரு பக்கம். புதுசா தீரஜ் குமார்னு ஒருத்தரைப் பார்க்க வேண்டியிருக்கு. ஆட்டோமொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் பிசினஸ் பண்றவராம். அவரோட மொத்த அக்கவுண்ட்ஸையும் அண்டர்டேக் பண்ணணும்... அதுக்காக போய்த்தான் நான் இப்ப இப்படிக் கால்ல அடிபட்டு நகர முடியாத நிலைல இருக்கேன்...''



''கவலைப்படாதே... காசி ஒண்ணும் எனக்குப் புதுசு இல்லை. இந்தப் பூமியில் எந்த இடமுமே எனக்குப் புதுசு கிடையாது... இப்பவே நான் போய் அந்த தீரஜ்குமாரைப் பார்த்துப் பேசிட்டு வரேன். நான் வேற என்ன பண்ணணும்?''

''இல்ல... முதல்ல இதை முடிச்சிட்டு வாங்க. அப்புறம் சொல்றேன்...''

''அப்ப சரி... நான் போய்ட்டு வரேன்!''

– கண்ணன் கடமையைச் செய்யத் தயாராகிவிட்டான். அவன் கொண்டு வந்திருந்த அந்தத் துணிப்பை அந்த அறையில் சுவரோரமாக கிடந்தது. அவன் தலை மறைந்த மறுநொடியே கணேஷ் பரபரப்புக்குத் தாவினான்.

''அனுராதா... அந்த செல்போனைக் கொடுங்க இப்படி'' – என்று கேட்டு வாங்கி எண்களைத் தட்டி காதருகே வைத்து வைத்து ஏமாந்தான்.

''யாருக்கு கணேஷ்... உங்க ஆடிட்டருக்கா?''

''ஆமாம்... வந்திருக்கற இந்த ஆளைப் பார்த்தா ஒரு சி.ஏ. ஸ்டூடண்ட் மாதிரியே தெரியலை. பேச்சும் தோரணையும் மட்டும் பெருசா இருக்கு. இப்ப கூட பாருங்க... அந்த தீரஜ்குமாரைப் பார்க்க அட்ரஸ் இல்லாமலே புறப்பட்டுப் போயிருக்கான். கொஞ்ச நேரத்துல திரும்பி வருவான் பாருங்க... அதான் ஆடிட்டர்கிட்டேயே கேட்ருவோம்னு பார்த்தா இப்பப் பார்த்து இந்த செல்லுக்கு லைனே கிடைக்க மாட்டேங்குது. ச்சே!''

''கணேஷ்... அந்த நபர்கிட்ட பறவைகள்லாம் ரொம்ப சகஜமா வந்து ஒட்டிக் கிட்டதைக் கவனிச்சீங்களா?''

''அதுக்கென்ன அனுராதா?''

''உங்களுக்கு அது ஆச்சரியமா இல்லை...?''

''கொஞ்சம் ஆச்சரியம்தான். அப்படியே நான் பேசாத துளசி பத்தி அந்த நபர் பேசினதும் கூட எனக்கு ஆச்சரியமாதான் இருக்கு... இன்ஃபாக்ட் உங்களைக் கூட நல்லாவே தெரிஞ்சிருக்கே...''

''ஏன்... உங்க ஆடிட்டரே என்னைப் பத்திச் சொல்லி அனுப்பியிருக்கலாம் இல்லையா?''

''ஜர்னலிஸ்ட்டுன்னு சொல்லியிருக்கலாம். தனியா வந்ததும், பாதுகாப்பான இடம் கிடைக்க சிரமப்பட்டதும் அவருக்குத் தெரியாதே...''

''ஆமாம்ல... அதே சமயம் அவர் கொஞ்சமும் தடுமாற்றமில்லாம பேசறதும் பார்க்கறதும் சம்திங் எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை...''

''போதும் அனுராதா... அந்தத் துணிப் பையை எடுங்க. எந்த ஆடிட்டர் இப்படித் துணிப்பையோட வருவான்... அதுவும் ஃப்ளைட்ல...''

- கணேஷ் முணுமுணுத்துக் கொள்ள அனுராதா அந்தப் பையை எடுத்து வந்தாள். மெத்து மெத்தென்று இருந்த அதனுள் கட்டுக்கட்டாய் சில ஏடுகளும் இருக்கிறார் போலத் தோன்றியது. கணேஷ் ஜிப்பைத் திறக்க முயன்றான். ஆனால் சிக்கிக் கொண்டது போல அது திறக்க மறுத்தது. எவ்வளவு முயன்றும் முடியவில்லை.

''கணேஷ்... இது அநாகரிகம்... எதுக்கு அவர் பையைத் திறக்கறீங்க...''



'ஐ நோ அனுராதா... எனக்குள்ள இப்ப நிறைய சந்தேகங்கள். அதை எப்படித் தீர்த்துக்கறதுன்னு தான் தெரியல.'

''அவர்கிட்டேயே கேளுங்களேன்...'' அவனும் அரைமனதாகப் பையைத் திறக்க மாட்டாதபடி அப்படியே பக்கமாக சுவர் ஓரமாக வைத்தான், பெருமூச்சு விட்டான்.

ஆபீசிலிருந்து சம்பத் காரில் வந்து இறங்கியபோது ஆச்சரியம் காத்திருந்தது. வீட்டு வாசலில் இருந்து உள் வரை வரிசையாகத் தீபங்கள்! அன்று கார்த்திகை தீபம்... அடுத்தகட்ட ஆச்சரியமாக பூஜை அறையில் சாரு ஸ்லோகம் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

சில நாட்களாகவே சாருவிடம் பெரிய அளவில் மாற்றம். ஆனால் சாருவின் இந்த மாற்றத்துக்குப் பின்னால் பெரிதாக ஏதோ இருப்பதாக அவன் மனது கணக்குப் போட்ட போது செல்போன் சிணுங்கியது.

''ஹலோ...''

''ஹலோ நாங்க கஸ்தூரிபா ஆஸ்ரமத்துல இருந்து பேசறோம். மிஸ்டர் அண்ட் மிஸஸ் சம்பத் வீடுதானே?'' ஒரு பெண் குரல் கேட்டது.

''எக்ஸாக்ட்லி... நான் சம்பத்தான் பேசறேன்...''

''சார் டாக்டர் தேவகி நாராயணன் எங்க ஆஸ்ரமத்தோட வெல் விஷர். எங்க ஆஸ்ரமத்துல அடைக்கலத்துல இருந்த ஒரு அனாதைப் பெண்ணுக்கு இன்னிக்கு ஆண் குழந்தை பிரசவமாச்சு. அந்தப் பெண் கொஞ்சம் மனநிலை சரியில்லாதவ...''

''மேடம்... இதை எதுக்கு இப்ப என்கிட்ட சொல்றீங்க...''

''காரணம் இருக்கு சார். அந்தப் பொண்ணு பிரசவத்துல செத்துப் போய்ட்டா. ஆனா குழந்தை ஆரோக்கியமா நல்லா இருக்கு. உங்க மனைவிக்குக் குழந்தை பிறக்க வழியில்லாததால இப்படிப்பட்ட குழந்தைகள் பிறக்கும்போது அதை நீங்க வளர்க்க

விரும்பலாம்கறது டாக்டரோட அபிப்ராயம். அவங்கதான் உங்க நம்பர் தந்தாங்க. விஷயத்தைச் சொல்லச் சொன்னாங்க.''

- சம்பத் செல்போனை அப்படியே முடக்கினான். இலேசாக நெஞ்சையடைத்தது. அதே சமயம் சாருவின் மாற்றத்துக்குக் காரணமும் பளிச்சென்று புரிந்து விட்டது.

திரும்பவும் தொலைபேசி அழைப்பு!

ஆனால் எழுந்து போய் ரிசீவரை எடுக்க முடியாதபடி ஒரு தடுமாற்றம் அவனிடம்..

பூஜித்துக் கொண்டிருந்த சாரு சப்தம் கேட்டு வந்தாள். சம்பத்தைப் பார்த்து வியந்தபடியே ரிசீவரை எடுத்து காதில் வைத்து 'ஹலோ' என்றாள். அடுத்த நொடியே அவள் முகத்தில் ஏராளமான அதிர்ச்சி!

## 24

*'என்னால் ஏதுமில்லை*
*என்றாலே நான் வருவேன்!*
*அதனால் தான் பாஞ்சாலி*
*அழைக்கும் வரை செல்லவில்லை...'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

தொலைபேசிச் செய்தி சாருவின் முகத்தில் அதிர்ச்சி அலைகளைப் பரப்புவதை சம்பத்தும் உணர்ந்தான்.

"யாரு... என்ன விஷயம்?" என்றபடியே ரிசீவரைப் பிடுங்கி காதில் வைத்தான்.

''சம்பா... அப்பாக்கு திடீர்னு நெஞ்சுவலி வந்து ஆஸ்பத்திரில அட்மிட் பண்ணியிருக்குடா...!''



''என்னம்மா சொல்றே?''

''நேத்து காலம்பற டெல்லி வந்து உடனேயே ஒரு டாக்சி பிடிச்சு நேரே ஹரித்வார் வந்துட்டோம். நேத்து சாயந்தரம் தான் இப்படி ஆச்சு...''

''அப்போ... இப்ப அங்கதான் ஆஸ்பத்திரில இருக்கேளா?''

''ஆமாம். பயப்படும்படியா ஏதுமில்லை. இருந்தாலும் நம்ம ஆத்துக் கண்ணனை வேற காசியில தொலைச்சுட்டோம். அதான் இவருக்கு நெஞ்சை அடைச்சுடுத்து...''

''ஐய்யோ என்னம்மா சொல்றே. எப்படி அந்தப் பெட்டி தொலைஞ்சது...?''

''தொ... தொலையலடா... நான் ஒருத்தி - அது மாறிடுத்து... இப்ப அது பத்ரமாத் இருக்கு. நீ உடனே கிளம்பி வரியா?''

''வரேம்மா... ஏன் உடனே போன் பண்ணலை?''

''பண்ண முடியலடா. சூழ்நிலை அப்படி லைனும் கிடைக்கல! எங்க நினைப்பெல்லாம் அந்த பெருமாள் பெட்டிமேலதான் இருந்தது. எப்படியோ அது பத்ரமா இருக்கு. நல்லவேளை அதுக்குப் பூஜையும் தவறலை. அந்த பெருமாள் இலேசுப்பட்டவர் இல்ல. அதுல இருக்கற குட்டிக் கண்ணன் ஒரு நாத்திகனையே பூஜை பண்ண வெச்சுட்டான்.''

''அது யார் நாத்திகன்...?''

''நேர்ல சொல்றேன்... உடனே கிளம்பி வா. சாருவையும் கூட்டிண்டு வா. உங்களுக்காக நாங்க வந்தாலும் நீங்களும் இங்க வரணும்னு விதி இருக்குடா. இல்லேன்னா இப்படி எல்லாம் நடக்குமா?''

''நிச்சயமா... இனி இவ பேச்சைக் கேட்டெல்லாம் நான் முடிவு எடுக்கப் போறதில்ல. இவ வந்தாலும் சரி,

வரலேன்னாலும் சரி. நான் கிளம்பி வரேன். அது மட்டும் இல்லைம்மா... இனி எனக்கு அந்தக் கண்ணன் தாம்மா குழந்தை...''

சம்பத் சற்றே வெடித்துச் சிதறிவிட்டான்.

அடுத்தடுத்து அவள் சொல்லச் சொல்ல மளமளவென்று பக்கத்தில் உள்ள பேட் ஒன்றில் முகவரியைக் குறித்துக் கொண்டான்.

''சரிம்மா... நான் இப்பவே டெல்லி ஃப்ளைட்டை பிடிச்சு சீக்கிரமா வந்து சேரப் பாக்கறேன். நான் இனி எல்லாத்தையும் பாத்துக்கறேன்.''

சம்பத்திடம் ஒரு வித உணர்ச்சிப் பிரவாகம். போனை வைத்தவன் அதன்பின் சாருவை சட்டையே செய்யவில்லை. அட்ரஸ் புக்கை எடுத்து டிராவல் ஏஜென்சி ஒன்றுக்கு போன் செய்து டெல்லி ஃப்ளைட் டைமிங்கைக் கேட்டுவிட்டு ''இம்மீடியட்டா ஒரு டிக்கெட் புக் பண்ணுங்க'' என்றான்.

''என்னா... நானும் வரேன் - என்ன விட்டுட்டேளே...'' என்று பாய்ச்சலோடு முன் வந்த சாருவை ஒரு அரைப் பார்வை பார்த்துவிட்டு அரைமனதாக ''இரண்டு டிக்கெட்'' என்றான். அவனது தயக்கம். ஒருவித இறுக்கம். அவன் தொலைபேசியில் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டதுபோல் பேசியது என்று ஒவ்வொன்றுமே சாருவை ஒவ்வொரு வெட்டாய் வெட்டி வலிக்கச் செய்திருந்தது.

கரகரவென்று கண்களில் கண்ணீருடன் அவனைப் பார்த்தாள்.

''ஏன் இப்படி கோபப்படறேள். உங்ககிட்ட என் வரைல ஒரு ராட்சஸ மாற்றம் தெரியறது.''

''தெரியறதா... சந்தோஷம்... என்ன சொன்னே? ராட்சஸ மாற்றம்னு தானே?''



அவள் தலை மேலும் கீழும் ஆடி ஆமோதித்தது.

''சரியாத்தான் சொல்லியிருக்கே. நான் ஒண்ணும் உன்னை மாதிரி அமுக்குக் கள்ளன் இல்லை. எனக்கு எதையும் மூடி வெச்சு ஏமாத்த தெரியாது. மனசுல இருக்கறத கொட்டிடுவேன்...''

''ஐயோ நான் எதை மூ...'' சாருகேவலோடு கேட்க வந்து முடியாமல் போய் ''என்னை மன்னிச்சுடுங்கோன்னா...'' என்று அப்படியே அவனது காலடியில் சரிந்தாள். அவன் விறைப்பாக நின்றான். சொற்ப நிமிடங்களில் அங்கே இருவரிடமும் ஏராளமான மாற்றங்கள். மனிதன் என்பவன் பொம்மலாட்ட பொம்மையை விடவும் சாதாரணமானவன் என்பதற்குச் சான்றாக.

அவள் அவனது காலைப் பிடித்திருந்தாலும் அவள் கைகளில் ஒரு நடுக்கம். அவனாலும் அதை உணர முடிந்தது. அவள் சில்லுச் சில்லாகச் சிதறிவிட்டாள் என்பதை அப்பொழுதே அவனால் உணர முடிந்தது. மெள்ள இறுக்கம் தளர்ந்தவன் அவள் தலையில் கை வைத்தான். இலேசாக வருடினான். அவளுக்கு அதன் வழியாக ஒரு தெம்பு உள்புக ஆரம்பித்தது.

மெள்ள...

மிக மெள்ள... அவள் உயிர்ப்பிக்கப்பட்டதுபோல எழுந்தாள். என்ன பேசுவது என்றே தெரியாமல் அவனைப் பார்த்தாள்.

''அழாதே சாரு... இனியாவது தெய்வத்தை நம்பு. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் பண்ற மாதிரி தோணலாம். ஆனா எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கு...'' - அவன் குரலில் ஒரு வித உறுதி. அவள் அடுத்த நொடி அவனை இறுக்கக் கட்டிக் கொண்டாள். அவன் நெஞ்சுக் கூடே நொறுங்குமளவு கட்டி அணைத்தவள் அப்படியே ''உங்களை... உங்களை... நான் சரியா புரிஞ்சுக்கலை. அதான் பயத்துல எல்லாத்தையும் மறைச் சுட்டேன். ஆனா உங்களுக்கு எவ்வளவு பெரிய மனசு. அதுல

தான் எவ்வளவு நம்பிக்கை?'' அவள் கட்டிக் கொண்ட பிடியை விலக்காமல் சிலிர்த்தபடியே பேசினாள்.

''சரி... சரி... பிரயாணத்துக்கு ஏற்பாடு பண்ணு. நான் போய் டிக்கெட் வாங்கிண்டு வரேன். ஏ.டி.எம்.லயும் பணம் எடுக்கணும்.''

''சரின்னா... நான் இப்பவே தயாராகறேன். ஹரித்வார்ல இருபத்தியோரு பேருக்கு. இல்ல. இருநூத்தி பத்துப் பேருக்கு. இல்லையில்ல இரண்டாயிரத்து பத்துப் பேருக்குத் தானம் பண்ணுவோம். எல்லார் கால்லயும் நான் விழறேன்னா...''

''போறும். ரொம்ப உணர்ச்சி வசப்படாதே! இப்ப என்ன... நம்மாத்து கண்ணனையே குழந்தையா நினைச்சுக்க என்னால முடியும். அவனை அலட்சியப் படுத்தினோம் இல்லையா. அதான் அனுபவிக்கிறோம்.''

- சம்பத் குரலும் உடைந்து உணர்ச்சிக்குள் வழுக்கத் தொடங்கிவிட்டான்.

அந்த நொடியில் அவர்கள் இருவரையுமே தம் பக்கம் திருப்பியது அழுத்தமான காலிங் பெல் சப்தம். கதவு திறந்துதான் இருந்தது. இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

வாசலில் நிஜமாகவே கண்ணன்!

நீலத்திருமேனியும், கழுத்தில் மாலையும் சிரத்தில் மயிற்பீலியுமாய், கரத்தில் புல்லாங்குழலோடு நிஜமாகவே கண்ணன்.

இருவருக்கும் நெஞ்சுக் கூட்டுக்குள் ஒரு பனிப் புயல் வீசியது போல் இருந்தது. அந்தக் கண்ணனுக்கு ஆறு வயசு இருக்கலாம். தத்கு பித்கு என்று மழலை நடைபோட்டு வந்து அருகே நின்ற பிறகு தான் தெரிந்தது அந்தக் கண்ணன் பக்கத்து வீட்டு ராஜகோபால் என்பவரின் மகன் விக்ரம் என்பது?



அது மாறுவேஷம்! பின்னாலேயே ராஜகோபாலும் வந்தார்.

''ஹலோ மிஸ்டர் சம்பத்... என்ன ஷாக்கா இருக்கா? இன்னிக்கு எங்க கம்பெனி ஆன்யூவல் டே... ஒரு ஃபேமிலி கெட்டு கெதரும் நடந்தது. அதுல ஃபேன்சி டிரெஸ் போட்டியில விக்ரம் இப்படிக் கண்ணனாயிட்டான். உங்களுக்கெல்லாம் காட்டிட்டு அப்புறமா மேக்கப்பைக் கலைக்கலாம்னு...''

- அவர் விளக்கமளித்து முடிக்க சாரு அந்தக் கண்ணனை அப்படியே வாரிக் கட்டிக் கொண்டாள். முத்தமாரி பொழிந்தாள். சம்பத்துக்கு நடக்கும் சம்பவம் ஒரு அன்றாடமாகவே தெரியவில்லை. பின்னர் சாரு அரைமனதாகக் குழந்தையை ராஜகோபால் வசம் ஒப்புவிக்க அவரும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்.

அந்த நொடி சாருவுக்குள் மின்வெட்டியது போல ஒரு மாற்றம்.

''ஏன்னா...?''

''என்ன சாரு...''

''இப்படி எல்லாம் நடந்ததை அந்த நாடி ஜோசியம் முன்பே சொல்லிடுத்துன்னா...''

''என்ன சொல்றே சாரு...?''

''ஐயோ, எனக்கு இப்பதான் புரியறது. ஒரு நாள் அந்த நோட்டுல இருக்கற பாட்டை எல்லாம் நான் பொழுது போகாம படிச்சுப் பார்த்தேன். அப்ப அதுல நம்ம அப்பாக்கு நெஞ்சு வலி வரும்னு இருந்தது. வேஷம் போட்ட கண்ணன் முதல்ல வருவான். வேதம் சொன்ன கண்ணன் பின்னால வரு வான்னுல்லாம் இருந்தது. அப்ப எதையும் புரிஞ்சுக்க முடியலை. இப்ப... இப்பதான் எல்லாம் புரியறது.''

- சாரு பயங்கரமாக எக்ஸைட் ஆனாள். ''அப்படியா?'' என்று கேட்டு சம்பத்து அந்த நோட்டை எடுத்துப் பார்க்க ஓடினான்.

**கா**சி!

கை நிறைய ஃபைல்களோடு அந்த அறைக்குள் நுழைந்த கண்ணனை, பயங்கர ஆச்சரியத்தோடு பார்த்தனர் கணேஷும், அனுராதாவும்.

“என்ன பாக்கறீங்க?”

“இல்ல... அந்த தீரஜ் குமாரோட ஆட்டோமொபைல் இண்டஸ்ட்ரி அட்ரஸ்...”

“ஓ... எனக்குத் தெரியாது. நான் திணறப் போறேன்னு நினைச்சுட்டியா? நான் கிட்டத்தட்ட பாதி வேலையையே முடிச்சுட்டேன். இது மீதி... இந்த ராத்திரி இதைப் பார்த்துட்டா இந்த அசைன்மெண்ட் டோட்டலா ஓவர் அப்புறமா நான் உன் அப்பா விஷயத்துக்கு வரணும்...”

“என்ன சொல்றீங்க. தீரஜ் ஆட்டோ மொபைல்ஸ் கணக்குகளை இந்த ராத்திரி பாத்துமுடிச்சுடுவீங்களா? ஒரு வருஷத்து கணக்குங்க...”

“இருக்கட்டுமே எனக்குத்தான் ஒரு வருஷங்கறது ஒரு நாள் ஆச்சே?”

“வாட்...?”

“நான் தேவர்கள் கணக்கைச் சொன்னேன். நானும் தேவன் மாதிரி. நீ ஏன் கவலைப்படறே? உனக்கு ஒரு சிரமமும் இருக்காது. நான் எதுக்கு வந்தேனோ அதை எல்லாம் முடிக்க வேண்டாமா?”

“அது சரி... என் அப்பா விஷயம்னு ஏதோ சொன்னீங்களே...?”

“ஆமா. உன் அப்பா கொஞ்சம் கூட சுயநினைவு இல்லாம மும்பைல ஒரு சேரிப்பக்கம் சுத்திகிட்டு இருக்கார். அவர் ஜாதகத்துல சந்திர புக்தி வேற. மனசு எப்படி பனிக்கட்டியா உறைஞ்சு கிடக்க முடியும்? அது மகா சமுத்திரம் மாதிரி பொங்கத்தானே செய்யும்? இப்படித்தான் அலையவும் வைக்கும்...”

- கண்ணன் சொன்ன தகவல்கள் கணேஷை அப்படியே ஒரு புரட்டு புரட்டிப் போட்டன.

## 25

*‘எல்லாம் என்னுள்*
*முடக்கம்; அதனாலே*
*எவருள்ளும் நான்*
*அடக்கம்; இதை*
*உணரவும் தேவை*
*பணிவடக்கம்!’*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

**க**ண்ணன் சொன்ன அந்த ஜோதிட விளக்கம் கணேஷுக்கே தெரிந்திராத ஒன்று. ஜோதிட விளக்கம் மட்டுமல்ல. அவன் அப்பாவின் ஜாதகம் இந்தக் கண்ணனுக்கு எப்படித் தெரியும் என்பது. அடுத்து அவனுள் மூண்ட கேள்வியாகும். ஆனால் கண்ணன் கணேஷை அதிக நேரம் ஸ்தம்பிக்க வைக்கத் தயாரில்லை.

“என்ன கணேசா... உன் அப்பா காணாம போனது எனக்கு எப்படித் தெரியும், அப்புறம் உன் அப்பா ஜாதகம் எனக்கு எப்படித் தெரியும்னு நினைக்கறியா? தெரியலேன்னா பேச முடியுமா? அதேசமயம் பேசிட்டா ஆச்சா... அவரைக் கண்டுபிடிக்கணும் இல்லையா?”

- கண்ணன் கேட்ட தோரணையே கணேஷை பிடரியைப் பிடித்து நிமிர்த்தியதுபோல இருந்தது. “கவலைப்படாதே. மும்பைல எனக்குத் தெரியாத இடம் கிடையாது. நாளைக்கு காலம்பற இந்த தீரஜ்குமார் ஃபைலை ஒப்படைச்சுட்டு நான் மும்பை போய் உன் அப்பாவோட இங்க வரேன். நீ இங்க இருந்து

உன் வீட்டுக்குக் கையை வீசிண்டு சும்மா போகக் கூடாது. உன் அப்பாவோட போகணும். அப்பத்தானே உன் அம்மாவுக்கு சந்தோஷமா இருக்கும். தெருவுல அடிபட்ட மாட்டுக்கு மஞ்சளும் எண்ணெய்யும் வாங்கிப் பூசின உன் புண்ணிய பலம் உன்னைக் கைவிட்டுமா என்ன?''

- கண்ணன் தன் பேச்சில் இறுதியாக மாட்டைத் தொட்டு முடிக்கவும், உச்சி மண்டையில் ஒற்றை முடியைப் பிடித்து யாரோ இழுத்த மாதிரி இருந்தது கணேஷுக்கு. நான் மாட்டுக்கு உதவியது இவனுக்கு எப்படித் தெரியும் என்று அடுத்தகட்ட கேள்விக்குள் விழுந்தான். திருதிருவென்றும் விழித்தான்.

'நான் மாட்டுக்கு உதவி செய்தது உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்க வாயெடுத்த போது, அவன் செல்போன் அவன் கவனத்தைத் தன் பக்கம் திருப்பியது. அனுராதா அவனுக்கு உதவி செய்தவளாக சிணுங்கிய செல்போனை எடுத்துக் கொடுத்தாள். திரையில் உள்ள எண்கள் மறுபக்கம் இருப்பவர் ஆடிட்டர் என்றது.

''ஆடிட்டர் போன்...'' என்று கணேஷும் வேகமாக காதில் கருவியை வைத்தான். அதைக் கவனித்த கண்ணன் ''கணேஷ், நான் இன்னும் வரலைன்னு சொல்... சும்மா ஒரு குட்டி ஷாக்கா இருக்கட்டும்'' என்றான் படு வேகமாக...

''கணேசா...''

''சார் சொல்லுங்க... உங்களுக்காகத்தான் ரொம்ப நேரம் ட்ரை பண்ணினேன்.''

''நினைச்சேன். நான் அனுப்பின நபர் வந்து சேர்ந்தாச்சா?''

''ஆஹா... இப்பக்கூட என் எதிர்க்க நான் வரலைன்னு சொல்லுன்னு உங்களைக் கலாய்க்கப் பாக்கறார்...''

''அவனுக்குக் கொஞ்சம் குறும்பு ஜாஸ்தி. ஆனா ஆள் ரொம்பவும் சுறுசுறுப்பு...''



''சுறுசுறுப்பு மட்டுமா...ஃபேஸ் ரீடிங்கும் தெரியும்போல இருக்கு. மனசுக்குள்ள ரகசியமா நினைக்கறதையும் பேசறதையும் கூட அப்படியே சொல்லிடறாரே. என் குடும்பம் பற்றியும் நிறையவே தெரிஞ்சிருக்கு...''

''நான்தான் சொல்லியனுப்பிச்சேன். உனக்கு எல்லாவிதத்துலயும் ஒத்தாசையா இருப்பான். ஆமா அந்த மூங்கில் பெட்டி சமாசாரம் என்னாச்சு?''

''அட போங்க சார். என் அம்மா சொல்லி நான் பூஜை செய்ததில்லை. அக்கா சொல்லியும் பூஜை செய்ததில்லை. ஆனா முகம் தெரியாத ஒரு டாக்டர் சொல்லி அந்தச் சிலைக்காக நான் பூஜை செய்தேன். எனக்குத் தெரிஞ்சு ஸ்பீக்கர் போனை கண்டு பிடிச்சதுல ஒரு நல்ல காரியம் நடந்துருக்கு. இங்க நான் பண்ற பூஜையை அங்க அந்த சீனு தெரிஞ்சுக்க முடியறது...''

''ஏய் நீ நாஸ்திகன்தான். ஆனா பெரிய பரோபகாரி. ஒரு உயிரைக் காப்பாத்த நீ செய்திருக்கிற காரியம் இருக்கே ரொம்பப் பெருசு. உன்னை நினைச்சு நான் ரொம்பப் பெருமைப் படறேன்...''

''பாராட்டெல்லாம் இருக்கட்டும் சார். நான் என் அம்மாவையும் தங்கையையும் பாக்கணும். அப்பா விஷயம் வேறு புதிரா இருக்கு. இங்க நீங்க அனுப்பியிருக்கிற ஆள் என்னடான்னா என் அப்பா அவர் பாக்கெட்டுக்குள்ள இருக்கற மாதிரி நினைச்சுண்டு பேசறாரு. மொத்தத்துல ஒரே குழப்பமா இருக்கு சார்...''

''கவலைப்படாதே... எல்லாம் சரியாயிடும். போனை கொஞ்சம் அவன்கிட்ட கொடு...''

- ஆடிட்டர் சொல்ல போனுடன் நிமிர்ந்த கணேஷ் எதிரில் கண்ணன் இல்லை. அனுராதாவை பார்த்தவன் ''எங்க அனுராதா அந்தக் கண்ணன்?'' என்று கேட்க ''இங்கதானே இருந்தார்...''

என்று அவள் அறைக்கு வெளியில் போய் தேடத் தொடங்கினாள்.

"மிஸ்டர் கண்ணன், கண்ணன் சார்..." என்று கத்திப் பார்த்தாள். பயனில்லை. ஏமாற்றமுடன் திரும்பி வந்தாள். உதட்டைப் பிதுக்கிக்கொண்டு கணேஷைப் பார்க்கவும், அவன் புரிந்தவன் போல் "சார்... அவர் இப்ப பக்கத்துல இல்லை, வந்ததும் பேசச் சொல்றேன்" என்றபடி போனை கட் செய்தான். பின் நிமிர, மறுபடி செல்போன் அழைப்பு. இம்முறை டாக்டர்.

"என்ன மிஸ்டர் கணேஷ், இன்னிக்குப் பூஜையைப் எப்ப பண்ணப் போறீங்க?"

- டாக்டர் நேராக விஷயத்துக்கு வந்துவிட்டார். "சார்... இன்னிக்கு... இன்னிக்கு பண்ணணுமா சார்?" - ... "அது சரி... அந்தப் பெட்டி மிஸ்டர் ஸ்ரீனிவாசன் கைக்கு வர்றவரை நீங்க பண்ணத்தான் வேணும். வேற வழி கிடையாது. பை த பை மிஸ்டர் ஸ்ரீனிவாசனோட சன்னும் மாட்டுப் பொண், ஐ மீன் அவர் மருமகளும் இங்க வரப்போறாங்க... இங்க வந்துட்டு உடனேயே இவரோட சன் உங்களைச் சந்திக்க வாரணாசி புறப்பட்டு வரலாம். அவர் வந்து பெட்டியை வாங்கிக்கிற வரை நீங்க பூஜை பண்றதுல ஆட்சேபணை இல்லையே..."

"அதெல்லாம் ஒண்ணுமில்ல சார்... எனக்கு என்ன தெரியுமோ அதை நிச்சயம் குந்தகம் இல்லாம செய்வேன்."

"ரொம்ப நன்றி."

- கணேஷ் செல்போனை முடக்கி விட்டு அனுராதாவைப் பார்த்தான்.

"என்ன கணேஷ், பூஜைக்குத் தயாராகணுமா?"

"ஆமாம். கொஞ்சம் வெளிய போய் பூ, பழம், ஊதுபத்தி, சாம்பிராணி, கற்பூரம்னு இந்தப் பூஜை ஐட்டங்களை எல்லாம் வாங்கிட்டு வர முடியுமா அனுராதா?"



"ஷ்யூர்... நானும் எங்க எடிட்டருக்கு போன் பண்ணி பேச வேண்டியிருக்கு. நீங்க கொஞ்சம் வெயிட் பண்ணுங்க வந்துடறேன்."

சொல்லிவிட்டு அனுராதா வெளியேறினாள்.

ஒரு எஸ்.டி.டி. பூத்துக்குள் புகுந்தவள், தன் பத்திரிகை ஆசிரியரிடம் ஆச்சரியம் சொட்டச் சொட்ட பேசினாள்.

"சார்... நான் வர்றதுக்கு ஒரு வாரம் ஆகலாம். அவசரம்னா மலர் கட்டுரையை இங்கேயே எழுதி ஃபேக்ஸ் பண்ணிடறேன்."

"ஏம்மா... காசி உன்னை ரொம்பக் கவர்ந்துடுச்சா?".

"இல்ல சார். வேற ஒரு சுவாரஸ்யமான விஷயம் இங்க நடந்துக்கிட்டு இருக்கு. நம்ம பத்திரிகைல ஒரு அதிசயமான தகவல் கூடிய சீக்கிரம் வெளியாகப் போகுது. பாரதத்து கண்ணன் திரும்ப வரப்போறான் சார். இல்லையில்லை வந்தாச்சுன்னுதான் நினைக்கறேன்."

"என்ன ஆச்சு உனக்கு? எப்பவும் இல்லாதபடி எதுக்கு இப்படி ஒரு எக்ஸைட்மென்ட்?"

"இல்ல சார்... நான் இனி பேசல. என் மேட்டர்தான் இனி பேசணும். நான் இங்க நல்ல பாதுகாப்போட இருக்கேன். நீங்க கவலைப்பட வேண்டாம். எங்க வீட்டுக்கு முடிஞ்சா தகவல் சொல்லிடுங்க. வேண்டாம் சார்... எங்கப்பாகிட்ட நானே பேசிக்கறேன். தேங்க்யூ சார்..."

- அனுராதா பேசி முடித்துவிட்டு வெளியே வந்தாள். எதிரில் கண்ணன். அவன் கைகளில் கணேஷ் கேட்ட பூஜை ஐட்டம் அவ்வளவும்...

அனுராதா விழிகளைப் பெரிதாய் விரித்தாள். "என்ன பாக்கறே... கணேஷ் உன்கிட்ட பூஜை சாமான் வாங்கிட்டு வரச் சொன்னது காதுல விழுந்தது. அதான் நீ போன் பேசும்போது நான் போய் வாங்கிட்டு வந்துட்டேன். இந்த பிடி... போய்க் கொடு!

நான் இங்க நிறைய பேரைப் பார்க்க வேண்டியிருக்கு. பார்த்துட்டு வந்துடறேன்...'' என்றபடியே பூஜை சாமான்களை நீட்டினான்.

''நான் உங்களைத் தேடினப்போ நீங்க அங்க இல்லையே...''

''என்னை என் அம்மா தேடும்போது ஒளிஞ்சு பழகினவன் நான். அதான் உன் கண்ணுலையும் படலை.''

- என்ற கண்ணன் கண்களைச் சிமிட்டி ஒரு சிரிப்பு சிரித்தான்.

அந்தச் சிரிப்பு அவளைத் தாறுமாறாக கலைத்துப் போட்டுவிட்டது. குனிந்து பையில் ஒரு பார்வை பார்த்துவிட்டு நிமிர்ந்தால் எதிரில் ஆள் இல்லை.

'இவன் கண்ணனா இல்லை மாயாவியா?' வியப்போடு நடக்கத் தொடங்கினாள் அனுராதா.

டெல்லி செல்லும் அந்த விமானம் ரன்வேயில் சீறத் தொடங்கியிருந்தது. உள்ளே சம்பத்தும் சாருவும் அருகருகே அமர்ந்திருந்தனர். சம்பத் தீவிரமான யோசனையில் இருந்தான். நாடி ஜோசியன் எழுதிக் கொடுத்த பாடல்கள் கொண்ட அந்த நாற்பது பக்க நோட், அவன் கையில் உள்ள லெதர் பேக்கில் இருந்தது.

அதை எடுத்து பல முறை படித்துப் பார்த்தும் பெரிதாக பொருள் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

*'வெள்ளியெழும் வேளைக்குள்ளே வியாழன் நிற்கும் -*
*நேரமதில்*
*பள்ளியெழுந்தே பாலன் வேடமிட்டு கண்ணனாய்*
*முன்னே வருவான்*
*வள்ளி மணவாளன் சோதரன் நாமம் கொண்டவன் முன்*
*வெள்ளெருக்கு போலே வேத கண்ணன் பின் வருவான்.'*

என்று உள்ள பாடல் வரிகள் சுழன்று சுழன்று அடித்தன.

வெள்ளியெழும் வேளை என்றால் வெள்ளிக்கிழமையா இல்லை மாலைப் பொழுதா என்பதில் குழப்பம். இதில் வியாழன் நிற்கும் நேரமதில் என்றால் வியாழக்கிழமையா இல்லை வியாழன் எனப்படும் குருவா என்றொரு குழப்பம்.



''ஏன்னா...'' என்றாள் சாரு.

''உம்!''

''வேதகண்ணன் வருவான்னு போட்டிருக்கே... வேத கண்ணன்னா பெருமாள்தானே?''

''யாருக்குத் தெரியும்? பெருமாள்லாம் வருவார்னு எனக்குத் தோணலை.''

''அப்படின்னா?''

''அந்த வேதகண்ணன்கறவனும் இந்த வேஷம்போட்ட கண்ணன் மாதிரி ஒரு மனுஷனாத்தான் இருக்க முடியும்?''

''அதெப்படி? ஒரு சமயத்துல இரண்டு இடத்துல அவன் இருப்பான்னு ஒரு வரி வரதே. படிச்சேளா? மனுஷன்னா எப்படி ஒரு மனுஷன் இரண்டு இடத்துல ஒரே சமயத்துல இருக்க முடியும்?''

- சாரு அப்படிக் கேட்ட பிறகுதான் அவன் சொன்ன பொருள் கொண்ட பாடல் வரிகள் சம்பத்துக்கு நினைவுக்கு வந்தது. லெதர்பேக்கில் இருந்து திரும்ப அந்த நோட்டை எடுத்து விரித்தான். சாருவே அந்த வரிகளைச் சுட்டிக் காட்டினாள்.

*'எட்டில் மதி மறைந்தோனை எட்டில் பிறவி எடுத்திட்ட*
*கட்டிளம் காளையவனும் தொட்டருகே சென்றாலும்*
*விட்டகலா உயிர் மூச்சால் காசி*
*மனை வீட்டுள்ளும்*
*காசியினில் வீதியிலும் ஒரே சமயம் சஞ்சரித்தே*
*கண்ணனென்றே திரிவான்...'*

- அந்தப் பாடல் வரிகளைப் படித்த சம்பத்துக்கு குழப்பமாகத் தான் இருந்தது!

# 26

*'உணர்வால் வாழ்பவை*
*உயிரினங்கள்*
*மனதால் வாழ்பவன்*
*நிறை மனிதன்*
*உணர்வும் மனதும்*
*நானே என்பதால், ஆண்டவன்நான்*
*ஆயனாகவும் ஆனேனே...!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

**வி**மானம் பறக்கிறதா இல்லை மிதக்கிறதா என்றே தெரியவில்லை. புறத்தில் புஷ்டியான மேகப் பொதிகள். ஆனால் அவற்றை ரசிக்கும் மனநிலைதான் சம்பத்திடமும் சாருவிடமும் இல்லை.

நாடி ஜோதிடம் என்கிற புராதனமான ஒரு விஷயம், நவீன விஞ்ஞானமான விமானத்துக்குள் இருக்கும் போதும் தூக்கலாக இருவருக்குள்ளும் ஆட்சி செலுத்தியபடி இருந்தது.

'அது எப்படி கண்ணன் வரமுடியும்?' என்பதுதான் பிரதான கேள்வியாக அவர்கள் மனத்தில் நங்கூரம் போட்டிருந்தது. என்னதான் கடவுள் நம்பிக்கை இருந்தாலும், அவன் தங்களை ரட்சிக்க வரப் போகிறான் என்பதை மட்டும் ஏனோ நம்ப முடியவில்லை.

சாரு கூட துலக்கப்பட்ட வெள்ளிப் பாத்திரம்போல மாறிப்போனது தான் ஆச்சரியம்.



''ஏதேதோ நடக்கறது சாரு... பேசாம நாமளே பரிகாரம் பண்ணக் கிளம்பிப் போயிருந்துருக்கலாம். அப்ப உனக்குள்ள ஒப்புதல் இல்லை. ஆனா இப்ப நீயும் நானும் தயாராகியும் பிரயோஜனமில்லை. அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்துடுத்து.

ஹார்ட் அட்டாக் மாதிரி ஒரு கொடுமையான உயிர்ப் பயம் எதுவுமே கிடையாது. சொடக்கு போட்ற நாழில வலி வந்து நெஞ்சையடைச்சு, 'வாழ்ந்தது போறும் வா'ன்னு எவ்வளவு பேரைக் கூட்டிண்டு போயிருக்கு தெரியுமா?

எமனோட குறுக்கு வழிகள்ளயே ரொம்ப ரொம்ப ஷார்ட் ரூட் இதுதான்...''

- சம்பத் தான் எதில் மையம் கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லாமல் சொன்னான்.

''இல்லன்னா... நம்ம அப்பாவுக்கு எதுவும் ஆகாது. என் உள் மனசுக்குள்ள நம்பிக்கை தெரியறது. அது என்னவோ தெரியல அங்க அம்மாவும் அப்பாவும் பரிகாரம் பண்ணிட்டதைக் கேள்விப்பட்டதுல இருந்தே நான் ரொம்ப இலேசாயிட்ட மாதிரி தோன்றது'' என்றவள் திடீரென, ''என்னன்னு தெரியல... வயித்தைப் புரட்டற மாதிரி இருக்கு...'' என்றாள்.

விமானப் பயணம் சிலர் வரையில் ரத்த நாளங்களில் எல்லாம் ஊடுருவும். அப்போது அவர்கள் இப்படிச் சொல்வதும் சகஜம்தான். சம்பத்தும் அப்படித்தான் எண்ணினான் அவளா.

''இல்லைன்னா... இது அந்த மாதிரி புரட்டலா தெரியல...'' என்று அவனுக்குள் கொஞ்சம் குழப்பமேற்படுத்தினாள்.

**வீ**ட்டுக்குள்ளேயே மெல்ல எழுந்து நடந்து பார்த்தான் கணேஷ். நெற்றியில் கோபி சந்தனம், காதில் துளசி தளம், மார்பு, கைகளில் எல்லாம் சந்தன வரிகள்.

பார்க்க பரம வைதிக தோற்றம். குத்து விளக்குகள் எரிய கண்ணனின் அந்த மூங்கில் பெட்டி, அந்தப் பெட்டியை கணேஷ் அர்ச்சித்திருந்த பூக்கள் கிட்டத்தட்ட மூழ்கடித் திருந்தன. அவனுக்கு இப்படி ஆகும், அப்போது உதவுவதற்கு ஒருவர் வேண்டும் என்று எண்ணித் திட்டம் போட்டு அனுராதாவைக் காலம் கொண்டு வந்து சேர்த்த மாதிரிதான் அவனுக்குத் தோன்றியது.

அவன் அம்மாதான் அடிக்கடி 'நாம ஒருத்தருக்குச் செய்தா நமக்கு ஒருத்தர் செய்வாங்கப்பா...' என்பாள். அப்போது அது அவன் வரையில் ஆறு வார்த்தைகளால் ஆன ஒரு சப்தம். இப்போது அதில் ஆழ்ந்த பொருள் இருப்பது போல ஒரு உணர்வு.

அம்மா எதிரில் ஒருமுறைக்கு மேல் சேர்ந்தார் போல் இருமிவிடக் கூடாது. 'வறட்டு இருமல் - சூடு' என்று கை நிறைய எண்ணெயைக் கொண்டு வந்து தலையில் வைத்து விடுவாள்.

ஏனோ தெரியவில்லை அவனுக்குள் அவன் தாயின் உணர்வுகள் பொங்கிப் பொங்கி எழும்பின. இப்பொழுது இங்கு மட்டும் அவள் இருந்தால் துடித்துப் போயிருப்பாள்.

பாவம் அவள்...! ஒரு பக்கம் மனநலம் சரியில்லாத அப்பா, இன்னொரு பக்கம் கழுத்தில் தாலி ஏறியும் வாழ்க்கைக்குள் புக முடியாத அக்கா, வியாதி உடம்பாகிப் போன தங்கை...

தொட்டுத் தொட்டு எல்லோர் நினைப்பும் அந்தத் தனிமையில் அவனுக்குள் மூண்டெழுந்தது. அதன் எதிரொலியாகக் கண்களில் கண்ணீர் சேர்ந்து விட்டது. அதைச் சுண்டி விட்டுக் கொள்ளும் போது கச்சிதமாக கையில் டிபன் பொட்டலங்களோடு அனுராதா உள்ளே நுழைந்தாள். நொடியில் அவன் கண்ணீரையும் அதற்குப் பின்னால் உள்ள காரணங்களையும் புரிந்து கொண்டு விட்டாள். அவளைப் பார்க்கவும் அவனிடம் சமாளிப்பு.



''என்ன அனுராதா... நீங்க சாப்பிட்டு எனக்கும் டிபன் வாங்கிட்டு வந்துட்டீங்களா?''

''டிபன் வாங்கிட்டு வந்துருக்கேன். ஆனா நான் ஹோட்டல்ல சாப்பிடலை. உங்களோட சேர்ந்தே சாப்பிடு வோம்னு எனக்கும் சேர்த்தே பார்சல் பண்ணிட்டு வந்துட்டேன்.''

- அவள் அப்படிச் சொன்னதில் ஒரு பனித்துளிச் சிலிர்ப்பு அவனுக்குள் ஏற்பட்டது.

''என்ன நடந்து பாக்கறீங்களா... வலி இன்னுமா குறையல...?''

''இப்பதான் ரொம்ப அதிகமா இருக்கு. டாக்டரோ, எலும்பு முறிவு இல்லைன்னுட்டார். ஒரு தசைச் சுளுக்கு இப்படி வலிக்குமான்னு எனக்கு ஒரே குழப்பமா இருக்கு...''

''எப்படியோ இதுலயும் நீங்க அந்தக் கண்ணனுக்கு பூஜை செய்துட்டீங்களே... அதுதான் கிரேட்...''

''ஆங்... சொல்ல மறந்துட்டேன். அங்க அந்த பிராமணர் இப்ப நல்லபடி குணமாயிட்டார். அவரே என் கூட பேசினார். அம்பி... நிஜத்துல நீதான் பரமபக்தன். உன் முன்னால நானெல்லாம் ஒண்ணுமேயில்லைன்னு என்னென்னமோ சொன்னார். நான் என்ன பெருசா பண்ணிட்டேன்? சினிமாவுல கேரக்டர் ரோல் பண்ற நடிகன் மாதிரி இது ஒரு நடிப்பு. இருந்தாலும் இந்த நடிப்பை சிவாஜி மாதிரி அழுத்தமா திருப்தியா செய்தேன்னு சொன்னேன்.

''அவர் ஹார்ட் பிராப்ளம் சரியாகணும், அப்புறம் அவர் இந்த யாத்திரை மேற் கொண்டதே ஒரு குழந்தைக்காகதான்... அதாவது அவர் மகனுக்குக் கல்யாணமாகி அஞ்சாறு வருஷம் ஆகியும் குழந்தை பிறக்கலையாம். ஸோ... அவர் மருமகளுக்கு ஒரு நல்ல குழந்தையைக் கொடுன்னு அந்தக் கண்ணன்கிட்ட வேண்டிகிட்டேன்...''

கணேஷ் முடிக்கவும் இன்ப அதிர்வுடன் அவனை ஏறிட்ட அனுராதாவிடம்.

''என்ன பாக்கறீங்க அனுராதா... அவங்க நம்பற கண்ணன்கிட்ட அவங்களுக்காக அப்படி வேண்டிக்கிட்டேன். போட்ற வேஷத்தை நல்லபடியா போட வேண்டாமா?''

அவன் அவளை மடக்கிவிட்டது போல பேச, அனுராதா உதட்டைச் சுழித்து சிரித்தபடியே டிபன் பொட்டலங்களை எடுத்துப் பிரித்து அவன் நாற்காலியில் அமர்ந்து சாப்பிடத் தோதாக அந்த அறை மேஜை ஒன்றின்மேல் வைத்தாள். அவனும் கெந்திக் கெந்தி நடந்து வந்து அமர்ந்தான். அவளை நன்றியுடன் பார்த்தான். அவள் ''சாப்பிடுங்க...'' என்றபடியே தனக்கான பொட்டலத்தைப் பிரித்தாள். பிரித்தபடியே ''எதை நினைச்சு அப்ப அழுதீங்க...?'' - என்றாள். சட்டென்று அவளுக்கு ஒரு பதிலை அவனால் கூற முடியவில்லை. இட்லியைப் பிட்டு வாயில் வைத்தபடியே ''என் குடும்பத்தை நினைச்சேன்'' என்றான்.

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா அதை எல்லாம் நான் தெரிஞ்சுக்கலாமா?''

- அவனும் சுருக்கமாக எல்லோரைப் பற்றியும் சொல்லி முடித்தான்.

''அடேயப்பா... எவ்வளவு பிரச்னைங்க... உண்மைல உங்களை நினைச்சா எனக்கு பிரமிப்பா கூட இருக்கு. உங்களை ஒண்ணு கேட்கட்டுமா?''

''என்ன... சும்மா கேளுங்க...''

''இந்த பூஜைல உங்களோட இந்தப் பிரச்னைகள் தீரணும்னு நீங்க கடவுள்கிட்ட கேட்கலாம் இல்லையா... அதே நாடக வேஷம் போட்ட பக்தர் நிலையில இருந்துதான்...''



''தெரியும்... நீங்க இப்படித்தான் கேட்பீங்க. உங்களுக்கு உங்க பாணியிலயே பதில் சொல்றேன். என்னைப் போல ஒரு நாத்திகனுக்கு நான் எதுவும் சொல்லாமலே, கேட்காமலே கடவுள் வந்து உதவி செய்யலாம் இல்லையா... அவர் உண்மையில இருந்தா? அவருக்குத் தான் எல்லாரும் ஒண்ணாச்சே...''

- அப்படி அவன் கேட்ட பிறகு அதற்கு மேல் அவளாலும் அவனிடம் மேற்கொண்டு பேச முடியவில்லை. பேச்சு கண்ணன் விஷயத்துக்குத் தாவியது.

''எனக்கு உதவி செய்யறேன்னு சொல்லிக்கிட்டு வந்த நபர்... இப்ப எங்க இருக்கார்னே தெரியல. இதுல இவர் மும்பை வரை போய் என் அப்பாவைக் கண்டுபிடிச்சு கூட்டிக்கிட்டு வரேன்னு பீலா வேற... வேடிக்கையா இல்ல...?''

''இல்ல கணேஷ்... என்னால அந்த நபரை, சாதாரணமா எடுத்துக்க முடியல. நீங்க வேணா பாருங்க. அவர் உங்கப்பாவோட வந்து நின்னு உங்களைத் திக்குமுக்காட வைக்கப் போறாரு...''

''என்ன அனுராதா... அந்த நபரோட தோற்றம், ஃபேஸ் ரீடிங் இதுல மயங்கிட்டீங்களா...''

''ஏன், நீங்க மயங்கலையா... அவர் எதிர்க்க நீங்களே ஒருபெட்டிப் பாம்பா தானே இருக்கீங்க?'' - அனுராதா அப்படிச் சொன்னது கணேஷை ஒரு குத்துக் குத்தி விட்டது.

''அப்படியா சொல்றீங்க... வரட்டும் அவர். எங்கய்யா சொல்லாம கொள்ளாம போய் ஒழிஞ்சேன்னு ஒரு பிடி பிடிக்கறேன் பாருங்க..''

- கணேஷ் சொல்லி வாய் மூட ''அப்படியா?'' என்று ஒரு பதில் கேள்வி. நிமிர்ந்தால் எதிரில் அந்தக் கண்ணன். கூடவே கணேஷின் அப்பா வைத்யநாதன்!

பாவம், அவரிடம் ஸ்மரணையே இல்லை. கணேஷுக்குள் நிஜமாலுமே திக்கு முக்காடல்!

# 27

*'என் வாயில் தேவகி*
*உலகைக் கண்டாள்*
*என் வாசலில் குசேலன்*
*உய்வைக் கண்டான்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

**வா**சலுக்கு அப்பால் தெரிந்த கண்ணனும் அவன் அப்பாவும் கணேஷைத் திக்குமுக்காட வைக்க, கண்ணன் "அப்படியா?" என்று தான் கேட்ட கேள்வியோடு அவரையும் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

அவரிடம் புத்தி ஸ்வாதீனம் இல்லை என்பது அவர் பார்க்கும் பார்வையிலும், சில சேஷ்டைகளிலும் தெளிவாகவே தெரிந்தது.

"அப்பா..." என்றான் பலமாக. அந்த அப்பாவுக்குள் சந்தோஷம், ஆச்சரியம், ஒருவித சந்தேகம் என்று எல்லாமே ஒன்று கலந்து முண்டியடித்தன.

"உன் அப்பாவேதான் கணேஷா... மும்பைக்குப் பறந்து போய் இவரைத் தேடிப் பிடிச்சு திரும்ப இழுத்துண்டு வர்றதுக்குள்ள போறும் போறும்னு ஆயிடுத்து... எப்படியோ என்னோட இரண்டாவது அசைன்மென்ட்டும் முடிஞ்சது. அடுத்து என்ன உன் அக்காவோட சிக்கலா... அதையும் ஒரு கை பார்த்துக்கறேன்..."

கண்ணனின் பதிலும் அதில் அவன் கணேஷின் அக்கா சரண்யா விஷயத்தைத் தொட்டதும் கணேஷை உயிர்க்



கூச்சத்துக்கே ஆளாக்கிற்று. அனுராதாவும் கிட்டத்தட்ட மிரண்டு போய் விட்டிருந்தாள்.

"மிஸ்டர் கண்ணன்... இவரை... இவரை எப்படிக் கண்டுபிடிச்சீங்க? நீங்க சும்மா வாய்ச்சவடால் அடிக்கற மாதிரிதான் நினைச்சேன். இப்ப என்னடான்னா நிஜமாலுமே அப்பாவோட வந்து நிக்கறீங்களே... என்னால நம்ப முடியலை..."

கண்ணன் பதிலுக்கு வழக்கம்போல சிரித்துவிட்டு "யார் ஒருத்தர் நம்ப முடியலை... நம்ப முடியலைங்கற வார்த்தையை அதிகம் பயன்படுத்தறாங்களோ, அவங்க இந்த உலகத்தைக் கூர்ந்து பார்க்கவே இல்லைங்கறதுதான் பொருள். உலகத்தைவிட தங்களைத் தங்களுக்குள்ள கொஞ்சம்கூட பார்த்துக்கலைங்கறதும் முக்கியமான விஷயம்" என்றான்.

"அப்படின்னா...?" - இது அனுராதா.

"என்ன அப்படின்னா... மும்பைல திரிஞ்சிண்டிருந்த இவரை மும்பை போய் கண்டுபிடிச்சு கூட்டிக்கிட்டு வந்தது ஒரு பெரிய விஷயமா! இதையே நம்ப முடியலைன்னா, வெட்டவெளியில ஒரு பக்கம் சாஞ்சபடி மிதந்துக்கிட்டிருக்கற இந்தப் பூமியையும் அது ஒரு மாறாத வேகத்தோட சுத்தறதையும் எப்படி நம்ப முடியும்? இந்த பூமிக்கு சூரியனைக் கொண்டு வெளிச்சத்தையும், அந்த வெளிச்சத்துலயும் காலை, மதியம், மாலைங்கற மூன்று விதங்களையும் கொடுத்துருக்கற ஒரு சக்தியை எப்படி நம்ப முடியும்? அப்புறம் இராத்திரிப் பொழுது... இருண்ட வானத்தை அண்ணாந்து பார்த்தா எத்தனை எத்தனை நட்சத்திரங்கள். இதுக்கு நடுவுல நிலா வேற! இராத்திரி வேளைல இருட்டுல எந்த உயிரும் தடுமாறிடக் கூடாதுங்கறதுக்காக சூரியன்கிட்ட இருந்து வெளிச்சத்தைக் கடன் வாங்கி வினியோகிக்கற ஒரு கருணைமிகுந்த கிரகம் இந்த நிலா. பாவம் இது...! தேய்ஞ்சும் வளர்ந்தும் இரவுப் பொழுதுகளுக்கு ஒரு அடையாளம் தருது. இதோட நிகரில்லாத செயல்பாட்டையும்

இதுக்குப் பின்னால இருந்து ஆட்டி வைக்கற சக்தியையும் எப்படி நம்ப முடியும்?''

கண்ணனின் பேச்சு அனுராதாவையும் கணேஷையும் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது.

தொடர்ந்து கண்ணனே, ''அப்பா கணேசா... உன் அப்பாவைக் கண்டுபிடிச்ச கூட்டிண்டு வந்துட்டேன். இவ்வளவு தூரம் வந்துட்ட இவரை கங்கை கரைக்குக் கூட்டிகிட்டுப் போய் ஒரு முழுக்கு போட்டுட்டு அப்படியே விஸ்வநாத தரிசனமும் பண்ண வெச்சு, சாப்பாடும் வாங்கிக் கொடுத்து கூட்டிக்கிட்டு வரேன். அப்புறமா உன் சகோதரி பத்தி சிந்திப்போம்...'' என்று படபடவென்று ஒரு கர்மவீரனைப் போல பேசி முடித்தவன்,

''ஓய் ஸ்வாமி... திருவாளர் வைத்யநாதன் கிளம்புங்கோ... திவ்யமா கங்கா ஸ்நானம் பண்ணிட்டு வருவோம்'' என்று அவரையும் துரிதப்படுத்தினான்.

''இல்லே... வேண்டாம். அப்பா இங்கேயே இருக்கட்டும். இப்பத்தான் அவர் வந்துருக்காரு... அவர்கூட நான் நிறைய பேசணும். அப்புறம் எங்கம்மாக்கும் தகவல் தரணும். அம்மா துடிச்சிக்கிட்டு இருப்பாங்க...''

''எல்லாம் நான் கொடுத்துட்டேன். எனக்கு இதுகூடத் தெரியாதாக்கும்?''

''அப்படியா... அம்மா... அம்மா... என்ன சொன்னாங்க?''

''அவரை ஜாக்கரதையா பார்த்துக்கோங்கோ... ஜாக்ரதை... ஜாக்ரதைன்னு ஒரு நூறு தடவை சொன்னாங்க. அப்புறம் அவரோட எப்ப வருவீங்கன்னு கேட்டாங்க. கணேசன் கண்ணுல காட்டிட்டு உடனேயே கூட்டிக்கிட்டு வந்துடறேன்னேன். உனக்குக் கோடி புண்ணியம்னாங்க.''

''என்னது... என் அப்பாவோட நீங்க போகப் போறீங்களா?''



''ஆமா, இந்த நொண்டிக்காலோட உன்னால எப்படி முடியும்?''

''கண்ணன் சார்... என்ன இது? என் ஆடிட்டர் கணக்கு வழக்கு பார்க்க உதவியாத்தானே உங்களை அனுப்பி வைச்சார். உங்களுக்கு எதுக்கு என் குடும்பம் மேல இவ்வளவு அக்கறை...?''

''அது சரி... யாரோ ஒரு பிராமணனுக்காக உன் கொள்கை, நம்பிக்கைன்னு எல்லாத்தையும் மூட்டை கட்டி வெச்சுட்டு நீ அந்த பிராமணர் நலனுக்காக பூஜை செய்யலாம் - பதிலுக்கு நான் உனக்கு, உன் குடும்ப சிக்கல்கள் தீர உதவக் கூடாதா?''

கண்ணனின் பதில் கணேஷை வாயடைக்கச் செய்துவிட்டது.

''கண்ணன் சார்... மிஸ்டர் கணேஷோட குடும்பச் சிக்கல்கள் ஒண்ணும் சாதாரணமானதில்ல. அதெல்லாம் தீரணும்னா அதுக்குப் பலகாலம் ஆகும். அப்பா பைத்தியம்... அக்காவுக்கு கணவர் சரியா அமையல... தங்கைக்கு காக்கா வலிப்பு... இதெல்லாம் எப்படிச் சரியாகும்?''

அனுராதா அவன் சார்பில் கேட்டதிலும் நியாயம் இருக்கத்தான் செய்தது.

''இதோ பாரும்மா... ஒரு பொருள் தொலைஞ்சுபோனா தொலைச்ச இடத்துல தேடணும். அப்பத்தான் கிடைக்கும். அந்த இடத்தைத் தவிர உலகம் பூரா தேடினாலும் அது கிடைக்காது. நான் தொலைஞ்ச இடம் தெரிஞ்சு, சரியா தேடத் தெரிஞ்சவன். அதனால நீ சொல்ற அந்தப் பலகாலம்... எனக்குச் சொற்ப காலம். நான் ஒண்ணும் இந்த கணேஷ் மாதிரி 'எப்படி நம்பறதுன்னே தெரியலை'ன்னு சந்தேகத்துக்குள்ள நம்பிக்கையை வளர்க்கறவன் இல்ல... நம்பிக்கைக்குள்ள நம்பிக்கையை வளர்க்கறவன்...''

கண்ணனின் பதிலுக்குள் ஒரு ஆழமான உட்பொருள்.

''மிஸ்டர் கண்ணன். இது என்ன உடனடியா நடக்கற விஷயமா?''

''ஏன் நடக்காது? கங்கைல இவர் மூழ்கினார்னா பாவக் கணக்கு நேராகும். பாவக் கணக்கு நேரானா, இந்தப் பாதகமும் ஒரு முடிவுக்கு வந்துதானே தீரணும்?''

''அப்படியா... அப்ப ஊர்ல இருக்கற அவ்வளவு பைத்தியங்களும் இந்தக் கங்கையில மூழ்கினா பாவம் ஒழிஞ்சு போய் அவங்க குணமாயிடுவாங்களா? என்ன சொல்றீங்க நீங்க...?''

''உம்... நிச்சயமா! அதுக்குத்தானே கங்கை இருக்கு. பைத்தியமோ இல்லை வைத்தியனோ... அவனுக்குள்ள நான் இருக்க, ஐ மீன் அவனோட நான் இருக்க, என்கூட கண்ணன் இருக்கான். இனி எந்தப் பாவமும் என்னை எதுவும் செய்யாது... 'கங்காமாதா என் பாவங்களை வாங்கிக்கோ'ன்னு சொல்லி முழுக்கு போட்டா அவளும் வந்து வாங்கிப்பா. அந்தப் பாவமும் போயே தீரும்... குணப்பாடும் ஏற்பட்டே தீரும். இங்க பாவத்தைவிட மனோபாவம் ரொம்ப முக்கியம்'' என்று சொன்ன கண்ணன்,

''சுவாமிநாதன் சார்... வாங்கோ நாம போவோம்'' என்று எழுந்து அவரைத் தொட்டுத் தூக்க; அவரும் மறுபேச்சு பேசாமல் மந்திரித்த கோழிபோல அவனோடு வெளியேறத் தொடங்கினார்.

கணேஷும் அனுராதாவும் அப்படியே விக்கித்துப் போய் நின்றனர்.

கணேஷிடம் இனம்புரியாத ஒருவித அவஸ்தை கொந்தளித்தது.

சீனு சாய்வாக படுத்தபடியே சுந்தர காண்டம் படித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் ராஜம் ஆப்பிளை துண்டாக நறுக்கி தோல் சீவிக் கொண்டிருக்க, ''அம்மா... அப்பா...'' என்கிற பாசம் மிகுந்த குரலோடு வந்து நின்ற சம்பத்தையும் சாருவையும் பார்த்து ''சம்ப்பா...'' என்று ஒரு புத்துயிரைத் தொட்டாள் ராஜம். சாரு முதல் காரியமாக மாமியாரின் காலில் விழுந்து எழுந்தாள். அப்படியே நீண்டு கிடந்த சீனுவின் கால்களையும் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டாள். பத்து நொடிகளுக்கும் குறைவான காலகதியில் அவள் வெளிக்காட்டிய அந்தப் பணிவும் பக்தியும் அவளது மாற்றத்தை ஒரு தடிமனான புத்தகம் அளவுக்குச் சொல்லி முடித்தே விட்டன.



''அப்பா எப்படிப்பா இருக்கேள்?''

''இருக்கேன்ப்பா... ஆமா பிரயாணமெல்லாம் நன்னா அமைஞ்சதா?''

''அதெல்லாம் ஒரு பிரச்னையுமில்லைப்பா. வழியெல்லாம் உங்க கவலைதான்...''

''எனக்கு ஒண்ணுமில்லை. உனக்காகத் தான் காத்துண்டுருக்கேன்.''

''ஆமாம்பா... நீ எப்ப வருவே உன்னை எப்ப காசிக்கு அனுப்பி அந்தப் பெட்டியை எடுத்துண்டு வரச் சொல்லலாம்னு துடிச்சிண்டே இருந்தார். நல்லவேளை நீ வந்துட்டே...''

''என்னால இப்ப கூட நம்ப முடியலை... இப்படி கூடவாம்மா நடக்கும்?''

''நடந்துடுத்து... என் கண்ணன் என்னைவிட்டுக் குதிச்சு ஓடிப்போயிட்டான். நர்மதை ஆத்தங்கரைல ஒரு சன்யாசிகூட எச்சரிக்கை செய்தார். ஆனா பிரயோஜனமில்ல. அவனை யாரால கட்டிப்போட முடியும்?

வழியெல்லாம் அவனால் அற்புதங்கள் நடந்தது. ஒரு கர்ப்பவதி வயித்து மேல போய் கொஞ்ச நாழி உக்காந்தான்.

நர்மதை, கங்கைன்னு எல்லா புண்ணிய நதிகள்லயும் குளிச்சான். இப்ப ஒரு நாத்திகனை மணியாட்ட விட்டுண்டு இருக்கான். தூர இருந்த உங்களையும் ஒண்ணா இங்க கூட்டிண்டு வந்து விட்டுட்டானே...''

"அப்பா நீங்க பதட்டப்படாதீங்க... நான் இப்ப உங்களுக்கு இரண்டு விஷயத்துல உறுதி தரேன். இப்பவே காசிக்குக் கிளம்பிப்போய் அந்தக் கண்ணனோடதான் திரும்ப வருவேன். அதுமட்டுமில்ல... இனி ஒரு நாள்கூட அவனுக்கான பூஜையை விடமாட்டேன். உங்க சார்பா நான் தான் செய்வேன். நீங்க ஓய்வெடுத்துண்டா போறும்பா எனக்கு...''

சம்பத் மிகுந்த உணர்ச்சி வயப்பட்டான்.

"ஆமாம் மாமா... அவசியப்பட்டா வேலையை விட்டுட்டு குணசீலத்துக்கே கூட நாங்க வந்துடறோம்...''

சாரு, சீனுவுக்கு உச்சகட்ட இன்ப அதிர்ச்சி அளித்தாள். அப்படியே சற்று குமட்டுவதுபோல முகம் கோணினாள்.

"என்னம்மா... என்ன ஆச்சு?"

''தெரியலம்மா... ஃப்ளைட்ல வந்தது எனக்கு ஒத்துக்கலை. ஒரே தலை சுத்தல்... வாந்தி...''

''ஐய்யய்யோ... சம்பா இப்பவே டாக்டர் கிட்டகாட்டு. அவர் ஏதாவது மருந்து தரட்டும்'' என்றாள் ராஜம். அப்போது சீனுவைப் பரிசோதிக்க டாக்டரும் அவரோடு வியாதியஸ்தர் களுக்காக பிரார்த்தனை செய்யும் சில சாதுக்களும் அங்கே வந்தபடி இருந்தனர். அவர்களில் நர்மதைக் கரையில் எச்சரிக்கை செய்த அந்த சன்யாசியும் சிரித்தபடியே வந்ததுதான் ஆச்சரியம்!

*

# 28

*'சப்தமே சாஸ்வதம்; அதைச்*
*சொல்வதென் சங்கக்கரம்!*
*இயக்கமே உயிர்த்திறம்; அதைச்*
*சொல்வதென் சக்கரம்.'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

பரிசோதிக்க வந்த டாக்டரோடு கூடவே வந்த அந்த சாதுக்கள் நோயாளிகளைக் கனிவுடன் பார்த்த விதமும், அவர்கள் தலையில் கைவைத்து வருடிக் கொடுத்த வாஞ்சையும் அலாதியாக இருந்தது. கவனித்தபடியே இருந்த சீனுவும் ராஜமும் அவர்கள் தங்களைச் சமீபிக்கவும் பரபரப்புக்கு ஆளாயினர். குறிப்பாகப் பயணத்தின் போது ரயில் பெட்டியில் உடன் வந்ததில் இருந்து, நர்மதை ஆற்றங்கரையில் கண்ணனைப் பற்றி பேசிச் சென்ற அந்த சன்யாசியை அவர்களோடு பார்க்கவும், இருவரிடமும் ஒரு ஆச்சரிய அதிர்வு ஏற்பட்டது. அவரும் புரிந்ததுபோல சீனுவின் சிரத்தின் மேல் கை வைத்து வருடியவர் அப்படியே தன் கரத்தை மார்புப் பாகத்துக்குக் கொண்டு வந்தார்...

"என்ன... பிரச்னை இங்க தானே?'' என்றும் கேட்டார். சீனுவிடம் ஆமோதிக்கும் பாவனை.

"எல்லாம் கண்ணன் பண்ற கூத்து...'' என்று உதட்டைச் சுழித்து சிரிக்க வேறு செய்தார்.

"ஸ்வாமி... நீங்க சொன்ன மாதிரியே கண்ணன் குதிச்சு ஓடிப்போயிட்டான். நான் ஜாக்ரதையா தான் இருந்தேன். ஆனா கண்ணை எதுவோ ஒண்ணு கட்டிடுத்து ஸ்வாமி...'' என்றார்...

''எதுவோ ஒண்ணா... கண் வேற கண்ணன் வேறயா? அவன் தான் கட்டிட்டான். அவன் ஓட முடிவு செய்தா யாரால் தடுக்க முடியும்? அவன் குதிச்சு ஓடற ஆறு... அதுல ஒரு துளிதான் நாம். துளிகளான நம்மால ஆத்தோட சேர்ந்து ஓடத்தானே முடியும்?''

டாக்டரே சற்று வியந்தவராக ''உங்களுக்கு ஏற்கெனவே அறிமுகம் இருக்கா?'' - என்று கேட்டார்.

''ஆமாம் டாக்டர்... ரயில் பயணத்துல ஸ்வாமிகளைப் பார்த்தேன். அப்புறம் நர்மதைக் கரைல... இப்ப இங்க! என்ன சம்பந்தம்னு தெரியல. தொடர்ந்து வந்துண்டே இருக்கார்'' என்றார் சீனு.

அதற்கும் பதிலாக ஒரு மர்மச் சிரிப்பு சிரித்த அவர் சம்பத்தையும் சாருவையும் ஒரு பார்வை பார்த்தார். இருவரும் பதிலுக்கு அவரைச் சற்றுக் குழப்பத்தோடு பார்த்தனர். ''என்ன... வேஷம் போட்ட கண்ணனைப் பற்றியும் வேதம் சொன்ன கண்ணனைப் பற்றியும் உங்களுக்குள்ள ஒரே குழப்பம் போல இருக்கு...'' - என்று அவர்களைப் பார்த்துக் கேட்கவும் இருவரிடமும் ஒரு சிறிய திக்கு முக்காடல்.

''இவன் என் ஒரே பிள்ளை... இவ என் மாட்டுப் பொண். எனக்கு நெஞ்சுவலின்ன உடனே பறந்து வந்துருக்கா...'' - என்று சீனு இருவரையும் அவருக்கு வேகமாக அறிமுகம் செய்தார். அப்போது படுத்திருப்பது தவறு என்பது போல எழுந்து அமர முயன்றார். மார்புப் பூணூல் கையில் சிக்கிக் கொஞ்சம் தடை செய்தது.

அந்த சன்யாசி அதைப் பார்த்துச் சிரித்தார். பின் ''பேசாம படுத்திரு... நீ படுத்ததாலதான் இவன் இப்ப இங்க நிக்கறான்... சில விஷயங்கள் நடக்கும்போது அதிர்ச்சியா இருக்கும்... ஆனா அதுக்கு ஒரு முடிவு தெரிய வரும்போது, அதே அதிர்ச்சி



ஆனந்தமா மாறிடும். அரிசி சாதமாகற மாதிரி...'' என்றவர் மார்பில் பூணூலைப் பார்த்து ''இதை பிராமணன் கறதால தானே போட்டிருக்கே?'' என்றும் கேட்டார்.

''ஆமாம் ஸ்வாமி...''

''பிராமணன்னா எதுக்குப் பூணூல்... காரணம் தெரியுமா?'' - அவரது கேள்வி எல்லோரையுமே அவரை நோக்க வைத்தது.

''பெரியவா போட்டுவிட்டா... போட்டுண்டுருக்கேன். பெருசா காரணம் தெரியாது...''

''நான் சொல்லட்டுமா?''

''ஆஹா... புதுசா உங்க மூலமா ஒரு பொருள் தெரிய வந்தா சந்தோஷம் தானே?''

''பூணூலுக்கு எப்பவுமே ஒரே பொருள் தான். நாம் நமக்காக பூண்ட நூல்தான் பூணூல் ஆகறது. மொத்தத்துல இது நூல். நூல்னா புத்தகம்னும் ஒரு பொருள் உண்டு. புத்தகம் எழுத்தால ஆனது. எழுத்து சப்தத்தால ஆனது. சப்தத்தை சிறை பிடிச்சுட்டா எழுத்து இல்லியா?''

''ஸ்வாமி... இது ஒரு அருமையான வியாக்யானம்!''

''சொல்லி முடிச்சுடறேன். புத்தகம்கற படிப்பு அதாவது அந்தப் படிப்பு சப்தம் மனசுல குடி கொண்டு படிச்சவன்ங்கற பெருமையைத் தந்து மனசோட மானத்தைக் காக்கும். அதாவது புத்தகம்கற நூல் மனசுக்கு... புத்தாடைகள்ள இருக்கற நூல் உடம்புக்கு. ரெண்டுமே மானத்தைக் காக்கறதுங்க. அது மட்டுமா? இந்த ரெண்டு மாதிரி வளைஞ்சு கொடுக்க எதாலயும் முடியாது.

''ஸ்வாமி... உங்க வியாக்யானத்துக்கு ரொம்ப நன்றி. ரொம்பவும் ஆழ்ந்த கருத்து நீங்க சொன்னது. காரணமில்லாம இதை நீங்க சொல்லைன்னு நான் நினைக்கறேன்...''

அதை அந்த சன்யாசியும் ரசித்தார். பின் சிரித்தபடியே பதில் கூறத் தொடங்கினார்.

"நூலைப் படிச்சா போறுமா... அதன்படி நடந்துக்கணும் இல்லையா?"

"அப்ப நான் நடந்துக்கலையா ஸ்வாமி? எனக்கு என் பெரியவா சொல்லிக் கொடுத்த அத்தனை ஆசார அனுஷ்டானங் களையும் நான் செய்யாம இல்லையே... என் செயல்கள்ள எனக்குத் தெரிஞ்சு பழுது இருக்கறதாவும் தெரியலியே..."

"அப்படியா...? ஆமா ஆசாரம்கறது என்ன?"

"ஸ்வாமி... ஆசாரம்னா... ஆசாரம்னா... பக்திபூர்வமான செயல்பாட்டைத்தான் நான் ஆசாரம்னு நினைக்கறேன்."

"இதுவா தெளிவான பதில்? சாரம்னா என்ன முதல்ல அதுக்குப் பதிலைச் சொல்..."

"சாரம்னா... சாரம்னா... இல்ல ஸ்வாமி - நான் ஒண்ணு சொல்ல நீங்க ஒண்ணு சொல்ல... எதுக்குச் சங்கடம். நீங்களே சொல்லிடுங்கோ..."

"சாரம்கறதுக்கு இடத்துக்கு இடம் ஒரு அர்த்தம் உண்டு. கோயில்ல கோபுரமோ இல்ல நாம வசிக்க வீடோ கட்டும் போது சாரம் கட்டுவோம் இல்லியா?"

"ஆமாம்..."

"அப்படி சாரம் கட்டாம கோபுரத்தைக் கட்ட முடியுமா?"

"அது எப்படி முடியும்?"

"அதே மாதிரிதான் மனசுல ஆண்டவன் பேரால பக்திங்கற சாரம் கட்றோம். அதுக்குப்பேர்தான் ஆசாரம். இந்த ஆசாரம் உள்ளுக்குள் ஸ்திரமான ஞான கோபுரத்தை எழுப்பத்தான். அந்தக் கோபுரம் எழும்பிடுத்துன்னா இதுக்கு வேலை கிடையாது. இதைப் பிரிச்சுடலாம்..."



"ஞானிகளுக்கு ஆசார அனுஷ்டானம் அவசியம் இல்லைங்கறேளா?"

"தேவைப்படாதுன்னு சொல்ல வரேன்... ஆசாரம்கறது ஒரு நிலையானதை அடையறதுக்கு உதவி செய்யற ஒரு தற்காலிகம். அதையே பெரிசா நினைச்சு அதுலயே நிக்கறது மூடம் இல்லையா?"

"அப்படின்னா?"

"ஆசாரத்துலயே நின்னுட்டே நீ... பக்தியுள்ள நெஞ்சுக்குள் நிறையவே தயையும், கருணையும் இருக்கும். அது ஒரு புழு பூச்சிக்கு எதாவது ஒண்ணுன்னாலும் கவலைப்படும்.

ஒரு ராஜா கூட கவலைப்பட்டான்... அவன் ஒண்ணும் உன்னை மாதிரி ஆசார அனுஷ்டானத்துல ஆழ்ந்து கிடந்தவன் இல்லை. அவனோட பிள்ளை ஒரு கன்னுக்குட்டி மேல தன் ரதத்தை ஏத்திக் கொன்னுட்டான். அந்தக் கன்னுக்குட்டியோட தாய்ப் பசு வந்து மணி அடிச்சு நீதி கேட்டுது. பதிலுக்குத் தன் பிள்ளையைத் தேர்க்கால்ல இட்டுக் கொல்ல அவன் தயாரானான்.

எப்பேர்ப்பட்ட செயல்?"

அந்த சன்யாசியின் கேள்வி சுற்றியுள்ள அவ்வளவு பேரையுமே ஆழ்ந்த கவனத்துக்கு உள்ளாக்கி விட்டது.

"ஸ்வாமி... நீங்க இதைச் சொல்லும் போது தான் என் தப்பு எனக்குப் புரியறது. என் பிள்ளை கூட ஒரு வகைல அந்த ராஜாவோட பிள்ளை மாதிரிதான்... ஆனா நான்தான் அந்த ராஜா

மாதிரி நடந்துக்கல. என்கிட்ட செயல்ல மூடம் இருக்கு... வாஸ்தவம்தான்!''

''புரிஞ்சா சரி... உன் பூஜையால கண்ணன் உன்னைப் பார்த்தான். ஆனா உன் செயலால தான் அவனை நீ பார்க்க முடியும். ஒருத்தன் இப்ப வெறும் செயலால மட்டுமே கண்ணனைப் பார்த்துண்டே இருக்கான். கண்ணனும் அவனுக்காக இப்ப அவன் சொல்ற வேலையை எல்லாம் செய்துக்கிட்டு இருக்கான்...!''

''ஸ்வாமி என்ன சொல்றேள் நீங்க... எனக்கு இந்த இடம் மட்டும் புரியலை.''

''போகப் போக புரியும். தவறை உணர்ந்த நீ அந்த ராஜாமாதிரி உன் பிள்ளையைத் தண்டிக்க வேண்டாம். அதுக்காக மனசார வருத்தப்'பட்டு கங்கைல போய் திரும்ப மூழ்கு...

இப்படிப்பட்ட பாவங்களைக் கரைக்கத்தான் பகீரதன் கங்கையைக் கொண்டு வந்தான். தம்பி... நீயும்தான்! போய் கங்கைல மூழ்கி எழு!

உன் முன்னோர்களோட பூஜாசக்திதான் நீ இங்க வரவே காரணம். நான் உங்ககிட்ட பேசவும் அதுதான் காரணம். இதெல்லாம் ஒரு கணக்கு. ரொம்ப சூட்சுமமான கணக்கு.

லட்ச ரூபா சம்பளம், அதிகாரமான பதவி, கார்ல பயணம், ஏ.சி. அறை வாழ்க்கைங்கறதெல்லாம் இந்தக் கணக்கு முன்னால சுண்டைக்கா! பதவி, அதிகாரத்தைக் கடவுள் ஒரு பரிசாத்தான் கொடுக்கறான். அப்படியே பரீட்சையும் ஆரம்பமாகுது. அந்தப் பரிசுக்காக சந்தோஷப்படலாம் தப்பு இல்ல... ஆனா அந்தப் பரிசுதான் பெரிசுன்னு நினைச்சா முக்திங்கற பெரிய பரிசு கிடைக்காம போயிடும். இந்தப் பூமிக்கு வந்துருக்கற



கண்ணனை இப்ப உங்களால பாக்க முடியலையே... அப்படியும் ஆகிடும்.''

அவர் இறுதியாகச் சொன்னது சீனுவைப் புரட்டி எடுத்தது.

சம்பத்தும் சாருவும் கூட அவர் பூடகமாகப் பேசுவதைப் புரிந்து கொண்டு விட்டனர்.

''ஸ்வாமி... கண்ணன் வந்துருக்கான்னு சொன்னேளே... நிஜமா ஸ்வாமி?'' - என்று சம்பத் மட்டும் வாயைத் திறந்தான்.

''அப்ப அவன் வர முடியாதவன்... வர மாட்டாதவன் கறதுதான் உன் அடிப்படையான அபிப்ராயமா?''

அவரது மடக்கலில் திணறத் தொடங்கினான்.

''இப்படி வரமுடியாத, வரமாட்டாதவனுக்காகவா இவ்வளவு நான் உன் தகப்பனார் பூஜை செய்தார்?''

''இல்ல... நான் கேட்ட கேள்வியோட பொருளே வேற. எங்க பக்தி, செயல் இதுல பிழை இருக்கலாம். ஆனா ஒரு பிழையும் இல்லாத எத்தனையோ பாகவதாள் பத்தி கேள்விப் பட்டிருக்கேன். அவாளுக்குக் கூட அவன் தரிசனம் கிடைச்சதா தெரியல... அதான்!''

''தப்பு... கேள்வியே தப்பு... நீ சொன்ன மாதிரி பக்திக்கும் செயல்பாட்டுக்கும் கொஞ்சமும் இடைவெளி இல்லாத பாகவதாட்களுக்கு அவன் தரிசனம் கிடைச்சிருக்கு. அவங்க அதைச் சொல்லிப் பெருமைப்பட்டுக்கறத விரும்பாம இருந்துருக்கலாம். அது உனக்கு எப்படித் தெரியும்?''

''அப்ப அவன் வந்து போற பூமியா இப்படி ஒரே மேடும் பள்ளமுமா ஒரு பக்கம் தீவிரவாதம், இன்னொரு பக்கம் குண்டு வெடிப்புன்னும் இருக்கு...?''

"ஒரு மாளிகை சுத்தமா இருக்கணும்னா ஒரு மூலைல குப்பையைக் கூட்டி அள்ளத்தான் வேணும். தீவிரவாதம், குண்டு வெடிப்பு, சமாதானமில்லாத கொந்தளிப்புகள் எல்லாம் மனுஷ சமுதாயம் கோயிலுக்கு வந்து பிரார்த்தனைங்கற பேரால போடற குப்பைப்பா... அந்த எண்ண அலைகள்தான் பள்ளம் கண்ட இடத்துல பாயற வெள்ள நீர் மாதிரி, தப்பான தளம் உள்ள மனங்களுக்குள்ள புகுந்து நீ சொல்ற மாதிரி குண்டு வெடிப்பா சமாதானமின்மையா வெளிப்படுது..."

"இந்த விளக்கம் புதுசா இருக்கு... இதனால அப்பாவிகள் பாதிப்புக்குள்ளாகறாளே... அதைத்தானே தாங்க முடியல..."

"பாவி, அப்பாவிங்கறதுல்லாம் உன் பார்வை. ஆனா பூமியில காரணமில்லாம ஒரு காரியமில்லை. நூறு வயசாகி செத்தா அது நல்ல சாவு... பத்து வயசுல போனா அது கெட்ட சாவுங்கறது மனுஷன் ஆசா பாசங்களோட பேசற பேச்சு.

ஒரு ஞானிவரைல சாவுன்னா முடிவுன்னு மட்டும்தான் பொருள். இந்த உடம்பைச் சுமந்து இதுக்குத் தினம் சோறு போட்டு, இதோட பேச்சைக் கேட்டு ஆசாபாசங்களுக்கு அடிமையாகி நூறு வருஷம் ஆசைகளோட அலைபாயறதுதான் உண்மைல பாரமான விஷயம். சீக்கிரம் போய்ச் சேர்றதுங்கறதுதான் சுகமான விஷயம்."

"அப்ப பதினாறு பேறுகள்ள தீர்க்க ஆயுளை ஒரு பெரும் பேறா குறிப்பிடக் காரணம்?"

"தம்பி... உன் கேள்விகளுக்கு இன்னொரு சமயம் பதில் சொல்வேன். என் வரைல உனக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். சொல்லும் செயலும் ஒண்ணா இருந்தா



கிருஷ்ண தரிசனம் நிச்சயம். இதைப் புரிஞ்சுக்கோ... உனக்கு இன்னமும் நிறைய அனுபவங்கள் பாக்கி இருக்கு. போ... ஓடிப்போன கண்ணனைத் தேடிப் பிடி. நீ அந்தக் கண்ணனோட இங்க வரும்போது இங்கேயும் ஒரு கண்ணன் வந்துருப்பான்."

அவர் ஆசீர்வதிப்பதுபோல கைகளை உயர்த்தியபடியே பேசிவிட்டு அங்கிருந்து அடுத்தடுத்து நகரத் தொடங்கி விட்டார்.

சீனுவிடம் ஒரு அசாத்ய மௌனம்!

அவர் வரையில் அவர் மனது அந்த சன்யாசி சொல்லியிருந்த தோக்கால் சோழன் கதையில் சிக்கியிருந்தது. மொத்த பூஜையும் விரயமாகிவிட்டது போல கூட அவருக்குள் ஒரு உள்ளுணர்வு

"சரி... சாரு நீ இங்க இரு! நான் இப்பவே கிளம்பறேன்..." என்று துரிதமானவனைத் தடுத்து ராஜம், "முதல்ல கங்கைல போய் ஸ்னானம் பண்ணி பெருமாளைச் சேவிச்சுட்டு வா. அப்புறமா கிளம்பலாம். ஏன்னா... காசில கண்ணனுக்கு ஒண்ணும் குறையில்ல. அந்த கணேஷ் திவ்யமா பூஜை பண்ணிண்டு தான் இருக்கான்..." - என்றாள்.

அவர்களும் மறுபேச்சுப் பேசாமல் கங்கைக் கரை நோக்கிப் புறப்பட்டனர்.

★

# 29

*'சதம் கொண்ட கௌரவர்*
*என் சிரசின் பக்கம்*
*பஞ்சமர் பாண்டவர்*
*என் திருவடிப்பக்கம்*
*சதமதுவோ வாழ்வின்நீளம்*
*பஞ்சமமோ உடம்பின் மூலம்*
*மூலமே பெரிதென்றே*
*முகம் மலர்ந்தேன்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

ஹரித்வாரத்து கங்கை. ஆங்காங்கே அனேக சன்யாசிகள் அள்ளி அள்ளி அர்க்யம் விட்டபடி மார்பளவுத் தண்ணீரில் நின்று கொண்டிருந்தார்கள். குளிர் அவர்களிடம் குளிர் காய்ந்து கொண்டிருந்தது. ஆனால் சாருவுக்கு உதறல் எடுத்தது. அதே சமயம் மொத்த சரீரமும் ஒரு ரசாயன மாற்றமடைந்தாற்போல உணர்ந்தாள். நடுங்கினாலும் மனசின் திடத்தோடு சம்பத்தின் கையைப் பற்றிக் கொண்டு மூழ்கி எழுந்தாள்.

இருவருமே ஈரம் சொட்டச் சொட்ட கரை ஏறியபோது, அந்தக் கரை வெளியில் ஒரு டெம்போ வேன் வந்து நிற்க, அதில் இருந்து சொல்லி வைத்த மாதிரி இருபத்தியொரு சன்யாசிகள் இறங்கினார்கள். அவர்களை பிரதட்சணமாகத்தான் கடக்க வேண்டி வந்தது. சம்பத் அவர்களை எண்ணிப் பார்த்துவிட்டு வியந்தவனாக சாருவைப் பார்த்தான்.

"என்னன்னா... இவாளை சேவிப்போங்கறேளா?"



"ஆமாம்... அப்பா, அம்மா பரிகாரம் பண்ணியிருந்தாலும் நாமாளும் பண்றதுல தப்பு இல்லையே..."

"நீங்க எது சொன்னாலும் சரி, எது செய்தாலும் சரி..." என்றவளுக்குத் திரும்பவும் வயிற்றில் சங்கடம். அதைச் சமாளித்தபடியே அவர்களுக்கு வந்தனம் செய்ய இருவரும் தயாரானார்கள்.

ஹரித்வார் அளவுக்கு வாரணாசி கங்கையிடம் அத்தனை சுத்தமில்லை. ஆனால் வேகம் அதிகம். ஒருபுறம் முழுக்கக் கருங்கல் படிகளால் அமையப்பெற்ற படித்துறைகள்.

ஒரு படித்துறை மேல் கண்ணன், கூடவே கணேஷின் அப்பா! இருவரும் முழங்கால் தண்ணீரில் நின்றபடி இருந்தனர். கணேஷின் அப்பா அமைதியாக ஒரு சிறு சலனமும் இன்றி அந்தத் தண்ணீர்க் காட்டை பார்த்தபடி இருந்தார். கண்ணன் அவரைப் பார்த்து "முங்கு போடலாமா?" என்று கேட்டான். அவர் மறுக்கவுமில்லை... ஆமோதிக்கவுமில்லை...

"என்னைப் பாருங்க... நான் செய்யற மாதிரியே செய்யுங்க. ஓர் உயிரோட பயணத்துல உச்சபட்சமான பிறப்புதான் இந்த மனிதப் பிறப்பு. இந்தப் பிறப்புலதான் ஐந்தாலான இந்த உடம்புக்குள்ள ஆறாலான அறிவு, ஏழாலான சப்தத்தை வெளிக்காட்டி செயல்படுது. அந்தச் சப்தத்தை எண்ணம், நினைப்பு, அமைதி இல்லாத தன்மைன்னு எப்படி வேணும்னா சொல்லலாம். அது தான் துக்கமா, சந்தோஷமா மாறுது. கடற்கரையோரத்து மண்ணுல எப்படி வேணா வடிவங்களை உருவாக்கலாம் இல்லையா? அந்த மணல்வெளி மாதிரிதான் மனசு. அதுல உருவாகற இன்ப துன்பங்களுக்கு நிலையான தன்மை கிடையாது. எந்த வடிவமும் இல்லாத பரந்த மணல்வெளியா மனசையும் வெச்சுக்கணும். இந்த வெளி மேல

பாவம்கற நிறைய குப்பை கூளங்கள் படிஞ்சு இருக்கலாம். இப்ப நாம கங்கைல மூழ்கும்போது இந்த வெள்ளம் அந்த வெளில பாய்ஞ்சு அவ்வளவு குப்பை கூளமும் இந்த ஜலத்தோடயே போயிடும் போயிடுச்சுன்னு நினைச்சுக்கிட்டே மூழ்கி எழுந்தா கட்டாயம் போயிடும்... இதுல எல்லாமா அது போயிடும்னு நினைச்சு சந்தேகத்தோட மூழ்கினா அதுபோகவே போகாது.

கங்கை முழுக்குல சங்கல்பமும் பரிபூரண நம்பிக்கையும் ரொம்ப ரொம்ப முக்கியம். என்ன நான் சொல்றது புரியுதா?''

கண்ணன் எதற்காக அப்படி ஒரு நீண்ட வியாக்யானம் செய்தான் என்று தெரியவில்லை. அவரோ ஆமோதிப்பாகத் தலையை அசைத்தார். அதன்பின் கண்ணன் நீரை கைகளில் அள்ளித் திரும்ப கங்கையிலேயே மூன்று முறை விட்டான். அவரும் அப்படியே செய்தார். பின் தலையில் மூன்று முறை மழை நீர் போல தெளித்துக் கொண்டான். அவரும் அப்படியே செய்து கொண்டார். பின்னர் அவர் கரத்தை இழுத்துப் பற்றினான். அவரிடம் அப்போதே ஒருவித பரவசம்... இனம் புரியாத மாற்றம்... ''உம்... மூழ்கலாம்...'' என்றவன், ''கங்கம்மா, கண்ணன் வந்துருக்கேன்...'' என்று அந்த நீரையே ஒரு உறவுப் பெண் போல கருதிச் சொன்னபடி ஒன்று, இரண்டு, மூன்று என்று மூழ்கி எழுந்தான். அவரும் அவனைத் தொடர்ந்தார். அந்த நொடிகளில் அந்த நீர்வெளிமேல் ஒரு வானவில் ஊடுருவியது போல எல்லோருமே உணர்ந்ததுதான் ஆச்சரியம்.

தட்டுத்தடுமாறி நடுங்கிக் கொண்டிருந்த வயதான உடம்புகள் கூட சட்டென்று ஒரு உறுதிக்கு வந்துவிட்டது போல இருந்தன.



வைத்யநாதன் கண்ணனை ஒரு புதிய மனிதனைப் போல பார்த்தார். தலையில் இருந்து நீர் ஒழுகி மூக்கு முன்னால் புல்லாக்கு போல சொட்டியபடி இருந்தது.

கண்ணனிடம் அவனுக்கேயுண்டான அந்த பிரத்யேக சிரிப்பு.

''என்ன ஸ்வாமி... மனசுல இதுவரை இருந்த அடப்பம் நீங்கி, சீரா எல்லாம் ஞாபகத்துக்கு வருதா?''

''அ... அ... ஆமாம். நீங்கோ?''

''கண்ணன் என் பேர். உங்க பேர்...?''

''வை... வை... வைத்யநாதன்!''

''கொஞ்ச காலமா பைத்தியமா இருந்து எல்லாரையும் படுத்தின நாதனும் கூட...''

''அது... அது... ஆமா! அது சரி... ஆங் இங்க நான் எப்படி? இது எந்த இடம்?''

''அடேங்கப்பா... புத்தி தெளிஞ்ச உடனேயே எத்தனை கேள்விகள். வாங்கோ சொல்றேன்...''

''நீங்க... நீங்க யார்?''

''அதான் சொன்னேனே கண்ணன்னு. உங்க பையனுக்கு உதவி செய்ய வந்தவன்...''

''பையன்... பையன்... க... கணேஷ்... கணேஷுக்கா!''

''ஆமாம்... இது காசி. இது கங்கை. இப்ப நீங்க மகா மகா புண்யர். உங்களுக்கு குணமாயாச்சு. இனி நீங்க உங்க குடும்பத்தோட போய் நிம்மதியா சேரலாம்.''

''நீங்க... நீங்க டாக்டரா? எனக்கு எப்படி, குணமாச்சு?''

அவர் கேட்க, பதிலுக்கு கண்ணன் படித்துறை கற்படிமேல் நின்று கொண்டு கங்கையைப் பார்த்தான்.

"நான் டாக்டர் மாதிரி... ஆனா உங்கவரைல இதோ இந்த கங்கம்மாதான் டாக்டர். கர்மத்துக்கு மருந்தும் டானிக்கும் இவதான். வாங்க போகலாம். உங்க பையனைப் பார்க்க வேண்டாமா?"

கண்ணன் அவரது கைகளைப் பற்றி இழுத்துக்கொண்டே போனான்.

கணேஷ் கைகளில் அந்த மரப்பாச்சி கண்ணன். உற்றுப் பார்த்தபடியே அமர்ந்திருந்தான். பக்கத்தில் பூக்கூடையில் ஏராளமான உதிரிப்பூக்கள். அன்றைய பூஜைக்காக அமர்ந்திருந்த வனிடம் ஒரு சிறு மாற்றம். அனுராதாவும் அதைக் கவனித்த படியே இருந்தாள்.

"என்ன கணேஷ்... நடக்கற ஒவ்வொரு சம்பவத்துலயும் ஒரு அப்நார்மல் தெரியறதால உங்களுக்குள்ள ஒரு புது நம்பிக்கையா?"

"இல்ல அனுராதா... என்கிட்ட இப்ப இருக்கறது குழப்பம். இதை நம்பிக்கைன்னு சொல்ல முடியாது..."

"உங்கப்பாவோட அந்த கண்ணன் வந்த பிறகுமா?"

"அந்த கண்ணனோட செயல்கள்ல நான் ஒரு வேகத்தைப் பாக்கறேன். கூடவே ஒருவித மர்மமான புத்திசாலித்தனம்..."

"அப்ப இந்த மரப்பாச்சி கண்ணனை உத்துப் பார்க்கக் காரணம்?"

"எனக்குச் சொல்லத் தெரியல... இந்த பொம்மைக்கு நான் பலதடவை பூஜை செய்துட்டதை எதோட சேக்கறதுன்னும் தெரியல. இங்க நடந்துட்டிருக்கிற சம்பவங்களுக்கெல்லாம் ஒரு விடை இருக்கறதா நான் நினைக்கறேன்."

"ரொம்பக் குழப்பறீங்களே?"



"கரெக்ட்... என்னோட இப்போதைய மனநிலையும் அதுதானே?"

"குழம்பு குழம்பு... நல்லா குழம்பு... எவ்வளவு குழம்பறோமோ அவ்வளவுக்கவ்வளவு தெளிவு பிறக்கும்." என்று ஒரு குரல் இடையிட, கணேஷும் திரும்பினான். கண்ணன்தான்! கூடவே தெளிவான பார்வை மற்றும் முகபாவங்களோடு வைத்யநாதன்.

"கணேசா..." என்றார் அவரும்.

"அப்பா...!"

"என்னடா... எப்படி இருக்கே?" அவர் கணேஷை நெருங்கிக் கட்டிக் கொள்ளாத குறை.

"அப்பா நான் உங்களைக் கேக்கணும். நீங்க எப்படி இருக்கீங்க?"

"பார்த்தா தெரியல... நான் இப்ப பைத்தியக்கார வைத்யநாதன் இல்லை. உன் நண்பனால குணமாயிட்ட வைத்யநாதன். காசி வரணும், கங்கைல நீராடணும்கறதெல்லாம் என் கனவு. அது எனக்கே தெரியாம ஈடேறி இருக்கு. எல்லாமே கனவு மாதிரி இருக்குப்பா."

"ஆமாம்பா... உங்க விஷயம் என்வரைல பி.சி. சர்க்கார்ங்கற மேஜிக் நிபுணர் பண்ற மேஜிக்கை விட பெருசா இருக்கு..." என்ற கணேஷ், அந்த மரப்பாச்சி பொம்மையை அவரோடு பேசும்போது தன் மடிமேல் வைத்து விட்டிருந்தான். அது அப்படியே ஒரு முழு மனிதன் அவன் மடிமேல் படுத்திருப்பது போல திடீரென்று கனக்கத் தொடங்கியது. ஒரு வினாடி அந்தக் கண்ணன் அப்படியே அவன் மடிமேல் கிடக்கிற மாதிரி கூட கணேஷுக்குத் தெரிந்தது.

''என்ன கண்ணன் இது, என் மடிமேல போய் படுத்துக்கிட்டு...'' என்று கையிரண்டையும் பின்னால் ஊன்றியபடி அவனைச் சுமக்கின்ற பாரத்தோடு கத்தவும், அனுராதா அதிர்ச்சியோடு பார்த்தாள். அவளுக்கும் சரி, வைத்யநாதனுக்கும் சரி மடிமேல் மரப்பாச்சி கண்ணன்தான் தெரிந்தான்.

''என்னப்பா சொல்றே... உன் மடிமேல பொம்மைல்ல கிடக்கு...'' என்றவர் அதை கையில் எடுக்க, பொசுக்கென்று அது அவர் கைக்கு வர, அவனும் பாரம் நீங்கி விட்டது போல உணர்ந்தான்.

திரும்பவும் அவனிடம் குழப்பம். தலையை ஈரக் காக்கை போல உதறிக் கொண்டான்.

''என்னப்பா நான் பாட்டும் இங்க இருக்கேன். நீ என்னமோ நான் உன் மடி மேல கிடக்கறதா பெனாத்தறே... என்ன ஆச்சு? கால்லதான் சுளுக்கு... மனசுக்கு என்ன?'' என்று கண்ணனும் தன் துணிப் பையைத் தேடி எடுத்து அதைத் திறந்தபடியே கேட்டான்.

கணேஷுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அப்போது செல்போன் சிணுங்கி அந்தச் சூழலின் போக்கைக் கலைத்தது.

ஹரித்வாரிலிருந்து டாக்டர் பேசினார்.

''மிஸ்டர் கணேஷ்... இன்னிக்கு பூஜை முடிஞ்சுதா...?''

''ஆமாம்... இல்ல... இனிதான் பண்ணப் போறேன்.''

''நல்லது... இன்னியோட உங்க பூஜைக்கும் ஒரு முற்றுப்புள்ளி விழப்போகுது. இங்க மிஸ்டர் ஸ்ரீனிவாசனோட சன் மிஸ்டர் சம்பத்குமார் வந்துட்டார். அவர் இப்ப வாரணாசிக்குக் கிளம்பிட்டார். உங்க செல் நம்பர் அவர்கிட்ட இருக்கு. அங்க வந்தவுடனேயே காண்டாக்ட் பண்ணுவார். அவர் கிட்ட நீங்க அந்த மூங்கில் பெட்டியை அந்த மரப்பாச்சி கண்ணனோட ஒப்படைச்சிடலாம். அட்வான்ஸா உங்களுக்கு நாங்க எங்க நன்றிகளைத் தெரிவிச்சுக்கறோம்...''



''நோமென்ஷன் சார்...''

''தேங்க்யூ... நான் அப்புறமா பேசறேன்...''

''நல்லது சார்...'' - கணேஷ் போனை ஆஃப் செய்துவிட்டு நிமிர, வைத்யநாதன் மரப்பாச்சி கண்ணனை மூங்கில் பெட்டி பட்டுத்துணிக்குள் வைத்தபடி இருந்தார். அப்படியே ''கணேஷ்... நீயா பூஜை செய்தே... அங்க உங்கம்மாவும் நானும் சொல்லியும் கேக்காத நீயா பூஜை செய்துருக்கே. இந்தப் புண்ணியம்தான் என் புத்தியைத் தெளிவிச்சிருக்கு போல...'' என்றார். ஆனால் கண்ணன் சட்டென்று பரபரத்தான்.

''வைத்யநாதன்... உங்க ஊருக்குக் கிளம்பத் தயாராகுங்க. உங்களை உங்க மனைவிகிட்ட ஒப்படைச்சுட்டு அப்படியே உங்க பெண்கள் விவகாரத்தையும் கவனிக்கணும். உம் சீக்கிரம் கிளம்புங்க. கிளம்புங்க...'' என்றான்.

அனுராதாவும் கணேஷும் அடுத்த கட்ட இன்ப அதிர்வுக்கு ஆளாயினர்.

✱

# 30

*'புலன்களுக்கெல்லாம்*
*நான் அவதாரம்*
*நினைவுகளுக்குள்ளோ*
*நிகரில்லா தத்துவம்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

**க**ண்ணன், பேச்சோடு நிற்கவில்லை. கணேஷின் அப்பாவோடு படுவேகமாகக் கிளம்பியும் விட்டான். அதுவரை பொறுமையாக அங்கு நடப்பதை ஒரு பார்வையாளர் போல கவனித்து வந்த அனுராதா, கண்ணனின் புறப்பாட்டை ஒரு பெரும் இழப்பாக உணரத் தொடங்கி பரபரப்பானாள்.

''மிஸ்டர் கண்ணன் நில்லுங்க...'' என்று குரல் கொடுத்துத் தடுத்தாள். அதைத் தொடர்ந்து கண்ணன் அவளைத் திரும்பிப் பார்க்கவும், தவித்தாள்.

''என்னம்மா... எதுக்கு நிக்கச் சொன்னே...''

''இல்ல... நீங்க அவசியம் போகணுமா?''

''அது என் கடமைம்மா...''

''.....''

''இப்படி மௌனமா இருந்தா என்ன அர்த்தம்?''

''அது... அது... நான் நிறைய விஷயங்களைக் கற்பனை செய்து வைச்சுருந்தேன்... அதெல்லாம்...''



''நீ கற்பனை செய்து வைச்ச விஷயங்களுக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?''

''இல்ல உங்களோட நிறைய பேசணும். உங்ககிட்ட நிறைய கேள்விகளை நான் கேட்க வேண்டியிருக்கு...''

''பேட்டியா... என்கிட்டயா?''

''ஆ... ஆமாம்...'' - அனு திணறினாள்.

''நோ பிராப்ளம். இப்பவே கூட பேட்டி எடுத்துக்கோ. உனக்கு நான் பதில் சொல்லிட்டே கிளம்பறேன்.''

''தே... தே... தேங்க்ஸ்...''

''ஆமா, என்னை மாதிரி அட்ரஸ் இல்லாத ஆளோட பேட்டியை எல்லாம் உன் பத்திரிகை போடுமா?''

''அட்ரஸ் இல்லாத ஒருத்தரா உங்களை என்னால நினைக்க முடியல...''

''அட்ரஸ்னு நான் சொன்னது வேற பொருள்ல... நான் ஒரு கணக்கன். எனக்கு எல்லாமே கணக்குதான். இந்தக் கணக்கன் கிட்ட நீ பேட்டி காண என்ன இருக்கு?''

''இப்படி நின்னுக்கிட்டே பேசினா எப்படி... முதல்ல கொஞ்சம் உட்காருங்க. எனக்கு கஷ்டமா இருக்கு...''

''விடமாட்டே போல இருக்கே...''

கண்ணன் அந்தக் கேள்வியோடு கணேசனை ஒரு பார்வையும், அவன் அப்பாவை ஒரு பார்வையும் பார்த்துவிட்டு அவள் எதிரில் சடக்கென்று தரையில் சப்பணமிட்டு அமர்ந்தான். பின் தோரணையாகப் பார்த்து சற்றுக் கிண்டலாக, ''கேள்விகள் ஆரம்பமாகட்டும்...'' என்றான். அனுராதா கணேஷைத்தான் முதலில் பார்த்தாள். அவனிடம் ஒரு தெளிவில்லாத குழப்பம்.

''இவருக்குள்ளேயும் நிறைய கேள்விகள் இருக்கு. அதெல்லாம்கூட பிறகுதான். என் வரைல நீங்க ஒரு புதிராத்தான் தெரியறீங்க... உங்க விசிட்... அப்புறம் உங்க பேச்சு, பார்ட்டிகுலரா உங்க மேல பறவைகள் வந்து உங்களை ஒரு மரக்கிளையா நினைச்சு தங்கினதெல்லாம் ஒரு மாய மந்திரம் மாதிரி இருக்கு. அது எப்படி?''

''அது எப்படின்னா... என்ன கேக்கறே நீ?''

''இல்ல... பறவைகள் உங்ககிட்ட எப்படி வந்தது?''

''இது ஒரு விஷயமா... பரிபூரண அன்பை உனக்குள்ள நிரப்பிப்பார்... பாம்புகூட உன்கிட்ட வரும். அதோட தலை மேல நின்னு ஆட்டமே போடலாம். நீ நம்புவியோ மாட்டியோ நான் அப்படி ஆட்டம் போட்டவன்...!''

அந்தப் பதில் அவள் முதுகில் ஊசி ஏற்றியது போல நிமிர்த்தியது.

''பரிபூரண அன்புன்னா... அப்படி நான் இல்லாம இருக்கலாம். ஆனா நிறைய துறவிகள் அப்படி இருந்தது பார்த்திருக்கேன். ஆனா அவங்ககிட்ட இப்படி அதிசயக் காட்சியை நான் பார்த்ததில்லையே...?''

''எப்பவும் சுய அனுபவம்தான் நிதர்சனம். கண்ணும் அதோட காட்சியும் ஒரு எல்லை வரைதான். நீ பரிபூரண அன்புக்கு உன்னை மாத்திக்கோ... அப்புறமா சொல்... ஆனா அது அவ்வளவு சுலபமில்ல. இந்த உலகத்துல இருக்கற மாயை அவ்வளவு சுலபத்துல உன்னை அன்பானவளா நூறு சதவிகிதம் ஆக்கிடாது. ஒரு எண்பது தொண்ணூறு பர்சன்ட் வரை வேணும்னா நீ வரலாம்.''

''அப்ப நூறு பர்சண்ட் வந்தாதான் சாத்யமா?''



''நிச்சயமா... நூறுதான் பரிபூரணம். உனக்கு நான் கணக்குல பதில் சொல்லட்டுமா?''

''எப்படி?''

''அப்படிக் கேள்... ஒண்ணுக்கு பக்கத்துல எத்தனை பூஜ்யம் விழுந்தா நூறு...?''

''ரெண்டு...''

''இந்த ரெண்டு பூஜ்யத்துக்கும் அர்த்தம் என்ன தெரியுமா?''

''சொல்லுங்க.''

''இந்த பூஜ்யம் இருக்கே... இதுதான் எல்லாம். இதுக்கு மட்டும் ஆரம்பமும் கிடையாது, முடிவும் கிடையாது. இதுக்கு மட்டும் கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்குன்னு திசைகளும் கிடையாது. இதுக்குள்ள எல்லாமே வந்துடுது. கொஞ்சம் ஆழ்ந்து யோசிச்சுப் பார்த்தா, இந்த மகாபாரதத்து கண்ணன் பீற்றிப்பானே...? 'ஆதியும் நானே... அந்தமும் நானே... மரம் செடி கொடியும் நானே... எனக்குள்ள எல்லாமே இருக்கு... நான் வேற இந்தப் பிரபஞ்சம் வேற இல்ல'ன்னு தினுசா தினுசா சொல்வானே...? அது கண்ணனுக்குப் பொருந்துமோ பொருந்தாதோ, இந்த பூஜ்யத்துக்குப் பொருந்தும்.

ஒரு ஆச்சரியம் பார்... இது தனியா இருந்தா நத்திங். ஆனா இதுக்குப் பக்கத்துல ஒரு எண்... இரண்டுன்னு வெச்சுக்கோயேன். இது போய் பணிவா முன்பக்கம் நின்னா இரண்டு அடுத்த செகண்ட் இருபதாயிடுது. அதே திமிரா அந்தப் பக்கம் போய் நின்னா பலமடங்கு குறைஞ்சு பாய்ண்ட்டூன்னு ஆயிடுது, இல்லையா?''

''ஆமா... ஆனா நீங்க நூறுக்கு விளக்கம் சொல்லத் தொடங்கி எங்கேயோ போய்ட்ட மாதிரி இருக்கே?''

''அப்படியா... இப்பவே ரிவர்ஸ் கியர் போட்டு பின்னால வந்துடறேன். நான் பூஜ்யம் பத்தி அதோட சக்தியை உனக்கு புரியவைக்கத்தான் இருபது, இரண்டு'ன்னு விளக்கம் கொடுத்தேன்.

'ஒண்ணுமேயில்லாத ஒரு விஷயம் பூஜ்யம். இதுகிட்ட எண்கள் முன்னபின்ன போய் நிக்கும்போது எப்படி சக்தி மிக்க பரிமாணத்துக்கு மாறுது... அது எப்படி முடியும்னு எந்தப் பகுத்தறிவுவாதியாவது இதுபத்தி யோசிச்சுக் கேள்வி கேட்டதுண்டா?''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க?''

''ரொம்ப சிம்பிள்... உடம்பு, மனசுங்கற இரண்டும் பூஜ்யமாயிட்டா ஒருத்தர் பூஜ்ய ஸ்ரீன்னு சாமியார் ஆயிடறார். அதாவது இரண்டுமே பூஜ்யமாகணும். உடம்பு இச்சைகள்ள இருந்து பரிபூரண விடுதலை பெற்றா அது ஸ்தூல பூஜ்யம். மனசுல எண்ணங்களே இல்லாத பரிபூரண அமைதி பெற்றா அது சூட்சும பூஜ்யம்.

இந்த இரண்டு பூஜ்யமும் ஆத்மாங்கற உயிர் பக்கத்துல விழும்போது அந்த ஆத்மா பரிபூரண சித்தி பெற்று மோட்ச கதி அடையுது. இதுல ஒண்ணு குறைஞ்சாலும் அது பரிபூரண மில்லை.''

''அப்ப நீங்க அப்படி ஒரு பரிபூரணமான ஒருவரா?''

''அது எனக்குத் தெரியாது... ஆனா இப்படி பரிபூரணமானவன்கிட்டதான் பட்சிகள் பயமில்லாம வரும். அது மட்டும் தெரியும். அவனால எதுவும் செய்யமுடியும்னும் தெரியும்.''



''இப்படிச் சொன்னா எப்படி... உங்க பதில்படி பார்த்தா நீங்க பரிபூரணமானவரா இருக்கணும்னுல்ல அர்த்தமாகுது...''

''ஓ... கூட்டிக் கழிச்சா விடை உனக்கு அப்படி வருதா... சரி அடுத்த கேள்வி...''

''எனக்கு இப்ப உங்ககிட்ட கேள்வி கேட்கவே தயக்கமா இருக்கு...''

''ஏன் பதில்ங்கற பேர்ல ரொம்பப் போரடிக்கறேனா?''

''இல்ல... ஆமாம்...''

''ஒரு கேள்விக்கு இரண்டு பதிலா... சாரி... நீ என் நேரத்தை வீணாக்கறே. உனக்கு ஒண்ணு மட்டும் சொல்லிக்கிறேன். நான் சொன்ன பதில்லதான் நீ கேக்கப்போற எல்லா கேள்விகளுக்கும் பதில் இருக்கு.

சர்க்கரையைச் சாப்பிட்டுப் பார்த்திராத ஒருத்தனுக்கு இனிப்பை எப்படி வார்த்தைகளால விளங்க வைக்க முடியாதோ, அப்படித்தான் பரிபூரணமில்லாதவர்களுக்கு அதோட சக்தியும் தெரியாது. அது தெரியாததால அதுவே பொய்னும் சொல்லிடறது சுலபம்.''

''இது என்ன பதில்... புரியாத ஒரு விஷயத்தை எப்படி ஒத்துக்க முடியும்? அதை விளங்கிக்க முயற்சி செய்யறது ஒண்ணும் தப்பில்லையே?''

''அம்மாடி... கணவன் மனைவி உறவுங்கறது ஒருத்தரை ஒருத்தர் பார்த்துப் பழகி புரிஞ்ச பிறகா ஆரம்பமாகுது. கல்யாணம்கற புள்ளியில புதுசா சேர்ந்த இரண்டு பேர் அன்னிக்கே நம்பிக்கையோட ஒருத்தரோட ஒருத்தர் கலந்து அப்புறமா போகப் போக குடும்பம்னா என்ன, வாழ்க்கைன்னா என்னன்னு விளங்கிக்கறதில்லையா?''

''அது... அது... சரி அதே இரண்டு பேர் திருமணத்துக்கு முன்னால பழகி, புரிஞ்சுகிட்டு அதன் பிறகு திருமணம் செய்துக்கறது இன்னமும் பெட்டர்தானே?''

''அப்படியா...? ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுகிட்ட பிறகு திருமணமா... அதுக்கு சில மாசமோ, இல்ல சில வருஷமே போதும்னா நீ நினைக்கறே...?''

''போதாதுன்னே வெச்சுப்போம்... ஏதோ கொஞ்சமாவது. புரிஞ்சுக்கலாமே... அது தப்பில்லையே...?''

''அப்படி கொஞ்சமா புரிஞ்சுக்கிட்டது சரியில்லைன்னு வை... அப்ப அந்த ஆணோ பெண்ணோ என்ன முடிவு எடுப்பாங்க?''

''நல்ல வேளை நாம கல்யாணம் பண்ணிக்கலை. பண்ணிக்கவும் வேண்டாம்னு தான் முடிவெடுப்பாங்க...''

''இதே கல்யாணம் பண்ணின ஜோடி என்ன முடிவெடுப் பாங்க...?''

''புரிஞ்சுகிட்ட விஷயம் தப்பா இருந்தா அதைத் திருத்திக்கவோ இல்லை திருத்தவோ தான் முயற்சி செய்ய முடியும் வேற வழி?''

''இப்படி யோசிச்சு சரிப்படுத்திக்கறது பலமா? அப்படி யோசிச்சு பிரிஞ்சு போறது பலமா?''

''சரி, செய்துக்கறதுதான் பலம்?''

''இந்தப் பதிலோட உன் ஆரம்ப கேள்விக்குப் போ. ஒரு விஷயத்தை விளங்கிக்க, அதை விலக்கணுமா இல்லை நேசிக்கணுமாங்கறது உனக்குப் புரிஞ்சுடும்.''

''அப்ப உங்களை விளங்கிக்க உங்ககிட்ட கேள்வி கேட்கக் கூடாதா... உங்களுக்குள்ள விழுந்துக்கணுமா...?''



''அப்படின்னு நான் சொல்லலை... கணக்குச் சொல்லுது. உன் பதில்கள்ள நீ சொன்னே...''

- கண்ணன் கையை நீட்டி சொன்ன விதத்தில் ஒரு அலாதி. அவளால் அதற்கு மேல் அவனிடம் கேட்க முடியவில்லை.

''என்ன பாக்கறே... இந்தப் பேட்டியை நீ உன் ஆசிரியருக்கு அனுப்பினா அப்படியே எடிட் பண்ணி, பச்சை மையால இந்த மாதிரி விசுத்தனமான பேட்டி எல்லாம் இனி எடுத்து நேரத்தை வீணாக்காதேன்னு எழுதிடுவாங்க... சரிம்மா... நான் போறேன்...''

கண்ணன் எழுந்தான். போறேன் என்கிற அந்தப் பதிலில் ஏதோ ஒரு மர்மமான உட்பொருள். கணேஷ் கிட்டத்தட்ட அந்தப் பதில்களுக்குள் தன்னை இழந்திருந்தான். குறிப்பாக நூறுக்கு சொன்ன விளக்கம்... அதிலும் ஒன்றுமே இல்லாத பூஜ்யம் தனியாக இருக்கும்போது ஏதுமின்றியும், அருகே ஒரு எண் வரும்போது அந்த எண்ணை இவ்வளவு நாட்களாக இப்படி ஒரு கோணத்தில் இதைப் பார்க்காமல் போய் விட்டோமே என்று அதே சிந்தனையாக இருந்தான். நெடுநேரம் கழித்து...

''எக்ஸ்க்யூஸ்மி இங்க கணேஷ்னு...'' - என்று ஒரு குரல். திரும்பினால் அறை வாசலில் சம்பத்!

அனுராதாவும், கண்ணன் சொன்ன பதில்களில்தான் கரைந்திருந்தாள். அவளும் சம்பத்தைப் பார்த்துக் கலைந்தாள்.

''நான்தான் கணேஷ்... நீங்க?''

''நான் சம்பத்... இங்க வந்துட்டுப் போனாரே குணசீலம் ஸ்ரீனிவாசன். அவரோட பிள்ளை...''

''ஓ... வாங்கோ... வாங்கோ... நீங்கதானா அது?''

கணேஷ் வாயார வரவேற்றான். உள்ளே நுழைந்த சம்பத் பார்வையோ, முதற் காரியமாக அந்த மூங்கில் பெட்டி மேல்தான் சென்றது.

''எக்ஸ்க்யூஸ்மி...'' என்றபடி அதனருகே சென்றவன் சாஷ்டாங்கமாக அதன் முன் விழுந்தான். பின் எழுந்தான்... அதன் பிறகுதான் பேசவே ஆரம்பித்தான்.

ஸ்ரீனிவாசன் உடல்நலத்தில் ஆரம்பித்து தனது உத்யோகம் வரை வரிசையாகச் சொன்னவன், நாடி ஜோசியம் பார்த்ததையும், அந்தப் பாடல்களின்படியே சம்பவங்கள் நடந்து வருவதையும் குறிப்பிடவும் அனுராதாவுக்கு சொரேல் என்றது. அந்த நொடியில் அவள் பார்வையில் கண்ணன் முதன்முதலாக வரும்போது சுமந்து வந்த அந்தத் துணிப்பை எதிரே சுவரில் தொங்கியபடி இருப்பது தெரிந்தது. கண்ணன் அதை மறந்து விட்டானா? அதற்குள்ளேயும் ஏட்டுக்கட்டுகள்தானோ?

## 31

*'நான்...*
*ரூபங்களில் விஸ்வம்!*
*அண்டங்களில் அணு!*
*பிண்டங்களில் ஜீவன்!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

கண்ணனின் துணிப்பையை எடுத்துத் திறந்தாள் அனுராதா.

''என்ன மேடம்... அந்த கண்ணன் பையை மறந்து விட்டுட்டுப் போய்ட்டாரா?'' என்றான் சம்பத்.



''அப்படி நான் நினைக்கல...'' பதிலோடு அனுராதா உள்ளிருந்து அந்த ஏட்டுக்கட்டுகளைக் கையிலெடுத்தாள். இந்த ஏடுகளிலும் சமஸ்கிருத எழுத்துக்கள்தான்... பாடல்களா...? மந்திர வரிகளா? இல்லை ஏதாவது செய்தியா என்பது அவளுக்குப் புலப்படவில்லை.

ஆனால், அந்த கையெழுத்தும் வடிவமைப்பும், தற்சமயம் கணேசனிடம் உள்ள ஏட்டுக்கட்டுகளுடன் ஒத்துப்போனதுதான் ஆச்சரியம். அனுராதாவின் கண்களிரெண்டும் அலைபாய்ந்தன.

''மைகாட்... மிஸ்டர் கணேஷ்! உங்ககிட்டே இப்ப இருக்கற ஏடுகளோட இது ஒத்துப்போகுது... அனேகமா அதுவும் இதுவும் ஒரு செட்டா இருக்கணும். இதைக் கவனமா படிச்சா ஒரு பெரிய செய்தி நமக்குக் கிடைக்கலாம்...'' என்றாள் அனுராதா... கூடவே அந்த ஏடுகளோடு ஒரு குட்டி புல்லாங்குழலும் இருந்தது.

''புல்லாங்குழல்! எனக்குச் சந்தேகமேயில்லை... வந்திருக்கிறது அந்த கண்ணனே தான்! ஏன்னா ஒரு மனிதனால எவ்வளவு தூரம் சாதிக்க முடியும்னு எனக்குத் தெரியும். இது கண்ணன்தான்... கண்ணனே தான்!'' அனுராதாவிடம் உணர்வுகள் பால் போல பொங்கி வழியத் தொடங்கின.

''மேடம் என்ன சொல்றீங்க நீங்க...? நான் இங்க வர்றதுக்கு முந்தி இங்க ஏதாவது நடந்ததா?'' சம்பத் தனது வினாவைத் தொடங்கினான்.

''என்ன சார் அப்படிக் கேட்டுட்டீங்க... கண்ணன்னு ஒருத்தர் வந்து இங்க என்னவெல்லாம் அற்புதங்கள் நடந்தது தெரியுமா?''

''யூ மீன்...''

''கண்ணன் சார்... சாட்சாத் அந்த கிருஷ்ண பரமாத்மா...''

''வாட்...'' வாயைப் பிளந்துவிட்டான் சம்பத். அதே வேகத்தில் வாயை மூடிக் கொண்டவன், ''நோ... நான் இனி எதையும் சந்தேகப்பட மாட்டேன். ஹரித்வார்ல அந்த மகரிஷி சொன்னதை என்னால மறக்க முடியாது. அவரோட ஒவ்வொரு சொல்லும் மாணிக்கம். அதேபோல சமீபகாலமா எங்கள் வரைல நடக்கற எல்லா சம்பவங்களுமே நாங்க நினைச்சுப் பார்த்திராத அதிசயங்கள். அந்த நாடி ஜோசியமும் ஓர் அற்புதம்...'' என்றான் நெகிழ்வாக.

''சம்பத் சார்... உங்களோட நாடி ஜோதிட ஏட்டுக் குறிப்பு இப்ப எங்க சார்?'' அனு வேகமாகக் கேட்டாள்.

''அது இப்ப ஹரித்வார்ல என் மனைவி சாருகிட்ட இருக்கு. எதுக்குக் கேக்கறீங்க?''

''அதைப் படிச்சுப் பார்க்கத்தான். அதுல இன்னும் என்னவெல்லாம் சொல்லப்பட்டிருந்தது?''

''இந்தப் பூமிக்கு அந்த கிருஷ்ண பரமாத்மா வரப்போறது பத்தித்தான் அதுல குறிப்புகள் இருந்ததா ஞாபகம். துல்லியமா வரிகள் ஞாபகம் இல்லை. 'வெள்ளியெழும் வேளைக்குள்ளே, வியாழன் நிற்கும் நேரமதில், பள்ளியெழுந்தே பாலன் வேடமிட்டு கண்ணனாய் முன்னே வருவான்'னு ஒரு வரி... அதே போலவும் நடந்தது. அப்புறம் 'வள்ளிமணாளன் சோதரன் நாமம் கொண்டவன் முன் வெள்ளெருக்கு போல, வேத கண்ணன் பின் வருவான்னும் இருந்தது.''

''வள்ளிமணாளன்னா முருகன்... முருகனோட சகோதரன் பிள்ளையார்... ஐ மீன் கணபதி, கணேஷ்...! வாவ்... மிஸ்டர் கணேஷ் உங்க பேர்தான். உங்க பேரேதான்...''

அனுராதா முகத்தில் காணாத ஒன்றைக் கண்டறிந்து விட்ட பூரிப்பு.



''ஓ... இப்பத்தான் எனக்கே அந்த வரிக்குப் பொருள் தெரியுது. மேடம் நீங்க சொல்றது சரிதான். இங்க உங்களோட பேசிப் பழகின கண்ணன், அந்த பாரதத்து கண்ணனேதான். ஐ ஹேவ் நோ டவுட்'' சம்பத்திடமும் ஒரு பௌர்ணமிப் பிரகாசம்.

ஆனால் கணேஷ் முகம் சோபையிழந்து பெரும் குழப்பத்தில் தத்தளித்தபடி இருந்தது. அதை அனுராதாவும் கவனித்தாள். ''என்ன கணேஷ் சார்... இன்னுமா உங்களுக்கு நம்பிக்கை வரலை?'' என்றாள்.

அவனும் அவளை பதிலுக்கு வெறித்தான் அதேசமயம் அவனுக்குள் எவ்வளவோ கேள்விகள்.

'அனுராதா விளங்கிக்கொள்ளும் விதத்தில் துளியும் பழுது இருப்பதாகவே தெரியவில்லை. எல்லாமே ஓர் அசாதாரண சம்பவம் நடந்திருப்பதைத்தான் ருசுப்படுத்துகிறது. ஆனால், பரந்த இந்தப் பிரபஞ்சத்தில் இப்படி ஒரு சிலரிடையே அந்த கண்ணன் தன்னை மறைத்துக்கொண்டு வந்து போக வேண்டிய அவசியம்தான் என்ன என்று கேட்டுக்கொள்ளும்போது இடிக்கிறதே...? தான் வந்து போவதே தெரியக் கூடாது என்று அவன் நினைத்த மாதிரியும் தெரியவில்லை. இல்லாவிட்டால் இந்த மாதிரி ஏடுகள் - அதில் பாடல்கள் - அதுக்குள்ளே கடிதம் போட்டுத் தகவல் சொல்வதுபோல தகவல்கள் இருந்து அவை எல்லாமும் தெரிய வருமா?

சரி... எதற்கு இப்படி எல்லாம் நடக்கிறது? உலகில் கடவுளை நேரில் கண்டவர்கள் கிடையாது என்று ஒரு கருத்து நிலவிக் கொண்டிருக்கும் போது, உலகில் பலர் வரையில் நம்பிக்கையில் மட்டும் வாழ்ந்து வரும் அந்தக் கடவுள், எதற்காக இப்படிக் கண்ணாமூச்சி விளையாட வேண்டும்? அந்தக் காலம்போல வானில் ஒரு அசரீரி ஒலி எல்லாம்கூட கேட்க

வேண்டாம். நேரில் ஒரு தரிசனம்... அவ்வளவுகூட எதற்கு? எவ்வளவோ கொடுமைகள்... அதற்கு எதிராக ஒரு இடி முழக்கம் செய்யலாமே...? கடவுளை ஒரு கற்பனையாகக் கருதும் என்னிடம் எல்லாம் வந்து தன் திருவிளையாடலை எதற்கு அந்த கண்ணன் நிகழ்த்த வேண்டும்?''

கணேசனுக்குள் இப்படி எல்லாம்தான் கேள்விகள். எந்த ஒரு கேள்விக்கும் பளிச்சென்று பதில் இல்லை. அதேசமயம் ஏதோ ஒரு பதிலை அனுமானமாகச் சொல்லக்கூட தைரியமில்லை.

''என்ன மிஸ்டர் கணேஷ்... இப்படிப் பதில் சொல்லாம அமைதியா இருந்தா எப்படி? உங்க பாணில எல்லாமே தற்செயல்னு மட்டும் சொல்லிடாதீங்க. அப்படியே சொன்னாலும் எனக்குக் கவலை இல்லை. இனி உங்க குடும்பம் வரைல கண்ணன் நிகழ்த்தப் போற சாகசங்கள் மிச்சம் இருக்கு. அது உங்களை நிச்சயமா கையெடுத்துக் கும்பிட வைக்கும்.'' என்று அனுராதா அந்தக் குழப்பத்தில் அவன் சகோதரிகளின் ஞாபகத்தை மூட்டி விட்டாள்.

'கிளம்பிப் போயிருக்கும் கண்ணன் அங்கு என்ன பண்ணுவான்? அக்காவுக்கு வாய்த்த கணவன் ஆகாஷ், ஒரு குடிகாரன். அவன் தாய் தந்தையர்களோ, சரண்யாவை ஒரு வீட்டு வேலைக்காரிக்கு மேல் நினைத்துப் பார்க்க இஷ்டப்படாதவர்கள். தங்கள் பிள்ளையின் குடியை, 'இந்தக் காலத்துல யார்தான் குடிக்கலை. கவர்ன்மென்ட்டுக்கே டாஸ்மாக்லதான் அதிக வரும்படியாம்' என்றெல்லாம் பேசி நியாயப் படுத்துபவர்கள். தங்கை சுஜாதாவின் வலிப்பு வியாதியையோ கட்டுப்படுத்த மட்டும்தான் முடியும். முற்றாகக் குணப்படுத்த முடியாது என்று சென்னையின் முதல் பத்து டாக்டர்களில் ஒருவரே கூறிவிட்டார். இப்படி இருக்க, இந்த கண்ணன் அங்கே போய் எதைக் கிழிக்க முடியும்? போய்ச் சேர்ந்து விஷயங்களை விளங்கிக் கொள்ளவே ஒரு வாரம் பத்துநாள் கூட ஆகலாம்...' என்று கணேஷ் அவர்கள் தொடர்பான எண்ணங்களில் நெசவு நெய்தபோது அவனது செல்போன் கூப்பிட்டது. மிக நிதானமாக அதை எடுத்துக் காதில் வைத்தான்.



''திஸ் ஈஸ் மிஸ்டர் கணேஷ்?''

''யெஸ்...''

''சார் நான் கண்ணன் பேசறேன். ஜமீன் ஆடிட்டர் கிருஷ்ண மூர்த்தி ஐயர் உங்களுக்கு ஹெல்ப் பண்ண அனுப்பியிருக்கற கண்ணன்!''

''ஓ... நீங்களா? ஆமா இது என்ன குரல் மாற்றி எல்லாம் பேசிக்கிட்டு... உங்களால இங்க எவ்வளவு குழப்பம் தெரியுமா?''

''என்ன கணேஷ் சொல்றீங்க... நான் எதுக்குக் குரல் மாத்தி எல்லாம் பேசணும்? வில்லேஜ்ல எங்க பெரியம்மா இறந்துட்டாங்க. நான் காசிக்கு வர்றதுக்காக ஏர்போர்ட் வர்ற வழியில தகவல் கிடைச்சது. உங்களுக்குத் தகவல் தந்துட்டு அப்படியே திருநெல்வேலி திரும்ப நினைச்சேன். அன்ஃபார்ச்சுநேட்லி உங்க லைனும் கிடைக்கல, ஆடிட்டர் சார் லைனும் கிடைக்கல. வெறுத்துப் போய் அப்புறம் பேசிக்கலாம்னு கிளம்பிப் போய்ட்டேன். அங்க கிராமத்துல சுத்தமா டவர் ஒர்க் பண்ணலை. படாதபாடுபட்டு இப்பத்தான் இந்த நம்பர்ல உங்களைப் பிடிச்சிருக்கேன்.''

மறுபக்கத்து பதில் கணேஷை எழுந்தே நிற்க வைத்தது.

''கணேஷ்... போன்ல யார்... எனி திங் சீரியஸ்?''

அனுராதாவும் நிமிர்ந்து எழுந்தாள்.

"மிஸ் அனுராதா... இது அடுத்த கட்ட அதிர்ச்சி. கிட்டத்தட்ட உங்க பதில்கள் சரிங்கற மாதிரியான ஒரு விஷயம்தான் நடந்திருக்கு..."

"என்ன சொல்றீங்க கணேஷ்?"

"லைன்ல ஆடிட்டர் அனுப்பின உண்மையான கண்ணன்!"

"மைகாட்... எங்க இப்படிக் கொடுங்க..." அனுராதா செல்லை அவனிடம் இருந்து பிடுங்கி அந்த உண்மையான கண்ணனிடம் பேச ஆரம்பித்தாள்.

"சார்... நீங்கதான் ஆடிட்டர் அனுப்பின உண்மையான கண்ணனா?"

"நீங்க யார்... இது என்ன பேத்தலான கேள்வி. உண்மையான கண்ணன்னா, பொய்யான கண்ணன்னு ஒருத்தன் இருக்கானா என்ன...?"

"ஐ ஆம் சாரி. இங்க நடந்த விஷயங்கள் உங்களுக்குத் தெரியாது. அதனால நான் கேட்டதுக்கு நீங்க இப்படித்தான் பதில் சொல்ல முடியும். இட்ஸ் ஓ.கே. நீங்க இப்ப எங்க இருந்து பேசறீங்க?"

"வாரணாசி ஏர்போர்ட்ல இருந்து... ஆமா நீங்க?"

"என் பேர் அனுராதா. மிஸ்டர் கணேஷோட தோழின்னு வெச்சுக்கோங்களேன்..."

"ஐ.சீ. சரிங்க அனுராதா, ஒரு மணி நேரத்துல நான் உங்க முன்னால இருப்பேன். நீங்க பேசறத பார்த்தா நான் வரத் தாமதமானதால நீங்க உதவி செய்ய வந்துருக்கற மாதிரித் தெரியுது. ஐ ஆம் வெரி சாரி... அங்க வரவும் முடியாம, தகவலும் தர முடியாம நான் ரொம்பவே சிரமப்பட்டுட்டேன். எவ்வளவு தான் வசதி வாய்ப்புகள் இருந்தாலும் நேரம் சரியில்லைன்னா,



நாமெல்லாம் நத்திங்னு என் குருநாதர் ஒருத்தர் அடிக்கடிச் சொல்வார். என் அனுபவத்துல அதுதான் சத்யமான உண்மை."

அசல் கண்ணனின் டைம் பற்றிய பேச்சு, அனுராதாவை, அவளுக்குள் அந்த நொடி நிலவிக் கொண்டிருக்கும் பரபரப்பான ஒரு நம்ப முடியாத நம்பிக்கைக்கு வலு சேர்ப்பதாகக்கூட இருந்தது.

"ரொம்பவும் சரியா சொன்னீங்க சார்... நீங்க நேர்ல வாங்க. மற்ற விஷயங்களை நேர்ல பேசலாம்." என்றபடியே செல்போனை அணைத்தவள் பார்வை, அடுத்து அந்த மூங்கில் பெட்டி மேல்தான் சென்றது. மிக மிக நிதானமாக அதே சமயம் வெறித்த விழிகளுடன் அதன்முன் சென்றவள் அப்படியே மண்டியிட்டாள். அவளுக்குள்ளும் இப்போது ஒரு கேள்வி 'கண்ணா இது என்ன விளையாட்டு? எதற்கு இந்த விளையாட்டு?'

## 32

*'நான்...*
*'கல்கி'யாய் வருமுன்*
*கல்கிக்குள் வந்தவன்; தர்மம்*
*பல்கிப் பெருகவே*
*நல்கினேன் இத்தொடரை...!'*

*- ஸ்ரீ கிருஷ்ணன்*

அனுராதா, அந்தப் பெட்டி முன் அப்படியே கண்களை மூடிக்கொண்டு தியானம் புரிபவள் போல அமர்ந்தாள். சம்பத்தும் அவள் அருகே சென்று அமர்ந்தான். கணேஷுக்குதான் அடுத்து என்ன செய்வதென்றே தெரியவில்லை.

ஒருவேளை இந்தத் திருவிளையாடலை நான் உணர்ந்து பக்தி செலுத்த வேண்டும் என்பதுதான் கண்ணனின் எதிர்பார்ப்பா?

அனுராதா சட்டென்று விழித்தவள் கணேஷ் கையில் இருந்த செல்ஃபோனைப் பிடுங்கி, ஃபிளைட்டுக்கு டிக்கட் புக் செய்தாள். ''நான் கிளம்பறேன்... மிஸ்டர் கணேஷ், நான் இப்ப உங்க வீட்டுக்குத்தான் போகப் போறேன்... அந்த கண்ணனோட லீலைகளை நேரில் பார்க்கிற வாய்ப்பை நான் இழக்க விரும்பலை. சம்பத் சார்... உங்க பயணத் திட்டம் என்னன்னு சொல்ல முடியுமா?'' என்று கேட்டாள்.

''நான் இப்ப ஹரித்வார் போகணும் மேடம். இந்தப் பெட்டியை பத்திரமா அப்பாகிட்ட கொண்டு சேர்க்கணும்'' என்று சம்பத்தும் அவளுடன் தொற்றிக் கொண்டான். கணேஷ் மட்டும் மௌனமாகவே இருந்தான். அனுராதா புறப்படுகிறேன் என்று சொன்னது அவனை என்னவோ செய்தது.

''என்ன கணேஷ்... நான் கிளம்பறேன்னு சொன்னதும் உங்களுக்கும் சென்னை வந்து உங்க வீட்ல நடக்கப் போற அதிசயங்களைப் பார்க்கணும்னு தோணுதா?''

அவள் கேள்வி அடுத்த நொடியே அவனுக்கும் சென்னை புறப்பட்டால் என்ன என்றுதான் சிந்திக்க வைத்தது?

''அ... ஆமாம். அவசியம் அந்த கண்ணனைப் பார்க்கணும். ஆள்மாறாட்டம் பண்ணியிருக்கற அந்த ஆள் அங்க என்ன பண்றாங்கறது ரொம்ப முக்கியம் உங்களைப் போல பாசிடிவா மட்டும் என்னால யோசிக்க முடியலை... அங்க நெகடிவா ஏதாவது...'

கணேஷை பதிலுக்கு அனுராதா ஒரு வெறித்த பார்வை பார்த்தாள். ஆனால், அவன் கருத்தைத் துளியும் மறுத்தோ



எதிர்த்தோ பேசவில்லை. அதே சமயம். அந்த அறையின் வாசலில் ஆடிட்டர் அனுப்பித் தந்திருந்த அந்த நிஜமான(?) கண்ணன்.

''வாங்க மிஸ்டர் கண்ணன்'' என்று அவரை வரவேற்ற கணேஷ், அவரை உட்காரச் சொல்லிவிட்டு அவர் எதிரிலேயே தன் சூட்கேஸை எடுத்து துணிமணிகளை அடுக்கத் தொடங்கினான். கால்வலியை சகித்துக் கொண்டான்.

''என்ன மிஸ்டர் கணேஷ்... எல்லாரும் கிளம்பிட்டு இருக்கற மாதிரி தெரியுது... எங்க?''

''சென்னைக்குத்தான்...''

''ஆமா, யாரோ என் போல ஒருத்தர் இங்க வந்து உங்ககூட இருந்ததா போன்ல பேசும்போது நான் யூகிச்சேன்... யார் அது... எவனாவது ஃப்ராட் இங்க வந்து கிடைச்சதைச் சுட்டுக் கிட்டுப் போய்ட்டானா?'' அந்தக் கேள்விக்கு அனுராதா இடையிட்டாள்,

''அப்படிச் சொல்லக் கூடாது. அவன் பொருளைச் சுடலை. எங்க மனசுக்குள்ள இருக்கற இருளைச் சுட்டுட்டுதா நான் நான் நினைக்கறேன்...'' என்று அவள் சொன்னதை, அந்த கண்ணனும் வினோதமாகக் கருதி கேட்க, அவர்கள் மூவரிடமும் ஒரு பரபரப்பான துரிதம்.

கணேஷின் அப்பா வைத்யநாதனுடன் கண்ணன் உள்ளே நுழைய அவன் தாய் சகுந்தலா முகத்தில் ஒரே பரவசம்...

''என்ன பாக்கறே... நான் இப்ப பைத்தியக்காரன் இல்ல சகுந்தலா... இதோ இந்த புண்ணியவானால நான் பைத்தியம் தெளிஞ்சு மறு ஜென்மம் எடுத்து வந்துருக்கேன்'' என்று வைத்யநாதன் கண்ணனை நோக்கி கைகளைக் காட்டினார்.

கண்ணன் பார்வையோ கணேஷின் அந்த குச்சு வீட்டைத் துழாவியபடி இருந்தது.

"வாங்க... உள்ளவாங்க... உட்காருங்க. என்னால இப்பக் கூட நம்ப முடியலை. ஆனா ஒண்ணுமட்டும் நிச்சயம். நான் எழுதின ஸ்ரீராமஜெயம் வீண்போகலை."

அவள் அளவுக்கதிகமாகவே படபடத்தாள்.

"ஸ்ரீராமஜெயமா?" - கண்ணன்தான் கேட்டான்.

"ஆமாம்... ஒரு தடவை இல்ல... இரண்டு தடவை இல்ல... கோடிதடவை... ஒரு ஆச்சரியம் போல இன்னிக்கு காலையில தான் கோடிங்கற கணக்கு பூர்த்தியாச்சு. என் பிரார்த்தனையும் பலிச்சுடுச்சு..." - அவள் பேச்சோடு உள்ளே சென்று கட்டு கட்டாக ஒரு குயர் நோட்டுகளை ஒரு மூட்டை போல தூக்கி வந்து கண்ணன் முன் காட்டினாள்.

"அந்த ஓம்ங்கற மந்திரத்துக்குள்ள இருந்து வந்திருக்கற ராம்ங்கற சொல்லோட வைப்ரேஷன்ல தான் இருக்கு வைத்தியம், சூட்சுமம் எல்லாம். இங்க இப்படி நீங்க செய்த வைத்தியம் கூட இவரை நான் கண்டுபிடிக்கக் காரணம்... இவர் கங்கைல மூழ்கக் காரணம், கர்மக் கணக்கு தீரவும் காரணம்..."

கண்ணனின் விளக்கம் அவள் வரையில் புதிது. பரவசம் துளியும் குறையாதபடி கேட்டுக் கொண்ட போது, எதற்கோ வெளியே சென்றிருந்த இளைய மகள் சுஜாதா உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள். அவளுக்கும் தெளிவான அப்பாவைப் பார்க்க பிரமிப்பு. அது அவள் கண்களில் வழிந்தது. அப்படியே மிகுதியான உணர்ச்சி வசப்பாட்டில் அடுத்த நொடியே வலிப்பு வந்து விட்டது.



கையும் காலும் வெட்டி வெட்டி இழுக்க, கீழே விழுந்துவிட்டவளை கண்ணன்தான் தாங்கிப் பிடித்தான். அப்படியே மடிமேல் போட்டுக் கொண்டவன், அவள் நெற்றிப் பொட்டை இறுக்கிப் பிடித்தான். அவளையே உற்றும் பார்த்தான்.

அவன் நெற்றிப் பொட்டை அழுந்த் பிடித்த நொடியில் வலிப்பும் அடங்கத் தொடங்கி, மெல்ல கால் கைகள் சமனமாக அவளும் மெல்லச் சீராகி சற்று சோர்வோடு எழுந்து அமர்ந்தாள்.

எதிரே அவளது தாயும் தந்தையும் இறுகிப்போய் அவளையே வெறித்தபடி இருந்தனர்.

"அப்பா கண்ணா... என் பைத்தியம் குணமானதை விட பெரிசு, இவளுக்கு இந்த வியாதி குணமாகறதுதான். காசியில என் பையன்கிட்ட சொல்லிட்டு வந்த மாதிரி, இவளுக்கு ஒரு விமோசனத்தை உன்னால தரமுடியுமா?"

வைத்யநாதன், கலங்கிவிட்ட விழிகளோடு கண்ணனைப் பார்த்துக் கேட்டார்.

"எனக்கென்னவோ இனி இவளுக்கு இந்த மாதிரி வலிப்பே வராதுன்னு தான் நினைக்கறேன். அப்படியே வந்தா... வந்தா தான்... கண்ணானு ஒரு குரல் கொடுத்தா, நான் வந்து ஒரு வர்மத்தட்டு தட்டிட்டுப் போறேன் இப்ப திரும்பவும் என்ன?"

கண்ணன் கண்களைச் சிமிட்டிக் கொண்டு கேட்ட விதம் அனைவரையும் வியப்பில் புதைத்தது.

இன்னும் உங்க பெரிய பொண்ணோட விஷயம் பாக்கி இருக்குல்ல...?" - கண்ணன் வைத்யநாதனிடம் முந்திக் கொண்டு கேட்டதில் அவரிடம் மேலும் திக்குமுக்காடல்...

"எனக்கென்னவோ... அது கூட சரியாயிட்ட மாதிரிதான் தெரியுது... ஆமா எங்க உங்க பெரிய பெண்...?" - கேட்டபடியே பார்வையைச் சுழல விட அதே நேரத்தில் அவளும் ஒரு அறைக் கதவைத் திறந்து கொண்டு வந்தாள்.

அவள் பார்வையில் அப்படி ஒரு சோகம்.

"சரண்யா..." என்று வைத்யநாதன் கட்டிக் கொண்ட போது, கண்ணன் பார்வை எதனாலோ தொலைபேசி மீது சென்றது. அவன் பார்த்த மறுநொடி அதனிடம் சப்தம்!

சரண்யாவே அதை கையில் எடுத்தாள்.

மறுமுனையில் அவளது நாத்தனார் இந்துமதி பேசினாள்.

"அண்ணி, நான் இந்து பேசறேன்..." என்று ஆரம்பித்தவள் அடுத்து என்ன சொன்னாள் என்று தெரியவில்லை. சரண்யாவின் முகத்தில் ஏகத்துக்கும் மாறுதல். ஒரு கட்டத்தில் தொலைபேசி அவள் கை நழுவிக் கீழே விழுந்தது. அவளும் மயங்கி விழுந்தாள்.

ஹரித்வார்!

பெட்டியும் கையுமாக நின்ற சம்பத்தையே கண்ணனாகக் கருதி காலில் விழுந்து விட்டார் ஸ்ரீனிவாஸன்.

"அப்பா..." - அவன் பதறிப் போய் விலகினான்.

"சம்பா... பெருமாள் நம்மைக் கைவிடலைடா... எதுக்காக யாத்திரை வந்தோமோ அது பூர்த்தியாயிடுத்து. நீ அப்பாவாகப் போறே... நான் தாத்தாவாகப் போறேன்" - என்று அவர் கூறவும், சம்பத்துக்கு கிறுகிறுவென்று எல்லாமே சுழல்கிற மாதிரி இருந்தது.



சம்பத் அடுத்த நொடி சாருவைத் தேடிக் கொண்டு ஓடினான். அவளும் டாக்டரின் அறையில் தென்பட்டாள். மூச்சிரைக்க அவள் எதிரில் போய் நின்றான்.

"சாரு... கண்ணன் நம்மைக் கை விடலை சாரு. அவன் இங்கேயும் வந்துட்டான்... ஆனா உன் வயித்துக்குள்ள..." என்றபடியே உணர்ச்சி மிகுதியோடு சாருவைக் கட்டிக் கொண்டான்.

டாக்டரையே அந்தக் காட்சி உலுக்கி விட்டது!

"ஆமாம் மிஸ்டர் சம்பத்... உங்க மனைவி எல்லா விஷயத்தையும் சொன்னாங்க. குழந்தை பிறக்க வழியே இல்லாத அவங்களுக்குள்ளேயும் ஒரு குழந்தைன்னா இது மிராகிள்தான்..." - என்று பரவசப்பட்டார்.

கணேஷும் அனுராதாவும் கணேஷின் வீட்டுக்குள் நுழைந்தபோது, சரண்யா பெரிய மூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்டுக்கொண்டிருந்தாள்.

"பார்த்தும்மா... கவனமா அவரைப் பார்த்துக்கோ, எதுன்னாலும் ஃபோன் பண்ணு... நாங்களும் யாராவது ஒருத்தர் உன்கூட ஆஸ்பத்திரியில துணைக்கு இருப்போம்..." என்று சகுந்தலா சொல்வதில் இருந்து அவளது புறப்பாடு ஒரு ஆஸ்பத்திரிக்கு என்று விளங்கியது.

"அம்மா... அப்பா..."

"வாப்பா... சரியான சமயத்துக்குத்தான் வந்துருக்கே... நல்ல வேளை..."

"என்னம்மா... அக்கா எங்க போறா...?"

''அதை ஏண்டா கேக்கறே... நம்ம மாப்ளை குடிச்சுட்டு பைக் ஓட்னதுல ஆக்சிடெண்ட் ஆயிடுச்சு. ஆள் பிழைக்கறதே பெரும்பாடுன்னு சொல்லிட்டாங்க. பிழைச்சாலும் காலை எடுக்க வேண்டிவரும்னு சொல்லவும் மாப்ள குடும்பத்துல அப்படியே அவரைப் போட்டுட்டாங்க.

இருந்தாலும் கெட்டதுல ஒரு நல்லது மாதிரி, அவருக்கு அப்பதான் பொண்டாட்டி அருமை தெரிய வந்துருக்கு. 'சரண்யா... சரண்யா'ன்னு ஒரே புலம்பல். மாப்ளை தங்கை இந்து மூலமா தகவல் வரவும் ஓடினோம். நீ அனுப்பி வெச்சியே கண்ணன் அவரும் கூட வந்து உதவி செய்தார். உதவின்னா சாதாரண உதவி இல்லை. ரத்தமும் கொடுத்துக் காப்பாத்தியிருக்காரு. நிஜமா சொல்றேன்... அந்த கண்ணன் வேற கடவுள் வேற இல்ல!''

சகுந்தலாவின் விளக்கம் அனுராதாவைக் கிள்ளியது.

''அம்மா அவர் கடவுளேதான்... ஆமா, இப்ப எங்க அவர்?''

''ஆஸ்பத்திரியில தான் இருக்கார். அவரைப் பாத்துக்கச் சொல்லிட்டுதான் சரண்யா வந்துருக்கா... அங்கேயே தங்க வேண்டி இருக்கறதால புடைவை துணியெல்லாம் எடுத்துக்கணும் இல்லையா? ஆமா நீ யாரும்மா...?''

''வந்து சொல்றேன்... கணேஷ் கமான் க்விக்... நாம இப்ப ஆஸ்பத்திரிக்குப் போறோம்... என்ன சொல்றீங்க.''

கணேஷும் அனுராதாவும் வந்த வேகத்தில் திரும்பினார்கள். இல்லையில்லை... ஓடினார்கள்!

ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தபோது அந்த கண்ணன் இல்லை! கணேஷுக்குத் துளியும் பிடிக்காத மாப்பிள்ளை கண்ணீர் மல்க கை கூப்பியபடியே அவனைப் பார்த்தார். அந்தப்



பார்வையில் அவர் கேட்கும் ஆயிரம் கோடி மன்னிப்புகள் ஒளிந்திருப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

எதிர்ப்பட்டார் டாக்டர்!

''காலை எடுக்காமலே ஆபரேஷன் செய்து காப்பாத்த முடியும்னு தோணுது. கண்ணன்கறவர் கொடுத்துருக்கற ரத்தம் எங்க வரைல ரத்தமா தெரியல... அது ஒருவித டானிக்...'' என்றார் அப்படியே...

''இப்ப அவர் எங்க டாக்டர்...?''

''நீங்கதான் கணேஷா?''

''ஆமாம்...''

''ஓ... நீங்க வந்தா உங்ககிட்ட சில விஷயங்கள் சொல்லச் சொன்னார். அவரோட கடமை முடிஞ்சுடுச்சாம். அதனால் அவர் போறேன்னார்...!

ஆனாலும் உண்மையான மனிதர்களுக்கு முடிஞ்ச உதவி செய்யறதுல தனக்கு ஒரு திருப்தி இருக்கறதா சொல்லச் சொன்னார். உதவி செய்யறதுக்காக ஆள் மாறாட்டம் செய்தது தப்புதான்னும் சொல்லச் சொன்னார். கிருஷ்ண தந்திரம்னா அப்படித்தான்னார்! பூர்வஜென்ம கணக்கு ஒண்ணு தீர்ந்ததுன்றும் சொன்னார். எனக்குதான் ஒண்ணுமே புரியல!''

டாக்டர் கொஞ்சம் இடைவெளிவிட, கணேஷ் இலேசாகத் திக்குமுக்காடினான். அனுராதாவுக்கு பெரிய ஏமாற்றமாக இருந்தது.

''பைதபை. மிஸ்டர் கணேஷ்... நான் தெரியாமத்தான் கேக்கறேன்... உங்களுக்கும் அவருக்கும் இடையில் அப்படி என்னதான் கான்ட்ரவர்ஸி. எனக்கு எதுவுமே புரியல. உண்மைல அவர் யார்?''

முத்தாய்ப்பாக டாக்டர் கேட்ட கேள்வி அனுராதாவை சிலிர்க்க வைத்து விட்டது.

கணேஷ் முதல் தடவையாக அண்ணாந்து ஜன்னல் வழியே வெளியே தெரிந்த வானத்தைப் பார்த்தான். இருந்தும் இல்லாத அதுவும் கண்ணனும் ஒன்றுபோல உணர்ந்தவன் அப்படியே நின்று விட்டான். அவனுக்குள் இப்போது ஒரே ஒரு கேள்விதான்.

எங்கே என் கண்ணன்?

- முற்றும் -